# திருக்குறள்

## கலைஞர் உரை

# பொருளடக்கம்

## அறத்துப்பால்


1. பாயிரவியல் அதிகாரம்: 1 முதல் 4 வரை
2. இல்லறவியல் அதிகாரம்: 5 முதல் 34 வரை
3. துறவறவியல் அதிகாரம்: 35 முதல் 37 வரை
4. ஊழியல் அதிகாரம்: 38


## பொருட்பால்


1. அரசியல் அதிகாரம்: 39 முதல் 63 வரை
2. அமைச்சியல் அதிகாரம்: 64 முதல் 73 வரை
3. அரணியல் அதிகாரம்: 74 முதல் 75 வரை
4. கூழியல் அதிகாரம்: 76
5. படையியல் அதிகாரம்: 77 முதல் 78 வரை
6. நட்பியல் அதிகாரம்: 79 முதல் 95 வரை
7. குடியியல் அதிகாரம்: 96 முதல் 108 வரை


## இன்பத்துப்பால்


1. களவியல் அதிகாரம்: 109 முதல் 115 வரை
2. கற்பியல் அதிகாரம்: 116 முதல் 133 வரை

# திருக்குறளை எப்படிப் படிப்பது?

எப்பொருள், யார்-யார்-வாய்க் கேட்பினும்; அப்பொருள்
மெய்ப்பொருள், காண்பது; அறிவு.

1. யார் சொல்வதையும், உண்மை என்று நம்பக்கூடாது.
2. கேள்விகள் கேட்க, கற்றுக் கொள்ள வேண்டும்.
3. என்ன கேள்விகள்?
    1. இது உண்மையா?
    2. ஏன்? எப்பொழுது?
    3. எப்படி? எங்கு?
    4. ஆதாரம் எது? உண்மையான ஆதாரமா?
    5. பிற கேள்விகள்? என்ன கேட்கலாம்?

சொல்லுக, சொல்லில் பயன்-உடைய! சொல்லற்க,
சொல்லில் பயன்-இலாச் சொல்!

1. எவை பயன் உடையவை? எவை பயன் இல்லாதவை? ஏன்?
2. பயன் உடையவை: ஆராய்ந்து, தெளிய வேண்டும்
    1. எது எனக்கு நல்ல வழியில் உயர்வைத் தரும்?
    2. எது எனக்கு நல்லது?
3. பயன் இல்லாதவை: ஆராய்ந்து, தெளிய தேவை-இல்லாதவை. எனக்குத் தெரியாது என்று ஒதுக்கி விட வேண்டும். அதைப் பற்றிப் பேசுவதையும், கேட்பதையும் தவிர்க்க வேண்டும்.

கற்க, கசடு-அற, கற்பவை; கற்ற-பின்,
நிற்க, அதற்குத் தக!

1. கற்றுக் கொள்ள வேண்டும். (எதை? ஏன்? எப்படி? யாரிடம்?)
2. நன்றாக கற்றுக் கொள்ள வேண்டும்.
3. நன்றாக கற்று (ஆராய்ந்து, முயற்சி செய்து, பயிற்சி செய்து), தெளிய வேண்டும்.
4. கற்றதை தினமும் பயன்படுத்த வேண்டும். அதன் வழியில் நடக்கவேண்டும்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை

திருவள்ளுவர் திருக்குறளைக் கற்கும் ஒவ்வொருவரும், தத்தமக்குக் கிடைக்கும் உரைகளைத் துணையாக வைத்துக்கொண்டு, குறள்களின் பொருள்களைத் தானே ஆராய வேண்டும் என்பது என் விருப்பம்.

## திருக்குறள் - உற்சாகம் ஊட்டும் வரிகள் - தினமும்

உள்ளத்து அனையது, உயர்வு.
அசாவாமை வேண்டும்;

என் உயர்வு, என்னிடம் உள்ளது. நல்ல எண்ணத்தோடு, நல்ல செயலை, நல்ல முயற்சியோடு நான் செய்தால், என் உயர்வு நிச்சயம். மன உறுதியோடு முயற்சி செய்வேன்.

முயற்சி, திருவினை ஆக்கும்.
முயற்சி, தன்-மெய்-வருத்தக் கூலி-தரும்.
பெருமை, முயற்சி தரும்.

மனம்-தூய்மை, செய்-வினை தூய்மை;
அகம்-தூய்மை, வாய்மையால் காணப்படும்.
மனத்துக்கண் மாசு-இலன் ஆதல்;
பணிவு-உடையன், இன்சொலன் ஆதல்;
பொறுமை-உடைமை, போற்றி ஒழுகப்-படும்.

நல்லதை நினைப்பேன். நல்லதை பேசுவேன்.
அளவாக பேசுவேன். நல்லதை செய்வேன்.
பணிவையும், பொறுமையையும் வளர்த்துக் கொள்வேன்.

அற்றார் அழி-பசி தீர்த்தல்!

பசியால் வாடுபவர்க்கு/இல்லை என்று கேட்பவர்க்கு, என்னால் முடிந்ததை கொடுப்பேன்.

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்-சொல்;
நெடு-நீர், மறவி, மடி, துயில்;
புறம்-கூறான் என்றல் இனிது.
பொறாமை, பேராசை, கோபம், கடும் சொல் - இவைகளை முயற்சி செய்து தவிர்ப்பேன்.
காலம் தாழ்த்தி செய்தல், மறதி, சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம் - இவைகளை முயற்சி செய்து தவிர்ப்பேன்.

அற்றால், அளவு-அறிந்து உண்க!
பசித்தால், உடலுக்கு நலம் தருவதை, அளவாக சாப்பிடுவேன்.
உடலுக்கு நலம் தராத உணவை, தவிர்ப்பேன்.

## நன்றி

1. தமிழ் இணையக் கல்விக்கழகம்
2. தமிழ் இணையக் கல்விக்கழகம் - திருக்குறள்
3. தமிழிணையம் - மின்னூலகம்
4. மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம்
5. அழகி - மென்பொருள் செயலி

இந்த முயற்சி, அனைவரும் திருக்குறளை

1. எளிதில் படிக்க
2. நகல் எடுக்க
3. ஒரு அதிகாரத்தை மட்டும் நகல் எடுத்து படிக்க
4. தாளில் படிக்க வசதியாக, எழுத்து அளவு பெரியதாக

1. திருக்குறள் முழுவதும், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் வலைத்தளத்தில் இருந்து எடுக்கப்பட்டது.
2. சில இடங்களில், படிப்பதற்கு எளிதாக மாற்றப்பட்டு உள்ளது.

## நன்றி

1. திருக்குறளுக்கு உரை எழுதிய, உரை ஆசிரியர்கள் அனைவருக்கும்.
2. இனி காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப, தமிழிலும், ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் உரை எழுதப்போகும் ஆசிரியர்கள் அனைவருக்கும்.

நிறை-உடைமை நீங்காமை வேண்டின்; பொறை-உடைமை, போற்றி ஒழுகப்-படும்.

# திருக்குறள் அதிகாரங்கள்

1. கடவுள் வாழ்த்து ........ 1
2. வான் சிறப்பு ........ 3
3. நீத்தார் பெருமை ........ 5
4. அறன் வலியுறுத்தல் ........ 7
5. இல்வாழ்க்கை ........ 9
6. வாழ்க்கைத்துணை நலம் ........ 11
7. புதல்வரைப் பெறுதல் ........ 13
8. அன்பு உடைமை ........ 15
9. விருந்து ஓம்பல் ........ 17
10. இனியவை கூறல் ........ 19
11. செய்ந்நன்றி அறிதல் ........ 21
12. நடுவு நிலைமை ........ 23
13. அடக்கம் உடைமை ........ 25
14. ஒழுக்கம் உடைமை ........ 27
15. பிறன் இல் விழையாமை ........ 29
16. பொறை உடைமை ........ 31
17. அழுக்காறாமை ........ 33
18. வெஃகாமை ........ 35
19. புறம் கூறாமை ........ 37
20. பயன் இல சொல்லாமை ........ 39
21. தீவினை அச்சம் ........ 41
22. ஒப்புரவு அறிதல் ........ 43
23. ஈகை ........ 45
24. புகழ் ........ 47
25. அருள் உடைமை ........ 49
26. புலால் மறுத்தல் ........ 51
27. தவம் ........ 53
28. கூடா ஒழுக்கம் ........ 55
29. கள்ளாமை ........ 57
30. வாய்மை ........ 59
31. வெகுளாமை ........ 61
32. இன்னா செய்யாமை ........ 63
33. கொல்லாமை ........ 65
34. நிலையாமை ........ 67
35. துறவு ........ 69
36. மெய் உணர்தல் ........ 71

37. அவா அறுத்தல் ........ 73
38. ஊழ் ........ 75
39. இறைமாட்சி ........ 77
40. கல்வி ........ 79
41. கல்லாமை ........ 81
42. கேள்வி ........ 83
43. அறிவுடைமை ........ 85
44. குற்றம் கடிதல் ........ 87
45. பெரியாரைத் துணைக்கோடல் ........ 89
46. சிற்றினம் சேராமை ........ 91
47. தெரிந்து செயல் வகை ........ 93
48. வலி அறிதல் ........ 95
49. காலம் அறிதல் ........ 97
50. இடன் அறிதல் ........ 99
51. தெரிந்து தெளிதல் ........ 101
52. தெரிந்து வினையாடல் ........ 103
53. சுற்றம் தழால் ........ 105
54. பொச்சாவாமை ........ 107
55. செங்கோன்மை ........ 109
56. கொடுங்கோன்மை ........ 111
57. வெருவந்த செய்யாமை ........ 113
58. கண்ணோட்டம் ........ 115
59. ஒற்று ஆடல் ........ 117
60. ஊக்கம் உடைமை ........ 119
61. மடி இன்மை ........ 121
62. ஆள்வினை உடைமை ........ 123
63. இடுக்கண் அழியாமை ........ 125
64. அமைச்சு ........ 127
65. சொல் வன்மை ........ 129
66. வினைத் தூய்மை ........ 131
67. வினைத் திட்பம் ........ 133
68. வினை செயல் வகை ........ 135
69. தூது ........ 137
70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல் ........ 139
71. குறிப்பு அறிதல் ........ 141
72. அவை அறிதல் ........ 143
73. அவை அஞ்சாமை ........ 145

74. நாடு ........ 147
75. அரண் ........ 149
76. பொருள் செயல் வகை ........ 151
77. படை ........ 153
78. படைச் செருக்கு ........ 155
79. நட்பு ........ 157
80. நட்பு ஆராய்தல் ........ 159
81. பழைமை ........ 161
82. தீ நட்பு ........ 163
83. கூடா நட்பு ........ 165
84. பேதைமை ........ 167
85. புல்லறிவு ஆண்மை ........ 169
86. இகல் ........ 171
87. பகைமாட்சி ........ 173
88. பகைத் திறம் தெரிதல் ........ 175
89. உட்பகை ........ 177
90. பெரியாரைப் பிழையாமை ........ 179
91. பெண்வழிச் சேறல் ........ 181
92. வரைவு இல் மகளிர் ........ 183
93. கள் உண்ணாமை ........ 185
94. சூது ........ 187
95. மருந்து ........ 189
96. குடிமை ........ 191
97. மானம் ........ 193
98. பெருமை ........ 195
99. சான்றாண்மை ........ 197
100. பண்பு உடைமை ........ 199
101. நன்றி இல் செல்வம் ........ 201
102. நாண் உடைமை ........ 203
103. குடி செயல் வகை ........ 205
104. உழவு ........ 207
105. நல்குரவு ........ 209
106. இரவு ........ 211
107. இரவு அச்சம் ........ 213
108. கயமை ........ 215

# 1. கடவுள் வாழ்த்து

1 அகரம்-முதல, எழுத்து-எல்லாம்; ஆதி-
பகவன் முதற்றே, உலகு.

அகரம் எழுத்துக்களுக்கு முதன்மை; ஆதிபகவன், உலகில் வாழும் உயிர்களுக்கு முதன்மை.

2 கற்றதனால் ஆய பயன்-என்கொல்; வால்-அறிவன்
நல்-தாள் தொழாஅர் எனின்?

தன்னைவிட அறிவில் மூத்த பெருந்தகையாளரின் முன்னே வணங்கி நிற்கும் பண்பு இல்லாவிடில் என்னதான் ஒருவர் கற்றிருந்தாலும் அதனால் என்ன பயன்? ஒன்றுமில்லை.

3 மலர்மிசை ஏகினான் மாண்-அடி சேர்ந்தார்,
நிலமிசை நீடு-வாழ்வார்.

மலர் போன்ற மனத்தில் நிறைந்தவனைப் பின்பற்றுவோரின் புகழ்வாழ்வு, உலகில் நெடுங்காலம் நிலைத்து நிற்கும்.

4 வேண்டுதல், வேண்டாமை இலான்; அடி-சேர்ந்தார்க்கு
யாண்டும், இடும்பை-இல.

விருப்பு வெறுப்பற்றுத் தன்னலமின்றித் திகழ்கின்றவரைப் பின்பற்றி நடப்பவர்களுக்கு எப்போதுமே துன்பம் ஏற்படுவதில்லை.

5 இருள்-சேர் இரு-வினையும் சேரா; இறைவன்
பொருள்-சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இறைவன் என்பதற்குரிய பொருளைப் புரிந்து கொண்டு புகழ் பெற விரும்புகிறவர்கள், நன்மை தீமைகளை ஒரே அளவில் எதிர் கொள்வார்கள்.

6 பொறி-வாயில் ஐந்து-அவித்தான்; பொய்-தீர் ஒழுக்க
நெறி-நின்றார், நீடு-வாழ்வார்.

மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்திய தூயவனின் உண்மையான ஒழுக்கமுடைய நெறியைப் பின்பற்றி நிற்பவர்களின் புகழ்வாழ்வு நிலையானதாக அமையும்.

7 தனக்கு-உவமை இல்லாதான் தாள்-சேர்ந்தார்க்கு-அல்லால்,
மனக்-கவலை மாற்றல் அரிது.

ஒப்பாரும் மிக்காருமில்லாதவனுடைய அடியொற்றி நடப்பவர்களைத் தவிர, மற்றவர்களின் மனக்கவலை தீர வழியேதுமில்லை.

8 அற-ஆழி அந்தணன் தாள்-சேர்ந்தார்க்கு-அல்லால்,
பிற-ஆழி நீந்தல் அரிது.

அந்தணர் என்பதற்குப் பொருள் சான்றோர் என்பதால்,அறக்கடலாகவே விளங்கும் அந்தச் சான்றோரின் அடியொற்றி நடப்பவர்க்கேயன்றி, மற்றவர்களுக்குப் பிற துன்பக் கடல்களைக் கடப்பது என்பது எளிதான காரியமல்ல.

9 கோள்-இல் பொறியில் குணம்-இலவே; எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

உடல், கண், காது, மூக்கு, வாய் எனும் ஐம்பொறிகள் இருந்தும், அவைகள் இயங்காவிட்டால் என்ன நிலையோ அதே நிலைதான் ஈடற்ற ஆற்றலும் பண்பும் கொண்டவனை வணங்கி நடக்காதவனின் நிலையும் ஆகும்.

10 பிறவிப் பெருங்-கடல் நீந்துவர்; நீந்தார்,
இறைவன் அடி சேராதார்.

வாழ்க்கை எனும் பெருங்கடலை நீந்திக் கடக்க முனைவோர், தலையானவனாக இருப்பவனின் அடி தொடர்ந்து செல்லாவிடில் நீந்த முடியாமல் தவிக்க நேரிடும்.

## 2. வான் சிறப்பு

11 வான்-நின்று உலகம், வழங்கி வருதலால்,
தான்-அமிழ்தம்-என்று உணரல்-பாற்று.

உலகத்தை வாழ வைப்பது மழையாக அமைந்திருப்பதால் அதுவே அமிழ்தம் எனப்படுகிறது.

12 துப்பார்க்குத் துப்பு-ஆய துப்பு-ஆக்கி; துப்பார்க்குத்
துப்பு-ஆய தூஉம்; மழை.

யாருக்கு உணவுப் பொருள்களை விளைவித்துத்தர மழை பயன்படுகிறதோ, அவர்களுக்கே அந்த மழை அவர்கள் அருந்தும் உணவாகவும் ஆகி அரிய தியாகத்தைச் செய்கிறது.

13 விண்-இன்று-பொய்ப்பின்; விரிநீர் வியன்-உலகத்து-
உள் நின்று-உடற்றும்; பசி.

கடல்நீர் சூழ்ந்த உலகமாயினும், மழைநீர் பொய்த்துவிட்டால் பசியின் கொடுமை வாட்டி வதைக்கும்.

14 ஏரின் உழாஅர், உழவர்; புயல்-என்னும்
வாரி வளம்-குன்றிக்கால்.

மழை என்னும் வருவாய் வளம் குன்றிவிட்டால், உழவுத் தொழில் குன்றிவிடும்.

15 கெடுப்பதூஉம், கெட்டார்க்குச் சார்வாய்; மற்று-ஆங்கே
எடுப்பதூஉம்; எல்லாம் மழை.

பெய்யாமல் விடுத்து உயிர்களின் வாழ்வைக் கெடுக்கக் கூடியதும், பெய்வதன் காரணமாக உயிர்களின் நலிந்த வாழ்வுக்கு வளம் சேர்ப்பதும் மழையே ஆகும்.

16 விசும்பின் துளி, வீழின்-அல்லால்; மற்று-ஆங்கே
பசும்-புல் தலை காண்பு-அரிது.

விண்ணிலிருந்து மழைத்துளி விழுந்தாலன்றி மண்ணில் பசும்புல் தலை காண்பது அரிதான ஒன்றாகும்.

17 நெடுங்-கடலும் தன்-நீர்மை குன்றும்; தடிந்து-எழிலி
தான்-நல்காது ஆகி-விடின்.

ஆவியான கடல்நீர் மேகமாகி அந்தக் கடலில் மழையாகப் பெய்தால்தான் கடல்கூட வற்றாமல் இருக்கும். மனித சமுதாயத்திலிருந்து புகழுடன் உயர்ந்தவர்களும் அந்தச் சமுதாயத்திற்கே பயன்பட்டால்தான் அந்தச் சமுதாயம் வாழும்.

18 சிறப்பொடு பூசனை செல்லாது; வானம்
வறக்குமேல், வானோர்க்கும், ஈண்டு.

வானமே பொய்த்து விடும்போது, அதன் பின்னர் அந்த வானத்தில் வாழ்வதாகச் சொல்லப்படுகிறவர்களுக்கு விழாக்கள் ஏது? வழிபாடுதான் ஏது?

19 தானம், தவம் இரண்டும் தங்கா வியன்-உலகம்;
வானம் வழங்காது எனின்.

இப்பேருலகில் மழை பொய்த்துவிடுமானால் அது, பிறர் பொருட்டுச் செய்யும் தானத்திற்கும், தன்பொருட்டு மேற்கொள்ளும் நோன்புக்கும் தடங்கலாகும்.

20 நீர்-இன்று அமையாது உலகு-எனின்; யார்யார்க்கும்
வான்-இன்று அமையாது ஒழுக்கு.

உலகில் மழையே இல்லையென்றால் ஒழுக்கமே கெடக்கூடும் என்ற நிலை இருப்பதால், நீரின் இன்றியமையாமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.

# 3. நீத்தார் பெருமை

21 ஒழுக்கத்து நீத்தார்-பெருமை, விழுப்பத்து
வேண்டும்; பனுவல் துணிவு.

ஒழுக்கத்தில் உறுதியான துறவிகளின் பெருமை, சான்றோர் நூலில் விருப்பமுடனும். உயர்வாகவும் இடம் பெறும்.

22 துறந்தார் பெருமை துணைக்-கூறின்; வையத்து
இறந்தாரை எண்ணிக்-கொண்டற்று.

உலகில் இறந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கூற முடியுமா? அதுபோலத்தான் உண்மையாகவே பற்றுகளைத் துறந்த உத்தமர்களின் பெருமையையும் அளவிடவே முடியாது.

23 இருமை, வகை-தெரிந்து ஈண்டு அறம்-பூண்டார்;
பெருமை பிறங்கிற்று, உலகு.

நன்மை எது, தீமை எது என்பதை ஆய்ந்தறிந்து நன்மைகளை மேற்கொள்பவர்களே உலகில் பெருமைக் குரியவர்களாவார்கள்.

24 உரன்-என்னும் தோட்டியான், ஓர்-ஐந்தும்-காப்பான்;
வரன்-என்னும் வைப்பிற்கு, ஓர்-வித்து.

உறுதியென்ற அங்குசம் கொண்டு, ஐம்பொறிகளையும் அடக்கிக் காப்பவன், துறவறம் எனும் நிலத்திற்கு ஏற்ற விதையாவான்.

25 ஐந்து-அவித்தான்-ஆற்றல்; அகல் விசும்புளார் கோமான்
இந்திரனே சாலும், கரி.

புலன்களை அடக்க முடியாமல் வழிதவறிச் சென்றிடும் மனிதனுக்குச் சான்றாக இந்திரன் விளங்கி, ஐம்புலன்களால் ஏற்படும் ஆசைகளைக் கட்டுப்படுத்தியதால் வான்புகழ் கொண்டவர்களின் ஆற்றலை எடுத்துக் காட்டுகிறான்.

26 செயற்கு-அரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கு-அரிய செய்கலாதார்.

பெருமை தரும் செயல்களைப் புரிவோரைப் பெரியோர் என்றும், சிறுமையான செயல்களையன்றிப் பெருமைக்குரிய செயல்களைச் செய்யாதவர்களைச் சிறியோர் என்றும் வரையறுத்துவிட முடியும்.

27 சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்தின்-
வகை தெரிவான்கட்டே; உலகு.

ஐம்புலன்களின் இயல்பை உணர்ந்து அவற்றை அடக்கியாளும் திறன் கொண்டவனையே உலகம் போற்றும்.

28 நிறை-மொழி மாந்தர் பெருமை; நிலத்து
மறை-மொழி காட்டிவிடும்.

சான்றோர்களின் பெருமையை, இந்த உலகில் அழியாமல் நிலைத்து நிற்கும் அவர்களது அறவழி நூல்களே எடுத்துக் காட்டும்.

29 குணம்-என்னும் குன்று-ஏறி நின்றார், வெகுளி
கணம்-ஏயும், காத்தல் அரிது.

குணக்குன்றுகளான பெரியவர்கள் கோபம் கொண்டால் அந்தக் கோபம் அவர்கள் உள்ளத்தில் ஒரு கணம் கூட நிலைத்து நிற்காது.

30 அந்தணர் என்போர் அறவோர்; மற்று-எவ்-உயிர்க்கும்
செந்-தண்மை பூண்டு-ஒழுகலான்.

அனைத்து உயிர்களிடத்திலும் அன்புகொண்டு அருள் பொழியும் சான்றோர் எவராயினும் அவர் அந்தணர் எனப்படுவார்.

# 4. அறன் வலியுறுத்தல்

31 சிறப்பு-ஈனும்; செல்வமும்-ஈனும்; அறத்தின் ஊஉங்கு
ஆக்கம் எவனோ, உயிர்க்கு.

சிறப்பையும், செழிப்பையும் தரக்கூடிய அறவழி ஒன்றைத்தவிர ஆக்கமளிக்கக் கூடிய வழி வேறென்ன இருக்கிறது?

32 அறத்தின் ஊஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை
மறத்தலின் ஊங்கு இல்லை கேடு.

நன்மைகளின் விளைநிலமாக இருக்கும் அறத்தைப் போல் ஒருவருடைய வாழ்க்கைக்கு ஆக்கம் தரக் கூடியது எதுவுமில்லை; அந்த அறத்தை மறப்பதை விடத் தீமையானதும் வேறில்லை.

33 ஒல்லும்-வகையான் அறவினை, ஓவாதே
செல்லும்-வாய் எல்லாம் செயல்.

செய்யக்கூடிய செயல்கள் எவை ஆயினும், அவை எல்லா இடங்களிலும் தொய்வில்லாத அறவழியிலேயே செய்யப்பட வேண்டும்.

34 மனத்துக்கண் மாசு-இலன் ஆதல்; அனைத்து-அறன்;
ஆகுல நீர, பிற.

மனம் தூய்மையாக இருப்பதே அறம்; மற்றவை ஆரவாரத்தைத் தவிர வேறொன்றுமில்லை.

35 அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்-சொல்; நான்கும்
இழுக்கா இயன்றது, அறம்.

பொறாமை, பேராசை, பொங்கும் கோபம், புண்படுத்தும் சொல் ஆகிய இந்த நான்கும் அறவழிக்குப் பொருந்தாதவைகளாகும்.

36 ‘அன்று-அறிவாம்’ என்னாது, அறம்-செய்க; மற்று-அது
பொன்றுங்கால் பொன்றாத்-துணை.

பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று நாள் கடத்தாமல் அறவழியை மேற்கொண்டால் அது ஒருவர் இறந்தபின் கூட அழியாப் புகழாய் நிலைத்துத் துணை நிற்கும்.

37 ‘அறத்து-ஆறு-இது’ என-வேண்டா; சிவிகை
பொறுத்தானொடு ஊர்ந்தான் இடை.

அறவழியில் நடப்பவர்கள் பல்லக்கில் உட்கார்ந்து செல்பவர்களைப் போல வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்கள் இரண்டையும் எளியவாகக் கருதி மகிழ்வுடன் பயணத்தை மேற்கொள்வார்கள். தீய வழிக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டவர்களோ பல்லக்கைத் தூக்கிச் சுமப்பவர்களைப் போல இன்பத்திலும் அமைதி கொள்ளாமல், துன்பத்தையும் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவமின்றி வாழ்வையே பெரும் சுமையாகக் கருதுவார்கள்.

38 வீழ்-நாள் படாஅமை நன்று-ஆற்றின்; அஃது-ஒருவன்
வாழ்-நாள் வழி-அடைக்கும் கல்.

பயனற்றதாக ஒருநாள்கூடக் கழிந்து போகாமல், தொடர்ந்து நற்செயல்களில் ஈடுபடுபவருக்கு வாழ்க்கைப் பாதையைச் சீராக்கி அமைத்துத் தரும் கல்லாக அந்த நற்செயல்களே விளங்கும்.

39 அறத்தான் வருவதே இன்பம்; மற்று-எல்லாம்
புறத்த; புகழும் இல.

தூய்மையான நெஞ்சுடன் நடத்தும் அறவழி வாழ்க்கையில் வருகின்ற புகழால் ஏற்படுவதே இன்பமாகும். அதற்கு மாறான வழியில் வருவது புகழும் ஆகாது; இன்பமும் ஆகாது.

40 செயற்பாலது ஓரும் அறனே; ஒருவற்கு
உயற்பாலது ஓரும் பழி.

பழிக்கத் தக்கவைகளைச் செய்யாமல் பாராட்டத்தக்க அறவழிச் செயல்களில் நாட்டம் கொள்வதே ஒருவர்க்குப் புகழ் சேர்க்கும்.

# 5. இல்வாழ்க்கை

41 இல்வாழ்வான் என்பான் இயல்பு-உடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

பெற்றோர், வாழ்க்கைத் துணை, குழந்தைகள் என இயற்கையாக அமைந்திடும் மூவர்க்கும் துணையாக இருப்பது இல்லறம் நடத்துவோர் கடமையாகும்.

42 துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும்;
இல்வாழ்வான் என்பான் துணை.

பற்றற்ற துறவிகட்கும், பசியால் வாடுவோர்க்கும், பாதுகாப்பற்றவர்க்கும் இல்லற வாழ்வு நடத்துவோர் துணையாக இருத்தல் வேண்டும்.

43 தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்; என்று
ஆங்கு-
ஐம்புலத்து-ஆறு, ஓம்பல் தலை.

வாழ்ந்து மறைந்தோரை நினைவுகூர்தல், வாழ்வாங்கு வாழ்வோரைப் போற்றுதல், விருந்தோம்பல், சுற்றம் பேணல் ஆகிய கடமைகளை நிறைவேற்றத் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளல் எனப்படும் ஐவகை அறநெறிகளும் இல்வாழ்வுக் குரியனவாம்.

44 பழி-அஞ்சிப் பாத்து ஊண்-உடைத்தாயின்; வாழ்க்கை
வழி-எஞ்சல், எஞ்ஞான்றும், இல்.

பழிக்கு அஞ்சாமல் சேர்ந்த பொருள் கணக்கின்றி இருப்பினும் அதைவிட, பழிக்கு அஞ்சிச் சேர்த்தபொருளைப் பகுத்து உண்ணும் பண்பிலேதான் வாழ்க்கையின் ஒழுக்கமே இருக்கிறது.

45 அன்பும், அறனும் உடைத்து-ஆயின்; இல்வாழ்க்கை
பண்பும், பயனும் அது.

இல்வாழ்க்கை பண்புடையதாகவும் பயனுடையதாகவும் விளங்குவதற்கு அன்பான உள்ளமும் அதையொட்டிய நல்ல செயல்களும் தேவை.

46 அறத்து-ஆற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்; புறத்து-ஆற்றில்
போஒய்ப் பெறுவது எவன்?

அறநெறியில் இல்வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் பெற்றிடும் பயனை, வேறு நெறியில் சென்று பெற்றிட இயலுமோ? இயலாது.

47 இயல்பினான், இல்வாழ்க்கை-வாழ்பவன் என்பான்;
முயல்வாருள் எல்லாம் தலை.

நல்வாழ்வுக்கான முயற்சிகளை மேற்கொள்வோரில் தலையானவராகத் திகழ்பவர், இல்வாழ்வின் இலக்கணமுணர்ந்து அதற்கேற்ப வாழ்பவர்தான்.

48 ஆற்றின் ஒழுக்கி, அறன்-இழுக்கா இல்வாழ்க்கை;
நோற்பாரின் நோன்மை-உடைத்து.

தானும் அறவழியில் நடந்து, பிறரையும் அவ்வழியில் நடக்கச் செய்திடுவோரின் இல்வாழ்க்கை, துறவிகள் கடைப்பிடிக்கும் நோன்பைவிடப் பெருமையுடையதாகும்.

49 அறன்-எனப்பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்
பிறன்-பழிப்பது இல்-ஆயின் நன்று.

பழிப்புக்கு இடமில்லாத இல்வாழ்க்கை இல்லறம் எனப் போற்றப்படும்.

50 வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்; வான்-உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

தெய்வத்துக்கென எத்தனையோ அருங்குணங்கள் கூறப்படுகின்றன. உலகில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன் வானில் வாழ்வதாகச் சொல்லப்படும் தெய்வத்துக்கு இணையாக வைத்து மதிக்கப்படுவான்.

# 6. வாழ்க்கைத்துணை நலம்

51 மனைத்-தக்க மாண்பு-உடையள்-ஆகி, தற்-கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்துணை.

இல்லறத்திற்குரிய பண்புகளுடன், பொருள் வளத்துக்குத் தக்கவாறு குடும்பம் நடத்துபவள், கணவனின் வாழ்வுக்குப் பெருந்துணையாவாள்.

52 மனை-மாட்சி, இல்லாள்கண் இல்-ஆயின்; வாழ்க்கை
எனை-மாட்சித்து-ஆயினும், இல்.

நற்பண்புள்ள மனைவி அமையாத இல்வாழ்க்கை எவ்வளவு சிறப்புடையதாக இருந்தாலும் அதற்குத் தனிச்சிறப்புக் கிடையாது.

53 இல்லது-என், இல்லவள் மாண்பு-ஆனால்? உள்ளது-என்,
இல்லவள் மாணாக்கடை?

நல்ல பண்புடைய மனைவி அமைந்த வாழ்க்கையில் எல்லாம் இருக்கும். அப்படியொரு மனைவி அமையாத வாழ்க்கையில் எதுவுமே இருக்காது.

54 பெண்ணின் பெருந்தக்க யா-உள? கற்பு-என்னும்
திண்மை உண்டாகப் பெறின்?

கற்பென்னும் திண்மை கொண்ட பெண்மையின் உறுதிப் பண்பைப் பெற்றுவிட்டால், அதைவிடப் பெருமைக்குரியது வேறு யாது?

55 தெய்வம் தொழாஅள், கொழுநன், தொழுது-எழுவாள்;
'பெய்' என, பெய்யும் மழை.

கணவன் வாக்கினைக் கடவுள் வாக்கினை விட மேலானதாகக் கருதி அவனையே தொழுதிடும் மனைவி பெய் என ஆணையிட்டவுடன் அஞ்சி நடுங்கிப் பெய்கின்ற மழையைப் போலத் தன்னை அடிமையாக எண்ணிக் கொள்பவளாவாள்.

56 தற்காத்து, தற்-கொண்டாற்-பேணி, தகை-சான்ற
சொற்காத்து, சோர்வு-இலாள்; பெண்.

கற்புநெறியில் தன்னையும் தன் கணவனையும் காத்துக் கொண்டு,தமக்குப் பெருமை சேர்க்கும் புகழையும் காப்பாற்றிக் கொள்வதில் உறுதி குலையாமல் இருப்பவள் பெண்.

57 சிறை-காக்கும் காப்பு, எவன்-செய்யும்? மகளிர்
நிறை-காக்கும் காப்பே, தலை.

தம்மைத் தாமே காத்துக்கொண்டு சிறந்த பண்புடன் வாழும் மகளிரை அடிமைகளாக நடத்த எண்ணுவது அறியாமையாகும்.

58 பெற்றாற்-பெறின் பெறுவர், பெண்டிர்; பெருஞ்-சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

நற்பண்பு பெற்றவனைக் கணவனாகப் பெற்றால், பெண்டிர்க்கு இல்வாழ்க்கையெனும் புதிய உலகம் பெருஞ்சிறப்பாக அமையும்.

59 புகழ்-புரிந்த இல்-இலோர்க்கு இல்லை; இகழ்வார்-முன்
ஏறு-போல் பீடு- நடை.

புகழுக்குரிய இல்வாழ்க்கை அமையாதவர்கள், தம்மைப் பழித்துப் பேசுவோர் முன்பு தலைநிமிர்ந்து நடக்க முடியாமல் குன்றிப் போய் விடுவார்கள்.

60 ‘மங்கலம்’ என்ப, மனைமாட்சி; மற்று-அதன்
நன்கலம், நன்-மக்கட்-பேறு.

குடும்பத்தின் பண்பாடுதான் இல்வாழ்க்கையின் சிறப்பு; அதற்கு மேலும் சிறப்பு நல்ல பிள்ளைகளைப் பெற்றிருப்பது.

# 7. புதல்வரைப் பெறுதல்

61 பெறுமவற்றுள் யாம்-அறிவது-இல்லை; அறிவு-அறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

அறிவில் சிறந்த நல்ல பிள்ளைகளைவிட இல்வாழ்க்கையில் சிறந்த பேறு வேறு எதுவுமில்லை.

62 எழு-பிறப்பும் தீயவை தீண்டா; பழி-பிறங்காப்
பண்புடை மக்கட்-பெறின்.

பெற்றெடுக்கும் மக்கள் பழிபடராத பண்புடையவர்களாக இருப்பின், ஏழேழு தலைமுறை எனும் அளவுக்குக் காலமெல்லாம் எந்தத் தீமையும் தீண்டாது.

63 தம்-பொருள் என்ப தம்-மக்கள்; அவர்-பொருள்
தம்தம் வினையால் வரும்.

தம் பொருள் என்பது தம்மக்களையேயாம். அம்மக்களின் பொருள்கள் அவரவர் செயல்களின் விளைவாக வரக் கூடியவை.

64 அமிழ்தினும் ஆற்ற இனிதே; தம்-மக்கள்
சிறு-கை அளாவிய கூழ்.

சிறந்த பொருளை அமிழ்தம் எனக் குறிப்பிட்டாலுங் கூடத் தம்முடைய குழந்தைகளின் பிஞ்சுக்கரத்தால் அளாவப்பட்ட கூழ் அந்த அமிழ்தத்தைவிடச் சுவையான தாகிவிடுகிறது.

65 மக்கள் மெய்-தீண்டல், உடற்கு-இன்பம்; மற்று-அவர்
சொல்-கேட்டல் இன்பம், செவிக்கு.

தம் குழந்தைகளைத் தழுவி மகிழ்வது உடலுக்கு இன்பத்தையும், அந்தக் குழந்தைகளின் மழலை மொழி கேட்பது செவிக்கு இன்பத்தையும் வழங்கும்.

66 ‘குழல்-இனிது, யாழ்-இனிது’ என்ப; தம்-மக்கள்
மழலைச்-சொல் கேளாதவர்.

தங்கள் குழந்தைகளின் மழலைச் சொல்லைக் கேட்காதவர்கள்தான் குழலோசை, யாழோசை ஆகிய இரண்டும் இனிமையானவை என்று கூறுவார்கள்.

67 தந்தை, மகற்கு-ஆற்றும்-நன்றி; அவையத்து,
முந்தி இருப்பச் செயல்.

தந்தை தன் மக்களுக்குச் செய்யவேண்டிய நல்லுதவி அவர்களை அறிஞர்கள் அவையில் புகழுடன் விளங்குமாறு ஆக்குதலே ஆகும்.

68 தம்மின், தம்-மக்கள் அறிவுடைமை; மா-நிலத்து
மன்-உயிர்க்கு எல்லாம் இனிது.

பெற்றோரைக் காட்டிலும் பிள்ளைகள் அறிவிற் சிறந்து விளங்கினால், அது பெற்றோருக்கு மட்டுமேயன்றி உலகில் வாழும் அனைவருக்கும் அக மகிழ்ச்சி தருவதாகும்.

69 ஈன்ற-பொழுதின் பெரிது-உவக்கும்; தன்-மகனைச்
சான்றோன் எனக்-கேட்ட தாய்.

நல்ல மகனைக் பெற்றெடுத்தவள் என்று ஊரார் பாராட்டும் பொழுது அவனைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியைவிட அதிக மகிழ்ச்சியை அந்தத் தாய் அடைவாள்.

70 மகன், தந்தைக்கு-ஆற்றும் உதவி; ‘இவன் தந்தை
என் நோற்றான்கொல்!’ எனும் சொல்.

“ஆகா! இவனைப் பிள்ளையாகப் பெற்றது இவன் தந்தை பெற்ற பெரும்பேறு”, என்று ஒரு மகன் புகழப் படுவதுதான், அவன் தன்னுடைய தந்தைக்குச் செய்யக் கூடிய கைம்மாறு எனப்படும்.

# 8. அன்பு உடைமை

71 அன்பிற்கும் உண்டோ, அடைக்கும்-தாழ்? ஆர்வலர்
புன்கண்-நீர் பூசல் தரும்.

உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாழ்ப்பாள் போட்டு அடைத்து வைக்க முடியாது. அன்புக்குரியவரின் துன்பங்காணுமிடத்து, கண்ணீர்த்துளி வாயிலாக அது வெளிப்பட்டு விடும்.

72 அன்பு-இலார், எல்லாம் தமக்கு-உரியர்; அன்பு-உடையார்
என்பும் உரியர், பிறர்க்கு.

அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர்; அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர்.

73 'அன்போடு இயைந்த வழக்கு' என்ப; 'ஆர்-உயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு'.

உயிரும் உடலும்போல் அன்பும் செயலும் இணைந்திருப்பதே உயர்ந்த பொருத்தமாகும்.

74 அன்பு-ஈனும் ஆர்வம் உடைமை; அது-ஈனும்,
'நண்பு' என்னும் நாடாச்-சிறப்பு.

அன்பு பிறரிடம் பற்றுள்ளம் கொள்ளச் செய்யும். அந்த உள்ளம், நட்பு எனும் பெருஞ்சிறப்பை உருவாக்கும்.

75 'அன்புற்று அமர்ந்த வழக்கு' என்ப; 'வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு'.

உலகில் இன்புற்று வாழ்கின்றவர்க்கு வாய்க்கும் சிறப்பு, அவர் அன்புள்ளம் கொண்டவராக விளங்குவதன் பயனே என்று கூறலாம்.

76 ‘அறத்திற்கே அன்பு சார்பு’ என்ப, அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை.

வீரச் செயல்களுக்கும் அன்பு துணையாகத் திகழ்கிறது என்பதை அறியாதவர்களே, அறச் செயல்களுக்கு மட்டுமே அன்பு துணையாக இருப்பதாகக் கூறுவார்கள்.

77 என்பு-இலதனை வெயில் போலக் காயுமே!
அன்பு-இலதனை அறம்.

அறம் எதுவென அறிந்தும் அதனைக் கடைப்பிடிக்காத வரை, அவரது மனச்சாட்சியே வாட்டி வதைக்கும். அது வெயிலின் வெம்மை புழுவை வாட்டுவதுபோல இருக்கும்.

78 அன்பு, அகத்து-இல்லா உயிர்-வாழ்க்கை; வன்பாற்கண்
வற்றல், மரம்-தளிர்த்தற்று.

மனத்தில் அன்பு இல்லாதவருடைய வாழ்க்கை, பாலை வானத்தில் பட்டமரம் தளிர்த்தது போன்றது.

79 புறத்து-உறுப்பு எல்லாம் எவன்-செய்யும்? யாக்கை
அகத்து-உறுப்பு அன்பு-இலவர்க்கு?

அன்பு எனும் அகத்து உறுப்பு இல்லாதவர்க்குப் புறத்து உறுப்புகள் அழகாக இருந்து என்ன பயன்?

80 அன்பின் வழியது உயிர்நிலை; அஃது-இலார்க்கு
என்பு தோல்-போர்த்த உடம்பு.

அன்புநெஞ்சத்தின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும்; இல்லையேல், அது எலும்பைத் தோல் போர்த்திய வெறும் உடலேயாகும்.

# 9. விருந்து ஓம்பல்

81 இருந்து, ஓம்பி இல்-வாழ்வது-எல்லாம்; விருந்து-ஓம்பி,
வேளாண்மை செய்தற்-பொருட்டு.

இல்லறத்தைப் போற்றி வாழ்வது, விருந்தினரை வரவேற்று, அவர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்காகவே.

82 விருந்து புறத்ததாத் தான்-உண்டல், சாவா-
மருந்து-எனினும், வேண்டற்பாற்று அன்று.

விருந்தினராக வந்தவரை வெளியே விட்டுவிட்டுச் சாகாத மருந்தாக இருந்தாலும் அதனைத் தான் மட்டும் உண்பது விரும்பத் தக்க பண்பாடல்ல.

83 வரு-விருந்து வைகலும், ஓம்புவான் வாழ்க்கை;
பருவந்து பாழ்படுதல் இன்று.

விருந்தினரை நாள்தோறும் வரவேற்று மகிழ்பவரின் வாழ்க்கை, அதன் காரணமாகத் துன்பமுற்றுக் கெட்டொழிவதில்லை.

84 அகன்-அமர்ந்து செய்யாள் உறையும்; முகன்-அமர்ந்து
நல்-விருந்து ஓம்புவான் இல்.

மனமகிழ்ச்சியை முகமலர்ச்சியால் காட்டி விருந்தினரை வரவேற்பவர் வீட்டில் அமர்ந்து செல்வம் எனும் திருமகள் வாழ்வாள்.

85 வித்தும் இடல்வேண்டும் கொல்லோ? விருந்து-ஓம்பி,
மிச்சில் மிசைவான் புலம்.

விருந்தினர்க்கு முதலில் உணவளித்து மிஞ்சியதை உண்டு வாழும் பண்பாளன், தன் நிலத்திற்குரிய விதையைக்கூட விருந்தோம்பலுக்குப் பயன்படுத்தாமல் இருப்பானா?

86 செல்-விருந்து ஓம்பி, வரு-விருந்து பார்த்திருப்பான்;
நல்-விருந்து, வானத்தவர்க்கு.

வந்த விருந்தினரை உபசரித்து அவர்களை வழியனுப்பி வைக்கும்போதே, மேலும் வரக்கூடிய விருந்தினரை ஆவலுடன் எதிர்நோக்கி நிற்பவனை, புகழ்வானில் இருப்போர் நல்ல விருந்தினன் என்று வரவேற்றுப் போற்றுவர்.

87 இனைத்-துணைத்து என்பது-ஒன்று-இல்லை; விருந்தின்
துணைத்-துணை, வேள்விப் பயன்.

விருந்தினராக வந்தவரின் சிறப்பை எண்ணிப்பார்த்து விருந்தோம்பலை ஒரு வேள்வியாகவே கருதலாம்.

88 'பரிந்து-ஓம்பி, பற்று அற்றேம்' என்பர்; விருந்து-ஓம்பி
வேள்வி தலைப்படாதார்.

செல்வத்தைச் சேர்த்துவைத்து அதனை இழக்கும்போது, விருந்தோம்பல் எனும் வேள்விக்கு அது பயன்படுத்தப்படாமற் போயிற்றே என வருந்துவார்கள்.

89 உடைமையுள் இன்மை; விருந்து-ஓம்பல் ஓம்பா-
மடமை; மடவார்கண் உண்டு.

விருந்தினரை வரவேற்றுப் போற்றத் தெரியாத அறிவற்றவர்கள் எவ்வளவு பணம் படைத்தவர்களாக இருந்தாலும் தரித்திரம் பிடித்தவர்களாகவே கருதப்படுவார்கள்.

90 மோப்பக் குழையும் அனிச்சம்; முகம்-திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

அனிச்சம் எனப்படும் பூ, முகர்ந்தவுடன் வாடி விடக் கூடியது.அதுபோல் சற்று முகங்கோணி வரவேற்றாலே விருந்தினர் வாடிவிடுவர்.

# 10. இனியவை கூறல்

91 இன்-சொல்; ஆல்-ஈரம்-அளைஇ, படிறு-இல-ஆம்
செம்பொருள் கண்டார் வாய்ச்-சொல்.

ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும், வாய்மையுடையதாகவும் இருப்பின் அதுவே இன்சொல் எனப்படும்.

92 அகன்-அமர்ந்து ஈதலின் நன்றே; முகன்-அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

முகம் மலர்ந்து இனிமையாகப் பேசுவது, அகம் குளிர்ந்து ஒன்றைக் கொடுப்பதை விட மேலான பண்பாகும்.

93 முகத்தான்-அமர்ந்து, இனிது-நோக்கி, அகத்தான் ஆம்
இன்-சொலினதே; அறம்.

முகம் மலர நோக்கி, அகம் மலர இனிய சொற்களைக் கூறுவதே அறவழியில் அமைந்த பண்பாகும்.

94 துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும்; யார்மாட்டும்
இன்புறூஉம் இன்-சொலவர்க்கு.

இன்சொல் பேசி எல்லோரிடத்திலும் கனிவுடன் பழகுவோர்க்கு ‘நட்பில் வறுமை’ எனும் துன்பமில்லை.

95 பணிவு-உடையன், இன்சொலன் ஆதல்; ஒருவற்கு-
அணி; அல்ல, மற்றுப் பிற.

அடக்கமான பண்பும், இனிமையாகப் பேசும் இயல்பும் தவிர, ஒருவருக்குச் சிறந்த அணிகலன் வேறு இருக்க முடியாது.

96 அல்லவை தேய, அறம் பெருகும்; நல்லவை-
நாடி, இனிய சொலின்.

தீய செயல்களை அகற்றி அறநெறி தழைக்கச் செய்ய வேண்டுமானால், இனிய சொற்களைப் பயன்படுத்தி நல்வழி எதுவெனக் காட்ட வேண்டும்.

97 நயன்-ஈன்று நன்றி-பயக்கும்-பயன்; ஈன்று-
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

நன்மையான பயனைத் தரக்கூடிய நல்ல பண்பிலிருந்து விலகாத சொற்கள் அவற்றைக் கூறுவோருக்கும் இன்பத்தையும், நன்மையையும் உண்டாக்கக் கூடியவைகளாகும்.

98 சிறுமையுள் நீங்கிய இன்சொல்; மறுமையும்,
இம்மையும் இன்பம்-தரும்.

சிறுமைத்தனமற்ற இனியசொல் ஒருவனுக்கு அவன் வாழும் போதும், வாழ்ந்து மறைந்த பிறகும் புகழைத் தரக்கூடியதாகும்.

99 இன்-சொல் இனிது-ஈன்றல்-காண்பான்; எவன்கொலோ,
வன்-சொல் வழங்குவது?

இனிய சொற்கள் இன்பத்தை வழங்கும் என்பதை உணர்ந்தவர் அதற்கு மாறாக எதற்காகக் கடுஞ் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்?

100 இனிய உளவாக இன்னாத கூறல்;
கனி இருப்ப, காய் கவர்ந்தற்று.

இனிமையான சொற்கள் இருக்கும்போது அவற்றை விடுத்துக் கடுமையாகப் பேசுவது கனிகளை ஒதுக்கி விட்டுக் காய்களைப் பறித்துத் தின்பதற்குச் சமமாகும்.

# 11. செய்ந்நன்றி அறிதல்

101 செய்யாமல் செய்த உதவிக்கு; வையகமும்,
வானகமும் ஆற்றல்-அரிது.

“வாராது வந்த மாமணி” என்பதுபோல், “செய்யாமற் செய்த உதவி” என்று புகழத்தக்க அரிய உதவி வழங்கப்பட்டால், அதற்கு இந்த வானமும் பூமியும் கூட ஈடாக மாட்டா.

102 காலத்தினால் செய்த நன்றி, சிறிது-எனினும்;
ஞாலத்தின் மாணப்-பெரிது.

தேவைப்படும் காலத்தில் செய்யப்படும் உதவி சிறிதளவாக இருந்தாலும், அது உலகத்தைவிடப் பெரிதாக மதிக்கப்படும்.

103 பயன்-தூக்கார் செய்த உதவி, நயன்-தூக்கின்;
நன்மை, கடலின்-பெரிது.

என்ன பயன் கிடைக்கும் என்று எண்ணிப் பார்க்காமலே, அன்பின் காரணமாக ஒருவர் செய்த உதவியின் சிறப்பு கடலை விடப் பெரிது.

104 தினைத்-துணை நன்றி செயினும், பனைத்-துணையாக்
கொள்வர்; பயன் தெரிவார்.

ஒருவர் செய்யும் தினையளவு நன்மையைக்கூட அதனால் பயன்பெறும் நன்றியுள்ளவர் பல்வேறு வகையில் பயன்படக்கூடிய பனையின் அளவாகக் கருதுவார்.

105 உதவி வரைத்து-அன்று, உதவி; உதவி,
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

உதவி என்பது, செய்யப்படும் அளவைப் பொறுத்துச் சிறப்படைவதில்லை; அந்த உதவியைப் பெறுபவரின் பண்பைப் பொறுத்தே அதன் அளவு மதிப்பிடப்படும்.

106 மறவற்க, மாசு-அற்றார் கேண்மை! துறவற்க,
துன்பத்துள் துப்பு-ஆயார் நட்பு!

மாசற்றவர்களின் உறவை மறக்கவும் கூடாது; துன்பத்தில் துணை நின்றவர் நட்பைத் துறக்கவும் கூடாது.

107 எழுமை எழு-பிறப்பும் உள்ளுவர்; தம்-கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

ஏழேழு தலைமுறைக்கு என்றும் ஏழேழு பிறவிக்கு என்றும் மிகைப்படுத்திச் சொல்லுவதுபோல, ஒருவருடைய துன்பத்தைப் போக்கியவரின் தூய்மையான நட்பை நினைத்துப் போற்றுவதற்குக் கால எல்லையே கிடையாது.

108 நன்றி மறப்பது நன்று-அன்று; நன்று-அல்லது
அன்றே மறப்பது நன்று.

ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதல்ல; அவர் தீமை செய்திருந்தால் அதை மட்டும் அக்கணமே மறந்து விடுவது நல்லது.

109 கொன்றன்ன இன்னா-செயினும்; அவர்-செய்த-
ஒன்றும், நன்று உள்ள, கெடும்.

ஒருவர் செய்யும் மிகக் கொடுமையான தீமைகூட நமது உள்ளத்தைப் புண்படுத்தாமல் அகன்றுவிட வேண்டுமானால், அந்த ஒருவர் முன்னர் நமக்குச் செய்த நன்மையை மட்டும் நினைத்துப் பார்த்தாலே போதுமானது.

110 எந்-நன்றி கொன்றார்க்கும் உய்வு-உண்டாம்; உய்வு-இல்லை,
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

எந்த அறத்தை மறந்தார்க்கும் வாழ்வு உண்டு; ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தார்க்கு வாழ்வில்லை.

# 12. நடுவு நிலைமை

111 தகுதி-என-ஒன்றும் நன்றே; பகுதியான்
பாற்பட்டு ஒழுகப்-பெறின்.

பகைவர், அயலோர், நண்பர் எனப் பகுத்துப் பார்த்து ஒருதலைச் சார்பாக நிற்காமல் இருத்தலே நன்மை தரக் கூடிய நடுவுநிலைமை எனும் தகுதியாகும்.

112 செப்பம் உடையவன் ஆக்கம், சிதைவு-இன்றி;
எச்சத்திற்கு ஏமாப்பு-உடைத்து.

நடுவுநிலையாளனின் செல்வத்திற்கு அழிவில்லை; அது, வழிவழித் தலைமுறையினர்க்கும் பயன் அளிப்பதாகும்.

113 நன்றே தரினும், நடுவு-இகந்து ஆம் ஆக்கத்தை;
அன்றே ஒழிய-விடல்!

நடுவுநிலை தவறுவதால் ஏற்படக்கூடிய பயன் நன்மையையே தரக் கூடியதாக இருந்தாலும், அந்தப் பயனைக் கைவிட்டு நடுவுநிலையைத்தான் கடைப்பிடிக்க வேண்டும்.

114 தக்கார், தகவு-இலர் என்பது; அவர்-அவர்
எச்சத்தால் காணப்-படும்.

ஒருவர் நேர்மையானவரா அல்லது நெறி தவறி, நீதி தவறி நடந்தவரா என்பது அவருக்குப் பின் எஞ்சி நிற்கப் போகும் புகழ்ச் சொல்லைக் கொண்டோ அல்லது பழிச் சொல்லைக் கொண்டோதான் நிர்ணயிக்கப்படும்.

115 கேடும், பெருக்கமும் இல்-அல்ல; நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு-அணி.

ஒருவர்க்கு வாழ்வும், தாழ்வும் உலக இயற்கை; அந்த இரு நிலைமையிலும் நடுவுநிலையாக இருந்து உறுதி காட்டுவதே பெரியோர்க்கு அழகாகும்.

116 ‘கெடுவல்-யான்’ என்பது அறிக; தன்-நெஞ்சம்
நடுவு-ஓரீஇ, அல்ல செயின்.

நடுவுநிலைமை தவறிச் செயல்படலாம் என்று ஒரு நினைப்பு ஒருவனுக்கு வந்துவிடுமானால் அவன் கெட்டொழியப் போகிறான் என்று அவனுக்கே தெரிய வேண்டும்.

117 கெடுவாக வையாது உலகம்; நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

நடுவுநிலைமை தவறாமல் அறவழியில் வாழ்கிற ஒருவருக்கு அதன் காரணமாகச் செல்வம் குவியாமல் வறுமை நிலை ஏற்படுமேயானால் அவரை உலகம் போற்றுமே தவிரத் தாழ்வாகக் கருதாது.

118 சமன்-செய்து, சீர்-தூக்கும் கோல்-போல் அமைந்து-ஒருபால்
கோடாமை; சான்றோர்க்கு அணி.

ஒரு பக்கம் சாய்ந்து விடாமல் நாணயமான தராசு முள் போல இருந்து நியாயம் கூறுவதுதான் உண்மையான நடுவுநிலைமை என்பதற்கு அழகாகும்.

119 சொற்-கோட்டம் இல்லது, செப்பம் ஒருதலையா;
உட்-கோட்டம் இன்மை பெறின்.

நேர்மையும் நெஞ்சுறுதியும் ஒருவருக்கு இருந்தால் அவரது சொல்லில் நீதியும் நியாயமும் இருக்கும். அதற்குப் பெயர்தான் நடுவுநிலைமை.

120 வாணிகம் செய்வார்க்கு வாணிகம்; பேணிப்-
பிறவும் தமபோல் செயின்.

பிறர் பொருளாக இருப்பினும் அதனைத் தன் பொருளைப் போலவே கருதி நேர்மையுடன் வாணிகம் செய்தலே வணிக நெறியெனப்படும்.

# 13. அடக்கம் உடைமை

121 அடக்கம், அமரருள் உய்க்கும்; அடங்காமை,
ஆர்-இருள் உய்த்து-விடும்.

அடக்கம் அழியாத புகழைக் கொடுக்கும். அடங்காமை வாழ்வையே இருளாக்கி விடும்.

122 காக்க-பொருளா, அடக்கத்தை; ஆக்கம்
அதனின் ஊங்கு-இல்லை, உயிர்க்கு!

மிக்க உறுதியுடன் காக்கப்படவேண்டியது அடக்கமாகும்.அடக்கத்தைவிட ஆக்கம் தரக் கூடியது வேறொன்றும் இல்லை.

123 செறிவு-அறிந்து சீர்மை பயக்கும்; அறிவு-அறிந்து
ஆற்றின் அடங்கப்-பெறின்.

அறிந்து கொள்ள வேண்டியவற்றை அறிந்து அதற்கேற்ப அடக்கத்துடன் நடந்து கொள்பவரின் பண்பை உணர்ந்து பாராட்டுகள் குவியும்.

124 நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்;
மலையினும் மாணப்-பெரிது.

உறுதியான உள்ளமும், அத்துடன் ஆர்ப்பாட்டமற்ற அடக்க உணர்வும் கொண்டவரின் உயர்வு, மலையைவிடச் சிறந்தது எனப் போற்றப்படும்.

125 எல்லார்க்கும் நன்று-ஆம், பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

பணிவு என்னும் பண்பு, எல்லார்க்கும் நலம் பயக்கும். ஏற்கனவே செல்வர்களாக இருப்பவர்களுக்கு அந்தப் பண்பு, மேலும் ஒரு செல்வமாகும்.

126 ஒருமையுள், ஆமை-போல், ஐந்து-அடக்கல் ஆற்றின்;
எழுமையும், ஏமாப்பு-உடைத்து.

உறுப்புகளை ஓர் ஓட்டுக்குள் அடக்கிக் கொள்ளும் ஆமையைப் போல் ஐம்பொறிகளையும் அடக்கியாளும் உறுதி, காலமெல்லாம் வாழ்க்கைக்குக் காவல் அரணாக அமையும்.

127 யா-காவார் ஆயினும், நா-காக்க; காவாக்கால்,
சோகாப்பர், சொல்-இழுக்குப்-பட்டு.

ஒருவர் எதைக் காத்திட முடியாவிட்டாலும் நாவையாவது அடக்கிக் காத்திட வேண்டும். இல்லையேல் அவர் சொன்ன சொல்லே அவர் துன்பத்துக்குக் காரணமாகிவிடும்.

128 ஒன்றானும் தீச்சொற் பொருட்-பயன் உண்டாயின்;
நன்று-ஆகாது-ஆகிவிடும்.

ஒரு குடம் பாலில் துளி நஞ்சுபோல், பேசும் சொற்களில் ஒரு சொல் தீய சொல்லாக இருந்து துன்பம் விளைவிக்குமானாலும், அந்தப் பேச்சில் உள்ள நல்ல சொற்கள் அனைத்தும் தீயவாகிவிடும்.

129 தீயினால் சுட்ட-புண், உள்-ஆறும்; ஆறாதே
நாவினால் சுட்ட, வடு.

நெருப்பு சுட்ட புண்கூட ஆறி விடும்; ஆனால் வெறுப்புக் கொண்டு திட்டிய சொற்கள் விளைத்த துன்பம் ஆறவே ஆறாது.

130 கதம்-காத்து, கற்று, அடங்கல்-ஆற்றுவான் செவ்வி;
அறம்-பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

கற்பவை கற்றுச், சினம் காத்து, அடக்கமெனும் பண்பு கொண்டவரை அடைந்திட அறமானது வழிபார்த்துக் காத்திருக்கும்.

# 14. ஒழுக்கம் உடைமை

131 ஒழுக்கம் விழுப்பம் தரலான்; ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்-படும்.

ஒருவர்க்கு உயர்வு தரக் கூடியது ஒழுக்கம் என்பதால், அந்த ஒழுக்கமே உயிரைவிட மேலானதாகப் போற்றப்படுகிறது.

132 பரிந்து ஓம்பிக்-காக்க, ஒழுக்கம்; தெரிந்து-ஓம்பித்
தேரினும், அஃதே துணை!

எந்தெந்த வழிகளில் ஆராய்ந்தாலும் வாழ்க்கையில் ஒழுக்கமே சிறந்த துணை என்பதால், எத்தகைய துன்பத்தை ஏற்றாவது அதைக் காக்க வேண்டும்.

133 ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

ஒழுக்கம் உடையவராக வாழ்வதுதான் உயர்ந்த குடிப்பிறப்புக்கு எடுத்துக் காட்டாகும். ஒழுக்கம் தவறுகிறவர்கள் யாவராயினும் அவர்கள் இழிந்த குடியில் பிறந்தவர்களாகவே கருதப்படுவர்.

134 மறப்பினும், ஒத்துக்-கொளல் ஆகும்; பார்ப்பான்
பிறப்பு-ஒழுக்கம் குன்றக்-கெடும்.

பார்ப்பனன் ஒருவன் கற்றதை மறந்துவிட்டால் மீண்டும் படித்துக் கொள்ள முடியும்; ஆனால், பிறப்புக்குச் சிறப்பு சேர்க்கும் ஒழுக்கத்திலிருந்து அவன் தவறினால் இழிமகனே ஆவான்.

135 அழுக்காறு உடையான்கண், ஆக்கம்-போன்று இல்லை;
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

பொறாமையுடையவனுக்கும், நல்லொழுக்கமில்லாதவனுக்கும் அமையும் வாழ்வு, உயர்வான வாழ்வாகக் கருதப்பட மாட்டாது.

136 ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்; இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

மன உறுதி கொண்டவர்கள் ஒழுக்கம் தவறுவதால் ஏற்படும் இழிவை உணர்ந்திருப்பதால், நல்லொழுக்கம் குன்றிடுமளவிற்கு நடக்க மாட்டார்கள்.

137 ஒழுக்கத்தின் எய்துவர், மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர், எய்தாப்-பழி.

நல்ல நடத்தையினால் உயர்வு ஏற்படும்; இல்லையேல் இழிவான பழி வந்து சேரும்.

138 நன்றிக்கு வித்து-ஆகும், நல்-ஒழுக்கம்; தீ-ஒழுக்கம்,
என்றும் இடும்பை தரும்.

நல்லொழுக்கம், வாழ்க்கையில் நன்மைக்கு வித்தாக அமையும். தீயொழுக்கம், தீராத துன்பம் தரும்.

139 ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே; தீய
வழுக்கியும், வாயால் சொலல்.

தவறியும்கூடத் தம் வாயால் தகாத சொற்களைச் சொல்வது ஒழுக்கம் உடையவர்களிடம் இல்லாத பண்பாகும்.

140 உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பல-கற்றும்,
கல்லார் அறிவிலாதார்.

உயர்ந்தோர் ஏற்றுக் கொண்ட ஒழுக்கம் எனும் பண்போடு வாழக் கற்காதவர்கள் பல நூல்களைப் படித்திருந்தும்கூட அறிவில்லாதவர்களே ஆவார்கள்.

# 15. பிறன் இல் விழையாமை

141 பிறன்-பொருளாள் பெட்டு-ஒழுகும் பேதைமை; ஞாலத்து
அறம், பொருள் கண்டார்கண் இல்.

பிறன் மனைவியிடத்து விருப்பம் கொள்ளும் அறியாமை, உலகில் அறநூல்களையும் பொருள் நூல்களையும் ஆராய்ந்து உணர்ந்தவர்களிடம் இல்லை.

142 அறன்கடை நின்றாருள் எல்லாம், பிறன்கடை
நின்றாரின், பேதையார் இல்.

பிறன் மனைவியை அடைவதற்குத் துணிந்தவர்கள் அறவழியை விடுத்துத் தீயவழியில் செல்லும் கடைநிலை மனிதர்களைக் காட்டிலும் கீழானவர்கள்.

143 விளிந்தாரின் வேறு-அல்லர், மன்ற; தெளிந்தார்-இல்
தீமை புரிந்து-ஒழுகுவார்.

நம்பிப் பழகியவர் வீட்டில், அவரது மனைவியிடம் தகாத செயலில் ஈடுபட முனைகிறவன், உயிர் இருந்தும் பிணத்திற்கு ஒப்பானவனேயாவான்.

144 எனைத்-துணையர் ஆயினும் என்னாம்? தினைத்-
துணையும்
தேரான், பிறன்-இல் புகல்?

பிழை புரிகிறோம் என்பதைத் தினையளவுகூடச் சிந்தித்துப் பாராமல், பிறன் மனைவியிடம் விருப்பம் கொள்வது, எத்துணைப் பெருமையுடையவரையும் மதிப்பிழக்கச் செய்துவிடும்.

145 ‘எளிது’ என இல்-இறப்பான், எய்தும்; எஞ்-ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

எளிதாக அடையலாம் என எண்ணிப் பிறனுடைய மனைவியிடம் முறைகேடாக நடப்பவன் என்றும் அழியாத பழிக்கு ஆளாவான்.

146 பகை, பாவம், அச்சம், பழி என-நான்கும்
இகவா-ஆம்; இல் இறப்பான்கண்.

பிறன் மனைவியிடம் முறைகேடாக நடக்க நினைப்பவனிடமிருந்து பகை, தீமை, அச்சம், பழி ஆகிய நான்கும் நீங்குவதில்லை.

147 அறன்-இயலான் இல்வாழ்வான் என்பான்; பிறன்-இயலாள்
பெண்மை நயவாதவன்.

பிறன் மனைவியிடம் பெண்மை இன்பத்தை நாடிச் செல்லாதவனே அறவழியில் இல்வாழ்க்கை மேற்கொண்டவன் எனப்படுவான்.

148 பிறன்-மனை நோக்காத பேர்-ஆண்மை, சான்றோர்க்கு
அறன் ஒன்றோ? ஆன்ற ஒழுக்கு.

வேறொருவன் மனைவியைக் காம எண்ணத்துடன் நோக்காத பெருங்குணம் அறநெறி மட்டுமன்று; அது ஒழுக்கத்தின் சிகரமும் ஆகும்.

149 ‘நலக்கு உரியார் யார்?’ எனின், நாம-நீர்-வைப்பில்
பிறற்கு-உரியாள் தோள் தோயாதார்.

பிறன் மனைவியின் தோளைத் தீண்டாதவரே கடல் சூழ் இவ்வுலகின் பெருமைகளை அடைவதற்குத் தகுதியுடையவர்.

150 அறன்-வரையான், அல்ல செயினும், பிறன்-வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

பிறன் மனைவியை விரும்பிச் செயல்படுவது அறவழியில் நடக்காதவர் செயலைவிடத் தீமையானதாகும்.

# 16. பொறை உடைமை

151 அகழ்வாரைத் தாங்கும் நிலம்-போல, தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

தன்மீது குழி பறிப்போரையே தாங்குகின்ற பூமியைப் போல் தம்மை இகழ்ந்து பேசுகிறவர்களின் செயலையும் பொறுத்துக் கொள்வதே தலைசிறந்த பண்பாகும்.

152 பொறுத்தல், இறப்பினை என்றும்; அதனை
மறத்தல், அதனினும் நன்று.

அளவுகடந்து செய்யப்பட்ட தீங்கைப் பொறுத்துக் கொள்வதைக் காட்டிலும், அந்தத் தீங்கை அறவே மறந்து விடுவதே சிறந்த பண்பாகும்.

153 இன்மையுள் இன்மை விருந்து-ஒரால்; வன்மையுள்
வன்மை மடவார்ப்-பொறை.

வறுமையிலும் கொடிய வறுமை; வந்த விருந்தினரை வரவேற்க முடியாதது. அதைப்போல வலிமையிலேயே பெரிய வலிமை அறிவிலிகளின் செயலைப் பொறுத்துக் கொள்வது.

154 நிறை-உடைமை நீங்காமை வேண்டின்; பொறை-உடைமை,
போற்றி ஒழுகப்-படும்.

பொறுமையின் உறைவிடமாக இருப்பவரைத்தான் நிறைவான மனிதர் என்று உலகம் புகழும்.

155 ஒறுத்தாரை, ஒன்றாக வையாரே; வைப்பர்
பொறுத்தாரைப், பொன்போல் பொதிந்து.

தமக்கு இழைக்கப்படும் தீமையைப் பொறுத்துக் கொள்பவர்களை உலகத்தார் பொன்னாக மதித்துப் போற்றுவார்கள். பொறுத்துக் கொள்ளாமல் தண்டிப்பவர்களை அதற்கு ஒப்பாகக் கருத மாட்டார்கள்.

156 ஒறுத்தார்க்கு, ஒரு-நாளை இன்பம்; பொறுத்தார்க்குப்,
பொன்றும் துணையும் புகழ்.

தமக்குக் கேடு செய்தவரை மன்னித்திடாமல் தண்டிப்பவர்க்கு அந்த ஒருநாள் மட்டுமே இன்பமாக அமையும். மறப்போம் மன்னிப்போம் எனப் பொறுமை கடைப் பிடிப்போருக்கோ, வாழ்நாள் முழுதும் புகழ்மிக்கதாக அமையும்.

157 திறன்-அல்ல தன்-பிறர் செய்யினும்; நோ-நொந்து,
அறன்-அல்ல செய்யாமை நன்று.

பிறர் செய்திடும் இழிவான காரியங்களுக்காகத் துன்பமுற்று வருந்தி; பதிலுக்கு அதே காரியங்களைச் செய்து பழி வாங்காமலிருப்பதுதான் சிறந்த பண்பாகும்.

158 மிகுதியான் மிக்கவை செய்தாரை; தாம்-தம்
தகுதியான், வென்று-விடல்!

ஆணவங்கொண்டு அநீதி விளைவிப்பவர்களை, நாம் நம் பொறுமைக் குணத்தால் வென்று விடலாம்.

159 துறந்தாரின் தூய்மை உடையர்; இறந்தார்வாய்
இன்னாச்-சொல் நோற்கிற்-பவர்.

எல்லை கடந்து நடந்துகொள்பவர்களின் கொடிய சொற்களைப் பொறுத்துக் கொள்பவர்கள் தூய்மையான துறவிகளைப் போன்றவர்கள்.

160 உண்ணாது நோற்பார் பெரியர்; பிறர்-சொல்லும்
இன்னாச்-சொல் நோற்பாரின் பின்.

பசி பொறுத்து உண்ணாநோன்பு இருக்கும் உறுதி படைத்தவர்கள்கூடப் பிறர்கூறும் கொடுஞ்சொற்களைப் பொறுத்துக் கொள்பவர்களுக்கு, அடுத்த நிலையில்தான் வைத்துப் போற்றப்படுவார்கள்.

# 17. அழுக்காறாமை

161 ஒழுக்கு ஆறாக் கொள்க; ஒருவன்-தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.

மனத்தில் பொறாமையில்லாமல் வாழும் இயல்பை ஒழுக்கத்திற்குரிய நெறியாகப் பெற்று விளங்கிட வேண்டும்.

162 விழுப்-பேற்றின் அஃது-ஒப்பது இல்லை; யார்-மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.

யாரிடமும் பொறாமை கொள்ளாத பண்பு ஒருவர்க்கு வாய்க்கப் பெறுமேயானால் அதற்கு மேலான பேறு அவருக்கு வேறு எதுவுமில்லை.

163 அறன், ஆக்கம் வேண்டாதான் என்பான்; பிறன்-ஆக்கம்
பேணாது அழுக்கறுப்பான்.

அறநெறியையும், ஆக்கத்தையும் விரும்பிப் போற்றாதவன்தான், பிறர் பெருமையைப் போற்றாமல் பொறாமைக் களஞ்சியமாக விளங்குவான்.

164 அழுக்காற்றின் அல்லவை செய்யார்; இழுக்கு-ஆற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

தீய வழியில் சென்றால் துன்பம் ஏற்படுமென்பதை அறிந்தவர்கள் பொறைமையினால் தீச்செயல்களில் ஈடுபடமாட்டார்கள்.

165 அழுக்காறு உடையார்க்கு அது-சாலும்; ஒன்னார்
வழுக்கியும் கேடு-ஈன்பது.

பொறாமைக் குணம் கொண்டவர்களுக்கு அவர்களை வீழ்த்த வேறு பகையே வேண்டா. அந்தக் குணமே அவர்களை வீழ்த்தி விடும்.

166 கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம்; உடுப்பதூஉம்,
உண்பதூஉம் இன்றிக்-கெடும்.

உதவியாக ஒருவருக்குக் கொடுக்கப்படுவதைப் பார்த்துப் பொறாமை கொண்டால் அந்தத் தீய குணம், அவனை மட்டுமின்றி அவனைச் சார்ந்திருப்போரையும் உணவுக்கும், உடைக்கும்கூட வழியில்லாமல் ஆக்கிவிடும்.

167 அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.

செல்வத்தை இலக்குமி என்றும், வறுமையை அவளது அக்காள் மூதேவி என்றும் வர்ணிப்பதுண்டு. பொறாமைக் குணம் கொண்டவனை அக்காளுக்கு அடையாளம் காட்டிவிட்டுத் தங்கை இலக்குமி அவனைவிட்டு அகன்று விடுவாள்.

168 அழுக்காறு என ஒரு-பாவி; திருச்-செற்று,
தீயுழி உய்த்து-விடும்.

பொறாமை எனும் தீமை ஒருவனுடைய செல்வத்தையும் சிதைத்துத் தீயவழியிலும் அவனை விட்டுவிடும்.

169 அவ்விய நெஞ்சத்தான், ஆக்கமும்; செவ்வியான்,
கேடும்; நினைக்கப்-படும்.

பொறாமைக் குணம் கொண்டவனின் வாழ்க்கை வளமாக இருப்பதும், பொறாமைக் குணம் இல்லாதவனின் வாழ்க்கை வேதனையாக இருப்பதும் வியப்புக்குரிய செய்தியாகும்.

170 அழுக்கற்று அகன்றாரும் இல்லை; அஃது-இல்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.

பொறாமை கொண்டதால் புகழ் பெற்று உயர்ந்தோரும் இல்லை; பொறாமை இல்லாத காரணத்தால் புகழ் மங்கி வீழந்தோரும் இல்லை.

## 18. வெஃகாமை

171 நடுவு-இன்றி நன்-பொருள் வெஃகின்; குடி-பொன்றி,
குற்றமும் ஆங்கே தரும்.

மனச்சான்றை ஒதுக்கிவிட்டுப் பிறர்க்குரிய அரும் பொருளைக் கவர்ந்துகொள்ள விரும்புகிறவரின் குடியும் கெட்டொழிந்து, பழியும் வந்து சேரும்.

172 படு-பயன் வெஃகி, பழிப்படுவ செய்யார்;
நடுவு-அன்மை நாணுபவர்.

நடுவுநிலை தவறுவது நாணித் தலைகுனியத் தக்கது என்று நினைப்பவர் தமக்கு ஒரு பயன் கிடைக்கும் என்பதற்காக, பழிக்கப்படும் செயலில் ஈடுபடமாட்டார்.

173 சிற்றின்பம் வெஃகி, அறன்-அல்ல செய்யாரே;
மற்று-இன்பம் வேண்டு-பவர்.

அறவழியில் நிலையான பயனை விரும்புகிறவர் உடனடிப் பயன் கிடைக்கிறது என்பதற்காக அறவழி தவறி நடக்க மாட்டார்.

174 ‘இலம்’ என்று வெஃகுதல் செய்யார்; புலம்-வென்ற
புன்மை-இல் காட்சி-யவர்.

புலனடக்கம் வாய்ந்த தூயவர், வறுமையில் வாடும் நிலையிலேகூடப் பிறர் பொருளைக் கவர்ந்திட விரும்பமாட்டார்.

175 அஃகி அகன்ற அறிவு, என்-ஆம்; யார்மாட்டும்
வெஃகி, வெறிய செயின்?

யாராயிருப்பினும் அவரது உடைமையை அறவழிக்குப் புறம்பாகக் கவர விரும்பினால் ஒருவருக்குப் பகுத்துணரும் நுண்ணிய அறிவு இருந்துதான் என்ன பயன்?

176 அருள்-வெஃகி, ஆற்றின்கண் நின்றான்; பொருள்-வெஃகிப்
பொல்லாத சூழ, கெடும்.

அருளை விரும்பி அதனை அடைவதற்கான வழியில் செல்பவன் தவறிப்போய்ப் பிறர் பொருளை விரும்பிப் பொல்லாத செயலில் ஈடுபட்டால் கெட்டொழிய நேரிடும்.

177 வேண்டற்க, வெஃகி-ஆம் ஆக்கம்; விளைவயின்
மாண்டற்கு அரிது-ஆம் பயன்!

பிறர் பொருளைக் கவர்ந்து ஒருவன் வளம்பெற விரும்பினால் அந்த வளத்தின் பயன், நலம் தருவதாக இருக்காது.

178 ‘அஃகாமை செல்வத்திற்கு யாது?’ எனின்; வெஃகாமை-
வேண்டும் பிறன் கைப்-பொருள்.

தன்னுடைய செல்வச் செழிப்பு குறையாமலிருக்க வேண்டுமென்றால் பிறருடைய பொருளையும் தானே அடைய வேண்டுமென்று ஆசைப்படாமலிருக்க வேண்டும்.

179 அறன்-அறிந்து வெஃகா அறிவு-உடையார்ச் சேரும்;
திறன்-அறிந்து ஆங்கே திரு.

பிறர் பொருளைக் கவர விரும்பாத அறநெறி உணர்ந்த அறிஞர் பெருமக்களின் ஆற்றலுக்கேற்ப அவர்களிடம் செல்வம் சேரும்.

180 இறல்-ஈனும், எண்ணாது வெஃகின்; விறல்-ஈனும்,
வேண்டாமை என்னும் செருக்கு.

விளைவுகளைப்பற்றி நினைக்காமல் பிறர் பொருளைக் கவர்ந்துகொள்ள விரும்பினால் அழிவும், அத்தகைய விருப்பம் கொள்ளாதிருந்தால் வாழ்க்கையில் வெற்றியும் கிட்டும்.

# 19. புறம் கூறாமை

181 அறம்-கூறான், அல்ல செயினும்; ஒருவன்
புறம்-கூறான் என்றல் இனிது.

அறநெறியைப் போற்றாமலும், அவ்வழியில் நடக்காமலும்கூட இருக்கின்ற சிலர் மற்றவர்களைப் பற்றிப் புறம் பேசாமல் இருந்தால், அது அவர்களுக்கு நல்லது.

182 அறன்-அழீஇ அல்லவை செய்தலின் தீதே;
புறன்-அழீஇப் பொய்த்து நகை.

ஒருவரை நேரில் பார்க்கும் பொழுது பொய்யாகச் சிரித்துப் பேசிவிட்டு அவர் இல்லாத இடத்தில் அவரைப் பற்றிப் பொல்லாங்கு பேசுவது அறவழியைப் புறக்கணித்து விட்டு, அதற்கு மாறான காரியங்களைச் செய்வதைவிடக் கொடுமையானது.

183 புறம்-கூறி, பொய்த்து, உயிர்-வாழ்தலின்; சாதல்,
அறம்-கூறும் ஆக்கம் தரும்.

கண்ட இடத்தில் ஒன்றும், காணாத இடத்தில் வேறொன்றுமாகப் புறங்கூறிப் பொய்மையாக நடந்து உயிர் வாழ்வதை விடச் சாவது நன்று.

184 கண்-நின்று, கண்-அறச் சொல்லினும்; சொல்லற்க,
முன்-இன்று பின்-நோக்காச் சொல்.

நேருக்கு நேராக ஒருவரது குறைகளைக் கடுமையாகச் சொன்னாலும் சொல்லலாம், ஆனால் பின் விளைவுகளை எண்ணிப் பார்க்காமல் நேரில் இல்லாத ஒருவரைப் பற்றிக் குறை கூறுவது தவறு.

185 அறம்-சொல்லும் நெஞ்சத்தான் அன்மை; புறம்-சொல்லும்
புன்மையால் காணப்-படும்.

ஒருவன் பிறரைப்பற்றிப் புறம் பேசுகிற சிறுமைத்தன்மையைக் கொண்டே அவன் அறவழி நிற்பவன் அல்லன் என்பதை எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

186 பிறன்-பழி கூறுவான்; தன்-பழியுள்ளும்
திறன்-தெரிந்து கூறப்-படும்.

பிறர்மீது ஒருவன் புறங்கூறித் திரிகிறான் என்றால் அவனது பழிச் செயல்களை ஆராய்ந்து அவற்றில் கொடுமையானவைகளை அவன் மீது கூற நேரிடும்.

187 பகச்-சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்; நகச்-சொல்லி,
நட்பு-ஆடல் தேற்றா-தவர்.

இனிமையாகப் பழகி நட்புறவைத் தொடரத் தெரியாதவர்கள், நட்புக் கெடுமளவுக்குப் புறங்கூறி நண்பர்களை இழந்து விடுவார்கள்.

188 துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்;
என்னைகொல், ஏதிலார்-மாட்டு?

நெருங்கிப் பழகியவரின் குறையைக்கூடப் புறம் பேசித் தூற்றுகிற குணமுடையவர்கள் அப்படிப் பழகாத அயலாரைப் பற்றி என்னதான் பேச மாட்டார்கள்?

189 அறன்-நோக்கி ஆற்றும்-கொல் வையம்; புறன்-நோக்கிப்
புன்-சொல் உரைப்பான் பொறை.

ஒருவர் நேரில் இல்லாதபோது பழிச்சொல் கூறுவோனுடைய உடலை ‘இவனைச் சுமப்பதும் அறமே’ என்று கருதித்தான் நிலம் சுமக்கிறது.

190 ஏதிலார் குற்றம்-போல் தம்-குற்றம் காண்கிற்-பின்;
தீது-உண்டோ, மன்னும் உயிரக்கு?

பிறர் குற்றத்தைக் காண்பவர்கள் தமது குற்றத்தையும் எண்ணிப் பார்ப்பார்களேயானால் புறங்கூறும் பழக்கமும் போகும்; வாழ்க்கையும் நிம்மதியாக அமையும்.

# 20. பயன் இல சொல்லாமை

191 பல்லார் முனியப் பயன்-இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப்-படும்.

பலரும் வெறுக்கும்படியான பயனற்ற சொற்களைப் பேசுபவரை எல்லோரும் இகழ்ந்துரைப்பார்கள்.

192 பயன்-இல பல்லார்முன் சொல்லல்; நயன்-இல
நட்டார்கண் செய்தலின், தீது.

பலர்முன் பயனில்லாத சொற்களைக் கூறுவது, நட்புக்கு மாறாகச் செயல்படுவதைக் காட்டிலும் தீமையுடையதாகும்.

193 நயன்-இலன் என்பது சொல்லும்; பயன்-இல
பாரித்து உரைக்கும் உரை.

பயனற்றவைகளைப்பற்றி ஒருவன் விரிவாகப் பேசிக் கொண்டிருப்பதே அவனைப் பயனற்றவன் என்று உணர்த்தக் கூடியதாகும்.

194 நயன்-சாரா நன்மையின் நீக்கும்; பயன்-சாராப்
பண்பு-இல்-சொல் பல்லார்-அகத்து.

பயனற்றதும், பண்பற்றதுமான சொற்களைப் பலர்முன் பகர்தல் மகிழ்ச்சியைக் குலைத்து, நன்மையை மாய்க்கும்.

195 சீர்மை, சிறப்பொடு நீங்கும்; பயன்-இல,
நீர்மை-உடையார் சொலின்.

நல்ல பண்புடையவர் பயனில்லாத சொற்களைக் கூறுவாரானால் அவருடைய மேம்பாடு அவர்க்குரிய மதிப்போடு நீங்கி விடும்.

196 பயன்-இல்-சொல் பாராட்டுவானை மகன்-எனல்!
மக்கட்-பதடி எனல்!

பயனற்றவைகளைச் சொல்லிப் பயன்பெற நினைப்பவனை, மனிதன் என்பதைவிட அவன் ஒரு பதர் என்பதே பொருத்தமானதாகும்.

197 நயன்-இல சொல்லினும், சொல்லுக! சான்றோர்
பயன்-இல, சொல்லாமை-நன்று.

பண்பாளர்கள், இனிமையல்லாத சொற்களைக்கூடச் சொல்லி விடலாம்; ஆனால் பயனில்லாத சொற்களைச் சொல்லாமல் இருப்பதே நல்லது.

198 அரும்-பயன் ஆயும் அறிவினார், சொல்லார்;
பெரும்-பயன் இல்லாத சொல்.

அரும்பயன்களை ஆராய்ந்து அறியக்கூடிய ஆற்றல் படைத்தவர், பெரும்பயன் விளைவிக்காத எந்தச் சொல்லையும் பயன்படுத்த மாட்டார்.

199 பொருள்-தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார்; மருள்-தீர்ந்த
மாசு-அறு காட்சி-யவர்.

மயக்கம் சிறிதுமில்லாத மாசற்ற அறிவுடையவர் மறந்தும்கூடப் பயனற்ற சொற்களைச் சொல்ல மாட்டார்.

200 சொல்லுக, சொல்லில் பயன்-உடைய! சொல்லற்க,
சொல்லில் பயன்-இலாச் சொல்!

பயனளிக்காத சொற்களை விடுத்து மனத்தில் பதிந்து பயனளிக்கக் கூடிய சொற்களையே கூற வேண்டும்.

# 21. தீவினை அச்சம்

201 தீவினையார் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர்;
தீவினை என்னும் செருக்கு.

தீயவர்கள் தீவினை செய்ய அஞ்சமாட்டார்கள்; தீவினையால் மகிழ்ச்சி ஏற்படுவதாயினும் அதனைச் செய்திடச் சான்றோர் அஞ்சி நடுங்குவார்கள்.

202 தீயவை தீய பயத்தலான்; தீயவை,
தீயினும் அஞ்சப்-படும்.

தீய செயல்களால் தீமையே விளையும் என்பதால் அச்செயல்களைத் தீயை விடக் கொடுமையானவையாகக் கருதி அவற்றைச் செய்திட அஞ்சிட வேண்டும்.

203 அறிவினுள் எல்லாம் தலை-என்ப; தீய,
செறுவார்க்கும் செய்யா விடல்.

தீமை செய்தவர்க்கு அதையே திருப்பிச் செய்யாமலிருத்தலை, எல்லா அறிவிலும் முதன்மையான அறிவு என்று போற்றுவர்.

204 மறந்தும், பிறன்-கேடு சூழற்க! சூழின்,
அறம்-சூழும், சூழ்ந்தவன் கேடு.

மறந்தும்கூட மற்றவர்க்குக் கேடு செய்ய நினைக்கக் கூடாது; அப்படி நினைத்தால் அவனுக்குக் கேடு உண்டாக்க அவனை அறம் முற்றுகையிட்டு விடும்.

205 ‘இலன்’-என்று தீயவை செய்யற்க! செய்யின்,
இலன்-ஆகும், மற்றும் பெயர்த்து.

வறுமையின் காரணமாக ஒருவன் தீய செயல்களில் ஈடுபடக்கூடாது; அப்படி ஈடுபட்டால் மீண்டும் அவன் வறுமையிலேயே வாட வேண்டியிருக்கும்.

206 தீப்-பால தான் பிறர்கண் செய்யற்க; நோய்ப்-பால
தன்னை அடல் வேண்டாதான்!

வேதனை விளைவிக்கும் தீய செயல்கள் தன்னைத் தாக்கலாகாது என எண்ணுகிறவன் அவனும் அத் தீங்குகளைப் பிறருக்குச் செய்யாமல் இருக்க வேண்டும்.

207 எனைப்-பகை உற்றாரும் உய்வர்; வினைப்-பகை
வீயாது, பின்-சென்று, அடும்.

ஒருவர் நேரடியான பகைக்குத் தப்பி வாழ முடியும்; ஆனால், அவர் செய்யும் தீய வினைகள் பெரும் பகையாகி அவரைத் தொடர்ந்து வருத்திக்கொண்டே இருக்கும்.

208 தீயவை செய்தார் கெடுதல்; நிழல்-தன்னை
வீயாது அடி-உறைந்தற்று.

ஒருவருடைய நிழல் அவருடனேயே ஒன்றியிருப்பதைப்போல், தீய செயல்களில் ஈடுபடுகிறவர்களை விட்டுத் தீமையும் விலகாமல், தொடர்ந்து ஒட்டிக் கொண்டிருக்கும்.

209 தன்னைத்-தான் காதலன் ஆயின்; எனைத்து-ஒன்றும்
துன்னற்க, தீவினைப்-பால்!

தனது நலத்தை விரும்புகிறவன் தீய செயல்களின் பக்கம் சிறிதளவுகூட நெருங்கலாகாது.

210 அருங்-கேடன் என்பது அறிக; மருங்கு-ஓடித்
தீவினை செய்யான் எனின்?

வழிதவறிச் சென்று பிறர்க்குத் தீங்கு விளைவிக்கா தவர்க்கு எந்தக் கேடும் ஏற்படாது என்பதை அறிந்து கொள்க.

# 22. ஒப்புரவு அறிதல்

211 கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்டு
என்-ஆற்றும் கொல்லோ, உலகு?

கைம்மாறு கருதி மழை பொழிவதில்லை; அந்த மழையைப் போன்றவர்கள் கைம்மாறு கருதி எந்த உதவியும் செய்பவர்கள் அல்லர்.

212 தாள்-ஆற்றித் தந்த-பொருள்-எல்லாம்; தக்கார்க்கு,
வேளாண்மை செய்தற் பொருட்டு.

தகுதியுடையோர் நலனுக்கு உதவிடும் பொருட்டே ஒருவன் முயன்று திரட்டிய பொருள் பயன்பட வேண்டும்.

213 புத்தேள் உலகத்தும், ஈண்டும், பெறல்-அரிதே;
ஒப்புரவின் நல்ல பிற.

பிறர்க்கு உதவிடும் பண்பாகிய “ஒப்புரவு” என்பதைவிடச் சிறந்த பண்பினை இன்றைய உலகிலும், இனிவரும் புதிய உலகிலும் காண்பது அரிது.

214 ஒத்தது-அறிவான் உயிர்-வாழ்வான்; மற்றையான்,
செத்தாருள் வைக்கப்-படும்.

ஒப்புரவை அறிந்து பிறருக்கு உதவியாகத் தன் வாழ்வை அமைத்துக் கொள்பவனே உயிர்வாழ்பவன் எனக் கருதப்படுவான்; அதற்கு மாறானவன் இறந்தவனே ஆவான்.

215 ஊருணி நீர் நிறைந்தற்றே; உலகு-அவாம்
பேர்-அறிவாளன் திரு.

பொதுநல நோக்குடன் வாழ்கின்ற பேரறிவாளனின் செல்வமானது ஊர் மக்கள் அனைவருக்கும் பயன் தரும் நீர் நிறைந்த ஊருணியைப் போன்றதாகும்.

216 பயன்-மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்; செல்வம்
நயன்-உடையான்கண் படின்.

ஈர நெஞ்சம் கொண்டவனிடம் செல்வம் சேருமேயானால் அது, ஊரின் நடுவே செழித்து வளர்ந்த மரம், பழுத்துக் குலுங்குவது போல எல்லோர்க்கும் பயன்படுவதாகும்.

217 மருந்து-ஆகித் தப்பா மரத்தற்றால்; செல்வம்
பெருந்தகையான்கண் படின்.

பிறருக்கு உதவிடும் பெருந்தன்மையாம் ஒப்புரவு உடையவனிடம், செல்வம் சேர்ந்தால் அது ஒரு நல்ல மரத்தின் எல்லா உறுப்புகளும் மருந்தாகப் பயன்படுவது போன்றதாகும்.

218 இடன்-இல் பருவத்தும், ஒப்புரவிற்கு ஒல்கார்;
கடன்-அறி காட்சி-யவர்.

தம்மிடம் வளம் நீங்கி, வறுமை வந்துற்ற காலத்திலும்,பிறர்க்கு உதவிடும் ஒப்புரவில் தளராதவர், கடமையுணர்ந்த தகைமையாளர்.

219 நயன்-உடையான் நல்கூர்ந்தான் ஆதல்-செயும்; நீர-
செய்யாது அமைகலா ஆறு.

பிறர்க்கு உதவி செய்வதையே கடமையாகக் கொண்ட பெருந்தகையாளன் ஒருவன், வறுமையடைந்து விட்டான் என்பதை உணர்த்துவது அவனால் பிறர்க்கு உதவிட முடியாமல் செயலிழந்து போகும் நிலைமைதான்.

220 'ஒப்புரவினால் வரும், கேடு' எனின்; அஃது-ஒருவன்
விற்றுக்-கோள் தக்கது உடைத்து.

பிறருக்கு உதவுகின்ற சிறப்புடைய உலக ஒழுக்கம், கேடு விளைவிக்கக் கூடியதாக இருப்பின், அக்கேடு, ஒருவன் தன்னை விற்றாவது வாங்கிக் கொள்ளக் கூடிய மதிப்புடையதாகும்.

# 23. ஈகை

221 வறியார்க்கு-ஒன்று ஈவதே ஈகை; மற்று-எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

இல்லாதவர்க்கு வழங்குவதே ஈகைப் பண்பாகும். மற்றவர்களுக்கு வழங்குவது என்பது ஏதோ ஓர் ஆதாயத்தை எதிர்பார்த்து வழங்கப்படுவதாகும்.

222 'நல்லாறு' எனினும், கொளல் தீது; 'மேல் உலகம்
இல்' எனினும், ஈதலே நன்று.

பிறரிடமிருந்து நல்வழியில் பொருளைப் பெற்றாலும் அது பெருமையல்ல; சிறுமையே ஆகும். கொடை வழங்குவதால் மேலுலகம் என்று சொல்லப்படுவது கிட்டிவிடப் போவதில்லை; எனினும் பிறர்க்குக் கொடுத்து வாழ்வதே சிறந்த வாழ்க்கையாகும்.

223 'இலன்'-என்னும் எவ்வம் உரையாமை; ஈதல்,
குலன் உடையான்கண்ணே உள.

தமக்குள்ள வறுமைத் துன்பத்தைக் காட்டிக்கொள்ளாமல் பிறருக்கு ஈவது உயர்ந்த குடிப்பிறந்தவரின் பண்பாகும்.

224 இன்னாது, இரக்கப்படுதல்; இரந்தவர்
இன்-முகம் காணும் அளவு.

ஈதல் பண்புடையவர்க்குத் தம்மை நாடி வரும் இரவலரின் புன்னகை பூத்த முகத்தைக் கண்டு இன்புறும் வரைவில், அவருக்காக இரக்கப்படுவதும் ஒரு துன்பமாகவே தோன்றும்.

225 ஆற்றுவார் ஆற்றல் பசி-ஆற்றல்; அப்-பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

பசியைப் பொறுத்துக் கொள்ளும் நோன்பைக் கடைப் பிடிப்பதைவிடப் பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்ததாகும்.

226 அற்றார் அழி-பசி தீர்த்தல்! அஃது-ஒருவன்
பெற்றான் பொருள் வைப்பு-உழி.

பட்டினி எனச் சொல்லி வந்தவரின் பசியைத் தீர்ப்பது வீண் போகாது. அதுவே, தான் தேடிய பொருளைப் பிற்காலத்தில் உதவுவதற்கு ஏற்பச் சேமித்து வைக்கக்கூடிய கருவூலமாகும்.

227 பாத்து-ஊண் மரீஇ-யவனைப்; பசி-என்னும்
தீப்பிணி, தீண்டல் அரிது.

பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவர்களைப் பசியென்னும் கொடிய நோய் அணுகுவதில்லை.

228 ஈத்து, உவக்கும் இன்பம் அறியார்கொல்? தாம்-உடைமை,
வைத்து-இழக்கும் வன்-கணவர்?

ஏழை எளியோர்க்கு எதுவும் அளித்திடாமல் ஈட்டிய பொருள் அனைத்தையும் இழந்திடும் ஈவு இரக்கமற்றோர், பிறர்க்கு வழங்கி மகிழ்வதில் ஏற்படும் இன்பத்தை அறியமாட்டாரோ?

229 இரத்தலின் இன்னாது மன்ற; நிரப்பிய
தாமே தமியர் உணல்.

பிறர்க்கு ஈவதால் குறையக் கூடுமென்று, குவித்து வைத்துள்ளதைத் தாமே உண்ணுவது என்பது கையேந்தி இரந்து நிற்பதைக் காட்டிலும் கொடுமையானது.

230 சாதலின் இன்னாதது இல்லை; இனிது, அதூஉம்
ஈதல் இயையாக்-கடை.

சாவு எனும் துன்பத்தைவிட வறியவர்க்கு எதுவும் வழங்க இயலாத மனத்துன்பம் பெரியது.

# 24. புகழ்

231 ஈதல்! இசைபட வாழ்தல்! அது-அல்லது
ஊதியம் இல்லை, உயிர்க்கு.

கொடைத் தன்மையும், குன்றாத புகழும்தவிர வாழ்க்கைக்கு ஆக்கம் தரக் கூடியது வேறெதுவும் இல்லை.

232 உரைப்பார் உரைப்பவை எல்லாம்; இரப்பார்க்கு, ஒன்று-
ஈவார்-மேல் நிற்கும் புகழ்.

போற்றுவோர் போற்றுவனவெல்லாம் இல்லாதவர்க்கு ஒன்று வழங்குவோரின் புகழைக் குறித்தே அமையும்.

233 ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்,
பொன்றாது நிற்பது ஒன்று இல்.

ஒப்பற்றதாகவும், அழிவில்லாததாகவும் இந்த உலகத்தில் நிலைத்திருப்பது புகழைத் தவிர வேறு எதுவுமே இல்லை.

234 நில-வரை நீள்-புகழ் ஆற்றின்; புலவரைப்
போற்றாது, புத்தேள் உலகு.

இனிவரும் புதிய உலகம்கூட இன்றைய உலகில் தன்னலம் துறந்து புகழ் ஈட்டிய பெருமக்களை விடுத்து, அறிவாற்றல் உடையவரை மட்டும் போற்றிக் கொண்டிராது.

235 நத்தம்போல் கேடும், உளதாகும் சாக்காடும்,
வித்தகர்க்கு அல்லால் அரிது.

துன்பங்களுக்கிடையேகூட அவற்றைத் தாங்கும் வலிமையால் தமது புகழை வளர்த்துக் கொள்வதும், தமது சாவிலும்கூடப் புகழை நிலை நாட்டுவதும் இயல்பான ஆற்றலுடையவருக்கே உரிய செயலாகும்.

236 தோன்றின், புகழொடு தோன்றுக! அஃது-இலார்
தோன்றலின், தோன்றாமை நன்று.

எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதில் புகழுடன் விளங்கவேண்டும்; இயலாதவர்கள் அந்தத் துறையில் ஈடுபடாமல் இருப்பதே நல்லது.

237 புகழ்பட வாழாதார் தம்-நோவார்; தம்மை
இகழ்வாரை நோவது எவன்?

உண்மையான புகழுடன் வாழ முடியாதவர்கள் அதற்காகத் தம்மை நொந்து கொள்ள வேண்டுமே தவிரத் தமது செயல்களை இகழ்ந்து பேசுகிறவர்களை நொந்து கொள்வது எதற்காக?

238 ‘வசை’ என்ப, வையத்தார்க்கு எல்லாம்; ‘இசை’ என்னும்
எச்சம் பெறாஅவிடின்.

தமக்குப் பிறகும் எஞ்சி நிற்கக் கூடிய புகழைப் பெறாவிட்டால், அது அந்த வாழ்க்கைக்கே வந்த பழி யென்று வையம் கூறும்.

239 வசை-இலா வண்-பயன் குன்றும்; இசை-இலா
யாக்கை பொறுத்த நிலம்.

புகழ் எனப்படும் உயிர் இல்லாத வெறும் மனித உடலைச் சுமந்தால், இந்தப்பூமி நல்ல விளைவில்லாத நிலமாகக் கருதப்படும்.

240 வசை-ஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசை-ஒழிய
வாழ்வாரே வாழா-தவர்.

பழி உண்டாகாமல் வாழ்வதே வாழ்க்கை எனப்படும். புகழ் இல்லாதவர் வாழ்வதும் வாழாததும் ஒன்றுதான்.

# 25. அருள் உடைமை

241 அருள்-செல்வம், செல்வத்துள் செல்வம்; பொருள்-செல்வம்
பூரியார்கண்ணும் உள.

கொடிய உள்ளம் கொண்ட இழிமக்களிடம்கூடக் கோடிக்கணக்கில் செல்வம் குவிந்திருக்கலாம்; ஆனாலும் அந்தச் செல்வம் அருட் செல்வத்துக்கு ஈடாகாது.

242 நல்-ஆற்றான் நாடி அருள்-ஆள்க! பல்-ஆற்றான்
தேரினும் அஃதே துணை.

பலவழிகளால் ஆராய்ந்து கண்டாலும் அருள் உடைமையே வாழ்க்கைக்குத் துணையாய் விளங்கும் நல்வழி எனக் கொள்ளல் வேண்டும்.

243 அருள்-சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை; இருள்-சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

அருள் நிறைந்த மனம் படைத்தவர் அறியாமை எனும் இருள் சூழ்ந்த துன்ப உலகில் உழலமாட்டார்.

244 ‘மன்-உயிர்-ஓம்பி, அருள்-ஆள்வார்க்கு இல்’ என்ப;
‘தன்-உயிர் அஞ்சும் வினை’.

எல்லா உயிர்களிடத்தும் கருணைகொண்டு அவற்றைக் காத்திடுவதைக் கடமையாகக் கொண்ட சான்றோர்கள் தமது உயிரைக் பற்றிக் கவலை அடைய மாட்டார்கள்.

245 அல்லல், அருள்-ஆள்வார்க்கு இல்லை; வளி-வழங்கும்
மல்லல் மா-ஞாலம் கரி.

உள்ளத்தில் ஊறிடும் அருளின் இயக்கத்தினால் துன்பத்தை உணராமல் கடமையாற்றலாம் என்பதற்கு, காற்றின் இயக்கத்தினால் வலிமையுடன் திகழும் இந்தப் பெரிய உலகமே சான்று.

246 ‘பொருள்-நீங்கிப் பொச்சாந்தார்’ என்பர்; அருள்-நீங்கி
அல்லவை செய்து-ஒழுகுவார்.

அருளற்றவர்களாய்த் தீமைகளைச் செய்து வாழ்பவர்கள், பொருளற்றவர்களாகவும், கடமை மறந்தவர்களாகவும் ஆவர்.

247 அருள்-இல்லார்க்கு, அவ்-உலகம் இல்லை; பொருள்-இல்லார்க்கு,
இவ்-உலகம் இல்லாகி-யாங்கு.

பொருள் இல்லாதவர்களுக்கு இல்லற வாழ்க்கை சிறப்பாக இராது. அதுபோலவே கருணை உள்ளம் இல்லாதவர்களின் துறவற வாழ்க்கையும் சிறப்பாக அமையாது.

248 பொருள்-அற்றார், பூப்பர் ஒருகால்; அருள்-அற்றார்,
அற்றார்; மற்று-ஆதல் அரிது.

பொருளை இழந்தவர் அதனை மீண்டும் தேடிப் பெறலாம். அருளை இழந்தால் இழந்ததுதான்; மீண்டும் பெற இயலாது.

249 தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்; தேரின்,
அருளாதான் செய்யும் அறம்.

அறிவுத் தெளிவு இல்லாதவன் ஒரு நூலின் உண்மைப் பொருளைக் கண்டறிய முடியுமா? அது போலத்தான் அருள் இல்லாதவன் செய்யும் அறச்செயலும் இருக்கும்.

250 வலியார்-முன், தன்னை நினைக்க; தான்-தன்னின்
மெலியார்-மேல், செல்லும் இடத்து.

தன்னைவிட மெலிந்தவர்களைத் துன்புறுத்த நினைக்கும் போது, தன்னைவிட வலியவர் முன்னால் அஞ்சி நிற்கும் நிலைமை தனக்கு இருப்பதை மறந்துவிடக் கூடாது.

# 26. புலால் மறுத்தல்

251 தன்-ஊன் பெருக்கற்குத் தான்-பிறிது ஊன்-உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்?

தன் உடலை வளர்ப்பதற்காக வேறொரு உயிரின் உடலை உணவாக்கிக் கொள்பவர் எப்படிக் கருணை யுள்ளம் கொண்டவராக இருக்க முடியும்.

252 பொருள்-ஆட்சி போற்றாதார்க்கு இல்லை; அருள்-ஆட்சி
ஆங்கு-இல்லை, ஊன்-தின்பவர்க்கு.

பொருளைப் பேணிக் காத்திடாதவர்க்குப் பொருள் உடையவர் என்னும் சிறப்பு இல்லை; புலால் உண்பவர்க்கும் அருள் உடையவர் என்னும் சிறப்பு இல்லை.

253 படை-கொண்டார் நெஞ்சம்-போல், நன்று-ஊக்காது; ஒன்றன்
உடல்-சுவை, உண்டார் மனம்.

படைக் கருவியைப் பயன்படுத்துவோர் நெஞ்சமும், ஓர் உயிரின் உடலைச் சுவைத்து உண்பவர் நெஞ்சமும், அருளுடைமையைப் போற்றக் கூடியவைகள் அல்ல.

254 'அருள்', அல்லது யாது? எனின்; கொல்லாமை, கோறல்;
பொருள்-அல்லது, அவ்-ஊன்-தினல்.

கொல்லாமை அருளுடைமையாகும்; கொல்லுதல் அருளற்ற செயலாகும். எனவே ஊன் அருந்துதல் அறம் ஆகாது.

255 உண்ணாமை உள்ளது உயிர்நிலை; ஊன்-உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு.

உயிர்களை உணவாக்கிக் கொள்ளச் சகதிக்குழியும் வாய் திறவாது;புலால் உண்ணாதவர்கள் இருப்பதால், பல உயிர்கள் கொல்லப்படாமல் வாழ்கின்றன.

256 தினற்-பொருட்டால் கொல்லாது உலகு-எனின்; யாரும்
விலைப்-பொருட்டால் ஊன்-தருவார் இல்.

புலால் உண்பதற்காக உலகினர் உயிர்களைக் கொல்லா திருப்பின், புலால் விற்பனை செய்யும் தொழிலை எவரும் மேற்கொள்ள மாட்டார்.

257 உண்ணாமை வேண்டும், புலாஅல்; பிறிது-ஒன்றன்
புண்; அது உணர்வார்ப் பெறின்.

புலால் என்பது வேறோர் உயிரின் உடற்புண் என்பதை உணர்ந்தோர் அதனை உண்ணாமல் இருக்க வேண்டும்.

258 செயிரின் தலைப்-பிரிந்த காட்சியார் உண்ணார்;
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.

மாசற்ற மதியுடையோர், ஓர் உயிரைப் பிரித்து அதன் ஊனை உண்ண மாட்டார்கள்.

259 அவி-சொரிந்து ஆயிரம் வேட்டலின்; ஒன்றன்
உயிர்-செகுத்து உண்ணாமை நன்று.

நெய் போன்ற பொருள்களைத் தீயிலிட்டு ஆயிரம் வேள்விகளை நடத்துவதைவிட உண்பதற்காக ஓர் உயிரைப் போக்காமலிருப்பது நல்லது.

260 கொல்லான், புலாலை மறுத்தானை; கைகூப்பி,
எல்லா உயிரும் தொழும்.

புலால் உண்ணாதவர்களையும், அதற்காக உயிர்களைக் கொல்லாதவர்களையும் எல்லா உயிரினங்களும் வணங்கி வாழ்த்தும்.

# 27. தவம்

261 உற்ற நோய்-நோன்றல், உயிர்க்கு-உறுகண் செய்யாமை-
அற்றே; தவத்திற்கு உரு.

எதையும் தாங்கும் இதயத்தைப் பெற்றிருப்பதும், எந்த உயிருக்கும் தீங்கு செய்யாமல் இருப்பதும்தான் “தவம்” என்று கூறப்படும்.

262 தவமும் தவம்-உடையார்க்கு ஆகும்; அவம், அதனை
அஃது-இலார் மேற்-கொள்வது.

உறுதிப்பாடும், மன அடக்கமும் உடையவருக்கே தவத்தின் பெருமை வாய்க்கும். எனவே கட்டுப்பாடான ஒழுக்கம் இல்லாதவர்கள், தவத்தை மேற்கொள்வது வீண் செயலேயாகும்.

263 துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி, மறந்தார்கொல்;
மற்றை-யவர்கள் தவம்!

துறவிகளுக்குத் துணை நிற்க விரும்புகிறோம் என்பதற்காகத் தாங்கள் கடைப்பிடிக்க வேண்டிய தவ ஒழுக்கத்தை மற்றவர்கள் மறந்து விடக் கூடாது.

264 ஒன்னார்த் தெறலும், உவந்தாரை ஆக்கலும்;
எண்ணின், தவத்தான் வரும்.

மன உறுதியும் கட்டுப்பாடும் கொண்டு தவமென்னும் நோன்பு வலிமையுடையதாக அமைந்தால்தான், எண்ணிய மாத்திரத்தில் பகைவரை வீழ்த்தவும் நண்பரைக் காக்கவும் முடியும்.

265 வேண்டிய வேண்டியாங்கு எய்தலான்; செய்-தவம்
ஈண்டு முயலப்-படும்.

உறுதிமிக்க நோன்பினால் விரும்பியதை விரும்பியவாறு அடைய முடியுமாதலால், அது விரைந்து முயன்று செய்யப் படுவதாகும்.

266 தவம்-செய்வார், தம்-கருமம் செய்வார்; மற்று-அல்லார்
அவம்-செய்வார், ஆசையுள்-பட்டு.

அடக்கமும், அன்பு நெறியும், துன்பங்களைத் தாங்கும் பொறுமையும் வாய்ந்த தவம் மேற்கொண்டவர்கள் மட்டுமே தமது கடமையைச் செய்பவர்கள்; அதற்கு மாறானவர்கள், ஆசையால் அலைக்கழிக்கப்பட்டு வீணான செயல்களில் ஈடுபடுபவர்கள்.

267 சுடச்-சுடரும், பொன்போல் ஒளிவிடும்; துன்பம்
சுடச்சுட, நோற்கிற்-பவர்க்கு.

தம்மைத் தாமே வருத்திக் கொண்டு ஒரு குறிக்கோளுக்காக நோன்பு நோற்பவர்களை எந்தத் துன்பங்கள் தாக்கினாலும் அவர்கள் சுடச்சுட ஒளிவிடும் பொன்னைப் போல் புகழ் பெற்றே உயர்வார்கள்.

268 தன்-உயிர், தான் அறப்-பெற்றானை; ஏனைய
மன்-உயிர் எல்லாம் தொழும்.

“தனது உயிர்” என்கிற பற்றும், “தான்” என்கிற செருக்கும் கொள்ளாதவர்களை உலகம் புகழ்ந்து பாராட்டும்.

269 கூற்றம் குதித்தலும் கைகூடும்; நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு.

எத்தனைத் துன்பங்கள் வரினும் தாங்கிக் குறிக்கோளில் உறுதியாக நிற்கும் ஆற்றலுடையவர்கள் சாவையும் வென்று வாழ்வார்கள்.

270 இலர், பலர்-ஆகிய-காரணம்; நோற்பார்
சிலர்; பலர் நோலாதவர்.

ஆற்றலற்றவர்கள் பலராக இருப்பதற்குக் காரணம், மன உறுதி கொண்டவர் சிலராக இருப்பதும், உறுதியற்றவர் பலராக இருப்பதும் தான்.

# 28. கூடா ஒழுக்கம்

271 வஞ்ச-மனத்தான் படிற்று, ஒழுக்கம்; பூதங்கள்-
ஐந்தும், அகத்தே நகும்.

ஒழுக்க சீலரைப் போல் உலகத்தை ஏமாற்றும் வஞ்சகரைப் பார்த்து அவரது உடலில் கலந்துள்ள நிலம், நீர், தீ, காற்று, வெளி எனப்படும் பஞ்சபூதங்களும் தமக்குள் சிரித்துக் கொள்ளும்.

272 வான்-உயர் தோற்றம் எவன்-செய்யும்? தன்-நெஞ்சம்
தான்-அறி குற்றப்-படின்?

தன் மனத்திற்குக் குற்றம் என்று தெரிந்தும்கூட அதைச் செய்பவர், துறவுக்கோலம் பூண்டிருப்பதால் எந்தப் பயனும் இல்லை.

273 வலி-இல் நிலைமையான், வல்-உருவம் பெற்றம்;
புலியின் தோல்-போர்த்து மேய்ந்தற்று.

மனத்தை அடக்க முடியாதவர் துறவுக்கோலம் பூணுவது, பசு ஒன்று புலித் தோலைப் போர்த்திக் கொண்டு பயிரை மேய்வது போன்றதாகும்.

274 தவம்-மறைந்து, அல்லவை செய்தல்; புதல்-மறைந்து
வேட்டுவன், புள் சிமிழ்த்தற்று.

புதரில் மறைந்து கொண்டு வேடன் பறவைகளைக் கண்ணி வைத்துப் பிடிப்பதற்கும், தவக்கோலத்தில் இருப்பவர்கள் தகாத செயல்களில் ஈடுபடுவதற்கும் வேறுபாடு இல்லை.

275 ‘பற்று அற்றேம்’ என்பார் படிற்று-ஒழுக்கம்; ‘எற்று! எற்று!’
என்று,
ஏதம் பலவும் தரும்.

எத்தகைய செயல் புரிந்துவிட்டோம் என்று தமக்குத் தாமே வருந்த வேண்டிய துன்பம், பற்றுகளை விட்டு விட்டதாகப் பொய்கூறி, உலகை ஏமாற்றுவோர்க்கு வந்து சேரும்.

276 நெஞ்சின் துறவார், துறந்தார்-போல் வஞ்சித்து,
வாழ்வாரின் வன்கணார் இல்.

உண்மையிலேயே மனதாரப் பற்றுகளைத் துறக்காமல், துறந்தவரைப் போல் வாழ்கின்ற வஞ்சகர்களைவிட இரக்கமற்றவர் யாருமில்லை.

277 புறம்-குன்றி கண்டனையரேனும், அகம்-குன்றி
மூக்கில் கரியார் உடைத்து.

வெளித் தோற்றத்துக்குத் குன்றிமணி போல் சிவப்பாக இருந்தாலும், குன்றிமணியின் முனைபோலக் கறுத்த மனம் படைத்தவர்களும் உலகில் உண்டு.

278 மனத்தது மாசு-ஆக, மாண்டார் நீர்-ஆடி,
மறைந்து-ஒழுகும் மாந்தர் பலர்.

நீருக்குள் மூழ்கியோர் தம்மை மறைத்துக் கொள்வது போல, மாண்புடையோர் எனும் பெயருக்குள் தம்மை மறைத்துக்கொண்டு மனத்தில் மாசுடையோர் பலர் உலவுகின்றனர்.

279 கணை-கொடிது; யாழ்-கோடு செவ்விது; ஆங்கு-அன்ன
வினைபடு பாலால் கொளல்.

நேராகத் தோன்றும் அம்பு, கொலைச் செயல் புரியும். வளைந்து தோன்றும் யாழ், இசை இன்பம் பயக்கும். அது போலவே மக்களின் பண்புகளையும் அவர்களது செயலால் மட்டுமே உணர்ந்து கொள்ள வேண்டும்.

280 மழித்தலும், நீட்டலும் வேண்டா; உலகம்
பழித்தது ஒழித்து-விடின்.

உலகத்தாரின் பழிப்புக்கு உள்ளாகும் செயல்களைத் துறக்காமல் ஒரு துறவி, தனது தலையை மொட்டையடித்துக் கொண்டோ, சடாமுடி வளர்த்துக் கொண்டோ கோலத்தை மட்டும் மாற்றிக் கொள்வது ஒரு ஏமாற்று வித்தையே ஆகும்.

# 29. கள்ளாமை

281 எள்ளாமை வேண்டுவான் என்பான்; எனைத்து-ஒன்றும்
கள்ளாமை காக்க, தன்-நெஞ்சு!

எந்தப் பொருளையும் களவாடும் நினைவு தன் நெஞ்சை அணுகாமல் பார்த்துக் (காத்துக்) கொள்பவனே இகழ்ச்சிக்கு ஆட்படாமல் வாழ முடியும்.

282 உள்ளத்தால் உள்ளலும் தீதே; 'பிறன்-பொருளைக்
கள்ளத்தால் கள்வேம்' எனல்!

பிறருக்குரிய பொருளைச் சூழ்ச்சியினால் கவர்ந்து கொள்ளலாமா என்று ஒருவன் நினைப்பதேகூடக் குற்றமாகும்.

283 களவினால் ஆகிய ஆக்கம்; அளவு-இறந்து,
ஆவது போல, கெடும்.

கொள்ளையடித்துப் பொருள் குவிப்பது, முதலில் பெரிதாகத் தோன்றினாலும், அந்தச் செயல் ஏற்கனவே இருந்த செல்வத்தையும் அடித்துக் கொண்டு போய்விடும்.

284 களவின்கண், கன்றிய காதல்; விளைவின்கண்,
வீயா விழுமம் தரும்.

களவு செய்வதில் ஒருவனுக்கு ஏற்படும் தணியாத தாகம், அதனால் உருவாகும் விளைவுகளால் தீராத துன்பத்தை உண்டாக்கும்.

285 அருள்-கருதி அன்புடையர் ஆதல்; பொருள்-கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்-கண் இல்.

மறந்திருக்கும் நேரம் பார்த்துப் பிறர் பொருளைக் களவாட எண்ணுபவரிடத்தில், அருள் கருதி அன்பாக நடக்கும் பண்பு இருக்காது.

286 அளவின்கண் நின்று ஒழுகல்-ஆற்றார்; களவின்கண்,
கன்றிய காதலவர்.

ஓர் எல்லைக்குட்பட்டு வாழ்வைச் செம்மையாக அமைத்துக் கொள்ளாதவர்கள், களவு செய்து பிறர் பொருளைக் கொள்வதில் நாட்டமுடையவராவார்கள்.

287 களவு-என்னும், கார்-அறிவு ஆண்மை; அளவு-என்னும்,
ஆற்றல் புரிந்தார்-கண் இல்.

அளவறிந்து வாழ்க்கை நடத்துகிற ஆற்றலுடையவர்களிடம், களவாடுதல் எனும் சூதுமதி கிடையாது.

288 அளவு-அறிந்தார் நெஞ்சத்து, அறம்-போல நிற்கும்;
களவு-அறிந்தார் நெஞ்சில், கரவு.

நேர்மையுள்ளவர் நெஞ்சம் அறவழியில் செல்லும்; கொள்ளையடிப்போர் நெஞ்சமோ குறுக்குவழியான வஞ்சக வழியில் செல்லும்.

289 அளவு-அல்ல செய்து, ஆங்கே வீவர்; களவு-அல்ல
மற்றைய தேற்றாதவர்.

களவு என்பதைத் தவிர வேறு நல்வழிகளை நாடாதவர்கள், வரம்பு கடந்த செயல்களால் வாழ்விழந்து வீழ்வார்கள்.

290 கள்வார்க்குத் தள்ளும், உயிர்நிலை; கள்ளார்க்குத்
தள்ளாது, புத்தேள் உலகு.

களவாடுபவர்க்கு உயிர் வாழ்வதேகூடத் தவறிப்போகும்; களவை நினைத்தும் பார்க்காதவர்க்கோ, புகழுலக வாழ்க்கை தவறவே தவறாது.

# 30. வாய்மை

291 ‘வாய்மை எனப்படுவது யாது?’ எனின்; யாது-ஒன்றும்,
தீமை-இலாத சொலல்.

பிறருக்கு எள்முளையளவு தீமையும் ஏற்படாத ஒரு சொல்லைச் சொல்வதுதான் வாய்மை எனப்படும்.

292 பொய்ம்மையும் வாய்மை இடத்த; புரை-தீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

குற்றமற்ற நன்மையை விளைவிக்கக் கூடுமானால் பொய்யான சொல்லும்கூட வாய்மை என்று கூறத்தக்க இடத்தைப் பெற்றுவிடும்.

293 தன்-நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்த-பின்,
தன்-நெஞ்சே தன்னைச் சுடும்.

மனச்சாட்சிக்கு எதிராகப் பொய் சொல்லக்கூடாது; அப்படிச் சொன்னால், சொன்னவரின் மனமே அவரைத் தண்டிக்கும்.

294 உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்; உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம், உளன்.

மனத்தால்கூடப் பொய்யை நினைக்காமல் வாழ்பவர்கள், மக்கள் மனத்தில் நிலையான இடத்தைப் பெறுவார்கள்.

295 மனத்தொடு, வாய்மை மொழியின்; தவத்தொடு,
தானம் செய்வாரின், தலை.

உதட்டளவில் இன்றி உளமார வாய்மை பேசுகிறவர்கள் தவமும், தானமும் செய்கின்றவர்களைவிட உயர்ந்தவர்களாவார்கள்.

296 பொய்யாமை, அன்ன புகழ்-இல்லை; எய்யாமை,
எல்லா-அறமும் தரும்.

பொய் இல்லாமல் வாழ்வது போன்ற புகழ் மிக்க வாழ்வு வேறு எதுவுமில்லை; என்றும் நீங்காத அறவழி நலன்களை அளிப்பது அந்த வாழ்வேயாகும்.

297 பொய்யாமை, பொய்யாமை ஆற்றின்; அறம்-பிற
செய்யாமை, செய்யாமை நன்று.

செய்யக்கூடாததைச் செய்யாததால் விளையும் நன்மையைவிடப் பொய் கூறாத பண்பு பொய்த்துப் போகாமல் கடைப்பிடிக்கும் அறவழி நன்மை தருவதாகும்.

298 புறம்-தூய்மை, நீரால் அமையும்; அகம்-தூய்மை,
வாய்மையால் காணப்படும்.

நீரில் குளிப்பதால் உடலின் அழுக்கு மட்டுமே நீங்கும்; மனம் அழுக்குப்படாமல் தூய்மையுடன் விளங்கிட, சொல்லிலும் செயலிலும் வாய்மை வேண்டும்.

299 எல்லா-விளக்கும், விளக்கு-அல்ல; சான்றோர்க்குப்
பொய்யா-விளக்கே, விளக்கு.

புறத்தின் இருளைப் போக்கும் விளக்குகளைவிட அகத்தின் இருளைப் போக்கும் பொய்யாமை எனும் விளக்கே ஒருவனை உயர்ந்தோன் எனக் காட்டும் ஒளிமிக்க விளக்காகும்.

300 யாம்-மெய்யாக் கண்டவற்றுள் இல்லை; எனைத்து-ஒன்றும்
வாய்மையின் நல்ல பிற.

வாய்மையைப் போல் சிறந்த பண்பு வேறொன்றுமே இல்லை என்பதுதான் ஆராய்ந்து உணரப்பட்ட உண்மையாகும்.

# 31. வெகுளாமை

301 செல்-இடத்துக் காப்பான் சினம்-காப்பான்; அல்-இடத்து,
காக்கின்-என்? காவாக்கால்-என்?

தன் சினம் பலிதமாகுமிடத்தில் சினம் கொள்ளாமல் இருப்பவனே சினங்காப்பவன்; பலிக்காத இடத்தில் சினத்தைக் காத்தால் என்ன? காக்காவிட்டால் என்ன?

302 செல்லா இடத்துச் சினம், தீது; செல்-இடத்தும்,
இல், அதனின் தீய பிற.

வலியோரிடம் சினம் கொண்டால், அதனால் கேடு விளையும். மெலியோரிடம் சினம் கொண்டாலும் அதை விடக் கேடு வேறொன்றுமில்லை.

303 மறத்தல், வெகுளியை யார்மாட்டும்; தீய-
பிறத்தல், அதனான் வரும்.

யார்மீது சினம் கொண்டாலும் அதை மறந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அந்தச் சினமே தீய விளைவுகளுக்குக் காரணமாகும்.

304 நகையும், உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ, பிற?

சினம் கொள்கிறவர்களுக்கு முகமலர்ச்சி மாத்திரமின்றி மனமகிழ்ச்சியும் மறைந்து போய் விடும்.

305 தன்னைத்-தான் காக்கின், சினம்-காக்க! காவாக்கால்,
தன்னையே கொல்லும், சினம்.

ஒருவன் தன்னைத்தானே காத்துக் கொள்ள வேண்டுமானால், சினத்தைக் கைவிட வேண்டும். இல்லையேல் சினம், அவனை அழித்துவிடும்.

306 சினம்-என்னும் சேர்ந்தாரைக்-கொல்லி; இனம்-என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

சினங்கொண்டவரை அழிக்கக் கூடியதாகச் சின மென்னும் தீயே இருப்பதால், அது அவரை மட்டுமின்றி, அவரைப் பாதுகாக்கும் தோணி போன்ற சுற்றத்தையும் அழித்துவிடும்.

307 சினத்தைப் பொருள்-என்று கொண்டவன் கேடு;
நிலத்து-அறைந்தான் கை-பிழையாதற்று.

நிலத்தைக் கையால் அறைந்தவனுக்கு அவன் கைதான் வலிக்கும். அது போலத்தான் சினத்தைப் பண்பாகக் கொண்டவன் நிலையும் ஆகும்.

308 இணர்-எரி தோய்வன்ன இன்னா-செயினும்;
புணரின் வெகுளாமை நன்று.

தீயினால் சுட்டெரிப்பது போன்ற துன்பங்களை ஒருவன் தொடர்ந்து செய்தாலும் அதற்காக வருந்தி அவன் உறவு கொள்ள வரும்போது சினங்கொள்ளாமல் இருப்பதே நல்லது.

309 உள்ளிய(து) எல்லாம் உடன்-எய்தும்; உள்ளத்தால்
உள்ளான், வெகுளி எனின்.

உள்ளத்தால் சினங்கொள்ளாதவனாக இருந்தால் எண்ணியவற்றை யெல்லாம் உடனடியாகப் பெற முடியும்.

310 இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

எல்லையற்ற சினம் கொள்வார் இறந்தவர்க்கு ஒப்பாவார். சினத்தை அறவே துறந்தவர் துறவிக்கு ஒப்பாவார்.

# 32. இன்னா செய்யாமை

311 சிறப்பு-ஈனும் செல்வம் பெறினும்; பிறர்க்கு இன்னா-
செய்யாமை, மாசு-அற்றார் கோள்.

மிகுந்த செழிப்பைத் தருகின்ற செல்வத்தைப் பெறக் கூடுமென்றாலும் அதன் பொருட்டுப் பிறருக்குக் கேடு செய்யாமலிருப்பதே மாசற்றவர்களின் கொள்கையாகும்.

312 கறுத்து இன்னா-செய்த அக்கண்ணும்; மறுத்து இன்னா-
செய்யாமை, மாசு-அற்றார் கோள்.

சினங்கொண்டு சொல்லாலோ செயலாலோ ஒருவன் துன்பம் தரும்போது அந்தத் துன்பத்தை அவனுக்குத் திரும்பச் செய்யாமல் தாங்கிக் கொள்வதே சிறந்த மனிதரின் கொள்கையாகும்.

313 செய்யாமல், செற்றார்க்கும் இன்னாத செய்த-பின்;
உய்யா விழுமம் தரும்.

யாருக்கும் கேடு செய்யாமல் இருப்பவருக்குப் பகைவர் கேடு செய்துவிட்டால் அதற்குப் பதிலாக அவருக்கு வரும் கேடு மீளாத் துன்பம் தரக் கூடியதாகும்.

314 இன்னா செய்தாரை ஒறுத்தல்; அவர்-நாண
நல்-நயம் செய்து விடல்.

நமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டிப்பதற்குச் சரியான வழி, அவர் வெட்கித் தலைகுனியும் படியாக அவருக்கு நன்மை செய்வதுதான்.

315 அறிவினான் ஆகுவது உண்டோ; பிறிதின்-நோய்
தம்-நோய்-போல், போற்றாக்கடை?

பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தைத் தம் துன்பம் போலக் கருதிக் காப்பாற்ற முனையாதவர்களுக்கு அறிவு இருந்தும் அதனால் எந்தப் பயனுமில்லை.

316 இன்னா எனத்-தான் உணர்ந்தவை; துன்னாமை
வேண்டும், பிறன்கண் செயல்.

ஒருவன் தன்னுடைய வாழ்க்கையில் துன்பமானவை என்று அனுபவித்து அறிந்தவற்றை, மற்றவர்க்குச் செய்யாமலிருக்க வேண்டும்.

317 எனைத்தானும், எஞ்ஞான்றும், யார்க்கும்; மனத்தான்-ஆம்
மாணா-செய்யாமை தலை.

எவ்வளவிலும், எப்பொழுதும், எவரையும் இழிவுபடுத்தும் செயலை மனத்தால்கூட நினைக்காமல் இருப்பதே முதன்மையான சிறப்பாகும்.

318 தன்-உயிர்க்கு, இன்னாமை தான்-அறிவான்; என்கொலோ
மன்-உயிர்க்கு, இன்னா செயல்?

பிறர் தரும் துன்பத்தால் தனக்கேற்படும் துன்பத்தை உணர்ந்தவன் அந்தத் துன்பத்தைப் பிற உயிர்களுக்குத் தரவும் கூடாதல்லவா?

319 பிறர்க்கு-இன்னா, முற்பகல் செய்யின்; தமக்கு-இன்னா,
பிற்பகல் தாமே-வரும்.

பிறருக்குத் தீங்கு விளைத்துவிட்டோம் என்று ஒருவர் மகிழ்ந்து கொண்டிருக்கும்போதே, அதேபோன்ற தீங்கு அவரையே தாக்கும்.

320 நோய்-எல்லாம், நோய்-செய்தார் மேலவாம்; நோய்-செய்யார்,
நோய்-இன்மை வேண்டுபவர்.

தீங்கு செய்தவருக்கே தீங்குகள் வந்து சேரும்; எனவே தீங்கற்ற வாழ்வை விரும்புகிறவர்கள், பிறருக்குத் தீங்கிழைத்தல் கூடாது.

# 33. கொல்லாமை

321 ‘அற-வினை யாது?’ எனின், கொல்லாமை; கோறல்,
பிற-வினை எல்லாம் தரும்.

எந்த உயிரையும் கொல்லாதிருப்பதே அறச்செயலாகும். கொலை செய்தல் தீயவினைகள் அனைத்தையும் விளைவிக்கும்.

322 பகுத்து-உண்டு, பல்-உயிர் ஓம்புதல்; நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

இருப்போர் இல்லாதோர் என்றில்லாமல், கிடைத்ததைப் பகிர்ந்துகொண்டு, எல்லா உயிர்களும் வாழ வேண்டும் என்ற சமநிலைக்கொள்கைக்கு ஈடானது வேறு எதுவுமே இல்லை.

323 ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்று, அதன்-
பின்சாரப் பொய்யாமை நன்று.

அறங்களின் வரிசையில் முதலில் கொல்லாமையும் அதற்கடுத்துப் பொய்யாமையும் இடம் பெறுகின்றன.

324 ‘நல்லாறு எனப்படுவது யாது?’ எனின்; யாது-ஒன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

எந்த உயிரையும் கொல்லக் கூடாது எனும் நெறி காப்பதுதான் நல்லற வழி எனப்படும்.

325 நிலை-அஞ்சி, நீத்தாருள் எல்லாம்; கொலை-அஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

உலகியல் நிலையை வெறுத்துத் துறவு பூண்டவர் எல்லோரையும் விடக் கொலையை வெறுத்துக் கொல்லாமையைக் கடைப்பிடிப்பவரே சிறந்தவராவார்.

326 கொல்லாமை, மேற்கொண்டு ஒழுகுவான்; வாழ்நாள்மேல்
செல்லாது, உயிர்-உண்ணும் கூற்று.

கொலை செய்யாமையை வாழ்வில் அறநெறியாகக் கொண்டவரின் பெருமையை வியந்து, சாவுகூட அவர் உயிரைப் பறிக்கத் தயங்கி நிற்கும்.

327 தன்-உயிர் நீப்பினும், செய்யற்க; தான், பிறிது
இன் உயிர்-நீக்கும் வினை.

தன்னுயிரே போவதாக இருப்பினும்கூட அதற்காக இன்னொரு உயிரைப் போக்கும் செயலில் ஈடுபடக் கூடாது.

328 நன்று-ஆகும் ஆக்கம் பெரிது-எனினும்; சான்றோர்க்குக்
கொன்று-ஆகும் ஆக்கம், கடை.

பெரிதாக நன்மை தரக்கூடிய அளவுக்கு ஒரு கொலை பயன்படக் கூடுமெனினும், நல்ல பண்புடைய மக்கள், அந்த நன்மையை இழிவானதாகவே கருதுவார்கள்.

329 கொலை-வினையர் ஆகிய மாக்கள் புலை-வினையர்,
புன்மை தெரிவார் அகத்து.

பகுத்தறிவை இழந்து செயல்படும் கொலைகாரர்களைச் சான்றோர் உள்ளம், இழிதகைப் பிறவிகளாகவே கருதும்.

330 ‘உயிர்-உடம்பின் நீக்கியார்’ என்ப; ‘செயிர்-உடம்பின்
செல்லாத் தீ வாழ்க்கையவர்’.

வறுமையும் நோயும் மிகுந்த தீய வாழ்க்கையில் உழல்வோர், ஏற்கனவே கொலைகள் பல செய்தவராக இருப்பர் என்று முன்னோர் கூறுவர்.

# 34. நிலையாமை

331 நில்லாதவற்றை நிலையின என்று-உணரும்;
புல்லறிவு-ஆண்மை, கடை.

நிலையற்றவைகளை நிலையானவை என நம்புகின்ற அறியாமை மிக இழிவானதாகும்.

332 கூத்தாட்டு அவைக்-குழாத்து-அற்றே, பெருஞ்-செல்வம்;
போக்கும், அது விளிந்தற்று.

சேர்த்து வைத்த பணமும் சொத்தும் ஒருவரை விட்டுப் போவது, கூத்து முடிந்ததும் மக்கள் அரங்கத்தை விட்டுக் கலைந்து செல்வதைப் போன்றதாகும்.

333 அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அது-பெற்றால்,
அற்குப ஆங்கே செயல்.

நம்மை வந்தடையும் செல்வம் நிலையற்றது என்பதை உணர்ந்து அதைக் கொண்டு அப்பொழுதே நிலையான நற்செயல்களில் ஈடுபட வேண்டும்.

334 நாள்-என, ஒன்று-போல்-காட்டி; உயிர், ஈரும்
வாள்-அது; உணர்வார்ப் பெறின்.

வாழ்க்கையைப் பற்றி உணர்ந்தவர்கள், நாள் என்பது ஒருவரின் ஆயுளை அறுத்துக் குறைத்துக் கொண்டேயிருக்கும் வாள் என்று அறிவார்கள்.

335 நாச்-செற்று, விக்குள் மேல்-வாரா-முன்; நல்-வினை
மேற்சென்று செய்யப்படும்.

வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து நம் உயிர் இருக்கும் போதே உயர்ந்த நற்பணிகளை ஆற்றிட முனைய வேண்டும்.

336 ‘நெருநல் உளன், ஒருவன்; இன்று-இல்லை!’ என்னும்
பெருமை-உடைத்து, இவ்-உலகு.

இந்த உலகமானது, நேற்று உயிருடன் இருந்தவரை இன்று இல்லாமல் செய்து விட்டோம் என்ற அகந்தையைப் பெருமையாகக் கொண்டதாகும்.

337 ஒரு-பொழுதும் வாழ்வது அறியார்; கருதுப
கோடியும் அல்ல பல.

ஒரு பொழுதுகூட வாழ்க்கையைப் பற்றிய உண்மையைச் சிந்தித்து அறியாதவர்களே, ஆசைக்கோர் அளவின்றி மனக்கோட்டைகள் கட்டுவார்கள்.

338 குடம்பை தனித்து-ஒழியப் புள் பறந்தற்றே;
உடம்பொடு உயிரிடை நட்பு.

உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவு முட்டைக்கும் பறவைக் குஞ்சுக்கும் உண்டான உறவு போன்றதுதான்.

339 உறங்குவது போலும், சாக்காடு; உறங்கி-
விழிப்பது போலும், பிறப்பு.

நிலையற்ற வாழ்க்கையில், உறக்கத்திற்குப் பிறகு விழிப்பதைப் போன்றது பிறப்பு; திரும்ப விழிக்க முடியாத மீளா உறக்கம் கொள்வதே இறப்பு.

340 புக்கில் அமைந்தின்று கொல்லோ; உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு!

உடலுடன் தங்கியுள்ள உயிருக்கு அதனைப் பிரிந்தால் வேறு புகலிடம் கிடையாது.

# 35. துறவு

341 யாதனின், யாதனின்-நீங்கியான்; நோதல்
அதனின், அதனின் இலன்.

ஒருவன் பல வகையான பற்றுகளில் எந்த ஒன்றை விட்டு விட்டாலும், குறிப்பிட்ட அந்தப் பற்று காரணமாக வரும் துன்பம், அவனை அணுகுவதில்லை.

342 வேண்டின், உண்டாகத் துறக்க; துறந்தபின்,
ஈண்டு இயற்பால பல.

ஒருவனைத் துன்பம் துளைத்தெடுக்காமல் இருக்க எல்லாம் இருக்கும் போதே அவற்றைத் துறந்த விடுவானே யானால், அவன் உலகில் பெறக்கூடிய இன்பங்கள் பலவாகும்.

343 அடல்-வேண்டும், ஐந்தன் புலத்தை; விடல்-வேண்டும்,
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

ஐம் புலன்களையும் அடக்கி வெல்வதும், அப் புலன்கள் விரும்புகின்றவற்றையெல்லாம் விட்டுவிடுவதும் துறவுக்கு இலக்கணமாகும்.

344 இயல்பு-ஆகும், நோன்பிற்கு-ஒன்று இன்மை; உடைமை
மயல்-ஆகும், மற்றும் பெயர்த்து.

ஒரு பற்றும் இல்லாதிருத்தலே துறவுக்கு ஏற்றதாகும். ஒன்றன் மேல் பற்று வைப்பினும், அது மேன்மேலும் பற்றுகளைப் பெருக்கி மயங்கச் செய்துவிடும்.

345 மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல்? பிறப்பு-அறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை.

பிறந்ததால் ஏற்படும் துன்பத்தைப் போக்க முயல்கின்ற துறவிகளுக்கு அவர்களின் உடம்பே மிகையான ஒன்றாக இருக்கும் போது,அதற்கு மேலும் வேறு தொடர்பு எதற்காக?

346 ‘யான்’, ‘எனது’, என்னும் செருக்கு-அறுப்பான்; வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

யான், எனது என்கின்ற ஆணவத்தை அறவே விலக்கி விட்டவன், வான்புகழையும் மிஞ்சுகின்ற உலகப் புகழுக்கு உரியவனாவான்.

347 பற்றி-விடாஅ, இடும்பைகள்; பற்றினை,
பற்றி-விடாஅதவர்க்கு.

பற்றுகளைப் பற்றிக்கொண்டு விடாதவர்களைத் துன்பங்களும் விடாமல் பற்றிக் கொள்கின்றன.

348 தலைப்பட்டார், தீரத் துறந்தார்; மயங்கி
வலைப்பட்டார், மற்றையவர்.

அரைகுறையாக இல்லாமல் அனைத்தும் துறந்தவர்களே உயர்ந்த நிலையை அடைவார்கள்: அவ்வாறு துறவாதவர்கள் அறியாமையென்னும் வலையில் சிக்கியவர்களாவார்கள்.

349 பற்று அற்ற-கண்ணே பிறப்பு-அறுக்கும்; மற்றும்
நிலையாமை காணப்படும்.

பற்றுகளைத் துறந்துவிட்டால், பிறப்பில் ஏற்படும் இன்ப துன்பங்கள் வருவதில்லை. இல்லையேல், அந்த இன்ப துன்பங்கள் மாறிமாறி வரக்கூடிய நிலையாமை தோன்றும்.

350 பற்றுக, பற்று-அற்றான் பற்றினை! அப்-பற்றைப்
பற்றுக, பற்று-விடற்கு!

எதிலும் பற்றில்லாதவராக யார் இருக்கிறாரோ அவரிடம் மட்டும் பற்றுக் கொள்ள வேண்டும். துறவறத்தினர் தம் பற்றுகளை விட்டொழிப்பதற்கு அத்தகையோரிடம் கொள்ளும் பற்றுதான் துணை நிற்கும்.

# 36. மெய் உணர்தல்

351 பொருள்-அல்லவற்றைப் பொருள்-என்று உணரும்;
மருளான்-ஆம், மாணாப் பிறப்பு.

பொய்யான ஒரு பொருளை மெய்ப்பொருள் என்று மயங்கி நம்புகிறவனின் வாழ்க்கை சிறப்பாக அமையாது.

352 இருள்-நீங்கி இன்பம் பயக்கும்; மருள்-நீங்கி
மாசு-அறு காட்சியவர்க்கு.

மயக்கம் தெளிந்து மாசற்ற உண்மையை உணர்ந்தால் அறியாமை அகன்று நலம் தோன்றும்.

353 ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு, வையத்தின்,
வானம் நணியது-உடைத்து.

ஐயப்பாடுகளைத் தெளிந்த ஆராய்ச்சி வாயிலாகத் தீர்த்துக் கொண்டவர்களுக்குப் பூமியைவிட வானம் மிக அருகில் இருப்பதாகக் கருதுகின்ற ஊக்கம் ஏற்படும்.

354 ஐ-உணர்வு எய்தியக் கண்ணும் பயம்-இன்றே;
மெய்-உணர்வு இல்லாதவர்க்கு.

உண்மையைக் கண்டறிந்து தெளிவடையாதவர்கள், தமது ஐம்புலன்களையும் அடக்கி வெற்றி கண்டிருந்தாலும் கூட அதனால் அவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை.

355 எப்-பொருள், எத்-தன்மைத்து ஆயினும்; அப்-பொருள்,
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

வெளித்தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து விடாமல், அதுபற்றிய உண்மையை உணர்வதுதான் அறிவுடைமையாகும்.

356 கற்று, ஈண்டு மெய்ப்பொருள் கண்டார்; தலைப்படுவர்,
மற்று ஈண்டு வாரா-நெறி.

துறவற வாழ்வுக்குத் தகுதியுடையவராகச் செய்திடும் அனைத்தையும் கற்று, உண்மைப் பொருள் உணர்ந்து அதன்படி ஒழுகுபவர், மீண்டும் இல்லற வாழ்க்கையை விரும்ப மாட்டார்கள்.

357 ஓர்த்து, உள்ளம்-உள்ளது உணரின்; ஒரு-தலையாப்
பேர்த்து, உள்ள-வேண்டா பிறப்பு.

உண்மையை ஆராய்ந்து உறுதியாக உணர்பவர்கள் மீண்டும் பிறப்பு உண்டு எனக் கருத மாட்டார்கள்.

358 பிறப்பு-என்னும் பேதைமை நீங்க; சிறப்பு-என்னும்
செம்பொருள் காண்பது அறிவு.

அடுத்த பிறப்பு எனக் கூறப்படும் அறியாமையைப் போக்கித் தெளிந்த உண்மையை நிலைநாட்டுவதுதான் அறிவுடைமையாகும்.

359 சார்பு-உணர்ந்து, சார்பு கெட ஒழுகின்; மற்று-அழித்துச்
சார்தரா, சார்தரும் நோய்.

துன்பங்கள் நம்மைச் சாராமல் இருக்க வேண்டுமானால், அத்துன்பங்களுக்குக் காரணமானவற்றை உணர்ந்து அவற்றின் மீதுள்ள பற்றை விலக்கிக் கொள்ள வேண்டும்.

360 காமம், வெகுளி, மயக்கம்; இவை-மூன்றன்
நாமம் கெட, கெடும் நோய்.

விருப்பு, வெறுப்பு, அறியாமை இவற்றுக்கு இடம் தராதவர்களை நெருங்குகிற துன்பம் அழிந்துவிடும்.

# 37. அவா அறுத்தல்

361 ‘அவா’ என்ப‘; எல்லா-உயிர்க்கும், எஞ்-ஞான்றும்
தவாஅப் பிறப்பு-ஈனும், வித்து’.

ஆசையை, எல்லா உயிர்களிடமும், எல்லாக் காலத்திலும் தவறாமல் தோன்றி முளைக்கும் விதை என்று கூறலாம்.

362 வேண்டுங்கால், வேண்டும் பிறவாமை; மற்று-அது
வேண்டாமை வேண்ட, வரும்.

விரும்புவதானால் பிறக்காமலே இருந்திருக்க வேண்டும் என்று ஒருவன் எண்ணுகிற அளவுக்கு ஏற்படுகிற துன்ப நிலை, ஆசைகளை ஒழிக்காவிடில் வரும்.

363 வேண்டாமை அன்ன விழுச்-செல்வம், ஈண்டு-இல்லை;
யாண்டும் அஃது-ஒப்பது இல்.

தீமை விளைவிக்கும் ஆசைகளை வேண்டாம் என்று புறக்கணிப்பதைப் போன்ற செல்வம் இங்கு எதுவுமில்லை; வேறு எங்கும் கூட அத்தகைய ஒப்பற்ற செல்வம் இல்லையென்றே கூறலாம்.

364 தூ-உய்மை என்பது அவா-இன்மை; மற்று-அது
வா-அய்மை வேண்ட, வரும்.

தூய்மை என்பது பேராசையற்ற தன்மையாகும். அத்தூய்மை வாய்மையை நாடுவோர்க்கே வாய்க்கும்.

365 அற்றவர் என்பார் அவா-அற்றார்; மற்றையார்
அற்று-ஆக அற்றது இலர்.

ஆசையனைத்தும் விட்டவரே துறவி எனப்படுவார். முற்றும் துறவாதவர், தூய துறவியாக மாட்டார்.

366 அஞ்சுவது ஒரும் அறனே; ஒருவனை
வஞ்சிப்பது ஒரும் அவா.

ஒருவரை வஞ்சித்துக் கெடுப்பதற்குக் காரணமாக இருப்பது ஆசையேயாகும். எனவே, ஆசைக்கு அடிமையாகக் கூடாது என்ற அச்சத்துடன் வாழ வேண்டும்.

367 அவாவினை, ஆற்ற அறுப்பின்; தவாவினை,
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

கெடாமல் வாழ்வதற்குரிய நிலை, ஒருவன் விரும்புமாறு வாய்ப்பதற்கு, அவன் பேராசைக் குணத்தை முற்றிலும் ஒழித்தவனாக இருக்க வேண்டும்.

368 அவா-இல்லார்க்கு இல்லாகும் துன்பம்; அஃது-உண்டேல்,
தவாஅது மேன்மேல் வரும்.

ஆசை இல்லாதவர்களுக்குத் துன்பம் இல்லை. ஆசை உண்டானால், அதைத் தொடர்ந்து துன்பமும் மேலும் மேலும் வந்து கொண்டிருக்கும்.

369 இன்பம் இடையறாது, ஈண்டும்; அவா-என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

பெருந்துன்பம் தரக்கூடிய பேராசை ஒழிந்தால் வாழ்வில் இன்பம் விடாமல் தொடரும்.

370 ஆரா இயற்கை, அவா-நீப்பின்; அந்-நிலையே
பேரா இயற்கை, தரும்.

இயல்பாகவே எழும் அடங்காத பேராசையை அகற்றி வாழும் நிலை, நீங்காத இன்பத்தை இயல்பாகவே தரக்கூடியதாகும்.

# 38. ஊழ்

371 ஆகு-ஊழால் தோன்றும், அசைவு-இன்மை; கைப்பொருள்
போகு-ஊழால் தோன்றும், மடி.

ஆக்கத்திற்கான இயற்கை நிலை சோர்வு தலை காட்டாத ஊக்கத்தைக் கொடுக்கும். ஊக்கத்தின் அழிவுக்கான இயற்கை நிலை சோம்பலை ஏற்படுத்தும்.

372 பேதைப் படுக்கும், இழவு-ஊழ்; அறிவு-அகற்றும்,
ஆகல்-ஊழ் உற்றக்-கடை.

அழிவுதரும் இயற்கை நிலை, அறியாமையை உண்டாக்கும்; ஆக்கம் தரும் இயற்கை நிலை, அதற்கேற்ப அறிவை விரிவாக்கும்.

373 நுண்ணிய நூல்-பல கற்பினும், மற்றும்-தன்
உண்மை அறிவே மிகும்.

கூரிய அறிவு வழங்கக் கூடிய நூல்களை ஒருவர் கற்றிருந்த போதிலும் அவரது இயற்கை அறிவே மேலோங்கி நிற்கும்.

374 இரு வேறு, உலகத்து இயற்கை; திரு வேறு;
தெள்ளியர் ஆதலும் வேறு.

உலகின் இயற்கை நிலை இரு வேறுபட்டதாகும். ஒருவர் செல்வமுடையவராகவும், ஒருவர் அறிவுடையவராகவும் இருப்பதே அந்த வேறுபாடாகும்.

375 நல்லவை எல்லா-அம் தீய-ஆம்; தீயவும்
நல்ல-ஆம்; செல்வம் செயற்கு.

நல்ல செயல்களை ஆற்ற முற்படும்போது அவை தீமையில் போய் முடிந்துவிடுவதும், தீய செயல்களை ஆற்றிட முனையும்போது அவை நல்லவைகளாக முடிந்து விடுவதும் இயற்கை நிலை எனப்படும்.

376 பரியினும் ஆகாவாம், பால்-அல்ல; உய்த்துச்
சொரியினும் போகா, தம.

தனக்கு உரிமையல்லாதவற்றை எவ்வளவுதான் பாதுகாப்பாக வைத்தாலும் அவை தங்காமல் போய்விடக் கூடும்; உரிமையுள்ளவற்றை எங்கே கொண்டு போய்ப் போட்டாலும் அவை எங்கும் போகமாட்டா.

377 வகுத்தான், வகுத்த வகை-அல்லால்; கோடி-
தொகுத்தார்க்கும், துய்த்தல் அரிது.

வகுத்து முறைப்படுத்திய வாழ்க்கை நெறியை ஒட்டி நடக்கா விட்டால் கோடிப்பொருள் குவித்தாலும், அதன் பயனை அனுபவிப்பது என்பது அரிதேயாகும்.

378 துறப்பார்மன், துப்புரவு இல்லார்; உறற்பால
ஊட்டா கழியும் எனின்.

நுகர்வதற்குரியது எதுவுமில்லை என்ற உறுதியினால், தம்மை வருத்தக்கூடிய உணர்வுகள் வந்து வருத்தாமல் நீங்கிவிடுமானால் துறவறம் மேற்கொள்வர்.

379 நன்று-ஆம், கால் நல்லவாக் காண்பவர்; அன்று-ஆம், கால்
அல்லற்படுவது எவன்?

நன்மையும் தீமையும் வாழ்க்கையில் மாறி மாறி வரும். நன்மை கண்டு மகிழ்கிறவர்கள், தீமை விளையும்போது மட்டும் மனம் கலங்குவது ஏன்?

380 ஊழின், பெருவலி யா-உள? மற்று-ஒன்று
சூழினும், தான் முந்துறும்.

இயற்கை நிலையை மாற்றி மற்றொரு செயற்கை நிலையை அமைத்திட முனைந்தாலும், இயற்கை நிலையே முதன்மையாக வந்து நிற்பதால் அதைவிட வலிமையானவையாக வேறு எவை இருக்கின்றன?

# 39. இறைமாட்சி

381 படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்; ஆறும்-
உடையான், அரசருள் ஏறு.

ஆற்றல்மிகு படை, அறிவார்ந்த குடிமக்கள், குறையா வளம், குறையற்ற அமைச்சு, முரிபடாத நட்பு, மோதியழிக்க முடியாத அரண் ஆகிய ஆறு சிறப்புகளும் உடையதே அரசுகளுக்கிடையே ஆண் சிங்கம் போன்ற அரசாகும்.

382 அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம்; இந்-நான்கும்
எஞ்சாமை, வேந்தற்கு இயல்பு.

துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் அரசுக்குரிய தகுதிகளாகும்.

383 தூங்காமை, கல்வி, துணிவுடைமை; இம்-மூன்றும்
நீங்கா, நிலன்-ஆள்பவற்கு.

காலம் தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும் நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான பண்புகளாகும்.

384 அறன்-இழுக்காது, அல்லவை நீக்கி, மறன்-இழுக்கா
மானம் உடையது; அரசு.

அறநெறி தவறாமலும், குற்றமேதும் இழைக்காமலும், வீரத்துடனும், மானத்துடனும் ஆட்சி நடத்துபவர்களே சிறந்தவர்களாவார்கள்.

385 இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த-
வகுத்தலும்; வல்லது அரசு.

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அராசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

386 காட்சிக்கு எளியன், கடுஞ்சொல்லன் அல்லனேல்;
மீக்கூறும், மன்னன் நிலம்.

காட்சிக்கு எளிமையும், கடுஞ்சொல் கூறாத இனிய பண்பாடும் உடைய அரசைத்தான் உலகம் புகழும்.

387 இன்சொலால் ஈத்து, அளிக்க-வல்லாற்குத் தன்சொலால்
தான் கண்டனைத்து, இவ்-உலகு.

வாக்கில் இனிமையும், பிறர்க்கு வழங்கிக் காத்திடும் தன்மையும் கொண்டவர்க்கு இவ்வையகமே வசப்படும்.

388 முறை-செய்து காப்பாற்றும் மன்னவன்; 'மக்கட்கு
இறை' என்று வைக்கப்படும்.

நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப் படுவான்.

389 செவி-கைப்பச், சொல்-பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும், உலகு.

காதைக் குடையக்கூடிய கடுஞ்சொற்களையும் பொறுத்துக் கொள்கிற பண்பாளரின் அரசுக்குத்தான் மக்களிடம் மதிப்பு இருக்கும்.

390 கொடை, அளி, செங்கோல், குடி-ஓம்பல்; நான்கும்
உடையான்-ஆம், வேந்தர்க்கு ஒளி.

நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலை யுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

# 40. கல்வி

391 கற்க, கசடு-அற, கற்பவை; கற்ற-பின்,
நிற்க, அதற்குத் தக!

பிழை இல்லாதவற்றைத் தனது குறைகள் நீங்குமளவுக்குக் கற்றுக்கொள்ள வேண்டும். கற்ற பிறகு அதன்படி நடக்கவேண்டும்.

392 'எண்' என்ப, ஏனை 'எழுத்து' என்ப; இவ்-இரண்டும்
'கண்' என்ப, வாழும் உயிர்க்கு.

எண்ணும் எழுத்தும் எனப்படும் அறிவுக் கண்களைப் பெற்றவர்களே, உயிர் வாழ்வோர் எனக் கருதப்படுவார்கள்.

393 கண்-உடையர், என்பவர் கற்றோர்; முகத்து-இரண்டு
புண்-உடையர், கல்லாதவர்.

கண்ணில்லாவிடினும் அவர் கற்றவராக இருப்பின் கண்ணுடையவராகவே கருதப்படுவார். கல்லாதவருக்குக் கண் இருப்பினும் அது புண் என்றே கருதப்படும்.

394 உவப்பத் தலைக்கூடி, உள்ளப் பிரிதல்
அனைத்தே; புலவர் தொழில்.

மகிழ்ச்சி பொங்கிடச் சேர்ந்து பழகுவதும், பிரிந்திட நேரும் போது மனங்கலங்குவதும் அறிவிற் சிறந்தோர் செயலாகும்.

395 உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்;
கடையரே, கல்லாதவர்.

அறிவுடையார் முன் அறிவில்லாதவர் போல் தாழ்ந்து நின்று, மேலும் கற்றுக்கொள்பவர்களின் ஆர்வத்தைக் கற்றுக்கொள்ளாதவர்கள் கடைநிலை மாந்தராகக் கருதப்படுவார்கள்.

396 தொட்டனைத்து ஊறும், மணற்-கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும், அறிவு.

தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்.

397 யாதானும் நாடு-ஆமால்; ஊர்-ஆமால்; என், ஒருவன்
சா(கு)ம்-துணையும் கல்லாதவாறு?

கற்றோர்க்கு எல்லா நாடுகளிலும் எல்லா ஊர்களிலும் சிறப்பு என்கிறபோது, ஒருவன் சாகும் வரையில் கற்காமல் காலம் கழிப்பது ஏனோ?

398 ஒருமைக்கண், தான் கற்ற-கல்வி; ஒருவற்கு
எழுமையும், ஏமாப்பு உடைத்து.

ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவனாது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும்.

399 தாம்-இன்புறுவது, உலகு-இன்புறக்-கண்டு;
காமுறுவர், கற்று-அறிந்தார்.

தமக்கு இன்பம் தருகின்ற கல்வியறிவு உலகத்தாருக்கும் இன்பம் தருவதைக் கண்டு, அறிஞர்கள் மேலும் மேலும் பலவற்றைக் கற்றிட விரும்புவார்கள்.

400 கேடு-இல் விழுச்செல்வம், கல்வி-ஒருவற்கு;
மாடு-அல்ல, மற்றையவை.

கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை.

# 41. கல்லாமை

401 அரங்கு-இன்றி வட்டு ஆடியற்றே; நிரம்பிய
நூல்-இன்றிக் கோட்டி கொளல்.

நிறைந்த அறிவாற்றல் இல்லாமல் அவையில் பேசுவது ஆடுவதற்கான கட்டம் போட்டுக் கொள்ளாமலே சொக்கட்டான் விளையாடுவதைப் போன்றதாகும்.

402 கல்லாதான் சொல், காமுறுதல்; முலை-இரண்டும்
இல்லாதாள் பெண், காமுற்றற்று.

கல்லாதவனின் சொல்கேட்க விரும்புவது, மார்பகம் இல்லாத பெண்மீது மையல் கொள்வதற்கு ஒப்பானது.

403 கல்லாதவரும் நனி நல்லர்; கற்றார்-முன்
சொல்லாது இருக்கப்பெறின்.

கற்றவர்களின், முன்னிலையில் எதுவும் பேசாமல் இருக்கக் கற்றிருந்தால் கல்வி கற்காதவர்கள்கூட நல்லவர்களாகவே கருதப்படுவார்கள்.

404 கல்லாதான் ஒட்பம் கழிய நன்று-ஆயினும்;
கொள்ளார், அறிவு-உடையார்.

கல்வி கற்காதவனுக்கு இயற்கையாகவே அறிவு இருந்தாலும்கூட, அவனைக் கல்வியில் சிறந்தோன் என்று அறிவுடையோர் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

405 கல்லா ஒருவன் தகைமை; தலைப்பெய்து
சொல்லாட, சோர்வு-படும்.

கல்வி யறிவில்லாதவர்கள் தங்களைப் பெரிய மேதைகளைப் போல் காட்டிக் கொள்ளும் போலி வேடம், கற்றுத் தேர்ந்த அறிஞர்களிடம் அவர்கள் உரையாடும்போது கலைந்து போய்விடும்.

406 உளர்-என்னும் மாத்திரையர் அல்லால்; பயவாக்
களர்-அனையர் கல்லாதவர்.

கல்லாதவர்களைக் களர்நிலத்துக்கு ஒப்பிடுவதே பொருத்தமானது. காரணம் அவர்கள் வெறும் நடைப்பிணங்களாகவே கருதப்படுவார்கள்.

407 நுண்-மாண், நுழை-புலம் இல்லான், எழில்-நலம்;
மண்-மாண், புனை பாவை-அற்று.

அழகான தோற்றம் மட்டுமே இருந்து, ஆழ்ந்து தெளிந்த அறிவில்லாமல் இருப்பவர்கள், கண்ணைக் கவரும் மண் பொம்மையைப் போன்றவர்களாகவே மதிக்கப்படுவார்கள்.

408 நல்லார்கண், பட்ட வறுமையின்; இன்னாதே,
கல்லார்கண், பட்ட திரு.

முட்டாள்களிடம் குவிந்துள்ள செல்வம், நல்லவர்களை வாட்டும் வறுமையைவிட அதிக துன்பத்தைத் தரும்.

409 மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார், கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்து-இலர் பாடு.

கற்றவர் என்ற பெருமை, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாட்டைப் போக்கிவிடும்.

410 விலங்கொடு மக்கள் அனையர்; இலங்கு-நூல்
கற்றாரொடு ஏனையவர்.

மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமிடையே என்ன வேற்றுமையோ, அதே அளவு வேற்றுமை அறிவு நூல்களைப் படித்தவர்களுக்கும், அந்த நூல்களைப் படிக்காதவர்களுக்கும் இடையே உண்டு.

# 42. கேள்வி

411 செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச்-செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

செழுமையான கருத்துகளைச் செவிவழியாகப் பெறும் செல்வமே எல்லாச் செல்வங்களுக்கும் தலையாய செல்வமாகும்.

412 செவிக்கு உணவு-இல்லாத போழ்து, சிறிது,
வயிற்றுக்கும் ஈயப்படும்.

செவி வழியாக இன்பம் தரும் உணவு இல்லாதபோதே சிறிதளவு உணவு வயிற்றுக்குத் தரும் நிலை ஏற்படும்.

413 செவி-உணவின், கேள்வி-உடையார்; அவி-உணவின்
ஆன்றாரொடு ஒப்பர், நிலத்து.

குறைந்த உணவருந்தி நிறைந்த அறிவுடன் விளங்கும் ஆன்றோர்க்கு ஒப்பாகக் கேள்வி ஞானம் எனும் செவியுணவு அருந்துவோர் எண்ணப்படுவர்.

414 கற்றிலன் ஆயினும், கேட்க; அஃது-ஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்று-ஆம் துணை.

நூல்களைக் கற்காவிட்டாலும், கற்றவரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டால், அது நடை தளர்ந்தவனுக்கு உதவிடும் ஊன்றுகோலைப் போலத் துணையாக அமையும்.

415 இழுக்கல் உடை-உழி ஊற்றுக்கோல் அற்றே;
ஒழுக்கம்-உடையார் வாய்ச்-சொல்.

வழுக்கு நிலத்தில் நடப்பதற்கு ஊன்றுகோல் உதவுவது போல் ஒழுக்கம் உடையவர்களின் அறிவுரையானது உதவும்.

416 எனைத்தானும் நல்லவை கேட்க! அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

நல்லவற்றை எந்த அளவுக்குக் கேட்கிறோமோ அந்த அளவுக்குப் பெருமை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

417 பிழைத்து-உணர்ந்தும், பேதைமை சொல்லார்; இழைத்து-உணர்ந்து,
ஈண்டிய கேள்வியவர்.

எதையும் நுணுகி ஆராய்வதுடன் கேள்வி அறிவும் உடையவர்கள், சிலவற்றைப் பற்றித் தவறாக உணர்ந்திருந்தாலும் கூட, அப்போதும் அறிவற்ற முறையில் பேசமாட்டார்கள்.

418 கேட்பினும், கேளாத் தகையவே; கேள்வியால்,
தோட்கப்-படாத-செவி.

இயற்கையாகவே கேட்கக்கூடிய காதுகளாக இருந்தாலும் அவை நல்லோர் உரைகளைக் கேட்க மறுத்தால் செவிட்டுக் காதுகள் என்றே கூறப்படும்.

419 நுணங்கிய கேள்வியர்-அல்லார்; வணங்கிய
வாயினர், ஆதல் அரிது.

தெளிவான கேள்வியறிவு இல்லாதவர்கள், அடக்கமாகப் பேசும் அமைதியான பண்புடையவர்களாக இருக்க இயலாது.

420 செவியின் சுவை-உணரா, வாய்-உணர்வின் மாக்கள்;
அவியினும் வாழினும் என்.

செவிச்சுவை உணராமல் வாயின் சுவைக்காக மட்டுமே வாழும் மக்கள் உயிரோடு இருப்பதும் ஒன்றுதான் இல்லாமற் போவதும் ஒன்றுதான்.

# 43. அறிவுடைமை

421 அறிவு, அற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்,
உள்-அழிக்கல் ஆகா அரண்.

பகையால் அழிவு வாராமல் பாதுகாக்கும் அரண், அறிவு ஒன்றுதான்.

422 சென்ற இடத்தால் செலவிடா, தீது-ஒரீஇ;
நன்றின்-பால் உய்ப்பது-அறிவு.

மனம் போகும் வழியெல்லாம் போக விடாமல் தீய வழிகளைத் தள்ளிவிட்டு, நல்வழியைத் தேர்வு செய்வதே அறிவுடைமையாகும்.

423 எப்பொருள், யார்-யார்-வாய்க் கேட்பினும்; அப்பொருள்
மெய்ப்பொருள், காண்பது; அறிவு.

எந்தவொரு பொருள்குறித்து எவர் எதைச் சொன்னாலும், அதை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளாமல் உண்மை எது என்பதை ஆராய்ந்து தெளிவதுதான் அறிவுடைமையாகும்.

424 எண்-பொருளவாகச் செலச்சொல்லி, தான்-பிறர்வாய்
நுண்-பொருள் காண்பது; அறிவு.

நாம் சொல்ல வேண்டியவைகளை எளிய முறையில் கேட்போரின் இதயத்தில் பதியுமாறு சொல்லிப் பிறர் சொல்லும் நுட்பமான கருத்துகளையும் ஆராய்ந்து தெளிவதே அறிவுடைமையாகும்.

425 உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்,
கூம்பலும் இல்லது; அறிவு.

உயர்ந்தோரே உலகோர் எனப்படுவதால் அவர்களுடன் நட்பு கொண்டு இன்பம் துன்பம் ஆகிய இரண்டையும் ஒரே நிலையாகக் கருதுவதே அறிவுடைமையாகும்.

426 எவ்வது, உறைவது உலகம்; உலகத்தொடு
அவ்வது, உறைவது; அறிவு.

உயர்ந்தோர் வழியில் உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ அதற்கேற்ப நடந்து கொள்வதே அறிவாகும்.

427 அறிவு-உடையார் ஆவது-அறிவார்; அறிவு-இலார்
அஃது-அறி கல்லாதவர்.

ஒரு விளைவுக்கு எதிர்விளைவு எப்படியிருக்குமென அறிவுடையவர்கள்தான் சிந்திப்பார்கள்; அறிவில்லாதவர்கள் சிந்திக்க மாட்டார்கள்.

428 அஞ்சுவது, அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல், அறிவார் தொழில்.

அறிவில்லாதவர்கள்தான் அஞ்ச வேண்டியதற்கு அஞ்ச மாட்டார்கள். அறிஞர்கள் மட்டுமே அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுவார்கள்.

429 எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை;
அதிர வருவதோர் நோய்.

வருமுன் அறிந்து காத்துக்கொள்ளும் திறனுடையவர்களுக்கு அதிர்ச்சி தரக்கூடிய துன்பம் ஏற்படாது.

430 அறிவு-உடையார் எல்லாம் உடையார்; அறிவு-இலார்
என்-உடையரேனும் இலர்.

அறிவு இல்லாதவர்களுக்கு வேறு எது இருந்தாலும் பெருமையில்லை; அறிவு உள்ளவர்களுக்கு வேறு எது இல்லாவிட்டாலும் சிறுமை இல்லை.

# 44. குற்றம் கடிதல்

431 செருக்கும், சினமும், சிறுமையும் இல்லார்;
பெருக்கம், பெருமித நீர்த்து.

இறுமாப்பு, ஆத்திரம், இழிவான நடத்தை இவைகள் இல்லாதவர்களுடைய செல்வாக்குதான் மதிக்கத் தக்கதாகும்.

432 இவறலும், மாண்பு-இறந்த மானமும், மாணா-
உவகையும் ஏதம்; இறைக்கு.

மனத்தில் பேராசை, மான உணர்வில் ஊனம், மாசுபடியும் செயல்களில் மகிழ்ச்சி ஆகியவை தலைமைக்குரிய தகுதிக்கே பெருங்கேடுகளாகும்.

433 தினைத்-துணையாம் குற்றம் வரினும்; பனைத்-துணையாக்
கொள்வர், பழி நாணுவார்.

பழிக்கு நாணுகின்றவர்கள், தினையளவு குற்றத்தையும் பனையளவாகக் கருதி, அதைச் செய்யாமல், தங்களைக் காத்துக் கொள்வார்கள்.

434 குற்றமே காக்க, பொருளாக குற்றமே;
அற்றம் தரூஉம் பகை.

குற்றம் புரிவது அழிவை உண்டாக்கக் கூடிய பகையாக மாறுவதால் குற்றம் புரியாமல் இருப்பது என்பதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

435 வரும்-முன்னர்க் காவாதான், வாழ்க்கை; எரி-முன்னர்
வைத்தூறு போல, கெடும்.

முன்கூட்டியே எச்சரிக்கையாக இருந்து ஒரு தவறான செயலைத் தவிர்த்துக் கொள்ளாதவருடைய வாழ்க்கையானது நெருப்பின் முன்னால் உள்ள வைக்கோல் போர் போலக் கருகிவிடும்.

436 தன்-குற்றம் நீக்கி, பிறர்-குற்றம் காண்கிற்பின்;
என்-குற்றம்-ஆகும் இறைக்கு?

முதலில் தனக்குள்ள குறையை நீக்கிக் கொண்டு அதன் பின்னர் பிறர் குறையைக் கண்டு சொல்லும் தலைவனுக்கு என்ன குறை நேரும்?

437 செயற்பால செய்யாது, இவறியான் செல்வம்;
உயற்பாலது அன்றிக் கெடும்.

நற்பணிகளைச் செய்யாமல் சேமித்து வைக்கப்படும் கருமியின் செல்வம் பயன் ஏதுமின்றிப் பாழாகிவிடும்.

438 பற்று-உள்ளம், என்னும் இவறன்மை; எற்றுள்ளும்
எண்ணப்படுவது, ஒன்று அன்று.

எல்லாக் குற்றங்களையும்விடத் தனிப்பெருங் குற்றமாகக் கருதப்படுவது பொருள் சேர்ப்பதில் பற்றுக்கொண்டு எவருக்கும் எதுவும் ஈயாமல் வாழ்வதுதான்.

439 வியவற்க, எஞ்ஞான்றும் தன்னை! நயவற்க,
நன்றி பயவா வினை!

எந்தவொரு காலகட்டத்திலும் தன்னைத்தானே உயர்வாக எண்ணிடும் தற்பெருமைகொண்டு நன்மை தராத செயல்களில் ஈடுபடக் கூடாது.

440 காதல, காதல்-அறியாமை உய்க்கிற்பின்;
ஏதில, ஏதிலார் நூல்.

தமது விருப்பத்தைப் பகைவர் அறிந்து கொள்ள முடியாமல் நிறைவேற்றுபவரிடம் அந்தப் பகைவரின் எண்ணம் பலிக்காமற் போய்விடும்.

# 45. பெரியாரைத் துணைக்கோடல்

441 அறன்-அறிந்து, மூத்த அறிவு-உடையார், கேண்மை;
திறன்-அறிந்து, தேர்ந்து, கொளல்.

அறமுணர்ந்த மூதறிஞர்களின் நட்பைப் பெறும் வகை அறிந்து, அதனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

442 உற்ற-நோய் நீக்கி, உறாஅமை முன்-காக்கும்;
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

வந்துள்ள துன்பத்தைப் போக்கி, மேலும் துன்பம் நேராமல் காக்கவல்ல பெரியோர்களைத் துணையாகக் கொள்ள வேண்டும்.

443 அரியவற்றுள் எல்லாம் அரிதே; பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

பெரியவர்களைப் போற்றிப் பாராட்டி அவர்களுடன் உறவாடுதல் எல்லாப் பேறுகளையும் விடப் பெரும் பேறாகும்.

444 தம்மின் பெரியார், தமரா ஒழுகுதல்;
வன்மையுள் எல்லாம், தலை.

அறிவு ஆற்றல் ஆகியவற்றில் தம்மைக் காட்டிலும் சிறந்த பெரியவராய் இருப்பவரோடு உறவுகொண்டு அவர்வழி நடப்பது மிகப்பெரும் வலிமையாக அமையும்.

445 சூழ்வார் கண்-ஆக ஒழுகலான்; மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

கண்ணாக இருந்து எதனையும் கண்டறிந்த கூறும் அறிஞர் பெருமக்களைச் சூழ வைத்துக் கொண்டிருப்பதே ஆட்சியாளர்க்கு நன்மை பயக்கும்.

446 தக்கார் இனத்தனாய், தான்-ஒழுக வல்லானை;
செற்றார், செயக்கிடந்தது இல்.

அறிவும், ஆற்றலும் கொண்ட ஒருவன், தன்னைச் சூழவும் அத்தகையோரையே கொண்டிருந்தால் பகைவர்களால் எந்தத் தீங்கையும் விளைவிக்க முடியாது.

447 இடிக்கும் துணையாரை ஆள்வாரை, யாரே,
கெடுக்கும் தகைமையவர்?

இடித்துரைத்து நல்வழி காட்டுபவரின் துணையைப் பெற்று நடப்பவர்களைக் கெடுக்கும் ஆற்றல் யாருக்கு உண்டு?

448 இடிப்பாரை இல்லாத, ஏமரா மன்னன்;
கெடுப்பார் இலானும், கெடும்.

குறையை உணர்த்துவோர் இல்லாத அரசு தானாகவே கெடும்.

449 முதல்-இலார்க்கு ஊதியம் இல்லை; மதலை-ஆம்
சார்பு-இலார்க்கு இல்லை, நிலை.

கட்டடத்தைத் தாங்கும் தூண் போலத் தம்மைத் தாங்கி நிற்கக் கூடிய துணையில்லாதவர்களின் நிலை, முதலீடு செய்யாத வாணிபத்தில் வருவாய் இல்லாத நிலையைப் போன்றதேயாகும்.

450 பல்லார் பகை-கொளலின், பத்து-அடுத்த தீமைத்தே;
நல்லார் தொடர், கைவிடல்.

நல்லவர்களின் தொடர்பைக் கைவிடுவது என்பது பலருடைய பகையைத் தேடிக் கொள்வதை விடக் கேடு விளைவிக்கக் கூடியதாகும்.

# 46. சிற்றினம் சேராமை

451 சிற்றினம் அஞ்சும், பெருமை; சிறுமை-தான்
சுற்றமாச் சூழ்ந்துவிடும்.

பெரியோர், கீழ்மக்களின் கூட்டத்தோடு சேரமாட்டார்கள். ஆனால் சிறியோர்களோ இனம் இனத்தோடு சேருமென்பதுபோல் அந்தக் கீழ் மக்கள் கூட்டத்துடன் சேர்ந்து கொள்வார்கள்.

452 நிலத்து-இயல்பான் நீர் திரிந்து, அற்று-ஆகும்; மாந்தர்க்கு
'இனத்து' இயல்பது ஆகும்; அறிவு.

சேர்ந்த நிலத்தின் தன்மையால் நீரானது வேறுபட்டு அந்த நிலத்தின் தன்மையை அடைந்துவிடும். அதுபோல மக்களின் அறிவும், தாங்கள் சேர்ந்த இனத்தின் தன்மையைப் பெற்றதாகிவிடும்.

453 மனத்தான்-ஆம், மாந்தர்க்கு-உணர்ச்சி; இனத்தான்-ஆம்,
'இன்னான்' எனப்படும் சொல்.

ஒருவரின் உணர்ச்சி, மனத்தைப் பொறுத்து அமையும். அவர் இப்படிப்பட்டவர் என்று அளந்து சொல்வது அவர் சேர்ந்திடும் கூட்டத்தைப் பொருத்து அமையும்.

454 மனத்து-உளது-போலக் காட்டி; ஒருவற்கு
இனத்து-உளது-ஆகும்; அறிவு.

ஒருவரின் அறிவு அவரது மனத்தின் இயல்பு என்பது போல் தோன்றினாலும், அது அவர் சேர்ந்த கூட்டத்தாரின் தொடர்பால் வெளிப்படுவதேயாகும்.

455 மனம்-தூய்மை, செய்-வினை தூய்மை; இரண்டும்
இனம்-தூய்மை, தூவா வரும்.

ஒருவன் கொண்டுள்ள தொடர்பு தூய்மையானதாக இருந்தால்தான் அவனுடைய மனமும் செயலும் தூய்மையானவையாக இருக்கும்.

456 மனம்-தூயார்க்கு எச்சம் நன்று-ஆகும்; இனம்-தூயார்க்கு
இல்லை, நன்று-ஆகா வினை.

மனத்தின் தூய்மையால் புகழும், சேர்ந்த இனத்தின் தூய்மையால் நற்செயல்களும் விளையும்.

457 மன-நலம், மன்-உயிர்க்கு ஆக்கம்; இன-நலம்,
எல்லாப் புகழும் தரும்.

மனத்தின் நலம் உயிருக்கு ஆக்கமாக விளங்கும். இனத்தின் நலமோ எல்லாப் புகழையும் வழங்கும்.

458 மன-நலம், நன்கு-உடையர் ஆயினும்; சான்றோர்க்கு
இன-நலம், ஏமாப்பு உடைத்து.

மனவளம் மிக்க சான்றோராக இருப்பினும் அவர் சேர்ந்துள்ள கூட்டத்தினரைப் பொறுத்தே வலிமை வந்து வாய்க்கும்.

459 மன-நலத்தின் ஆகும், மறுமை; மற்று-அஃதும்
இன-நலத்தின், ஏமாப்பு உடைத்து.

நல்ல உறுதியான உள்ளம் படைத்த உயர்ந்தோராக இருந்தாலும் அவர் சார்ந்த இனத்தின் உறுதியும் அவருக்கு வலிமையான துணையாக அமையக் கூடியதாகும்.

460 நல்-இனத்தின் ஊங்கும் துணை-இல்லை; தீ-இனத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

நல்ல இனத்தைக் காட்டிலும் துணையாக இருப்பதும், தீய இனத்தைக் காட்டிலும் துன்பம் தரக்கூடியதும் எதுவுமே இல்லை.

# 47. தெரிந்து செயல் வகை

461 அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி, வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து; செயல்!

எந்த அளவுக்கு நன்மை கிடைக்கும் அல்லது தீமை ஏற்படும் என்று விளைவுகளைக் கணக்குப் பார்த்த பிறகே ஒரு செயலில் இறங்க வேண்டும்.

462 தெரிந்த இனத்தொடு, தேர்ந்து எண்ணிச்-செய்வார்க்கு;
அரும்பொருள், யாது-ஒன்றும் இல்.

தெளிந்து தேர்ந்த நண்பர்களுடன் சேர்ந்து, ஆற்ற வேண்டிய செயலை ஆராய்ந்து, தாமும் நன்கு சிந்தித்துச் செய்தால் ஆகாதது ஒன்றுமில்லை.

463 ஆக்கம் கருதி, முதல்-இழக்கும் செய்வினை
ஊக்கார், அறிவு-உடையார்.

பெரும் ஆதாயம் கிட்டுமென்று எதிர்பார்த்துக் கை முதலையும் இழந்து விடக்கூடிய காரியத்தை அறிவுடையவர்கள் செய்யமாட்டார்கள்.

464 தெளிவு-இலதனைத் தொடங்கார்; இளிவு-என்னும்
ஏதப்பாடு அஞ்சுபவர்.

களங்கத்துக்குப் பயப்படக் கூடியவர்கள்தான் விளைவுகளை எண்ணிப் பார்த்து அந்தக் களங்கம் தரும் காரியத்தில் இறங்காமல் இருப்பார்கள்.

465 வகை-அறச் சூழாது, எழுதல்; பகைவரைப்
பாத்திப்-படுப்பது ஓர்-ஆறு.

முன்னேற்பாடுகளை முழுமையாக ஆராய்ந்து செய்யாமல் பகைவரை ஒடுக்க முனைவது அந்தப் பகைவரின் வலிமையை நிலையாக வளர்க்கும் வழியாக ஆகிவிடும்.

466 செய்தக்க-அல்ல, செயக் கெடும்; செய்தக்க,
செய்யாமையானும் கெடும்.

செய்யக் கூடாததைச் செய்வதால் கேடு ஏற்படும்; செய்ய வேண்டியதைச் செய்யாமல் விட்டாலும் கேடு ஏற்படும்.

467 எண்ணித் துணிக, கருமம்; துணிந்த-பின்,
எண்ணுவம் என்பது இழுக்கு.

நன்றாகச் சிந்தித்த பிறகே செயலில் இறங்க வேண்டும்; இறங்கிய பிறகு சிந்திக்கலாம் என்பது தவறு.

468 ஆற்றின், வருந்தா வருத்தம்; பலர்-நின்று
போற்றினும், பொத்துப்படும்.

எத்தனை பேர்தான் துணையாக இருந்தாலும் முறையாகச் செய்யப்படாத முயற்சி இறுதியில் முடங்கிப் போய் விடும்.

469 நன்று ஆற்றல்-உள்ளும், தவறு-உண்டு; அவரவர்
பண்பு-அறிந்து, ஆற்றாக்கடை.

ஒருவருடைய இயல்பைப் புரிந்து கொண்டுதான் நன்மையைக் கூடச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அதுவே தீமையாகத் திருப்பித் தாக்கும்.

470 எள்ளாத, எண்ணிச் செயல்-வேண்டும்; தம்மொடு
கொள்ளாத, கொள்ளாது உலகு.

தம்முடைய நிலைமைக்கு மாறான செயல்களை உயர்ந்தோர் பாராட்டமாட்டார்கள் என்பதால், அவர்கள் பழித்துரைக்காத செயல்களையே செய்திடல் வேண்டும்.

## 48. வலி அறிதல்

471 வினை-வலியும், தன்-வலியும், மாற்றான்-வலியும்,
துணை-வலியும்; தூக்கிச் செயல்.

செயலின் வலிமை, தனது வலிமை, பகைவரின் வலிமை, இருசாராருக்கும் துணையாக இருப்போரின் வலிமை ஆகியவற்றை ஆராய்ந்தறிந்தே அந்தச் செயலில் ஈடுபட வேண்டும்.

472 ஒல்வது அறிவது அறிந்து, அதன்கண் தங்கிச்
செல்வார்க்கு; செல்லாதது இல்.

ஒரு செயலில் ஈடுபடும்போது அச்செயலைப் பற்றிய அனைத்தையும் ஆராய்ந்தறிந்து முயற்சி மேற்கொண்டால் முடியாதது எதுவுமில்லை.

473 உடைத்-தம் வலி-அறியார்; ஊக்கத்தின் ஊக்கி,
இடைக்கண் முரிந்தார் பலர்.

தம்முடைய வலிமையின் அளவை அறியாமல் உணர்ச்சி வயப்பட்டு ஒரு செயலைத் தொடங்கி இடையில் கெட்டுப் போனவர்கள் பலர் உண்டு.

474 அமைந்து ஆங்கு-ஒழுகான், அளவு-அறியான், தன்னை-
வியந்தான்; விரைந்து கெடும்.

மற்றவர்களை மதிக்காமலும், தன் வலிமையை உணர்ந்து கொள்ளாமலும், தன்னைத் தானே பெரிதாக விளம்பரப் படுத்திக் கொண்டிருப்பவர்கள் விரைவில் கெட்டுத் தொலைவார்கள்.

475 பீலி-பெய் சாகாடும், அச்சு-இறும்; அப்பண்டம்,
சால மிகுத்துப் பெயின்.

மயில் இறகாக இருந்தாலும்கூட அதிகமாக ஏற்றப்பட்டால் வண்டியின் அச்சு முறிகின்ற அளவுக்கு அதற்குப் பலம் வந்து விடும்.

476 நுனிக்-கொம்பர் ஏறினார், அஃது-இறந்து ஊக்கின்;
உயிர்க்கு இறுதி-ஆகி-விடும்.

தன்னைப் பற்றி அதிகமாகக் கணக்குப் போட்டுக் கொண்டு, எல்லை மீறிப் போகிற ஒருவர், நுனிக் கிளையில் ஏறியவர் அதற்கு மேலும் ஏறிட முயற்சி செய்தால் என்ன ஆவாரோ அந்தக் கதிக்கு ஆளாவார்.

477 ஆற்றின், அளவு-அறிந்து ஈக; அது, பொருள்
போற்றி வழங்கும் நெறி.

வருவாய் அளவை அறிந்து, அதனை வகுத்து வழங்குவதே பொருளைச் சீராகக் காத்து வாழும் வழியாகும்.

478 ஆகு-ஆறு, அளவு-இட்டிது ஆயினும்; கேடு-இல்லை
போகு-ஆறு, அகலாக்கடை.

எல்லை கடந்த செலவு இல்லாமல் இருக்குமேயானால் வரவு, குறைவாக இருப்பதால் கேடு எதுவும் விளைவதில்லை.

479 அளவு-அறிந்து வாழாதான், வாழ்க்கை; உளபோல
இல்லாகித், தோன்றாக் கெடும்.

இருப்பது, இயற்றக்கூடியது, இனியும் ஈட்டக்கூடியது ஆகியவற்றின் அளவு அறிந்து செயல்திட்டங்களை வகுத்துக்கொள்ளாவிட்டால், வலிமையோ அல்லது வளமோ இருப்பது போல் தோன்றினாலும்கூட இல்லாமல் மறைந்து போய்விடும்.

480 உள-வரை தூக்காத ஒப்புரவு-ஆண்மை;
வள-வரை வல்லைக் கெடும்.

தன்னிடமுள்ள பொருளின் அளவை ஆராய்ந்து பார்க்காமல் அளவின்றிக் கொடுத்துக் கொண்டேயிருந்தால் அவனது வளம் விரைவில் கெடும்.

# 49. காலம் அறிதல்

481 பகல்-வெல்லும், கூகையைக் காக்கை; இகல்-வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும், பொழுது.

பகல் நேரமாக இருந்தால் கோட்டானைக் காக்கை வென்று விடும். எனவே எதிரியை வீழ்த்துவதற்கு ஏற்ற காலத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

482 பருவத்தொடு ஒட்ட ஒழுகல்; திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.

காலம் உணர்ந்து அதற்கேற்பச் செயல்படுதல், அந்த நற்செயலின் வெற்றியை நழுவவிடாமல் கட்டிப்பிணிக்கும் கயிறாக அமையும்.

483 அருவினை என்ப, உளவோ? கருவியான்,
காலம்-அறிந்து செயின்.

தேவையான சாதனங்களுடன் உரிய நேரத்தையும் அறிந்து செயல்பட்டால் முடியாதவை என்று எவையுமே இல்லை.

484 ஞாலம் கருதினும், கைகூடும்; காலம்-
கருதி, இடத்தான் செயின்.

உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்தறிந்து செயல்பட்டால் உலகமேகூடக் கைக்குள் வந்துவிடும்.

485 காலம் கருதி இருப்பர்; கலங்காது,
ஞாலம் கருதுபவர்.

கலக்கத்துக்கு இடம் தராமல் உரிய காலத்தை எதிர்பார்த்துப் பொறுமையாக இருப்பவர்கள் இந்த உலகத்தையேகூட வென்று காட்டுவார்கள்.

486 ஊக்கம் உடையான் ஒடுக்கம்; பொருதகர்
தாக்கற்குப், பேரும் தகைத்து.

கொடுமைகளைக் கண்டும்கூட உறுதி படைத்தவர்கள் அமைதியாக இருப்பது அச்சத்தினால் அல்ல; அது ஆட்டுக்கடா ஒன்று தனது பகையைத் தாக்குவதற்குத் தன் கால்களைப் பின்னுக்கு வாங்குவதைப் போன்றதாகும்.

487 பொள்ளென ஆங்கே புறம்-வேரார்; காலம்-பார்த்து,
உள்-வேர்ப்பர், ஒள்ளியவர்.

பகையை வீழ்த்திட அகத்தில் சினங்கொண்டாலும் அதனை வெளிப்படுத்தாமல் இடம் காலம் இரண்டுக்கும் காத்திருப்பதே அறிவுடையார் செயல்.

488 செறுநரைக் காணின், சுமக்க; இறுவரை
காணின், கிழக்காம் தலை.

பகைவர்க்கு முடிவு ஏற்பட்டு அவர்கள் தாமாகவே தலைகீழாகக் கவிழ்ந்திடும் உரிய நேரம் வரும் வரையில் தங்களின் பகையுணர்வைப் பொறுமையுடன் தாங்கிக் கொள்ள வேண்டும்.

489 எய்தற்கு அரியது இயைந்தக்கால்; அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்.

கிடைப்பதற்கு அரிய காலம் வாய்க்கும்போது அதைப் பயன்படுத்திக்கொண்டு அப்போதே செயற்கரிய செய்து முடிக்க வேண்டும்.

490 கொக்கு-ஒக்க, கூம்பும் பருவத்து; மற்று-அதன்
குத்து-ஒக்க, சீர்த்த இடத்து.

காலம் கைகூடும் வரையில் கொக்குப்போல் பொறுமையாகக் காத்திருக்கவேண்டும். காலம் வாய்ப்பாகக் கிடைத்ததும் அது குறி தவறாமல் குத்துவது போல் செய்து முடிக்க வேண்டும்.

# 50. இடன் அறிதல்

491 தொடங்கற்க எவ்-வினையும்; எள்ளற்க; முற்றும்
இடம் கண்டபின் அல்லது!

ஈடுபடும் செயல் ஒன்றும் பெரிதல்ல என இகழ்ச்சியாகக் கருதாமல், முற்றிலும் சரியான இடத்தைத் தேர்ந்தெடுத்து அச்செயலில் இறங்க வேண்டும்.

492 முரண்-சேர்ந்த மொய்ம்பினவர்க்கும், அரண்-சேர்ந்து-ஆம்;
ஆக்கம் பலவும் தரும்.

வரும்பகையை எதிர்க்கும் வலிமை இருப்பினும், அத்துடன் அரணைச் சார்ந்து போரிடும் வாய்ப்பும் இணையுமானால் பெரும்பயன் கிட்டும்.

493 ஆற்றாரும் ஆற்றி அடுப; இடன்-அறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்.

தாக்குதல் நடத்துவதற்குரிய இடத்தையும் தேர்ந்து, தம்மையும் காத்துக்கொண்டு பகைவருடன் மோதினால் வலிமையில்லாதவர்க்கும் வலிமை ஏற்பட்டு வெற்றிகிட்டும்.

494 எண்ணியார், எண்ணம் இழப்பர்; இடன்-அறிந்து
துன்னியார், துன்னிச் செயின்.

ஏற்ற இடமறிந்து தொடர்ந்து தாக்கினால் பகைவர்கள், வெற்றி என்பதை நினைத்துக்கூடப் பார்க்க மாட்டார்கள்.

495 நெடும்-புனலுள், வெல்லும் முதலை; அடும், புனலின்-
நீங்கின், அதனைப் பிற.

தண்ணீரில் இருக்கும் வரையில்தான் முதலைக்குப் பலம்; தண்ணீரைவிட்டு வெளியே வந்து விட்டால் ஒரு சாதாரண உயிர்கூட அதனை விரட்டி விடும்.

496 கடல்-ஓடா, கால்-வல் நெடுந்தேர்; கடல்-ஓடும்
நாவாயும் ஓடா, நிலத்து.

ஒரு செயலுக்குரிய இடத்தைத் தேர்ந்தெடுப்பவர் ‘தேர் கடலிலே ஓடாது’ ‘கப்பல் நிலத்தில் போகாது’ என்பதையாவது தெரிந்தவராக இருக்க வேண்டும்.

497 அஞ்சாமை அல்லால், துணை வேண்டா; எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின்.

ஒரு செயலுக்குரிய வழி முறைகளைக் குறையின்றிச் சிந்தித்துச் செய்யுமிடத்து, அஞ்சாமை ஒன்றைத் தவிர, வேறு துணை தேவையில்லை.

498 சிறு-படையான் செல்-இடம் சேரின்; உறு-படையான்
ஊக்கம் அழிந்து விடும்.

சிறிய படை என்றாலும் அது தனக்குரிய இடத்தில் இருந்து போரிட்டால் பெரிய படையை வென்று விட முடியும்.

499 சிறை-நலனும், சீரும்-இலர் எனினும்; மாந்தர்
உறை-நிலத்தொடு ஒட்டல் அரிது.

பாதுகாப்புக்கான கோட்டையும், மற்றும் பல படைச் சிறப்புகளும் இல்லாதிருப்பினும், அப்பகைவர் வாழும் நிலையான இடத்திற்குப் படையெடுத்துச் சென்று தாக்குவது எளிதான செயல் அல்ல.

500 கால்-ஆழ் களரில், நரி-அடும்; கண்-அஞ்சா
வேல்-ஆள், முகத்த களிறு.

வேலேந்திய வீரர்களை வீழ்த்துகின்ற ஆற்றல் படைத்த யானை, சேற்றில் சிக்கி விட்டால் அதனை நரிகள் கூடக் கொன்று விடும்.

## 51. தெரிந்து தெளிதல்

501 அறம், பொருள், இன்பம், உயிர்-அச்சம்; நான்கின்
திறம் தெரிந்து தேறப்படும்.

அறவழியில் உறுதியானவனாகவும், பொருள் வகையில் நாணயமானவனாகவும், இன்பம் தேடி மயங்காதவனாகவும், தன்னுயிருக்கு அஞ்சாதவனாகவும் இருப்பவனையே ஆய்ந்தறிந்து ஒரு பணிக்கு அமர்த்த வேண்டும்.

502 குடிப்பிறந்து, குற்றத்தின் நீங்கி, வடுப்பரியும்
நாண்-உடையான்; கட்டே தெளிவு.

குற்றமற்றவனாகவும், பழிச்செயல் புரிந்திட அஞ்சி நாணுகின்றவனாகவும் இருப்பவனையே உயர்குடியில் பிறந்தவன் எனத் தெளிவு கொள்ள வேண்டும்.

503 அரிய கற்று, ஆசு-அற்றார் கண்ணும், தெரியுங்கால்
இன்மை அரிதே, வெளிறு.

அரிய நூல்கள் பல கற்றவர் என்றும், எக்குறையும் அற்றவர் என்றும் புகழப்படுவோரைக்கூட ஆழமாக ஆராய்ந்து பார்க்கும்போது அவரிடம் அறியாமை என்பது அறவே இல்லை எனக் கணித்து விட இயலாது.

504 குணம்-நாடி, குற்றமும்-நாடி, அவற்றுள்
மிகை-நாடி, மிக்க கொளல்!

ஒருவரின் குணங்களையும், அவரது குறைகளையும் ஆராய்ந்து பார்த்து அவற்றில் மிகுதியாக இருப்பவை எவை என்பதைத் தெரிந்து அதன் பிறகு அவரைப் பற்றிய ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டும்.

505 பெருமைக்கும், ஏனைச்-சிறுமைக்கும்; தத்தம்
கருமமே, கட்டளைக் கல்.

ஒருவர் செய்யும் காரியங்களையே உரைகல்லாகக் கொண்டு, அவர் தரமானவரா அல்லது தரங்கெட்டவரா என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

506 அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்று-அவர்
பற்று-இலர்; நாணார் பழி.

நெறியற்றவர்களை ஒரு பணிக்குத் தேர்வு செய்வது கூடாது. அவர்கள் உலகத்தைப் பற்றிக் கவலைப்படாமல், பழிக்கு நாணாமல் செயல்படுவார்கள்.

507 காதன்மை கந்தா, அறிவு-அறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும்.

அறிவில்லாதவரை அன்பு காரணமாகத் தேர்வு செய்வது அறியாமை மட்டுமல்ல; அதனால் பயனற்ற செயல்களே விளையும்.

508 தேரான், பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.

ஆராய்ந்து பார்க்காமல் ஒருவரைத் துணையாகத் தேர்வு செய்து, அமர்த்திக்கொண்டால் அவரால் வருங்காலத் தலைமுறையினர்க்கும் நீங்காத துன்பம் விளையும்.

509 தேறற்க யாரையும், தேராது; தேர்ந்த-பின்,
தேறுக, தேறும் பொருள்.

நன்கு ஆராய்ந்து தெளிந்த பிறகு ஒருவரிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். ஆராய்ந்து பாராமல் யாரையும் நம்பி விடக் கூடாது.

510 தேரான் தெளிவும், தெளிந்தான்-கண் ஐயுறவும்,
தீரா இடும்பை தரும்.

ஆராயாமல் ஒருவரைத் தேர்வு செய்து ஏற்றுக் கொள்வதும், ஆராய்ந்து தேர்வு செய்து ஏற்றுக்கொண்ட பின் அவரைச் சந்தேகப்படுவதும் தீராத துன்பத்தைத் தரும்.

# 52. தெரிந்து வினையாடல்

511 நன்மையும் தீமையும் நாடி, நலம்-புரிந்த
தன்மையான் ஆளப்படும்.

நன்மை எது தீமை எது என ஆராய்ந்து அறிந்து, நற்செயலில் மட்டுமே நாட்டங் கொண்டவர்கள் எப்பணியினை ஆற்றிடவும் தகுதி பெற்றவராவார்கள்.

512 வாரி பெருக்கி, வளம்-படுத்து, உற்றவை
ஆராய்வான் செய்க வினை!

வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களையும் பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவனே செயலாற்றும் திறனுடையவன்.

513 அன்பு, அறிவு, தேற்றம், அவா-இன்மை; இந்-நான்கும்
நன்கு உடையான்-கட்டே தெளிவு.

அன்பு, அறிவு, செயலாற்றும் திறமை, பேராசைப் படாத குணம் ஆகிய நான்கு பண்புகளையும் நிலையாகப் பெற்றிருப்பவரைத் தேர்வு செய்வதே நலம்.

514 எனை-வகையான் தேறியக்கண்ணும், வினை-வகையான்
வேறாகும் மாந்தர் பலர்.

எவ்வளவுதான் வழிமுறைகளை ஆராய்ந்து தெளிந்து தேர்ந்தெடுத்தாலும் செயல்படும் பொழுது வேறுபடுகிறவர்கள் பலர் இருப்பர்.

515 அறிந்து, ஆற்றி, செய்கிற்பாற்கு அல்லால், வினை-தான்
சிறந்தான்-என்று ஏவற்பாற்று அன்று.

ஆய்ந்தறிந்து செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளவர்களை அல்லாமல் வேறோருவரைச் சிறந்தவர் எனக் கருதி ஒரு செயலில் ஈடுபடுத்தக் கூடாது.

516 செய்வானை நாடி, வினை-நாடி, காலத்தோடு
எய்த உணர்ந்து, செயல்!

செயலாற்ற வல்லவனைத் தேர்ந்து, செய்யப்பட வேண்டிய செயலையும் ஆராய்ந்து, காலமுணர்ந்து அதனைச் செயல்படுத்த வேண்டும்.

517 'இதனை, இதனால், இவன்-முடிக்கும்' என்று-ஆய்ந்து,
அதனை அவன்கண் விடல்!

ஒரு காரியத்தை ஒருவர் எப்படிச் செய்து முடிப்பார் என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு அந்தக் காரியத்தை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

518 வினைக்கு-உரிமை நாடிய பின்றை, அவனை
அதற்கு உரியன்-ஆகச் செயல்.

ஒரு செயலில் ஈடுபடுவதற்கு ஏற்றவனா என்பதை ஆராய்ந்து அறிந்த பிறகே, அவனை அந்தச் செயலில் ஈடுபடுத்த வேண்டும்.

519 வினைக்கண் வினை-உடையான் கேண்மை வேறாக
நினைப்பானை நீங்கும், திரு.

எடுத்த காரியத்தை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பவரின் உறவைத் தவறாக எண்ணுபவரை விட்டுப் பெருமை அகன்று விடும்.

520 நாள்-தோறும் நாடுக, மன்னன்; வினை-செய்வான்
கோடாமைக் கோடாது உலகு.

உழைப்போர் உள்ளம் வாடாமல் இருக்கும் வரையில் உலகின் செழிப்பும் வாடாமல் இருக்கும். எனவே உழைப்போர் நிலையை ஒவ்வொரு நாளும் அரசினர் ஆய்ந்தறிந்து ஆவன செய்ய வேண்டும்.

# 53. சுற்றம் தழால்

521 பற்று அற்ற-கண்ணும் பழமை பாராட்டுதல்
சுற்றத்தார்-கண்ணே உள.

ஒருவருக்கு வறுமை வந்த நேரத்திலும் அவரிடம் பழைய உறவைப் பாராட்டும் பண்பு உடையவர்களே சுற்றத்தார் ஆவார்கள்.

522 விருப்பு-அறாச் சுற்றம் இயையின், அறுப்பு-அறா
ஆக்கம் பலவும் தரும்.

எந்த நிலைமையிலும் அன்பு குறையாத சுற்றம் ஒருவருக்குக் கிடைத்தால் அது அவருக்கு ஆக்கமும், வளர்ச்சியும் அளிக்கக் கூடியதாக அமையும்.

523 அளவளாவு இல்லா-தான் வாழ்க்கை; குளவளாக்
கோடு-இன்றி நீர் நிறைந்தற்று.

உற்றார் உறவினர் எனச் சூழ இருப்போருடன் அன்பு கலந்து மகிழ்ந்து பழகாதவனுடைய வாழ்க்கையானது; கரையில்லாத குளத்தில் நீர் நிறைந்ததைப் போலப் பயனற்றதாகி விடும்.

524 சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல்; செல்வம்-தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

தன் இனத்தார், அன்புடன் தன்னைச் சூழ்ந்து நிற்க வாழும் வாழ்க்கையே ஒருவன் பெற்ற செல்வத்தினால் கிடைத்திடும் பயனாகும்.

525 கொடுத்தலும் இன்-சொலும் ஆற்றின்; அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப்படும்.

வள்ளல் தன்மையும், வாஞ்சைமிகு சொல்லும் உடையவனை அடுத்தடுத்துச் சுற்றத்தார் சூழ்ந்து கொண்டேயிருப்பார்கள்.

526 பெரும்-கொடையான், பேணான் வெகுளி; அவனின்
மருங்கு-உடையார் மா-நிலத்து இல்.

பெரிய கொடையுள்ளம் கொண்டவனாகவும், வெகுண்டு எழும் சீற்றத்தை விலக்கியவனாகவும் ஒருவன் இருந்தால் அவனைப் போல் சுற்றம் சூழ இருப்போர் உலகில் யாரும் இல்லை எனலாம்.

527 காக்கை கரவா கரைந்து-உண்ணும்; ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள.

தனக்குக் கிடைத்ததை மறைக்காமல் தனது சுற்றத்தைக் கூவி அழைத்துக் காக்கை உண்ணும். அந்தக் குணம் உடையவர்களுக்கு மட்டுமே உலகில் உயர்வு உண்டு.

528 பொது-நோக்கான், வேந்தன் வரிசையா நோக்கின்,
அது-நோக்கி வாழ்வார் பலர்.

அனைத்து மக்களும் சமம் எனினும், அவரவர்க்குரிய ஆற்றலுக்கேற்ப அவர்களைப் பயன்படுத்திக் கொண்டால், அந்த அரசை அனைவரும் அரணாகச் சூழ்ந்து நிற்பர்.

529 தமர்-ஆகி, தன்-துறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும்.

உறவினராக இருந்து ஏதோ ஒரு காரணம் கூறிப் பிரிந்து சென்றவர்கள், அந்தக் காரணம் பொருந்தாது என்று உணரும்போது மீண்டும் உறவு கொள்ள வருவார்கள்.

530 உழைப்-பிரிந்து காரணத்தின் வந்தானை, வேந்தன்
இழைத்து-இருந்து, எண்ணிக் கொளல்.

ஏதோ காரணம் கற்பித்துப் பிரிந்து போய், மீண்டும் தலைவனிடம் தக்க காரணத்தினால் வந்தவரை, நன்கு ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

# 54. பொச்சாவாமை

531 இறந்த வெகுளியின் தீதே; சிறந்த
உவகை மகிழ்ச்சியின் சோர்வு.

அகமகிழ்ச்சியினால் ஏற்படும் மறதி, அடங்காத சினத்தினால் ஏற்படும் விளைவை விடத் தீமையானது.

532 பொச்சாப்புக் கொல்லும் புகழை; அறிவினை
நிச்சம் நிரப்புக் கொன்றாங்கு.

நாளும் தொடர்ந்து வாட்டுகின்ற வறுமை, அறிவை அழிப்பது போல மறதி, புகழை அழித்து விடும்.

533 பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை; அது உலகத்து
எப்பால் நூலோர்க்கும் துணிவு.

மறதி உடையவர்களுக்கு, மங்காப் புகழ் இல்லை என்பதே அனைத்தும் கற்றுணர்ந்த அறிஞர்களின் முடிவான கருத்தாகும்.

534 அச்சம்-உடையார்க்கு அரண்-இல்லை; ஆங்கு-இல்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.

பயத்தினால் நடுங்குகிறவர்களுக்குத் தம்மைச் சுற்றிப் பாதுகாப்புக்கான அரண் கட்டப்பட்டிருந்தாலும் எந்தப் பயனுமில்லை. அதைப் போலவே என்னதான் உயர்ந்த நிலையில் இருந்தாலும் மறதி உடையவர்களுக்கு அந்த நிலையினால் எந்தப் பயனுமில்லை.

535 முன்னுறக் காவாது இழுக்கியான், தன்-பிழை,
பின்-ஊறு, இரங்கிவிடும்.

முன்கூட்டியே சிந்தித்துத் தன்னைக் காத்துக் கொள்ளத் தவறியவன், துன்பம் வந்தபிறகு தன் பிழையை எண்ணிக் கவலைப்பட நேரிடும்.

536 இழுக்காமை யார்-மாட்டும், என்றும், வழுக்காமை
வாயின், அஃது-ஒப்பது இல்.

ஒருவரிடம், மறவாமை என்னும் பண்பு தவறாமல் பொருந்தி யிருக்குமேயானால், அதைவிட அவருக்கு நன்மை தரக்கூடியது வேறு எதுவும் இருக்க முடியாது.

537 அரிய-என்று ஆகாத இல்லை; பொச்சாவாக்
கருவியான் போற்றிச் செயின்.

மறதியில்லாமலும், அக்கறையுடனும் செயல்பட்டால், முடியாதது என்று எதுவுமே இல்லை.

538 புகழ்ந்தவை போற்றிச் செயல்-வேண்டும்; செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.

புகழுக்குரிய கடமைகளைப் போற்றிச் செய்திடல் வேண்டும். அப்படிச் செய்யாமல் புறக்கணிப்பவர்களுக்கு வாழ்க்கையில் உயர்வே இல்லை.

539 இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக; தாம்-தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து!

மமதையால் பூரித்துப்போய்க் கடமைகளை மறந்திருப்பவர்கள், அப்படி மறந்துபோய் அழிந்து போனவர்களை நினைத்துப் பார்த்துத் திருந்திக் கொள்ள வேண்டும்.

540 உள்ளியது எய்தல் எளிதுமன்; மற்றும்-தான்
உள்ளியது உள்ளப்-பெறின்.

கொண்ட குறிக்கோளில் ஊக்கத்துடன் இருந்து அதில் வெற்றி காண்பதிலேயே நாட்டமுடையவர்களுக்கு அந்தக் குறிக்கோளை அடைவது எளிதானதாகும்.

# 55. செங்கோன்மை

541 ஓர்ந்து, கண்ணோடாது, இறை-புரிந்து, யார்-மாட்டும்
தேர்ந்து, செய்வஃதே முறை.

குற்றம் இன்னதென்று ஆராய்ந்து எந்தப் பக்கமும் சாயாமல்
நடுவுநிலைமை தவறாமல் வழங்கப்படுவதே நீதியாகும்.

542 வான்-நோக்கி வாழும் உலகு-எல்லாம்; மன்னவன்
கோல்-நோக்கி வாழும் குடி.

உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவது போல
ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது.

543 அந்தணர் நூற்கும், அறத்திற்கும், ஆதியாய்-
நின்றது; மன்னவன் கோல்.

ஓர் அரசின் செங்கோன்மைதான் அறவோர் நூல்களுக்கும் அறவழிச்
செயல்களுக்கும் அடிப்படையாக அமையும்.

544 குடி-தழீஇக் கோல்-ஓச்சும் மா-நில மன்னன்
அடி-தழீஇ நிற்கும், உலகு.

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின்
அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்.

545 இயல்புளிக் கோல்-ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.

நீதி வழுவாமல் ஓர் அரசு நாட்டில் இருக்குமேயானால் அது,
பருவகாலத்தில் தவறாமல் பெய்யும் மழையினால் வளமான விளைச்சல்
கிடைப்பதற்கு ஒப்பானதாகும்.

546 வேல்-அன்று, வென்றி தருவது; மன்னவன்
கோல்; அதூஉம், கோடாது எனின்.

ஓர் அரசுக்கு வெற்றியைத் தருவது பகைவரை வீழ்த்தும் வேலல்ல; குடிமக்களை வாழவைக்கும் வளையாத செங்கோல்தான்.

547 இறை-காக்கும், வையகம் எல்லாம்; அவனை
முறை-காக்கும், முட்டாச் செயின்.

நீதி வழுவாமல் ஓர் அரசு நடைபெற்றால் அந்த அரசை அந்த நீதியே காப்பாற்றும்.

548 எண்-பதத்தான் ஓரா, முறை-செய்யா, மன்னவன்
தண்-பதத்தான் தானே கெடும்.

ஆடம்பரமாகவும், ஆராய்ந்து நீதி வழங்காமலும் நடைபெறுகிற அரசு தாழ்ந்த நிலையடைந்து தானாகவே கெட்டொழிந்து விடும்.

549 குடி புறங்காத்து, ஓம்பி, குற்றம்-கடிதல்;
வடு-அன்று; வேந்தன் தொழில்.

குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும் தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்.

550 கொலையில், கொடியாரை, வேந்து-ஒறுத்தல் பைங்கூழ்
களை கட்டதனொடு நேர்.

கொலை முதலிய கொடுமைகள் புரிவோரை, ஓர் அரசு தண்டனைக்குள்ளாக்குவது பயிரின் செழிப்புக்காகக் களை எடுப்பது போன்றதாகும்.

# 56. கொடுங்கோன்மை

551 கொலை-மேற்கொண்டாரின் கொடிதே; அலை-மே
மேற்கொண்டு
அல்லவை செய்து-ஒழுகும் வேந்து.

அறவழி மீறிக் குடிமக்களைத் துன்புறுத்தும் அரசு, கொலையைத் தொழிலகாக் கொண்டவரைவிடக் கொடியதாகும்.

552 வேலொடு நின்றான், ‘இடு’ என்றது-போலும்
கோலொடு நின்றான் இரவு.

ஆட்சிக்கோல் ஏந்தியிருப்பவர்கள் தமது குடிமக்களிடம் அதிகாரத்தைக் காட்டிப் பொருளைப் பறிப்பது, வேல் ஏந்திய கொள்ளைக்காரனின் மிரட்டலைப் போன்றது.

553 நாள்-தொறும் நாடி, முறைசெய்யா மன்னவன்
நாள்-தொறும் நாடு கெடும்.

ஆட்சியினால் விளையும் நன்மை தீமைகளை நாள் தோறும் ஆராய்ந்து அவற்றிற்குத் தக்கவாறு நடந்து கொள்ளாத அரசு அமைந்த நாடு சீர்குலைந்து போய்விடும்.

554 கூழும் குடியும் ஒருங்கு-இழக்கும்; கோல் கோடி,
சூழாது, செய்யும் அரசு.

நாட்டுநிலை ஆராயாமல் கொடுங்கோல் புரியும் அரசு நிதி ஆதாரத்தையும் மக்களின் மதிப்பையும் இழந்துவிடும்.

555 அல்லல்-பட்டு, ஆற்றாது, அழுத-கண்ணீர்-அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

கொடுமை பொறுக்க முடியாமல் மக்கள் சிந்தும் கண்ணீர் ஆட்சியை அழிக்கும் படைக்கருவியாகும்.

556 மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அஃது-இன்றேல்
மன்னாவாம், மன்னர்க்கு ஒளி.

நீதிநெறி தவறாத செங்கோன்மைதான் ஓர் அரசுக்கு புகழைத் தரும். இல்லையேல் அந்த அரசின் புகழ் நிலையற்றுச் சரிந்து போகும்.

557 துளி-இன்மை ஞாலத்திற்கு எற்று? அற்றே, வேந்தன்
அளி-இன்மை வாழும் உயிர்க்கு.

மழையில்லாவிடில் துன்பமுறும் உலகத்தைப் போல் அருள் இல்லாத அரசினால் குடிமக்கள் தொல்லைப் படுவார்கள்.

558 இன்மையின் இன்னாது, உடைமை; முறை-செய்யா
மன்னவன் கோல் கீழ்ப்படின்.

வறுமையின்றி வாழ்ந்தால்கூட அந்த வாழ்க்கை கொடுங்கோல் ஆட்சியின் கீழ் அமைந்துவிட்டால் வறுமைத் துன்பத்தை விட அதிகத் துன்பம் தரக்கூடியது.

559 முறை-கோடி மன்னவன் செய்யின்; உறை-கோடி
ஒல்லாது, வானம் பெயல்.

முறை தவறிச் செயல்படும் ஆட்சியில் நீரைத் தேக்கிப் பயனளிக்கும் இடங்கள் பாழ்பட்டுப் போகுமாதலால், வான் வழங்கும் மழையைத் தேக்கி வைத்து வளம் பெறவும் இயலாது.

560 ஆ-பயன் குன்றும்; அறுதொழிலோர் நூல்-மறப்பர்;
காவலன் காவான் எனின்.

ஓர் அரசு நாட்டை முறைப்படி காக்கத் தவறினால் ஆக்கப்பணிகள் எதுவும் நடக்காது; முக்கியமான தொழில்களும் தேய்ந்து விடும்.

# 57. வெருவந்த செய்யாமை

561 தக்காங்கு நாடி, தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.

நடைபெற்ற குற்றங்களை நடுநிலை தவறாமல் ஆராய்ந்தறிந்து, மீண்டும் அவை நிகழா வண்ணம் அக்குற்றங்களுக்கேற்பத் தண்டனை கிடைக்கச் செய்வதே அரசின் கடமையாகும்.

562 கடிது-ஓச்சி, மெல்ல எறிக; நெடிது-ஆக்கம்
நீங்காமை வேண்டுபவர்.

குற்றங்கள் நிகழாமல் இருக்கக் கண்டிக்கும்போது கடுமை காட்டித், தண்டிக்கும் போது மென்மை காட்டுகிறவர்களின் செல்வாக்குதான் தொய்வின்றி நெடுநாள் நீடிக்கும்.

563 வெருவந்த செய்து-ஒழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.

குடிமக்கள் அஞ்சும்படியாகக் கொடுங்கோல் நடத்தும் அரசு நிச்சியமாக விரைவில் அழியும்.

564 ‘இறை கடியன்’ என்று-உரைக்கும் இன்னாச்-சொல் வேந்தன்
உறை-கடுகி ஒல்லைக் கெடும்.

கடுஞ்சொல் உரைக்கும் கொடுங்கோல் என்று குடி மக்களால் கருதப்படும் அரசு, தனது பெருமையை விரைவில் இழக்கும்.

565 அரும்-செவ்வி, இன்னா முகத்தான் பெரும்-செல்வம்
பேஎய் கண்டன்னது உடைத்து.

யாரும் எளிதில் காண முடியாதவனாகவும், கடுகடுத்த முகத்துடனும் இருப்பவனிடம் குவிந்துள்ள பெரும் செல்வம் பேய்த் தோற்றம் எனப்படும் அஞ்சத்தகும் தோற்றமேயாகும்.

566 கடும்-சொல்லன், கண்-இலன் ஆயின்; நெடும்-செல்வம்
நீடு-இன்றி, ஆங்கே கெடும்.

கடுஞ்சொல்லும், கருணையற்ற உள்ளமும் கொண்டவர்களின் பெருஞ்செல்வம் நிலைக்காமல் அழிந்து விடும்.

567 கடு-மொழியும், கையிகந்த தண்டமும்; வேந்தன்
அடு-முரண் தேய்க்கும் அரம்.

கடுஞ்சொல்லும், முறைகடந்த தண்டனையும் ஓர் அரசின் வலிமையைத் தேய்த்து மெலியச் செய்யும் அரம் எனும் கருவியாக அமையும்.

568 இனத்து-ஆற்றி, எண்ணாத வேந்தன்; சினத்து-ஆற்றிச்
சீறின், சிறுகும் திரு.

கூட்டாளிகளிடம் கலந்து பேசாமல் சினத்திற்கு ஆளாகிக் கோணல் வழி நடக்கும் அரசு தானாகவே வீழ்ந்து விடும்.

569 செரு-வந்த போழ்தில், சிறை-செய்யா வேந்தன்
வெருவந்து, வெய்து கெடும்.

முன்கூட்டியே உரிய பாதுகாப்பு இல்லாமல் இருக்கும் வேந்தன், போர் வந்துவிட்டால் அதற்கு அஞ்சி விரைவில் வீழ நேரிடும்.

570 கல்லார்ப் பிணிக்கும், கடும்-கோல்; அது-அல்லது
இல்லை, நிலக்குப் பொறை.

கொடுங்கோல் அரசு படிக்காதவர்களைத் தனக்குப் பக்க பலமாக்கிக் கொள்ளும், அதைப்போல் பூமிக்குப் பாரம் வேறு எதுவுமில்லை.

# 58. கண்ணோட்டம்

571 கண்ணோட்டம் என்னும் கழி-பெரும்-காரிகை
உண்மையான், உண்டு இவ்-உலகு.

இந்த உலகம், அன்பும் இரக்கமும் இணைந்த கண்ணோட்டம் எனப்படுகிற பெரும் அழகைக் கொண்டவர்கள் இருப்பதால்தான் பெருமை அடைகிறது.

572 கண்ணோட்டத்து உள்ளது உலகியல்; அஃது-இலார்
உண்மை நிலக்குப் பொறை.

அன்புடன் அரவணைத்து இரக்கம் காட்டும் கண்ணோட்டம் எனப்படும் உலகியலுக்கு, மாறாக இருப்பவர்கள் இந்தப் பூமிக்குச் சுமையாவார்கள்.

573 பண்-என்-ஆம், பாடற்கு இயைபு-இன்றேல்? கண்-என்-ஆம்
கண்ணோட்டம் இல்லாத கண்?

இரக்க உணர்வு, அன்பு எனும் கண்ணோட்டத்துடன் பொருந்தி வராத கண்ணும், பாடலுடன் பொருந்தி வராத இசையும் பயன் தராதவையாகும்.

574 உள-போல் முகத்து எவன்-செய்யும்? அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்.

அகத்தில் அன்பையும் இரக்கத்தையும் சுரக்கச் செய்யாத கண்கள் முகத்தில் உள்ளவைபோல் தோன்றுவதைத் தவிர, வேறு எந்தப் பயனும் இல்லாதவைகளாகும்.

575 கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃது-இன்றேல்,
புண் என்று உணரப்படும்.

கருணையுள்ளம் கொண்டவருடைய கண்ணே கண் என்று கூறப்படும். இல்லையானால் அது கண் அல்ல; புண்.

576 மண்ணொடு இயைந்த மரத்து-அனையர்; கண்ணொடு-
இயைந்து, கண்ணோடாதவர்.

ஒருவர்க்குக் கண் இருந்தும்கூட அந்தக் கண்ணுக்குரிய அன்பும் இரக்கமும் இல்லாவிட்டால் அவர் மரத்துக்கு, ஒப்பானவரே ஆவார்.

577 கண்ணோட்டம் இல்லவர் கண்-இலர்; கண்-உடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல்.

கருணை மனம் கொண்டவர்க்கு இருப்பதே கண்கள் எனப்படும்; கருணையற்றோர் கண்ணற்றோர் என்றே கருதப்படுவார்கள்.

578 கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்து, இவ்-உலகு.

கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு இந்த உலகமே உரிமையுடையதாகும்.

579 ஒறுத்தாற்றும் பண்பினார்-கண்ணும், கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

அழிக்க நினைத்திடும் இயல்புடையவரிடத்திலும் பொறுமை காட்டுவது மிக உயர்ந்த பண்பாகும்.

580 பெயக்கண்டும், நஞ்சு-உண்டு அமைவர்; நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்.

கருணை உள்ளமும் பண்பாடும் உள்ளவர்கள், தம்முடன் பழகியவர்கள் நஞ்சு கொடுத்தாலும் அதை அருந்திக் களிப்படைவார்கள்.

# 59. ஒற்று ஆடல்

581 ஒற்றும், உரை-சான்ற நூலும்; இவை-இரண்டும்
தெற்றென்க, மன்னவன் கண்.

நேர்மையும் திறனும் கொண்ட ஒற்றரும், நீதியுரைக்கும் அறநூலும் ஓர் அரசின் கண்களாகக் கருதப்பட வேண்டும்.

582 எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்-அறிதல், வேந்தன் தொழில்.

நண்பர், பகைவர், நடுநிலையாளர் ஆகிய எல்லாரிடத்திலும் நிகழும் எல்லா நிகழ்வுகளையும், எல்லாக் காலங்களிலும் ஒற்றரைக் கொண்டு விரைவாக அறிந்து கொள்வது அரசுக்குரிய கடமையாகும்.

583 ஒற்றினான் ஒற்றி, பொருள்-தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்-கிடந்தது இல்.

நாட்டு நிலவரத்தை ஒற்றர்களைக் கொண்டு அறிந்து அதன் விளைவுகளை ஆராய்ந்து நடந்திடாத அரசின் கொற்றம் தழைத்திட வழியே இல்லை.

584 வினை-செய்வார், தம்-சுற்றம், வேண்டாதார்; என்று-ஆங்கு
அனைவரையும் ஆராய்வது; ஒற்று.

ஓர் அரசில் உளவறியும் ஒற்றர் வேலை பார்ப்பவர்கள், வேண்டியவர், வேண்டாதவர், சுற்றத்தார் என்றெல்லாம் பாகுபாடு கருதாமல் பணிபுரிந்தால்தான் அவர்களை நேர்மையான ஒற்றர்கள் எனக் கூற முடியும்.

585 கடாஅ உருவொடு கண்-அஞ்சாது, யாண்டும்
உகா-அமை வல்லதே; ஒற்று.

சந்தேகப்பட முடியாத தோற்றத்துடனும் அப்படிச் சந்தேகப்பட்டுப் பார்ப்பவர்களுக்கு அஞ்சாமலும், என்ன நேர்ந்தாலும் மனத்தில் உள்ளதை வெளிப்படுத்தாமலும் உள்ளவர்களே ஒற்றர்களாகப் பணியாற்ற முடியும்.

586 துறந்தார் படிவத்தர் ஆகி இறந்து, ஆராய்ந்து,
என்-செயினும் சோர்வு-இலது; ஒற்று.

ஆராய்ந்திட வந்த நிகழ்வில் தொடர்பற்றவரைப் போல காட்டிக் கொண்டு, அதனைத் தீர ஆராய்ந்து, அதில் எத்துணைத் துன்பம் வரினும் தாங்கிக் கொண்டு, தம்மை யாரென்று வெளிப்படுத்திக் கொள்ளாதவரே சிறந்த ஒற்றர்.

587 மறைந்தவை கேட்க-வற்று-ஆகி, அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே; ஒற்று.

மற்றவர்கள் மறைவாகக் கூடிச்செய்யும் காரியங்களை, அவர்களுடன் இருப்பவர் வாயிலாகக் கேட்டறிந்து அவற்றின் உண்மையைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதே உளவறியும் திறனாகும்.

588 ஒற்று-ஒற்றித் தந்த பொருளையும், மற்றும்-ஓர்
ஒற்றினால் ஒற்றி, கொளல்.

ஓர் உளவாளி, தனது திறமையினால் அறிந்து சொல்லும் செய்தியைக் கூட மற்றோர் உளவாளி வாயிலாகவும் அறிந்து வரச் செய்து, இரு செய்திகளையும் ஒப்பிட்டுப் பார்த்த பிறகே அது, உண்மையா அல்லவா என்ற முடிவுக்கு வரவேண்டும்.

589 ஒற்று-ஒற்று உணராமை ஆள்க; உடன்-மூவர்
சொல்-தொக்க தேறப்படும்.

ஓர் ஒற்றரை மற்றோர் ஒற்றர் அறியமுடியாதபடி மூன்று ஒற்றர்களை இயங்கவைத்து அம்மூவரும் சொல்வது ஒத்திருந்தால் அது உண்மையெனக் கொள்ளலாம்.

590 சிறப்பு-அறிய ஒற்றின்-கண் செய்யற்க; செய்யின்,
புறப்படுத்தான் ஆகும், மறை.

ஓர் ஒற்றரின் திறனை வியந்து பிறர் அறியச் சிறப்புச் செய்தால், ஒளிவு மறைவாக இருக்கவேண்டிய செய்தியை, வெளிப்படுத்தியதாகிவிடும்.

# 60. ஊக்கம் உடைமை

591 உடையர் எனப்படுவது ஊக்கம்; அஃது-இல்லார்
உடையது உடையரோ, மற்று?

ஊக்கம் உடையவரே உடையவர் எனப்படுவர். ஊக்கமில்லாதவர் வேறு எதை உடையவராக இருந்தாலும் அவர் உடையவர் ஆக மாட்டார்.

592 உள்ளம் உடைமை உடைமை; பொருள்-உடைமை
நில்லாது நீங்கி-விடும்.

ஊக்கம் எனும் ஒரு பொருளைத் தவிர, வேறு எதனையும் நிலையான உடைமை என்று கூற இயலாது.

593 'ஆக்கம் இழந்தேம்!' என்று அல்லாவார்; ஊக்கம்
ஒருவந்தம் கைத்து-உடையார்.

ஊக்கத்தை உறுதியாகக் கொண்டிருப்பவர்கள், ஆக்கம் இழக்க நேர்ந்தாலும் அப்போதுகூட ஊக்கத்தை இழந்து கலங்க மாட்டார்கள்.

594 ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்; அசைவு-இலா
ஊக்கம் உடையான்-உழை.

உயர்வு, உறுதியான ஊக்கமுடையவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களிடம் போய்ச் சேரும்.

595 வெள்ளத்து அனைய, மலர்-நீட்டம்; மாந்தர்-தம்
உள்ளத்து அனையது, உயர்வு.

தண்ணீரின் அளவுதான் அதில் மலர்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவும் இருக்கும். அதுபோல மனிதரின் வாழ்க்கையின் உயர்வு அவர் மனத்தில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே இருக்கும்.

596 உள்ளுவது எல்லாம் உயர்வு-உள்ளல்! மற்று-அது
தள்ளினும், தள்ளாமை நீர்த்து.

நினைப்பதெல்லாம் உயர்ந்த நினைப்பாகவே இருக்க வேண்டும். அது கைகூடாவிட்டாலும் அதற்காக அந்த நினைப்பை விடக்கூடாது.

597 சிதைவிடத்து ஒல்கார், உரவோர்; புதை-அம்பின்
பட்டுப்-பாடு ஊன்றும் களிறு.

உடல் முழுதும் அம்புகளால் துளைக்கப்பட்டாலும் யானையானது உறுதி தளராமல் இருப்பதுபோல, ஊக்கமுடையவர்கள், அழிவே வந்தாலும் அதற்காகக் கவலைப்படமாட்டார்கள்.

598 உள்ளம் இலாதவர் எய்தார்; ‘உலகத்து
வள்ளியம்’ என்னும் செருக்கு.

அள்ளி வழங்கும் ஆர்வம் இல்லாத ஒருவர் தம்மை வள்ளல் எனப் பெருமைப்பட்டுக் கொள்ள வழியே இல்லை.

599 பரியது கூர்ங்கோட்டது ஆயினும், யானை
வெரூஉம், புலி தாக்குறின்.

உருவத்தைவிட ஊக்கமே வலிவானது என்பதற்கு எடுத்துக்காட்டு: கொழுத்த உடம்பும் கூர்மையான கொம்புகளுங்கொண்ட யானை, தன்னைத் தாக்க வரும் புலியைக் கண்டு அஞ்சி நடுங்குவது தான்.

600 உரம்-ஒருவற்கு உள்ள வெறுக்கை; அஃது-இல்லார்
மரம்; மக்கள் ஆதலே வேறு.

மனத்தில் உறுதியான ஊக்கமில்லாதவர்கள் உருவத்தில் மனிதர்களாகக் காணப்பட்டாலும் மரங்களுக்கும் அவர்களுக்கும் வேறுபாடு இல்லை.

# 61. மடி இன்மை

601 குடி-என்னும் குன்றா விளக்கம், மடி-என்னும்
மாசு-ஊர, மாய்ந்து கெடும்.

பிறந்த குடிப் பெருமை என்னதான் ஒளிமயமாக இருந்தாலும், சோம்பல் குடிகொண்டால் அது மங்கிப் போய் இருண்டு விடும்.

602 மடியை, மடியா ஒழுகல்; குடியைக்
குடியாக, வேண்டுபவர்!

குலம் சிறக்க வேண்டுமானால், சோம்பலை ஒழித்து, ஊக்கத்துடன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

603 மடி மடிக்-கொண்டு-ஒழுகும் பேதை; பிறந்த-
குடி, மடியும், தன்னினும் முந்து.

அறிவும் அக்கறையுமில்லாத சோம்பேறி பிறந்த குடி, அவனுக்கு முன் அழிந்து போய் விடும்.

604 குடி-மடிந்து, குற்றம் பெருகும்; மடி-மடிந்து,
மாண்ட உஞற்று-இலவர்க்கு.

சோம்பேறித்தனமானவர்களின் வாழ்க்கையில் குற்றங்களும் பெருகிடும்; குடும்பப் பெருமையும் சீரழிந்து போய்விடும்.

605 நெடு-நீர், மறவி, மடி, துயில்; நான்கும்
கெடும்-நீரார், காமக் கலன்.

காலம் தாழ்த்துதல், மறதி, சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம் ஆகிய நான்கும், கெடுகின்ற ஒருவர் விரும்பியேறும் தோணிகளாம்!

606 படி-உடையார் பற்று-அமைந்தக்-கண்ணும்; மடி-உடையார்
மாண்-பயன் எய்தல், அரிது.

தகுதியுடையவரின் அன்புக்குப் பாத்திரமானவராக இருப்பினும் சோம்பலுடையவர்கள் பெருமை எனும் பயனை அடைவதென்பது அரிதாகும்.

607 இடிபுரிந்து, எள்ளும்-சொல் கேட்பர்; மடிபுரிந்து
மாண்ட உஞற்று-இலவர்.

முயற்சி செய்வதில் அக்கறையின்றிச் சோம்பேறிகளாய் வாழ்பவர்கள் இகழ்ச்சிக்கு ஆளாவார்கள்.

608 மடிமை, குடிமைக்கண்-தங்கின்; தன்-ஒன்னார்க்கு
அடிமை, புகுத்தி-விடும்.

பெருமைமிக்க குடியில் பிறந்தவராயினும், அவரிடம் சோம்பல் குடியேறி விட்டால் அதுவே அவரைப் பகைவர்களுக்கு அடிமையாக்கிவிடும்.

609 குடி, ஆண்மையுள்-வந்த-குற்றம், ஒருவன்
மடி-ஆண்மை மாற்ற, கெடும்.

தன்னை ஆட்கொண்டுள்ள சோம்பலை ஒருவன் அகற்றி விட்டால், அவனது குடிப்பெருமைக்கும், ஆண்மைக்கும் சிறப்பு தானே வந்து சேரும்.

610 மடி-இலா மன்னவன் எய்தும்; அடி-அளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு.

சோம்பல் இல்லாதவர் அடையும் பயன், சோர்வில்லாத ஒரு மன்னன், அவன் சென்ற இடமனைத்தையும் தனது காலடி எல்லைக்குள் கொண்டு வந்ததைப் போன்றதாகும்.

# 62. ஆள்வினை உடைமை

611 அருமை உடைத்து-என்று, அசாவாமை வேண்டும்;
பெருமை, முயற்சி தரும்.

நம்மால் முடியுமா என்று மனத்தளர்ச்சி அடையாமல், முடியும் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் அதுவே பெரிய வலிமையாக அமையும்.

612 வினைக்-கண் வினைகெடல் ஓம்பல்; வினைக்-குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று, உலகு!

எந்தச் செயலில் ஈடுபட்டாலும் அதனை முழுமையாகச் செய்து முடிக்க வேண்டும். இல்லையேல் அரைக்கிணறு தாண்டிய கதையாகி விடும்.

613 தாளாண்மை என்னும் தகைமைக்-கண் தங்கிற்றே;
வேளாண்மை என்னும் செருக்கு.

பிறருக்கு உதவி புரியும் பெருமித உணர்வு, விடா முயற்சி மேற்கொள்ளக்கூடிய உயர்ந்த இயல்புடையவர்களிடம் நிலை பெற்றிருக்கும்.

614 தாளாண்மை இல்லாதான் வேளாண்மை; பேடி-கை
வாள்-ஆண்மை போல, கெடும்.

ஊக்கமில்லாதவர் உதவியாளராக இருப்பதற்கும், ஒரு பேடி, கையிலே வாள்தூக்கி வீசுவதற்கும் வேறுபாடு ஒன்றுமில்லை.

615 இன்பம்-விழையான், வினை-விழைவான்; தன்-கேளிர்
துன்பம் துடைத்து ஊன்றும்-தூண்.

தன்னலம் விரும்பாமல், தான் மேற்கொண்ட செயலை நிறைவேற்ற விரும்புகின்றவன் தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தார், நண்பர்கள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரின் துன்பம் துடைத்து, அவர்களைத் தாங்குகிற தூணாவான்.

616 முயற்சி, திருவினை ஆக்கும்; முயற்று-இன்மை,
இன்மை புகுத்தி-விடும்.

முயற்சி இல்லாமல் எதுவும் இல்லை. முயற்சிதான் சிறப்பான செயல்பாடுகளுக்குக் காரணமாக அமையும்.

617 'மடி-உளாள், மா-முகடி' என்ப; மடி-இலான்
தாள்-உளாள், தாமரையினாள்.

திருமகள், மூதேவி எனப்படும் சொற்கள் முறையே முயற்சியில் ஊக்கமுடையவரையும், முயற்சியில் ஊக்கமற்ற சோம்பேறியையும் சுட்டிக் காட்டப் பயன்படுவனவாகும்.

618 பொறி-இன்மை, யார்க்கும் பழி-அன்று; அறிவு-அறிந்து
ஆள்வினை-இன்மை, பழி.

விதிப்பயனால் பழி ஏற்படும் என்பது தவறு, அறிய வேண்டியவற்றை அறிந்து செயல்படாமல் இருப்பதே பெரும்பழியாகும்.

619 தெய்வத்தான் ஆகாது-எனினும்; முயற்சி, தன்-
மெய்-வருத்தக் கூலி-தரும்.

கடவுளே என்று கூவி அழைப்பதால் நடக்காத காரியம் ஒருவர் முயற்சியுடன் உழைக்கும்போது அந்த உழைப்புக் கேற்ற வெற்றியைத் தரும்.

620 ஊழையும் உப்பக்கம் காண்பர்; உலைவு-இன்றித்
தாழாது உஞற்றுபவர்.

"ஊழ்" என்பது வெல்ல முடியாத ஒன்று என்பார்கள். சோர்வில்லாமல் முயற்சி மேற்கொள்பவர்கள் அந்த ஊழையும் தோல்வி அடையச் செய்வார்கள்.

# 63. இடுக்கண் அழியாமை

621 இடுக்கண் வருங்கால் நகுக! அதனை
அடுத்து-ஊர்வது அஃது-ஒப்பது இல்.

சோதனைகளை எதிர்த்து வெல்லக் கூடியது, அந்தச் சோதனைகளைக் கண்டு கலங்காமல் மகிழ்வுடன் இருக்கும் மனம்தான்.

622 வெள்ளத்து அனைய இடும்பை; அறிவு-உடையான்
உள்ளத்தின் உள்ள, கெடும்.

வெள்ளம்போல் துன்பம் வந்தாலும் அதனை வெல்லும் வழி யாது என்பதை அறிவுடையவர்கள் நினைத்த மாத்திரத்திலேயே அத்துன்பம் விலகி ஓடி விடும்.

623 இடும்பைக்கு இடும்பை படுப்பர்; இடும்பைக்கு
இடும்பை படாஅதவர்.

துன்பம் சூழும் போது, துவண்டு போகாதவர்கள் அந்தத் துன்பத்தையே துன்பத்தில் ஆழ்த்தி அதனைத் தோல்வியுறச் செய்வார்கள்.

624 மடுத்த-வாய்-எல்லாம் பகடு-அன்னான்; உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு-உடைத்து.

தடங்கல் நிறைந்த கரடுமுரடான பாதையில் பெரும் பாரத்தை எருது இழுத்துக் கொண்டு போவது போல, விடா முயற்சியுடன் செயல்பட்டால் துன்பங்களுக்கு முடிவு ஏற்பட்டு வெற்றி கிட்டும்.

625 அடுக்கி வரினும், அழிவு-இலான்; உற்ற
இடுக்கண், இடுக்கண்-படும்.

துன்பங்களைக் கண்டு கலங்காதவனை, விடாமல் தொடரும் துன்பங்கள், துன்பப்பட்டு அழிந்து விடும்.

626 ‘அற்றேம்!’ என்று அல்லற்படுபவோ; ‘பெற்றேம்!’ என்று
ஓம்புதல் தேற்றாதவர்.

இத்தனை வளத்தையும் பெற்றுள்ளோமேயென்று மகிழ்ந்து அதைக் காத்திட வேண்டுமென்று கருதாதவர்கள் அந்த வளத்தை இழக்க நேரிடும் போது மட்டும் அதற்காகத் துவண்டு போய் விடுவார்களா?

627 ‘இலக்கம், உடம்பு-இடும்பைக்கு’ என்று, கலக்கத்தைக்
கையாறாக்-கொள்ளாதாம், மேல்.

துன்பம் என்பது உயிருக்கும் உடலுக்கும் இயல்பானதே என்பதை உணர்ந்த பெரியோர், துன்பம் வரும் போது அதனைத் துன்பமாகவே கருத மாட்டார்கள்.

628 இன்பம் விழையான், ‘இடும்பை-இயல்பு’ என்பான்;
துன்பம் உறுதல் இலன்.

இன்பத்தைத் தேடி அலையாமல், துன்பம் வந்தாலும் அதை இயல்பாகக் கருதிக்கொள்பவன் அந்தத் துன்பத்தினால் துவண்டு போவதில்லை.

629 இன்பத்துள், இன்பம் விழையாதான்; துன்பத்துள்,
துன்பம் உறுதல் இலன்.

இன்பம் வரும் பொழுது அதற்காக ஆட்டம் போடாதவர்கள், துன்பம் வரும் பொழுதும் அதற்காக வாட்டம் கொள்ள மாட்டார்கள். இரண்டையும் ஒன்றுபோல் கருதும் உறுதிக்கு இது எடுத்துக்காட்டு.

630 இன்னாமை இன்பம் எனக்-கொளின்; ஆகும்-தன்
ஒன்னார் விழையும் சிறப்பு.

துன்பத்தை இன்பமாகக் கருதும் மனஉறுதி கொண்டவர்களுக்கு, அவர்களது பகைவர்களும் பாராட்டுகிற பெருமை வந்து சேரும்.

# 64. அமைச்சு

631 கருவியும், காலமும், செய்கையும், செய்யும்-
அருவினையும்; மாண்டது-அமைச்சு.

உரிய கருவி, உற்ற காலம், ஆற்றும் வகை, ஆற்றிடும் பணி ஆகியவற்றை ஆய்ந்தறிந்து செயல்படுபவனே சிறந்த அமைச்சன்.

632 வன்கண், குடி, காத்தல், கற்று-அறிதல், ஆள்வினையோடு;
ஐந்துடன் மாண்டது-அமைச்சு.

அமைச்சரவை என்பது, துணிவுடன் செயல்படுதல், குடிகளைப் பாதுகாத்தல், அறநூல்களைக் கற்றல், ஆவன செய்திட அறிதல், அயராத முயற்சி ஆகிய ஐந்தும் கொண்டதாக விளங்க வேண்டும்.

633 பிரித்தலும், பேணிக்-கொளலும், பிரிந்தார்ப்-
பொருத்தலும்; வல்லது-அமைச்சு.

அமைச்சருக்குரிய ஆற்றல் என்பது (நாட்டின் நலனுக்காக) பகைவர்க்குத் துணையானவர்களைப் பிரித்தல், நாட்டுக்குத் துணையாக இருப்போரின் நலன் காத்தல், பிரிந்து சென்று பின்னர் திருந்தியவர்களைச் சேர்த்துக் கொளல் எனும் செயல்களில் காணப்படுவதாகும்.

634 தெரிதலும், தேர்ந்து செயலும், ஒருதலையாச்-
சொல்லலும் வல்லது-அமைச்சு.

ஒரு செயலைத் தேர்ந்தெடுத்தலும், அதனை நிறைவேற்றிட வழிவகைகளை ஆராய்ந்து ஈடுபடுதலும், முடிவு எதுவாயினும் அதனை உறுதிபடச் சொல்லும் ஆற்றல் படைத்திருத்தலும் அமைச்சருக்குரிய சிறப்பாகும்.

635 அறன்-அறிந்து, ஆன்று-அமைந்த-சொல்லான்; எஞ்ஞான்றும்
திறன்-அறிந்தான், தேர்ச்சித் துணை.

அறநெறி உணர்ந்தவராகவும், சொல்லாற்றல் கொண்டவராகவும். செயல்திறன் படைத்தவராகவும் இருப்பவரே ஆலோசனைகள் கூறக்கூடிய துணையாக விளங்க முடியும்.

636 மதி-நுட்பம் நூலோடு உடையார்க்கு; அதி-நுட்பம்
யா-உள, முன் நிற்பவை?

நூலறிவுடன் இயற்கையான மதி நுட்பமும் உள்ளவர்களுக்கு முன்னால் எந்த சூழ்ச்சிதான் எதிர்த்து நிற்க முடியும்? முடியாது.

637 செயற்கை அறிந்தக்-கடைத்தும்; உலகத்து
இயற்கை-அறிந்து, செயல்!

செயலாற்றல் பற்றிய நூலறிவைப் பெற்றிருந்தாலும், உலக நடைமுறைகளை உணர்ந்து பார்த்தே அதற்கேற்றவாறு அச்செயல்களை நிறைவேற்ற வேண்டும்.

638 அறி-கொன்று, அறியான் எனினும்; உறுதி-
உழையிருந்தான் கூறல், கடன்.

சொன்னதையும் கேட்காமல், சொந்த அறிவும் இல்லாமல் இருப்போர்க்கு, அருகிலுள்ள அமைச்சர்கள்தான் துணிவோடு நல்ல யோசனைகளைக் கூற வேண்டும்.

639 பழுது-எண்ணும் மந்திரியின்; பக்கத்துள் தெவ்-ஓர்
எழுபது கோடி உறும்.

தவறான வழிமுறைகளையே சிந்தித்துச் செயல்படுகிற அமைச்சர் ஒருவர் அருகிலிருப்பதை விட எழுபது கோடி எதிரிகள் பக்கத்தில் இருப்பது எவ்வளவோ மேலாகும்.

640 முறைப்படச் சூழ்ந்தும், முடிவிலவே செய்வர்;
திறப்பாடு இலாஅதவர்.

முறைப்படித் தீட்டப்படும் திட்டங்கள்கூடச் செயல் திறன் இல்லாதவர்களிடம் சிக்கினால் முழுமையாகாமல் முடங்கித்தான் கிடக்கும்.

# 65. சொல் வன்மை

641 ‘நா-நலம்’ என்னும் நலன்-உடைமை; அந்-நலம்
யா-நலத்து உள்ளதூஉம் அன்று.

சொல்வன்மைக்கு உள்ள சிறப்பு வேறு எதற்குமில்லை. எனவே அது செல்வங்களில் எல்லாம் சிறந்த செல்வமாகும்.

642 ஆக்கமும், கேடும், அதனால் வருதலால்;
காத்து-ஓம்பல், சொல்லின்-கண் சோர்வு.

ஆக்கமும் அழிவும் சொல்லால் ஏற்படும் என்பதால், எந்தவொரு சொல்லிலும் குறைபாடு நேராமல் கவனமாக இருக்க வேண்டும்.

643 கேட்டார்ப் பிணிக்கும் தகை-அவாய்; கேளாரும்
வேட்ப, மொழிவது ஆம்-சொல்.

கேட்போரைக் கவரும் தன்மையுடையதாகவும், கேட்காதவரும் தேடிவந்து விரும்பிக் கேட்கக் கூடியதாகவும் அமைவதே சொல்வன்மை எனப்படும்.

644 திறன்-அறிந்து சொல்லுக, சொல்லை; அறனும்,
பொருளும் அதனின்-ஊங்கு இல்.

காரணத்தைத் தெளிவாக அறிந்து ஒன்றைச் சொல்ல வேண்டும். அந்தச் சொல் வன்மையைப் போன்ற அறமும், உண்மைப் பொருளும் வேறெதுவும் இல்லை.

645 சொல்லுக சொல்லை; பிறிது-ஓர்-சொல் அச்-சொல்லை
வெல்லும்-சொல் இன்மை அறிந்து.

இந்தச் சொல்லை இன்னொரு சொல் வெல்லாது என்று உணர்ந்த பிறகே அந்தச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

646 வேட்பத்-தாம்-சொல்லி, பிறர்-சொல் பயன்-கோடல்
மாட்சியின் மாசு-அற்றார் கோள்.

மற்றவர்கள் விரும்பிக் கேட்டு உணரும்படியாகக் கருத்துகளைச் சொல்வதும், மற்றவர்கள் கூறும் சொற்களின் பயனை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வதும் அறிவுடையார் செயலாகும்.

647 சொலல்-வல்லன், சோர்வு-இலன், அஞ்சான்; அவனை
இகல்-வெல்லல் யார்க்கும் அரிது.

சொல்லாற்றல் படைத்தவனாகவும், சோர்வு அறியாதவனாகவும், அஞ்சா நெஞ்சங் கொண்டவனாகவும் இருப்பவனை எதிர்த்து எவராலும் வெல்ல முடியாது.

648 விரைந்து தொழில்-கேட்கும் ஞாலம்; நிரந்து-இனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துகளைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை, உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்.

649 பல-சொல்லக் காமுறுவர், மன்ற; மாசு-அற்ற
சில-சொல்லல் தேற்றாதவர்.

குறையில்லாத சில சொற்களைக் கொண்டு தெளிவான விளக்கம் தந்திட இயலாதவர்கள்தான் பல சொற்களைத் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருப்பார்கள்.

650 இணர்-ஊழ்த்தும் நாறா மலர்-அனையர்; கற்றது
உணர விரித்து-உரையாதார்.

கற்றதைப் பிறர் உணர்ந்து கொள்ளும் வகையில் விளக்கிச் சொல்ல முடியாதவர், கொத்தாக மலர்ந்திருந்தாலும் மணம் கமழாத மலரைப் போன்றவர்.

# 66. வினைத் தூய்மை

651 துணை-நலம் ஆக்கம் தரூஉம்; வினை-நலம்
வேண்டிய எல்லாம் தரும்.

ஒருவருக்குக் கிடைக்கும் துணைவர்களால் வலிமை பெருகும்; அவர்களுடன் கூடி ஆற்றிடும் நற்செயல்களால் எல்லா நலன்களும் கிட்டும்.

652 என்றும் ஒருவுதல் வேண்டும்; புகழொடு
நன்றி பயவா வினை.

புகழையும், நன்மையையும் தராத தூய்மையற்ற செயல்களை எந்த நிலையிலும் செய்யாமல் அவற்றை விட்டொழிக்க வேண்டும்.

653 ஓஒதல் வேண்டும், ஒளி-மாழ்கும் செய்வினை;
'ஆஅதும்!' என்னுமவர்.

மேன்மேலும் உயர்ந்திட வேண்டுமென விரும்புகின்றவர்கள், தம்முடைய செயல்களால் தமது புகழ் கெடாமல் கவனமாக இருந்திட வேண்டும்.

654 இடுக்கண்-படினும், இளிவந்த செய்யார்;
நடுக்கு-அற்ற காட்சியவர்.

தெளிவான அறிவும் உறுதியும் கொண்டவர்கள் துன்பத்திலிருந்து விடுபடுவதற்காகக்கூட இழிவான செயலில் ஈடுபட மாட்டார்கள்.

655 'எற்று!'-என்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்று-அன்ன செய்யாமை நன்று.

'என்ன தவறு செய்துவிட்டோம்' என நினைத்துக் கவலைப்படுவதற்குரிய காரியங்களைச் செய்யக்கூடாது. ஒருகால் அப்படிச் செய்து விட்டாலும் அச்செயலை மீண்டும் தொடராதிருப்பதே நன்று.

656 ஈன்றாள் பசி-காண்பான் ஆயினும்; செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

பசியால் துடிக்கும் தனது தாயின் வேதனையைத் தணிப்பதற்காகக்கூட இழிவான செயலில் ஈடுபடக் கூடாது.

657 பழி-மலைந்து எய்திய ஆக்கத்தின்; சான்றோர்
கழி-நல்குரவே தலை.

பழிக்கு அஞ்சாமல் இழிவான செயல்களைப் புரிந்து செல்வந்தராக வாழ்வதைவிட, கொடிய வறுமை தாக்கினாலும் கவலைப்படாமல் நேர்மையாளராக வாழ்வதே மேலானதாகும்.

658 கடிந்த கடிந்து-ஒரார் செய்தார்க்கு; அவை-தாம்
முடிந்தாலும், பீழை தரும்.

தகாதவை என ஒதுக்கப்பட்ட செயல்களை ஒதுக்கிவிடாமல் செய்பவர்களுக்கு ஒருவேளை அச்செயல்கள் நிறைவேறினாலும் துன்பமே ஏற்படும்.

659 அழக்-கொண்ட எல்லாம் அழப்-போம்; இழப்பினும்
பிற்பயக்கும், நற்பாலவை.

பிறர் அழத் திரட்டிய செல்வம் அழ அழப் போய்விடும். நல்வழியில் வந்த செல்வமென்றால் அதனை இழந்தாலும் மீண்டும் வந்து பயன் தரும்.

660 சலத்தால் பொருள்-செய்து ஏமாக்கல்; பசு-மண்-
கலத்துள் நீர்-பெய்து இரீஇயற்று.

தவறான வழிகளில் பொருளைச் சேர்த்து அதைக் காப்பாற்ற நினைப்பது, பச்சை மண்ணால் செய்யப்பட்ட பாத்திரத்தில் நீரை ஊற்றி, அதைப் பாதுகாக்க நினைப்பதைப் போன்றதுதான்.

# 67. வினைத் திட்பம்

661 வினைத்-திட்பம் என்பது ஒருவன் மனத்-திட்பம்;
மற்றைய எல்லாம் பிற.

மற்றவை எல்லாம் இருந்தும் ஒருவரது மனத்தில் உறுதி மட்டும் இல்லாவிட்டால் அவரது செயலிலும் உறுதி இருக்காது.

662 ஊறு-ஒரால், உற்ற-பின் ஒல்காமை; இவ்-இரண்டின்
ஆறு-என்பர், ஆய்ந்தவர் கோள்.

இடையூறு வருவதற்கு முன்பே அதனை நீக்கிட முனைவது, மீறி வந்து விடுமேயானால் மனம் தளராது இருப்பது ஆகிய இரண்டு வழிகளுமே அறிவுடையோர் கொள்கையாம்.

663 கடைக்-கொட்கச் செய்-தக்கது ஆண்மை; இடைக்-கெ
கொட்கின்,
எற்றா விழுமம் தரும்.

செய்து முடிக்கும் வரையில் ஒரு செயலைப்பற்றி வெளிப்படுத்தாமலிருப்பதே செயலாற்றும் உறுதி எனப்படும். இடையில் வெளியே தெரிந்துவிட்டால் அச்செயலை நிறைவேற்ற முடியாத அளவுக்கு இடையூறு ஏற்படக்கூடும்.

664 சொல்லுதல் யார்க்கும் எளிய; அரிய-ஆம்,
சொல்லிய வண்ணம் செயல்.

சொல்லுவது எல்லோருக்கும் எளிது; சொல்லியதைச் செய்து முடிப்பதுதான் கடினம்.

665 வீறு-எய்தி மாண்டார் வினைத்-திட்பம்; வேந்தன்-கண்
ஊறு-எய்தி, உள்ளப்படும்.

செயல் திறனால் சிறப்புற்ற மாண்புடையவரின் வினைத்திட்பமானது, ஆட்சியாளரையும் கவர்ந்து பெரிதும் மதித்துப் போற்றப்படும்.

666 எண்ணிய எண்ணியாங்கு எய்துப; எண்ணியார்
திண்ணியர் ஆகப்-பெறின்.

எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள்.

667 உருவு-கண்டு எள்ளாமை வேண்டும்; உருள்-பெருந்-தேர்க்கு
அச்சு-ஆணி அன்னார் உடைத்து.

உருவத்தால் சிறியவர்கள் என்பதற்காக யாரையும் கேலி செய்து அலட்சியப்படுத்தக் கூடாது. பெரிய தேர் ஓடுவதற்குக் காரணமான அச்சாணி உருவத்தால் சிறியதுதான் என்பதை உணர வேண்டும்.

668 கலங்காது கண்ட வினைக்கண்; துளங்காது
தூக்கம் கடிந்து செயல்.

மனக்குழப்பமின்றித் தெளிவாக முடிவு செய்யப்பட்ட ஒரு செயலைத் தளர்ச்சியும், தாமதமும் இடையே ஏற்படாமல் விரைந்து நிறைவேற்ற வேண்டும்.

669 துன்பம் உறவரினும் செய்க; துணிவு-ஆற்றி
இன்பம் பயக்கும் வினை.

இன்பம் தரக்கூடிய செயல் என்பது, துன்பம் வந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் துணிவுடன் நிறைவேற்றி முடிக்கக் கூடியதேயாகும்.

670 எனைத்-திட்பம் எய்தியக்-கண்ணும், வினைத்-திட்பம்
வேண்டாரை வேண்டாது, உலகு.

எவ்வளவுதான் வலிமையுடையவராக இருப்பினும் அவர் மேற்கொள்ளும் செயலில் உறுதியில்லாதவராக இருந்தால், அவரை உலகம் மதிக்காது.

# 68. வினை செயல் வகை

671 சூழ்ச்சி முடிவு துணிவு-எய்தல்; அத்-துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

ஒரு செயலில் ஈடுபட முடிவெடுக்கும்போது அச்செயலால் விளையும் சாதக பாதகங்கள் பற்றிய ஆராய்ச்சியும் முடிவடைந்திருக்க வேண்டும். முடிவெடுத்த பிறகு காலந்தாழ்த்துவது தீதாக முடியும்.

672 தூங்குக, தூங்கிச் செயற்பால; தூங்கற்க,
தூங்காது செய்யும் வினை.

நிதானமாகச் செய்ய வேண்டிய காரியங்களைத் தாமதித்துச் செய்யலாம்; ஆனால் விரைவாகச் செய்ய வேண்டிய காரியங்களில் தாமதம் கூடாது.

673 ஒல்லும்-வாய் எல்லாம் வினை-நன்றே; ஒல்லாக்கால்,
செல்லும்-வாய் நோக்கிச் செயல்.

இயலும் இடங்களில் எல்லாம் செயல் முடிப்பது நலம் தரும். இயலாத இடமாயின் அதற்கேற்ற வழியை அறிந்து அந்தச் செயலை முடிக்க வேண்டும்.

674 வினை, பகை என்று-இரண்டின் எச்சம்; நினையுங்கால்,
தீ-எச்சம் போலத் தெறும்.

ஏற்ற செயலையோ, எதிர்கொண்ட பகையையோ முற்றாக முடிக்காமல் விட்டுவிட்டால் அது நெருப்பை அரை குறையாக அணைத்தது போலக் கேடு விளைவிக்கும்.

675 பொருள், கருவி, காலம், வினை, இடனொடு ஐந்தும்
இருள்-தீர எண்ணிச் செயல்!

ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு முன்பு, அதற்குத் தேவையான பொருள், ஏற்ற கருவி, காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தையும் குறையில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

676 முடிவும், இடையூறும், முற்றியாங்கு-எய்தும்
படுபயனும், பார்த்துச் செயல்!

ஈடுபடக்கூடிய ஒரு செயலால் எதிர்பார்க்கப்படும் பயன், அதற்கான முயற்சிக்கு இடையே வரும் தடைகள், அச்செயலாற்றுவதற்கான முறை ஆகிய அனைத்தையும் முதலில் ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும்.

677 செய்வினை செய்வான்-செயல்முறை; அவ்-வினை
உள்-அறிவான் உள்ளம் கொளல்.

ஒரு செயலில் ஈடுபடுகிறவன், அச் செயல்குறித்து முழுமையாக உணர்ந்தவனின் கருத்தினை முதலில் அறிந்துகொள்ள வேண்டும்.

678 வினையான் வினை-ஆக்கிக்-கோடல்; நனை-கவுள்
யானையால் யானை யாத்தற்று.

ஒரு செயலில் ஈடுபடும்போது, அச்செயலின் தொடர்பாக மற்றொரு செயலையும் முடித்துக் கொள்வது ஒரு யானையைப் பயன்படுத்தி மற்றொரு யானையைப் பிடிப்பது போன்றதாகும்.

679 நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக்-கொளல்.

நண்பருக்கு நல்லுதவி செய்வதைக் காட்டிலும் பகைவராயிருப்பவரைத் தம்முடன் பொருந்துமாறு சேர்த்துக் கொள்ளுதல் விரைந்து செய்யத் தக்கதாகும்.

680 உறை-சிறியார் உள்-நடுங்கல் அஞ்சி; குறை-பெறின்,
கொள்வர் பெரியார்ப்-பணிந்து.

தம்மைவிட வலிமையானவர்களை எதிர்ப்பதற்குத் தம்முடன் இருப்பவர்களே அஞ்சும்போது தாம் எதிர்பார்க்கும் பலன் கிட்டுமானால் அவர்கள் வலியோரை வணங்கி ஏற்றுக் கொள்வார்கள்.

# 69. தூது

681 அன்பு-உடைமை, ஆன்ற-குடிப்-பிறத்தல், வேந்து-அவாம்
பண்பு-உடைமை; தூது-உரைப்பான் பண்பு.

அன்பான குணமும், புகழ்வாய்ந்த குடிப்பிறப்பும், அரசினர் பாராட்டக்கூடிய நல்ல பண்பாடும் பெற்றிருப்பதே தூதருக்குரிய தகுதிகளாகும்.

682 அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை; தூது-உரைப்பார்க்கு
இன்றியமையாத மூன்று.

தூது செல்பவருக்குத் தேவைப்படும் மூன்று முக்கியமான பண்புகள் அன்பு, அறிவு, ஆராய்ந்து பேசும் சொல்வன்மை.

683 நூலாருள் நூல்-வல்லன் ஆகுதல்; வேலாருள்
வென்றி வினை-உரைப்பான் பண்பு.

வேற்று நாட்டாரிடம், தனது நாட்டுக்கு வெற்றி ஏற்படும் வண்ணம் செய்தி உரைத்திடும் தூதுவன், நூலாய்ந்து அறிந்தவர்களிலேயே வல்லவனாக இருத்தல் வேண்டும்.

684 அறிவு, உரு, ஆராய்ந்த கல்வி; இம்-மூன்றன்
செறிவு-உடையான் செல்க, வினைக்கு.

தூது உரைக்கும் செயலை மேற்கொள்பவர் அறிவு, தோற்றப் பொலிவு, ஆய்ந்து தெளிந்த கல்வி ஆகிய மூன்றும் நிறைந்தவராக இருத்தல் வேண்டும்.

685 தொகச்-சொல்லி, தூவாத-நீக்கி, நகச்-சொல்லி;
நன்றி பயப்பது ஆம், தூது.

சினத்தைத் தூண்டாமல் மகிழத்தக்க அளவுக்குச் செய்திகளைத் தொகுத்தும், தேவையற்ற செய்திகளை ஒதுக்கியும், நல்ல பயனளிக்கும் விதமாகச் சொல்லுவதே சிறந்த தூதருக்கு அழகாகும்.

686 கற்று, கண்-அஞ்சான், செலச்-சொல்லி, காலத்தால்-
தக்கது அறிவது-ஆம்; தூது.

கற்றறிவாளனாகவும், பகைவரின் கனல்கக்கும் பார்வைக்கு அஞ்சாதவனாகவும், உள்ளத்தில் பதியுமாறு உரைப்பவனாகவும், உரிய நேரத்தில் உணரவேண்டியதை உணர்ந்து கொள்வபனாகவும் இருப்பவனே சிறந்த தூதனாவான்.

687 கடன்-அறிந்து, காலம்-கருதி, இடன்-அறிந்து,
எண்ணி, உரைப்பான் தலை.

ஆற்றவேண்டிய கடமையை அறிந்து, அதற்குரிய காலத்தையும் இடத்தையும் தேர்ந்து, சொல்ல வேண்டியதைத் தெளிவாகச் சிந்தித்துச் சொல்பவனே சிறந்த தூதனாவான்.

688 தூய்மை, துணைமை, துணிவு-உடைமை; இம்-மூன்றின்
வாய்மை வழி-உரைப்பான் பண்பு.

துணிவு, துணை, தூய ஒழுக்கம் ஆகிய இம்மூன்றும் தூதுவர்க்குத் தேவையானவைகளாகும்.

689 விடு-மாற்றம் வேந்தர்க்கு-உரைப்பான்; வடு-மாற்றம்
வாய்-சோரா வன்கணவன்.

ஓர் அரசின் கருத்தை மற்றோர் அரசுக்கு எடுத்துரைக்கும் தூதன், வாய்தவறிக்கூட, குற்றம் தோய்ந்த சொற்களைக் கூறிடாத உறுதி படைத்தவனாக இருத்தல் வேண்டும்.

690 இறுதி பயப்பினும், எஞ்சாது, இறைவற்கு
உறுதி பயப்பது-ஆம்; தூது.

தனக்கு அழிவே தருவதாக இருந்தாலும், அதை எண்ணிப் பயந்து விடாமல் உறுதியுடன் கடமையாற்றுகிறவனே தன்னுடைய தலைவனுக்கு நம்பிக்கையான தூதனாவான்.

# 70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்

691 அகலாது, அணுகாது, தீக்-காய்வார் போல்க;
இகல்-வேந்தர்ச் சேர்ந்து-ஒழுகுவார்.

முடிமன்னருடன் பழகுவோர் நெருப்பில் குளிர் காய்வதுபோல அதிகமாக நெருங்கிவிடாமலும், அதிகமாக நீங்கிவிடாமலும் இருப்பார்கள்.

692 மன்னர் விழைப விழையாமை; மன்னரான்
மன்னிய ஆக்கம் தரும்.

மன்னர் விரும்புகின்றவைகளைத் தமக்கு வேண்டுமெனத் தாமும் விரும்பாமலிருத்தல் அவர்க்கு அந்த மன்னர் வாயிலாக நிலையான ஆக்கத்தை அளிக்கும்.

693 போற்றின் அரியவை போற்றல்; கடுத்த-பின்
தேற்றுதல், யார்க்கும் அரிது.

தமக்கு மேலேயுள்ளவர்களிடத்திலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள விரும்புகிறவர்கள், பொறுத்துக் கொள்ள முடியாத குற்றங்களைச் செய்யாமல் இருக்கவேண்டும். அப்படிச் செய்து விட்டால் அதன் பிறகு தம் மீது ஏற்பட்ட சந்தேகத்தை நீக்குவது எளிதான காரியமல்ல.

694 செவிச்-சொல்லும், சேர்ந்த-நகையும் அவித்து-ஒழுகல்;
ஆன்ற பெரியார் அகத்து!

ஆற்றல் வாய்ந்த பெரியவர்கள் முன்னே, மற்றவர்கள் காதுக்குள் பேசுவதையும், அவர்களுடன் சேர்ந்து சிரிப்பதையும் தவிர்த்து, அடக்கமெனும் பண்பைக் காத்திடல் வேண்டும்.

695 எப்-பொருளும் ஓரார், தொடரார், மற்று அப்-பொருளை;
விட்டக்கால் கேட்க, மறை!

பிறருடன் மறைவாகப் பேசிக் கொண்டிருக்கும்போது அதை ஒட்டுக் கேட்கவும் கூடாது; அது என்னவென்று வினவிடவும் கூடாது. அவர்களே அதுபற்றிச் சொன்னால் மட்டுமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

696 குறிப்பு-அறிந்து, காலம்-கருதி, வெறுப்பு-இல
வேண்டுப, வேட்பச் சொலல்!

ஒருவரின் மனநிலை எவ்வாறு உள்ளது என்பதை அறிந்து, தக்க காலத்தைத் தேர்ந்தெடுத்து, வெறுப்புக் குரியவைகளை விலக்கி, விரும்பத் தக்கதை மட்டுமே, அவர் விரும்பும் வண்ணம் சொல்ல வேண்டும்.

697 வேட்பன சொல்லி, வினை-இல எஞ்ஞான்றும்
கேட்பினும், சொல்லா விடல்!

விரும்பிக் கேட்டாலும் கூட, பயனுள்ளவற்றை மட்டுமே சொல்லிப் பயனற்றவைகளைச் சொல்லாமல் விட்டுவிட வேண்டும்.

698 ‘இளையர், இன-முறையர்’ என்று-இகழார்; நின்ற-
ஒளியொடு ஒழுகப்படும்.

எமக்கு இளையவர்தான்; இன்ன முறையில் உறவுடையவர் தான் என்று ஆட்சிப் பொறுப்பில் இருப்போரை இகழ்ந்துரைக்காமல், அவர்கள் அடைந்துள்ள பெருமைக் கேற்பப் பண்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

699 ‘கொளப்பட்டேம்’ என்று-எண்ணி, கொள்ளாத-செய்யார்;
துளக்கு-அற்ற காட்சியவர்.

ஆட்சியால் நாம் ஏற்றுக் கொள்ளப்பட்டவராயிற்றே என்ற துணிவில், ஏற்றுக்கொள்ள முடியாத காரியங்களைத் தெளிந்த அறிவுடையவர்கள் செய்ய மாட்டார்கள்.

700 பழையம் எனக்-கருதி, பண்பு-அல்ல-செய்யும்
கெழு-தகைமை; கேடு தரும்.

நெடுங்காலமாக நெருங்கிப் பழகுகிற காரணத்தினாலேயே தகாத செயல்களைச் செய்திட உரிமை எடுத்துக்கொள்வது கேடாகவே முடியும்.

# 71. குறிப்பு அறிதல்

701 கூறாமை நோக்கி, குறிப்பு-அறிவான்; எஞ்ஞான்றும்
மாறா-நீர் வையக்கு அணி.

ஒருவர் எதுவும் பேசாமலிருக்கும் போதே அவர் என்ன நினைக்கிறார் என்பதை முகக்குறிப்பால் உணருகிறவன் உலகத்திற்கு அணியாவான்.

702 ஐயப்படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தொடு ஒப்பக் கொளல்!

ஒருவன் மனத்தில் உள்ளதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளக்கூடிய சக்தி தெய்வத்திற்கே உண்டு என்று கூறினால், அந்தத் திறமை படைத்த மனிதனையும் அத்தெய்வத்தோடு ஒப்பிடலாம்.

703 குறிப்பின் குறிப்பு-உணர்வாரை, உறுப்பினுள்
யாது-கொடுத்தும், கொளல்!

ஒருவரின் முகக் குறிப்பைக் கொண்டே அவரது உள்ளக் குறிப்பை அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றலுடையவரை, எந்தப் பொறுப்பைக் கொடுத்தாவது துணையாக்கிக் கொள்ள வேண்டும்.

704 குறித்தது கூறாமைக் கொள்வாரொடு, ஏனை-
உறுப்பு ஓரனையரால், வேறு.

உறுப்புகளால் வேறுபடாத தோற்றமுடையவராக இருப்பினும், ஒருவர் மனத்தில் உள்ளதை, அவர் கூறாமலே உணரக்கூடியவரும், உணர முடியாதவரும் அறிவினால் வேறுபட்டவர்களேயாவார்கள்.

705 குறிப்பின் குறிப்பு-உணரா-ஆயின்; உறுப்பினுள்
என்ன-பயத்தவோ, கண்?

ஒருவரது முகக்குறிப்பு, அவரது உள்ளத்தில் இருப்பதைக் காட்டி விடும் என்கிறபோது, அந்தக் குறிப்பை உணர்ந்து கொள்ள முடியாத கண்கள் இருந்தும் என்ன பயன்?

706 அடுத்தது காட்டும் பளிங்கு-போல்; நெஞ்சம்
கடுத்தது காட்டும், முகம்.

கண்ணாடி, தனக்கு எதிரில் உள்ளதைக் காட்டுவதுபோல ஒருவரது மனத்தில் உள்ளதை அவரது முகம் காட்டி விடும்.

707 முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ? உவப்பினும்,
காயினும், தான் முந்துறும்

உள்ளத்தில் உள்ள விருப்பு வெறுப்புகளை முந்திக் கொண்டு வெளியிடுவதில் முகத்தைப் போல அறிவு மிக்கது வேறெதுவுமில்லை.

708 முகம்-நோக்கி நிற்க அமையும்; அகம்-நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின்.

அகத்தில் உள்ளதை உணர்ந்து கொள்ளும் திறமையிருப்பின், அவர், ஒருவரின் முகத்துக்கு எதிரில் நின்றாலே போதுமானது.

709 பகைமையும், கேண்மையும் கண்-உரைக்கும்; கண்ணின்-
வகைமை உணர்வார்ப் பெறின்.

பார்வையின் வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளக் கூடியவர்கள், ஒருவரின் கண்களைப் பார்த்தே அவர் மனத்தில் இருப்பது நட்பா, பகையா என்பதைக் கூறிவிடுவார்கள்.

710 ‘நுண்ணியம்’ என்பார் அளக்கும்-கோல்; காணுங்கால்
கண் அல்லது, இல்லை பிற.

நுண்ணறிவாளர் எனப்படுவோர்க்கு பிறரின் மனத்தில் உள்ளதை அளந்தறியும் கோலாகப் பயன்படுவது அவரது கண் அல்லாமல் வேறு எதுவுமில்லை.

# 72. அவை அறிதல்

711 அவை-அறிந்து, ஆராய்ந்து சொல்லுக; சொல்லின்
தொகை-அறிந்த தூய்மையவர்!

ஒவ்வொரு சொல்லின் தன்மையையும் உணர்ந்துள்ள நல்ல அறிஞர்கள், அவையில் கூடியிருப்போரின் தன்மையையும் உணர்ந்து அதற்கேற்ப ஆராய்ந்து பேசுவார்கள்.

712 இடை-தெரிந்து, நன்கு-உணர்ந்து, சொல்லுக; சொல்லின்
நடை-தெரிந்த நன்மையவர்!

சொற்களின் வழிமுறையறிந்த நல்லறிவாளர்கள் அவையின் நேரத்தையும், நிலைமையையும் உணர்ந்து உரையாற்ற வேண்டும்.

713 அவை-அறியார், சொல்லல்-மேற்கொள்பவர்; சொல்லின்
வகை அறியார்; வல்லதூஉம் இல்.

அவையின் தன்மை அறியாமல் சொற்களைப் பயன் படுத்துகிறவர்களுக்கு அந்தச் சொற்களின் வகையும் தெரியாது; பேசும் திறமையும் கிடையாது.

714 ஒளியார்-முன் ஒள்ளியர் ஆதல்! வெளியார்-முன்
வான்-சுதை வண்ணம் கொளல்!

அறிவாளிகளுக்கு முன்னால் அவர்களையொத்த பாலின் தூய்மையுடன் விளங்கும் அறிஞர்கள், அறிவில்லாதவர்கள் முன்னால் வெண்சுண்ணாம்பு போல் தம்மையும் அறிவற்றவர்களாய்க் காட்டிக் கொள்ள வேண்டும்.

715 'நன்று' என்றவற்றுள்ளும் நன்றே; முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

அறிவாளிகள் கூடியிருக்கும் இடத்தில் முந்திரிக் கொட்டை போல் பேசாமல் இருக்கிற அடக்கமானது எல்லா நலன்களிலும் சிறந்த நலனாகும்.

716 ஆற்றின் நிலை-தளர்ந்தற்றே; வியன்-புலம்-
ஏற்று, உணர்வார்-முன்னர் இழுக்கு.

அறிவுத்திறனால் பெருமை பெற்றோர் முன்னிலையில் ஆற்றிடும் உரையில் குற்றம் ஏற்படுமானால், அது ஒழுக்க நெறியிலிருந்து தளர்ந்து வீழ்ந்து விட்டதற்கு ஒப்பானதாகும்.

717 கற்று-அறிந்தார் கல்வி விளங்கும்; கசடு-அற
சொல்-தெரிதல் வல்லார் அகத்து.

மாசற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து உரை நிகழ்த்துவோரிடமே அவர் கற்றுத் தேர்ந்த கல்வியின் பெருமை விளங்கும்.

718 உணர்வது உடையார்-முன் சொல்லல்; வளர்வதன்
பாத்தியுள் நீர்-சொரிந்தற்று.

உணர்ந்து கொள்ளக்கூடிய ஆற்றல் உள்ளவர்களின் முன்னிலையில் பேசுதல், தானே வளரக்கூடிய பயிர் உள்ள பாத்தியில் நீர் பாய்ச்சுவது போலப் பயன் விளைக்கும்.

719 புல்-அவையுள் பொச்சாந்தும் சொல்லற்க; நல்-அவையுள்
நன்கு செலச்-சொல்லுவார்!

நல்லோர் நிறைந்த அவையில் மனத்தில் பதியும்படி கருத்துகளைச் சொல்லும் வல்லமை பெற்றவர்கள், அறிவற்ற பொல்லாதோர் உள்ள அவையில் அறவே பேசாமலிருப்பதே நலம்.

720 அங்கணத்துள் உக்க அமிழ்து-அற்றால்; தம்-கணத்தர்
அல்லார்-முன் கோட்டி கொளல்!

அறிவுள்ளவர்கள், அறிவில்லாதவர்களின் அவையில் பேசுவது, தூய்மையில்லாத முற்றத்தில் சிந்திடும் அமிழ்தம்போல் வீணாகிவிடும்.

# 73. அவை அஞ்சாமை

721 வகை-அறிந்து, வல்-அவை, வாய்-சோரார்; சொல்லின்
தொகை-அறிந்த தூய்மையவர்.

சொற்களை அளவறிந்து உரைத்திடும் தூயவர்கள் அவையிலிருப்போரின் வகையறியும் ஆற்றல் உடையவராயிருப்பின் பிழை நேருமாறு பேச மாட்டார்கள்.

722 கற்றாருள் கற்றார் எனப்படுவர்; கற்றார்-முன்
கற்ற செலச்-சொல்லுவார்.

கற்றவரின் முன் தாம் கற்றவற்றை அவருடைய மனத்தில் பதியுமாறு சொல்ல வல்லவர், கற்றவர் எல்லாரினும் மேலானவராக மதித்துச் சொல்லப்படுவார்.

723 பகையகத்துச் சாவார் எளியர்; அரியர்
அவையகத்து அஞ்சாதவர்.

அமர்க்களத்தில் சாவுக்கும் அஞ்சாமல் போரிடுவது பலருக்கும் எளிதான செயல், அறிவுடையோர் நிறைந்த அவைக்களத்தில் அஞ்சாமல் பேசக்கூடியவர் சிலரேயாவர்.

724 கற்றார்-முன் கற்ற செலச்-சொல்லி, தாம்-கற்ற,
மிக்காருள், மிக்க கொளல்.

அறிஞர்களின் அவையில் நாம் கற்றவைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு எடுத்துச் சொல்லி நம்மைவிட அதிகம் கற்றவரிடமிருந்து மேலும் பலவற்றை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

725 ஆற்றின், அளவு-அறிந்து கற்க; அவை-அஞ்சா
மாற்றம் கொடுத்தற்-பொருட்டு.

அவையில் பேசும்பொழுது குறுக்கீடுகளுக்கு அஞ்சாமல் மறுமொழி சொல்வதற்கு ஏற்ற வகையில் இலக்கணமும், தருக்கமெனப்படும் அளவைத் திறமும் கற்றிருக்க வேண்டும்.

726 வாளொடு-என், வன்கண்ணர் அல்லார்க்கு? நூலொடு-என்,
நுண்-அவை அஞ்சுபவர்க்கு?

கோழைகளுக்குக் கையில் வாள் இருந்தும் பயனில்லை; அவையில் பேசிட அஞ்சுவோர் பலநூல் கற்றும் பயனில்லை.

727 பகையகத்துப் பேடி-கை ஒள்-வாள்; அவையகத்து
அஞ்சுமவன் கற்ற நூல்.

அவை நடுவில் பேசப் பயப்படுகிறவன், என்னதான் அரிய நூல்களைப் படித்திருந்தாலும் அந்த நூல்கள் அனைத்தும் போர்க்களத்தில் ஒரு பேடியின் கையில் உள்ள கூர்மையான வாளைப் போலவே பயனற்றவைகளாகி விடும்.

728 பல்லவை கற்றும், பயம்-இலரே; நல்-அவையுள்
நன்கு செலச்-சொல்லாதார்.

அறிவுடையோர் நிறைந்த அவையில், அவர்கள் மனத்தில் பதியும் அளவுக்குக் கருத்துகளைச் சொல்ல இயலாவிடின், என்னதான் நூல்களைக் கற்றிருந்தாலும் பயன் இல்லை.

729 ‘கல்லாதவரின் கடை’ என்ப; ‘கற்று-அறிந்தும்,
நல்லார் அவை-அஞ்சுவார்’.

ஆன்றோர் நிறைந்த அவையில் பேசுவதற்கு அஞ்சுகின்றவர்கள், எத்தனை நூல்களைக் கற்றிருந்த போதிலும், அவர்கள் கல்லாதவர்களைவிட இழிவானவர்களாகவே கருதப்படுவார்கள்.

730 உளர்-எனினும், இல்லாரொடு ஒப்பர்; களன்-அஞ்சி,
கற்ற செலச்-சொல்லாதார்.

தாம் கற்றவைகளைக் கேட்போரைக் கவரும் வண்ணம் கூற இயலாமல் அவைக்கு அஞ்சுவோர், உயிரோடு இருந்தாலும்கூட இறந்தவருக்குச் சமமானவராகவே கருதப்படுவார்கள்.

# 74. நாடு

731 தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்வு-இலாச்-
செல்வரும் சேர்வது; நாடு.

செழிப்புக் குறையாத விளைபொருள்களும், சிறந்த பெருமக்களும், செல்வத்தைத் தீயவழியில் செலவிடாதவர்களும் அமையப்பெற்றதே நல்ல நாடாகும்.

732 பெரும்-பொருளான் பெட்டக்கது-ஆகி, அருங்-கேட்டால்,
ஆற்ற விளைவது; நாடு.

பொருள் வளம் நிறைந்ததாகவும், பிறர் போற்றத் தக்கதாகவும், கேடற்றதாகவும், நல்ல விளைச்சல் கொண்டதாகவும் அமைவதே சிறந்த நாடாகும்.

733 பொறை-ஒருங்கு மேல்வருங்கால் தாங்கி, இறைவற்கு
இறை-ஒருங்கு நேர்வது; நாடு.

புதிய சுமைகள் ஒன்றுதிரண்டு வரும் போதும் அவற்றைத் தாங்கிக் கொண்டு, அரசுக்குரிய வரி வகைகளைச் செலுத்துமளவுக்கு வளம் படைத்ததே சிறந்த நாடாகும்.

734 உறு-பசியும், ஓவாப்-பிணியும், செறு-பகையும்
சேராது-இயல்வது; நாடு.

பசியும், பிணியும், பகையுமற்ற நாடுதான் சிறந்த நாடு எனப் பாராட்டப்படும்.

735 பல்-குழுவும், பாழ்-செய்யும் உட்-பகையும், வேந்து-
அலைக்கும்
கொல்-குறும்பும் இல்லது; நாடு.

பல குழுக்களாகப் பிரிந்து பாழ்படுத்தும் உட்பகையும் அரசில் ஆதிக்கம் செலுத்தும் கொலைகாரர்களால் விளையும் பொல்லாங்கும் இல்லாததே சிறந்த நாடாகும்.

736 கேடு-அறியா, கெட்ட-இடத்தும் வளம்-குன்றா-
நாடு என்ப; நாட்டின் தலை.

எந்த வகையிலும் கெடுதலை அறியாமல், ஒருவேளை கெடுதல் ஏற்படினும் அதனைச் சீர் செய்யுமளவுக்கு வளங்குன்றா நிலையில் உள்ள நாடுதான், நாடுகளிலேயே தலைசிறந்ததாகும்.

737 இரு-புனலும், வாய்ந்த-மலையும், வரு-புனலும்,
வல்-அரணும்; நாட்டிற்கு உறுப்பு.

ஆறு, கடல் எனும் இருபுனலும், வளர்ந்தோங்கி நீண்டமைந்த மலைத் தொடரும், வருபுனலாம் மழையும், வலிமைமிகு அரணும், ஒரு நாட்டின் சிறந்த உறுப்புகளாகும்.

738 பிணி-இன்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம்;
அணி-என்ப; நாட்டிற்கு இவ்-ஐந்து.

மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்ப நிலை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டுக்கு அழகு எனக் கூறப்படுபவைகளாகும்.

739 நாடு-என்ப, நாடா வளத்தன; நாடு-அல்ல,
நாட, வளம்-தரும் நாடு.

இடைவிடாமல் முயற்சி மேற்கொண்டு வளம் பெறும் நாடுகளை விட, இயற்கையிலேயே எல்லா வளங்களையும் உடைய நாடுகள் சிறந்த நாடுகளாகும்.

740 ஆங்கு-அமைவு எய்தியக்-கண்ணும் பயம்-இன்றே;
வேந்து-அமைவு இல்லாத நாடு.

நல்ல அரசு அமையாத நாட்டில் எல்லாவித வளங்களும் இருந்தாலும் எந்தப் பயனும் இல்லாமற் போகும்.

# 75. அரண்

741 ஆற்றுபவர்க்கும் அரண்-பொருள்; அஞ்சித் தற்-
போற்றுபவர்க்கும் பொருள்.

பகைவர் மீது படையெடுத்துச் செல்பவர்க்கும் கோட்டை பயன்படும்; பகைவர்க்கு அஞ்சித் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முனைவோர்க்கும் கோட்டை பயன்படும்.

742 மணி-நீரும், மண்ணும், மலையும், அணி-நிழல்-
காடும் உடையது; அரண்.

ஆழமும் அகலமும் கொண்ட அகழ், பரந்த நிலம், உயர்ந்து நிற்கும் மலைத்தொடர், அடர்ந்திருக்கும் காடு ஆகியவற்றை உடையதே அரணாகும்.

743 'உயர்வு, அகலம், திண்மை, அருமை; இந்-நான்கின்
அமைவு-அரண்' என்று-உரைக்கும் நூல்.

உயரம், அகலம், உறுதி, பகைவரால் அழிக்க இயலாத அமைப்பு ஆகிய நான்கும் அமைந்திருப்பதே அரணுக்குரிய இலக்கணமாகும்.

744 சிறு-காப்பின் பேர்-இடத்தது-ஆகி, உறு-பகை
ஊக்கம் அழிப்பது; அரண்.

உட்பகுதி பரந்த இடமாக அமைந்து, பாதுகாக்கப் படவேண்டிய பகுதி சிறிய இடமாக அமைந்து, கடும் பகையின் ஆற்றலை அழிக்கக் கூடியதே அரண் எனப்படும்.

745 கொளற்கு-அரிதாய், கொண்ட-கூழ்த்து-ஆகி, அகத்தார்
நிலைக்கு-எளிது-ஆம் நீரது; அரண்.

முற்றுகையிட்டுக் கைப்பற்ற முடியாமல், உள்ளேயிருக்கும் படையினர்க்கும் மக்களுக்கும் வேண்டிய உணவுடன், எதிரிகளுடன் போர் புரிவதற்கு எளிதானதாக அமைக்கப்பட்டுள்ளதே அரண் ஆகும்.

746 எல்லாப்-பொருளும் உடைத்தாய், இடத்து-உதவும்
நல்-ஆள் உடையது; அரண்.

போருக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் கொண்டதாகவும், களத்தில் குதிக்கும் வலிமை மிக்க வீரர்களை உடையதாகவும் இருப்பதே அரண் ஆகும்.

747 முற்றியும், முற்றாது-எறிந்தும், அறைப்படுத்தும்,
பற்றற்கு அரியது; அரண்.

முற்றுகையிட்டோ, முற்றுகையிடாமலோ அல்லது வஞ்சனைச் சூழ்ச்சியாலோ பகைவரால் கைப்பற்றப்பட முடியாத வலிமையுடையதே அரண் எனப்படும்.

748 முற்று-ஆற்றி முற்றியவரையும், பற்று-ஆற்றி,
பற்றியார் வெல்வது; அரண்.

முற்றகையிடும் வலிமைமிக்க படையை எதிர்த்து, உள்ளேயிருந்து கொண்டே போர் செய்து வெல்வதற்கு ஏற்ற வகையில் அமைந்ததே அரண் ஆகும்.

749 முனை-முகத்து மாற்றலர் சாய, வினை-முகத்து
வீறு-எய்தி மாண்டது; அரண்.

போர் முனையில் பகைவரை வீழ்த்துமளவுக்கு உள்ளேயிருந்து கொண்டே தாக்குதல் நடத்தும் வண்ணம் தனிச்சிறப்புப் பெற்றுத் திகழ்வதே அரண் ஆகும்.

750 எனை-மாட்சித்து ஆகியக்-கண்ணும், வினை-மாட்சி-
இல்லார்கண் இல்லது; அரண்.

கோட்டைக்குத் தேவையான எல்லாவித சிறப்புகளும் இருந்தாலும்கூட உள்ளிருந்து செயல்படுவோர் திறமையற்றவர்களாக இருந்தால் எந்தப் பயனும் கிடையாது.

# 76. பொருள் செயல் வகை

751 பொருள்-அல்லவரைப் பொருளாகச்-செய்யும்
பொருள்-அல்லது, இல்லை பொருள்.

மதிக்கத் தகாதவர்களையும் மதிக்கக்கூடிய அளவுக்கு உயர்த்திவிடுவது அவர்களிடம் குவிந்துள்ள பணத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

752 இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர், சிறப்பு.

பொருள் உள்ளவர்களைப் புகழ்ந்து போற்றுவதும் இல்லாதவர்களை இகழ்ந்து தூற்றுவதும்தான் இந்த உலக நடப்பாக உள்ளது.

753 பொருள்-என்னும் பொய்யா-விளக்கம்; இருள்-அறுக்கும்
எண்ணிய தேயத்துச்-சென்று.

பொருள் என்னும் அணையா விளக்கு மட்டும் கையில் இருந்துவிட்டால் நினைத்த இடத்துக்குச் சென்று இருள் என்னும் துன்பத்தைத் துரத்தி விட முடிகிறது.

754 அறன்-ஈனும்; இன்பமும்-ஈனும்; திறன்-அறிந்து,
தீது-இன்றி வந்த பொருள்.

தீய வழியை மேற்கொண்டு திரட்டப்படாத செல்வம்தான் ஒருவருக்கு அறநெறியை எடுத்துக்காட்டி, அவருக்கு இன்பத்தையும் தரும்.

755 அருளொடும், அன்பொடும் வாராப்-பொருள்-ஆக்கம்
புல்லார், புரள விடல்!

பெரும் செல்வமாக இருப்பினும் அது அருள் நெறியிலோ அன்பு வழியிலோ வராதபோது அதனைப் புறக்கணித்துவிட வேண்டும்.

756 உறு-பொருளும், உல்கு-பொருளும், தன்-ஒன்னார்த்-
தெறு-பொருளும்; வேந்தன் பொருள்.

வரியும், சுங்கமும், வெற்றி கொள்ளப்பட்ட பகை நாடு செலுத்தும் கப்பமும் அரசுக்குரிய பொருளாகும்.

757 அருள்-என்னும் அன்பு-ஈன்-குழவி; பொருள்-என்னும்
செல்வச் செவிலியால், உண்டு.

அன்பு என்கிற அன்னை பெற்றெடுக்கும் அருள் என்கிற குழந்தை, பொருள் என்கிற செவிலித் தாயால் வளரக் கூடியதாகும்.

758 குன்று-ஏறி, யானைப்-போர் கண்டற்றால்; தன்-கைத்து-
ஒன்று
உண்டாகச் செய்வான் வினை.

தன் கைப்பொருளைக்கொண்டு ஒரு தொழில் செய்வது என்பது யானைகள் ஒன்றோடொன்று போரிடும் போது இடையில் சிக்கிக் கொள்ளாமல் அந்தப் போரை ஒரு குன்றின் மீது நின்று காண்பதைப் போன்று இலகுவானது.

759 செய்க பொருளை! செறுநர் செருக்கு-அறுக்கும்
எஃகு அதனின்-கூரியது இல்.

பகைவரின் செருக்கை அழிக்கும் தகுதியான கருவி பொருளைத் தவிர வேறொன்றும் இல்லாததால் அதனைச் சேமிக்க வேண்டியுள்ளது.

760 ஒண்-பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு; எண்-பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.

அறம் பொருள் இன்பம் எனும் மூன்றினுள் பொருந்தும் வழியில் பொருளை மிகுதியாக ஈட்டியவர்களுக்கு ஏனைய இரண்டும் ஒன்றாகவே எளிதில் வந்து சேரும்.

# 77. படை

761 உறுப்பு-அமைந்து, ஊறு-அஞ்சா, வெல்-படை; வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை.

எல்லா வகைகளும் நிறைந்ததாகவும், இடையூறுகளுக்கு அஞ்சாமல் போரிடக்கூடியதாகவும் உள்ள படை ஓர் அரசின் மிகச் சிறந்த செல்வமாகும்.

762 உலைவு-இடத்து ஊறு-அஞ்சா வன்கண்; தொலைவு-இடத்து
தொல்-படைக்கு அல்லால், அரிது.

போரில் சேதமுற்று வலிமை குன்றியபோதும், எவ்வித இடையூறுகளுக்கும் அஞ்சாத நெஞ்சுறுதி, பழம்பெருமை கொண்ட படைக்கு அல்லாமல் வேறு எந்தப் படைக்கும் இருக்க முடியாது.

763 ஒலித்தக்கால் என்-ஆம், உவரி எலிப்பகை?
நாகம் உயிர்ப்ப, கெடும்.

எலிகள் கூடி கடல்போல முழங்கிப், பகையைக் கக்கினாலும், நாகத்தின் மூச்சொலிக்கு முன்னால் நிற்க முடியுமா? அதுபோலத்தான் வீரன் வெகுண்டு எழுந்தால் வீணர்கள் வீழந்துபடுவார்கள்.

764 அழிவு-இன்று, அறை-போகாது-ஆகி, வழி-வந்த
வன்கண்-அதுவே; படை.

எந்த நிலையிலும் அழியாததும், சூழ்ச்சிக்கு இரையாகாததும், பரம்பரையாகவே பயமற்ற உறுதி உடையதும்தான் உண்மையான படை எனப்படும்.

765 கூற்று-உடன்று மேல்-வரினும், கூடி, எதிர்-நிற்கும்
ஆற்றல்-அதுவே; படை.

உயிரைப் பறிக்கும் சாவு எதிர்கொண்டு வந்தாலும் அஞ்சாமல் ஒன்றுபட்டு எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடையதற்கே படை என்ற பெயர் பொருந்தும்.

766 மறம், மானம், மாண்ட-வழிச்-செலவு, தேற்றம்;
என-நான்கே ஏமம், படைக்கு.

வீரம், மான உணர்வு, முன்னோர் சென்ற வழி நடத்தல், தலைவனின் நம்பிக்கையைப் பெறுதல் ஆகிய நான்கும் படையைப் பாதுகாக்கும் பண்புகளாகும்.

767 தார்-தாங்கிச் செல்வது தானை; தலைவந்த
போர்-தாங்கும் தன்மை அறிந்து.

களத்தில், முதலில் எதிர்கொள்ளும் போரைத் தாங்கித் தகர்க்கும் ஆற்றலை அறிந்திருப்பின், அதுவே வெற்றி மாலை தாங்கிச் செல்லக்கூடிய சிறந்த படையாகும்.

768 அடல்-தகையும், ஆற்றலும், இல்-எனினும்; தானை
படைத்-தகையான் பாடு-பெறும்.

பகைவர்க்கு அஞ்சாத வீரம் பெரும் ஆண்மை என்று போற்றப்படும். அந்தப் பகைவர்க்கு ஒரு துன்பம் வரும்போது அதைத் தீர்க்க உதவிடுவது ஆண்மையின் உச்சம் எனப் புகழப்படும்.

769 சிறுமையும், செல்லாத்-துனியும், வறுமையும்
இல்லாயின்; வெல்லும் படை.

போர் புரியும் வீரம், எதிர்த்து நிற்கும் வல்லமை ஆகிய இரண்டையும் விட ஒரு படையின் அணிவகுப்புத் தோற்றம் சிறப்புடையதாக அமைய வேண்டும்.

770 நிலை-மக்கள் சால-உடைத்து எனினும்; தானை
தலை-மக்கள் இல்வழி இல்.

சிறுத்துவிடாமலும், தலைவனை வெறுத்துவிடாமலும், பயன்படாத நிலை இல்லாமலும் உள்ள படைதான் வெற்றி பெற முடியும்.

# 78. படைச் செருக்கு

771 என்னை முன்-நில்லன்-மின் தெவ்விர்! பலர், என்னை
முன்-நின்று கல் நின்றவர்.

உறுதிவாய்ந்த வீரர்களை அதிகம் உடையதாக இருந்தாலும் தலைமை தாங்கும் தலைவர்கள் இல்லாவிட்டால் அந்தப் படை நிலைத்து நிற்க முடியாது.

772 கான முயல்-எய்த அம்பினில்; யானை
பிழைத்த-வேல் ஏந்தல் இனிது.

போர்க்களத்து வீரன் ஒருவன், "பகைவர்களே என் தலைவனை எதிர்த்து நிற்காதீர்; அவனை எதிர்த்து நடுகல்லாய்ப் போனவர்கள் பலர்" என முழங்குகிறான்.

773 பேர்-ஆண்மை என்ப, தறுகண்; ஒன்று-உற்றக்கால்,
ஊராண்மை மற்று-அதன் எஃகு.

வலிவு மிகுந்த யானைக்குக் குறிவைத்து, அந்தக் குறி தப்பினாலும்கூட அது, வலிவற்ற முயலுக்குக் குறிவைத்து அதனை வீழ்த்துவதைக் காட்டிலும் சிறப்புடையது.

774 கை-வேல் களிற்றொடு-போக்கி வருபவன்
மெய்-வேல் பறியா, நகும்.

கையிலிருந்த வேலினை யானையின் மீது வீசி விட்டதால் களத்தில் போரினைத் தொடர வேறு வேல் தேடுகிற வீரன், தன் மார்பின்மீதே ஒரு வேல் பாய்ந்திருப்பது கண்டு மகிழ்ந்து அதனைப் பறித்துப் பகையை எதிர்த்திடுகின்றான்.

775 விழித்த-கண் வேல்-கொண்டு-எறிய; அழித்து-இமைப்பின்
ஓட்டு-அன்றோ, வன்கணவர்க்கு?

களத்தில் பகைவர் வீசிடும் வேல் பாயும்போது விழிகளை இமைத்து விட்டால்கூட அது புறமுதுகுகாட்டி ஓடுவதற்கு ஒப்பாகும்.

776 விழுப்புண் படாத-நாள்-எல்லாம்; வழுக்கினுள்-
வைக்கும், தன்-நாளை எடுத்து.

ஒரு வீரன், தான் வாழ்ந்த நாட்களைக் கணக்குப் பார்த்து அந்த நாட்களில் தன்னுடலில் விழுப்புண்படாத நாட்களையெல்லாம் வீணான நாட்கள் என்று வெறுத்து ஒதுக்குவான்.

777 சுழலும் இசை-வேண்டி, வேண்டா-உயிரார்
கழல்-யாப்புக்-காரிகை நீர்த்து.

சூழ்ந்து பரவிடும் புகழை மட்டுமே விரும்பி உயிரைப் பற்றிக் கவலைப்படாத வீரர்களின் காலில் கட்டப்படும் வீரக்கழல் தனிப் பெருமை உடையதாகும்.

778 உறின், உயிர்-அஞ்சா-மறவர்; இறைவன்-
செறினும், சீர்-குன்றல்-இலர்.

தலைவன் சினந்தாலும் சிறப்புக் குறையாமல் கடமை ஆற்றுபவர்கள்தான், போர்க்களத்தில் உயிரைப்பற்றிக் கலங்காத வீர மறவர்கள் எனப் போற்றப்படுவர்.

779 இழைத்தது இகவாமைச் சாவாரை; யாரே
பிழைத்தது ஒறுக்கிற்-பவர்?

சபதம் செய்தவாறு களத்தில் சாவதற்குத் துணிந்த வீரனை யாராவது இழித்துப் பேச முடியுமா? முடியாது.

780 புரந்தார்-கண் நீர்-மல்கச் சாகிற்-பின்; சாக்காடு
இரந்து-கோள் தக்கது உடைத்து.

தன்னைக் காத்த தலைவனுடைய கண்களில் நீர் பெருகுமாறு வீரமரணம் அடைந்தால், அத்தகைய மரணத்தை யாசித்தாவது பெற்றுக் கொள்வதில் பெருமை உண்டு.

# 79. நட்பு

781 செயற்கு-அரிய யா-உள, நட்பின்? அதுபோல்
வினைக்கு-அரிய யா-உள, காப்பு?

நட்புக் கொள்வது போன்ற அரிய செயல் இல்லை. அதுபோல் பாதுகாப்புக்கு ஏற்ற செயலும் வேறொன்றில்லை.

782 நிறை-நீர, நீரவர்-கேண்மை பிறை; மதிப்-
பின்-நீர, பேதையார் நட்பு.

அறிவுள்ளவர்களுடன் கொள்ளும் நட்பு பிறைநிலவாகத் தொடங்கி முழுநிலவாக வளரும். அறிவில்லாதவர்களுடன் கொள்ளும் நட்போ முழுமதிபோல் முளைத்துப் பின்னர் தேய்பிறையாகக் குறைந்து மறைந்து போகும்.

783 நவில்தொறும் நூல்-நயம்-போலும்; பயில்தொறும்
பண்பு-உடையாளர் தொடர்பு.

படிக்க படிக்க இன்பம் தரும் நூலின் சிறப்பைப் போல் பழகப் பழக இன்பம் தரக்கூடியது பண்புடையாளர்களின் நட்பு.

784 நகுதற்-பொருட்டு-அன்று, நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற்-பொருட்டு.

நட்பு என்பது சிரித்து மகிழ்வதற்காக அல்ல; நண்பர்கள் நல்வழி தவறிச் செல்லும்பொழுது இடித்துரைத்துத் திருத்துவதற்காகும்.

785 புணர்ச்சி, பழகுதல் வேண்டா; உணர்ச்சி-தான்
நட்பு-ஆம் கிழமை தரும்.

இருவருக்கிடையே நட்புரிமை முகிழ்ப்பதற்கு ஏற்கனவே தொடர்பும் பழக்கமும் வேண்டுமென்பதில்லை. இருவரின் ஒத்த மன உணர்வே போதுமானது.

786 முகம்-நக, நட்பது நட்பு-அன்று; நெஞ்சத்து
அகம்-நக நட்பது, நட்பு.

இன்முகம் காட்டுவது மட்டும் நட்புக்கு அடையாளமல்ல: இதயமார நேசிப்பதே உண்மையான நட்பாகும்.

787 அழிவினவை-நீக்கி, ஆறு-உய்த்து, அழிவின்கண்
அல்லல் உழப்பது-ஆம்; நட்பு.

நண்பனைத் தீயவழி சென்று கெட்டுவிடாமல் தடுத்து, அவனை நல்வழியில் நடக்கச் செய்து, அவனுக்குத் தீங்கு வருங்காலத்தில் அந்தத் தீங்கின் துன்பத்தைப் பகிர்ந்து கொள்வதே உண்மையான நட்பாகும்.

788 உடுக்கை இழந்தவன் கை-போல, ஆங்கே
இடுக்கண் களைவது-ஆம்; நட்பு.

அணிந்திருக்கும் உடை உடலைவிட்டு நழுவும்போது எப்படிக் கைகள் உடனடியாகச் செயல்பட்டு அதனைச் சரிசெய்ய உதவுகின்றனவோ அதைப்போல நண்பனுக்கு வரும் துன்பத்தைப் போக்கத் துடித்துச் செல்வதே நட்புக்கு இலக்கணமாகும்.

789 ‘நட்பிற்கு வீற்றிருக்கை யாது?’ எனின்; கொட்பு-இன்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

மனவேறுபாடு கொள்ளாமல் தன்னால் இயலும் வழிகளிலெல்லாம் துணைநின்று நண்பனைத் தாங்குவது தான் நட்பின் சிறப்பாகும்.

790 ‘இனையர், இவர்-எமக்கு; இன்னம்-யாம்’ என்று
புனையினும் புல்லென்னும்-நட்பு.

நண்பர்கள் ஒருவருக்கொருவர் “இவர் எமக்கு இத்தன்மையுடையவர்; யாம் இவருக்கு இத்தன்மையுடையோம்” என்று செயற்கையாகப் புகழ்ந்து பேசினாலும் அந்த நட்பின் பெருமை குன்றிவிடும்.

# 80. நட்பு ஆராய்தல்

791 நாடாது நட்டலின் கேடு-இல்லை; நட்ட-பின்
வீடு-இல்லை, நட்பு-ஆள்பவர்க்கு.

ஆராய்ந்து பாராமல் கொண்டிடும் தீய நட்பு, அந்த நட்பிலிருந்து விடுபட முடியாத அளவுக்குக் கேடுகளை உண்டாக்கும்.

792 ஆய்ந்து-ஆய்ந்து கொள்ளாதான் கேண்மை; கடைமுறை
தான்-சாம் துயரம் தரும்.

திரும்பத் திரும்ப ஆராய்ந்து பார்க்காமல் ஏற்படுத்திக் கொள்கிற நட்பு, கடைசியாக ஒருவர் சாவுக்குக் காரணமாகிற அளவுக்குத் துயரத்தை உண்டாக்கி விடும்.

793 குணனும், குடிமையும், குற்றமும், குன்றா-
இனனும்; அறிந்து யாக்க நட்பு.

குணமென்ன? குடிப்பிறப்பு எத்தகையது? குற்றங்கள் யாவை? குறையாத இயல்புகள் எவை? என்று அனைத்தையும் அறிந்தே ஒருவருடன் நட்புக் கொள்ள வேண்டும்.

794 குடிப்-பிறந்து, தன்கண் பழி-நாணுவானை;
கொடுத்தும் கொளல்-வேண்டும், நட்பு.

பழிவந்து சேரக் கூடாது என்ற அச்ச உணர்வுடன் நடக்கும் பண்பார்ந்த குடியில் பிறந்தவருடைய நட்பை எந்த வகையிலாவது பெற்றிருப்பது பெரும் சிறப்புக் குரியதாகும்.

795 அழச்-சொல்லி, அல்லது-இடித்து, வழக்கு-அறிய-
வல்லார்; நட்பு, ஆய்ந்து-கொளல்!

தவறு செய்கின்றவர் கண்ணீர் விடுமளவுக்குக் கண்டித்து, அறிவுரை வழங்கக் கூடிய ஆற்றலுடையவரின் நட்பையே தெளிவான நட்பாக எண்ண வேண்டும்.

796 கேட்டினும் உண்டு, ஓர்-உறுதி; கிளைஞரை
நீட்டி அளப்பது ஓர்-கோல்.

தீமை வந்தால் அதிலும் ஒரு நன்மை உண்டு. அந்தத் தீமைதான் நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று அளந்து காட்டும் கருவியாகிறது.

797 ஊதியம் என்பது ஒருவற்கு; பேதையார்-
கேண்மை ஒரீஇ-விடல்.

ஒருவருக்குக் கிடைத்த நற்பயன் என்பது அவர் அறிவில்லாத ஒருவருடன் கொண்டிருந்த நட்பைத் துறந்து விடுவதேயாகும்.

798 உள்ளற்க, உள்ளம் சிறுகுவ! கொள்ளற்க,
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு!

ஊக்கத்தைச் சிதைக்கக்கூடிய செயல்களையும், துன்பம் வரும்போது விலகிவிடக் கூடிய நண்பர்களையும் நினைத்துப் பார்க்காமலே இருந்து விட வேண்டும்.

799 கெடும்-காலைக் கைவிடுவார் கேண்மை; அடும்-காலை
உள்ளினும், உள்ளம் சுடும்.

ஒருவர் கொலைக்கு ஆளாகும் போது கூட, தனக்குக் கேடு வந்த நேரம் கைவிட்டு ஒதுங்கி ஓடிவிட்ட நண்பர்களை நினைத்து விட்டால் அந்த நினைப்பு அவரது நெஞ்சத்தைச் சுட்டுப் பொசுக்கும்.

800 மருவுக, மாசு-அற்றார் கேண்மை! ஒன்று-ஈத்தும்
ஒருவுக, ஒப்பு-இலார் நட்பு!

மனத்தில் மாசு இல்லாதவர்களையே நண்பர்களாகப் பெற வேண்டும். மாசு உள்ளவர்களின் நட்பை, விலைகொடுத்தாவது விலக்கிடவேண்டும்.

# 81. பழைமை

801 ‘பழைமை எனப்படுவது யாது?’ எனின்; யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

பழைமை பாராட்டுவது என்னவென்றால், பழகிய நண்பர்கள், தங்களின் உறவை அழியாமல் பாதுகாப்பதுதான்.

802 நட்பிற்கு உறுப்பு, கெழுதகைமை; மற்று-அதற்கு
உப்பு-ஆதல், சான்றோர் கடன்.

பழைமையான நண்பர்களின் உரிமையைப் பாராட்டுகிற சான்றோர்க்குரிய கடமைதான் உண்மையான நட்புக்கு அடையாளமாகும்.

803 பழகிய நட்பு எவன்-செய்யும்? கெழுதகைமை
செய்தாங்கு அமையாக்கடை?

பழைய நண்பர்கள் உரிமையோடு செய்த காரியங்களைத் தாமே செய்ததுபோல உடன்பட்டு இருக்காவிட்டால், அதுவரை பழகிய நட்பு பயனற்றுப் போகும்.

804 விழைதகையான் வேண்டி-இருப்பர்; கெழுதகையான்
கேளாது நட்டார் செயின்.

பழகிய நட்பின் உரிமை காரணமாகத் தமது நண்பர் தம்மைக் கேளாமலே ஒரு செயல் புரிந்து விட்டாலும்கூட நல்ல நண்பராயிருப்பவர் அதனை ஏற்றுக் கொள்ளவே செய்வார்.

805 பேதைமை ஒன்றோ, பெருங்கிழமை என்று உணர்க;
நோ-தக்க நட்டார் செயின்!

வருந்தக் கூடிய செயலை நண்பர்கள் செய்தால் அது அறியாமையினாலோ அல்லது உரிமையின் காரணமாகவோ செய்யப்பட்டது என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

806 எல்லைக்கண் நின்றார் துறவார்; தொலைவிடத்தும்,
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

நீண்டகால நண்பர்கள் தமக்குக் கேடு தருவதாக இருந்தால்கூட நட்பின் இலக்கணம் உணர்ந்தவர்கள் அவர்களது நட்பைத் துறக்க மாட்டார்கள்.

807 அழிவந்த செய்யினும், அன்பு-அறார்; அன்பின்
வழிவந்த கேண்மையவர்.

தம்முடன் பழகியவர்கள் தமக்கே எதிராக அழிவுதரும் காரியத்தைக் செய்தாலும்கூட அன்பின் அடிப்படையில் நட்புக் கொண்டவர் அதற்காக அந்த அன்பை விலக்கிக் கொள்ள மாட்டார்.

808 கேள்-இழுக்கம் கேளாக்-கெழுதகைமை வல்லார்க்கு-
நாள், இழுக்கம் நட்டார் செயின்.

நண்பர்கள் செய்யும் குற்றத்தைப் பிறர்கூறி அதனை ஏற்றுக் கொள்ளாத அளவுக்கு நம்பிக்கையான நட்புரிமை கொண்டவரிடத்திலேயே அந்த நண்பர்கள் தவறாக நடந்து கொண்டால் அவர்களுடன் நட்புக் கொண்டிருந்த நாளெல்லாம் வீணான நாளாகும்.

809 கெடாஅர், வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும், உலகு.

தொன்றுதொட்டு உரிமையுடன் பழகிய நட்புறவைக் கைவிடாமல் இருப்பவரை உலகம் போற்றும்.

810 விழையார் விழையப்படுப; பழையார்கண்
பண்பின் தலைப்பிரியாதார்.

பழமையான நண்பர்கள் தவறு செய்த போதிலும், அவர்களிடம் தமக்குள்ள அன்பை நீக்கிக் கொள்ளாதவர்களைப் பகைவரும் விரும்பிப் பாராட்டுவார்கள்.

# 82. தீ நட்பு

811 பருகுவார் போலினும், பண்பு-இலார் கேண்மை
பெருகலின், குன்றல் இனிது.

நல்ல பண்பு இல்லாதவர்கள் அன்பு வெள்ளத்தில் நம்மை மூழ்கடிப்பதுபோல் தோன்றினாலும் அவர்களது நட்பை, மேலும் வளர்த்துக் கொள்ளாமல் குறைத்துக் கொள்வதே நல்லது.

812 உறின்-நட்டு, அறின் ஒரூ-உம் ஒப்பு-இலார் கேண்மை
பெறினும், இழப்பினும், என்?

தமக்குப் பயன்கிடைக்கும்போது நண்பராக இருந்து விட்டுப் பயனில்லாதபோது பிரிந்து விடுகின்றவர்களின் நட்பு இருந்தால் என்ன? இழந்தால்தான் என்ன?

813 உறுவது சீர்தூக்கும் நட்பும், பெறுவது
கொள்வாரும், கள்வரும் நேர்.

பயனை எண்ணிப்பார்த்து அதற்காகவே நட்புக் கொள்பவரும், விலைமகளிரும், கள்வரும் ஆகிய இந்த மூவரும், ஒரே மாதிரியானவர்களே ஆவார்கள்.

814 அமரகத்து ஆற்றறுக்கும் கல்லா; மா-அன்னார்
தமரின், தனிமை தலை.

போர்க்களத்தில் கீழே தள்ளி விட்டுத் தப்பித்து ஓடிப்போகும் குதிரையைப் போன்றவர்களின் நட்பைப் பெறுவதைக் காட்டிலும் தனித்து இருப்பது எவ்வளவோ சிறப்புடையதாகும்.

815 செய்து-ஏமம் சாரா, சிறியவர் புன்-கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று.

கீழ்மக்களின் நட்பு, பாதுகாப்பாக அமையாத தீயதன்மை கொண்டது என்பதால், அவர்களுடன் நட்பு ஏற்படுவதைவிட, ஏற்படாமல் இருப்பதே நலம்.

816 பேதை பெருங்-கெழீஇ நட்பின்; அறிவு-உடையார்
ஏதின்மை, கோடி உறும்.

அறிவில்லாதவனிடம் நெருங்கிய நட்புக் கொண்டிருப்பதை விட, அறிவுடைய ஒருவரிடம் பகை கொண்டிருப்பது கோடி மடங்கு மேலானதாகும்.

817 நகை-வகையர் ஆகிய நட்பின்; பகைவரான்
பத்து-அடுத்த கோடி உறும்.

சிரித்துப் பேசி நடிப்பவர்களின் நட்பைக் காட்டிலும், பகைவர்களால் ஏற்படும் துன்பம் பத்துக்கோடி மடங்கு நன்மையானது என்று கருதப்படும்.

818 ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை
சொல்லாடார், சோரவிடல்!

நிறைவேற்றக் கூடிய செயலை, நிறைவேற்ற முடியாமல் கெடுப்பவரின் உறவை, அவருக்குத் தெரியாமலேயே மெல்ல மெல்ல விட்டு விட வேண்டும்.

819 கனவினும் இன்னாது மன்னோ; வினைவேறு,
சொல்-வேறு பட்டார் தொடர்பு!

சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பில்லாதவரின் நட்பு, கனவிலே கூடத் துன்பத்தைத்தான் கொடுக்கும்.

820 எனைத்தும் குறுகுதல் ஓம்பல்; மனைக்-கெழீஇ,
மன்றில் பழிப்பார் தொடர்பு!

தனியாகச் சந்திக்கும் போது இனிமையாகப் பழகி விட்டுப் பொது மன்றத்தில் பழித்துப் பேசுபவரின் நட்பு, தம்மை அணுகாமல் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

# 83. கூடா நட்பு

821 சீர்-இடம்-காணின், எறிதற்குப் பட்டடை;
நேரா நிரந்தவர் நட்பு.

மனதார இல்லாமல் வெளியுலகிற்கு நண்பரைப்போல் நடிப்பவரின் நட்பானது, ஒரு கேடு செய்வதற்குச் சரியான சந்தர்ப்பம் கிடைக்கும்போது இரும்பைத் துண்டாக்கத் தாங்கு பலகை போல் இருக்கும் பட்டடைக் கல்லுக்கு ஒப்பாகும்.

822 இனம்-போன்று இனம்-அல்லார் கேண்மை; மகளிர்
மனம்-போல, வேறுபடும்.

உற்றாராக இல்லாமல் உற்றார் போல நடிப்பவர்களின் நட்பு, மகளிருக்குரிய நற்பண்பு இல்லாமல் அப்பண்பு உள்ளவர் போல நடிக்கும் விலை மகளிரின் மனம்போல உள்ளொன்றும் புறமொன்றுமாக இருக்கும்.

823 பல-நல்ல கற்றக்-கடைத்தும்; மனம்-நல்லர்-
ஆகுதல், மாணார்க்கு அரிது.

அரிய நூல்கள் பலவற்றைக் கற்றிருந்த போதிலும், பகையுணர்வு படைத்தோர் மனம் திருந்தி நடப்பதென்பது அரிதான காரியமாகும்.

824 முகத்தின் இனிய நகாஅ; அகத்து-இன்னா
வஞ்சரை அஞ்சப்படும்.

சிரித்துப் பேசி நம்மைச் சீரழிக்க நினைக்கும் வஞ்சகரின் நட்புக்கு அஞ்சி ஒதுங்கிட வேண்டும்.

825 மனத்தின் அமையாதவரை, எனைத்து-ஒன்றும்,
சொல்லினான் தேறற்பாற்று அன்று.

மனம் வேறு செயல் வேறாக இருப்பவர்களின் வார்த்தைகளை நம்பி எந்தவொரு தெளிவான முடிவையும் எடுக்க இயலாது.

826 நட்டார்போல் நல்லவை சொல்லினும்; ஒட்டார்-சொல்
ஒல்லை உணரப்படும்.

பகைவர், நண்பரைப்போல இனிமையாகப் பேசினாலும், அந்தச் சொற்களில் கிடக்கும் சிறுமைக் குணம் வெளிப்பட்டே தீரும்.

827 சொல்-வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க; வில்-வணக்கம்
தீங்கு குறித்தமையான்!

பகைவரிடம் காணப்படும் சொல்வணக்கம் என்பது வில்லின் வணக்கத்தைப் போல் தீங்கு விளைவிக்கக் கூடியது என்பதால், அதனை நம்பக் கூடாது.

828 தொழுத கையுள்ளும் படை-ஒடுங்கும்; ஒன்னார்
அழுத கண்ணீரும், அனைத்து.

பகைவர்கள் வணங்குகின்ற போதுகூட அவர்களின் கைக்குள்ளே கொலைக்கருவி மறைந்திருப்பது போலவே, அவர்களின், கண்ணீர் கொட்டி அழுதிடும் போதும் சதிச்செயலே அவர்களின் நெஞ்சில் நிறைந்திருக்கும்.

829 மிகச்-செய்து, தம்-எள்ளுவாரை நகச்-செய்து,
நட்பினுள் சாப்-புல்லற்பாற்று.

வெளித்தோற்றத்திற்கு நண்பரைப்போல் நகைமுகம் காட்டி மகிழ்ந்து, உள்ளுக்குள் பகையுணர்வுடன் இகழ்பவரின் நட்பை, நலிவடையுமாறு செய்திட நாமும் அதே முறையைக் கடைப் பிடிக்க வேண்டும்.

830 பகை நட்பு-ஆம், காலம்-வருங்கால்; முகம்-நட்டு,
அகம்-நட்பு ஒரீஇ-விடல்!

பகைவருடன் பழகிடும் காலம் வருமேயானால் அகத்தளவில் இல்லாமல் முகத்தளவில் மட்டும் நட்புச் செய்து பின்னர் அந்த நட்பையும் விட்டு விட வேண்டும்.

# 84. பேதைமை

831 பேதைமை என்பது ஒன்று; ‘யாது?’ எனின்; ஏதம்-கொண்டு,
ஊதியம் போகவிடல்.

கேடு விளைவிப்பது எது? நன்மை தருவது எது? என்று தெளிவடையாமல் நன்மையை விடுத்துத் தீமையை நாடுவதே பேதைமை என்பதற்கான எடுத்துக்காட்டாகும்.

832 பேதைமையுள் எல்லாம் பேதைமை; காதன்மை
கை அல்ல-தன்கண் செயல்.

தன்னால் இயலாத செயல்களை விரும்பி, அவற்றில் தலையிடுவது என்பது பேதைமைகளில் எல்லாம் மிகப்பெரிய பேதைமையாகும்.

833 நாணாமை, நாடாமை, நார்-இன்மை, யாது-ஒன்றும்
பேணாமை; பேதை தொழில்.

வெட்கப்பட வேண்டியதற்கு வெட்கப்படாமலும், தேடவேண்டியதைத் தேடிப் பெறாமலும், அன்புகாட்ட வேண்டியவரிடத்தில் அன்பு காட்டாமலும், பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவற்றைப் பாதுகாக்காமலும் இருப்பது பேதைகளின் இயல்பாகும்.

834 ஓதி-உணர்ந்தும், பிறர்க்கு-உரைத்தும், தான்-அடங்காப்
பேதையின், பேதையார் இல்.

படித்தும், படித்ததை உணர்ந்தும், உணர்ந்ததைப் பலருக்கு உணர்த்திடவும் கூடியவர்கள், தாங்கள் மட்டும் அவ்வாறு நடக்காமலிருந்தால் அவர்களைவிடப் பேதைகள் யாரும் இருக்க முடியாது.

835 ஒருமைச்-செயல்-ஆற்றும், பேதை; எழுமையும்
தான்-புக்கு-அழுந்தும் அளறு!

தன்னிச்சையாகச் செயல்படும் பேதை, எக் காலத்திலும் துன்பமெனும் சகதியில் அழுந்திக் கிடக்க நேரிடும்.

836 பொய்படும் ஒன்றோ; புனை பூணும்; கை-அறியாப்
பேதை வினை மேற்கொளின்.

நேர்மை வழி அறியாத மூடர், மேற்கொண்ட செயலைத் தொடர முடியாமல், அதனால் அச்செயலும் கெட்டுத் தம்மையும் தண்டித்துக் கொள்வர்.

837 ஏதிலார் ஆர, தமர்-பசிப்பர்; பேதை
பெருஞ்-செல்வம் உற்றக்கடை.

அறிவில்லாப் பேதைகளிடம் குவியும் செல்வம், அயலார் சுருட்டிக் கொள்ளப் பயன்படுமேயல்லாமல், பசித்திருக்கும் பாசமுள்ள சுற்றத்தாருக்குப் பயன்படாது.

838 மையல் ஒருவன் களித்தற்றால்; பேதை-தன்
கை-ஒன்று உடைமை பெறின்.

நல்லது கெட்டது தெரியாதவன் பேதை; அந்தப் பேதையின் கையில் ஒரு பொருளும் கிடைத்துவிட்டால், பித்துப் பிடித்தவர்கள் கள்ளையும் குடித்துவிட்ட கதையாக ஆகிவிடும்.

839 பெரிது-இனிது, பேதையார் கேண்மை; பிரிவின்கண்
பீழை-தருவது ஒன்று-இல்!

அறிவற்ற பேதைகளுடன் கொள்ளும் நட்பு மிகவும் இனிமையானது; ஏனென்றால் அவர்களிடமிருந்து பிரியும்போது எந்தத் துன்பமும் ஏற்படுவதில்லை.

840 கழாஅக் கால். பள்ளியுள் வைத்தற்றால்; சான்றோர்
குழா-அத்துப் பேதை புகல்.

அறிஞர்கள் கூடியுள்ள மன்றத்தில் ஒரு முட்டாள், நுழைவது என்பது, அசுத்தத்தை மிதித்த காலைக் கழுவாமலே படுக்கையில் வைப்பதைப் போன்றது.

# 85. புல்லறிவு ஆண்மை

841 அறிவு-இன்மை, இன்மையுள் இன்மை; பிறிது-இன்மை
இன்மையா வையாது, உலகு.

அறிவுப் பஞ்சம்தான் மிகக் கொடுமையான பஞ்சமாகும். மற்ற பஞ்சங்களைக்கூட உலகம் அவ்வளவாகப் பொருட்படுத்தாது.

842 அறிவு-இலான் நெஞ்சு-உவந்து-ஈதல், பிறிது-யாதும்
இல்லை; பெறுவான் தவம்.

அறிவில்லாத ஒருவன் வள்ளலைப்போல ஒரு பொருளை மகிழ்ச்சியுடன் வழங்குவதற்குக் காரணம் வேறொன்றுமில்லை; அது அப்பொருளைப் பெறுகிறவன் பெற்றபேறு என்றுதான் கருத வேண்டும்.

843 அறிவு-இலார் தாம்-தம்மைப் பீழிக்கும் பீழை;
செறுவார்க்கும் செய்தல் அரிது.

எதிரிகளால்கூட வழங்க முடியாத வேதனையை, அறிவில்லாதவர்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கிக் கொள்வார்கள்.

844 'வெண்மை எனப்படுவது யாது?' எனின்; 'ஒண்மை
உடையம் யாம்!' என்னும் செருக்கு.

ஒருவன் தன்னைத்தானே அறிவுடையவனாக மதித்துக் கொள்ளும் ஆணவத்திற்குப் பெயர்தான் அறியாமை எனப்படும்.

845 கல்லாத மேற்கொண்டு ஒழுகல்; கசடு-அற
வல்லதூஉம், ஐயம் தரும்.

அறிந்து கொள்ளாதவைகளையும் அறிந்தவர் போல ஒருவர் போலித்தனமாகக் காட்டிக் கொள்ளும் போது, அவர் ஏற்கனவே எந்தத் துறையில் திறமையுடையவராக இருக்கிறாரோ அதைப் பற்றிய சந்தேகமும் மற்றவர்களுக்கு உருவாகும்.

846 அற்றம் மறைத்தலோ புல்லறிவு; தம்வயின்
குற்றம் மறையா-வழி.

தமது குற்றத்தை உணர்ந்து அதை நீக்காமல் உடலை மறைக்க மட்டும் உடை அணிவது மடமையாகும்.

847 அரு-மறை சோரும் அறிவு-இலான் செய்யும்,
பெரு-மிறை, தானே தனக்கு.

நல்வழிக்கான அறிவுரைகளைப் போற்றி அவ்வழி நடக்காத அறிவிலிகள், தமக்குத் தாமே பெருந் துன்பத்தைத் தேடிக் கொள்வார்கள்.

848 ஏவவும் செய்கலான்; தான் தேறான்; அவ்-உயிர்
போஒம் அளவும் ஓர்-நோய்.

சொந்தப் புத்தியும் இல்லாமல் சொல் புத்தியும் கேட்காதவருக்கு அதுவே அவர் வாழ்நாள் முழுதும் அவரை விட்டு நீங்காத நோயாகும்.

849 காணாதாற் காட்டுவான் தான்-காணான்; காணாதான்
கண்டான் ஆம், தான்-கண்ட-ஆறு.

அறிவற்ற ஒருவன், தான் அறிந்ததை மட்டும் வைத்துக் கொண்டு, தன்னை அறிவுடையவனாகக் காட்டிக் கொள்வான். அவனை உண்மையிலேயே அறிவுடையவனாக்க முயற்சி செய்பவன் தன்னையே அறிவற்ற நிலைக்கு ஆளாக்கிக் கொள்வான்.

850 உலகத்தார், ‘உண்டு’ என்பது ‘இல்’ என்பான்; வையத்து
அலகையா வைக்கப்படும்.

ஆதாரங்களைக் காட்டி இதுதான் உண்மை என்று தெளிவாகக் கூறப்படுகிற ஒன்றை, வேண்டுமென்றே இல்லை என மறுத்துரைப்பவரைப் “பேய்"களின் பட்டியலில்தான் வைக்க வேண்டும்.

# 86. இகல்

851 இகல்-என்ப; எல்லா உயிர்க்கும் பகல்-என்னும்
பண்பு-இன்மை பாரிக்கும் நோய்.

மனமாறுபாடு காரணமாக ஏற்படுகிற பகையுணர்வு மக்களை ஒன்று சேர்ந்து வாழ முடியாமல் செய்கிற தீய பண்பாகும்.

852 பகல்-கருதிப் பற்றா-செயினும்; இகல்-கருதி,
இன்னா-செய்யாமை தலை.

வேற்றுமை கருதி வெறுப்பான செயல்களில் ஒருவன் ஈடுபடுகிறான் என்றாலும் அவனோடு கொண்டுள்ள மாறுபாடு காரணமாக அவனுக்குத் துன்பம் தரும் எதனையும் செய்யாதிருப்பதே சிறந்த பண்பாகும்.

853 இகல்-என்னும் எவ்வ-நோய்-நீக்கின்; தவல்-இல்லாத்
தா-இல் விளக்கம் தரும்.

மனமாறுபாடு என்னும் நோயை யார் தாங்கள் மனத்தை விட்டு அகற்றிவிடுகிறார்களோ அவர்களுக்கு மாசற்ற நீடித்த புகழ் உண்டாகும்.

854 இன்பத்துள் இன்பம் பயக்கும்; இகல்-என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

துன்பத்திலேயே பெருந்துன்பம் பகையுணர்வுதான். அந்த உணர்வை ஒருவன் அகற்றி விடுவானேயானால், அது இன்பத்திலேயே பெரும் இன்பமாகும்.

855 இகல் எதிர்-சாய்ந்து ஒழுக-வல்லாரை, யாரே,
மிகல்-ஊக்கும் தன்மையவர்?

மனத்தில் மாறுபாடான எண்ணம் உருவானால் அதற்கு இடம் தராமல் நடக்கக்கூடிய ஆற்றலுடையவர்களை வெல்லக்கூடியவர்கள் யாருமில்லை.

856 இகலின் மிகல்-இனிது என்பவன் வாழ்க்கை;
தவலும், கெடலும் நணித்து.

மாறுபாடு கொண்டு எதிர்ப்பதால் வெற்றி பெறுவது எளிது என எண்ணிச் செயல்படுபவரின் வாழ்க்கை, விரைவில் தடம்புரண்டு கெட்டொழியும்.

857 மிகல்-மேவல் மெய்ப்-பொருள் காணார்; இகல்-மேவல்
இன்னா அறிவினவர்.

பகை உணர்வு கொள்ளும் தீய அறிவுடையவர்கள் வெற்றிக்கு வழிகாட்டும் உண்மைப் பொருளை அறியமாட்டார்கள்.

858 இகலிற்கு எதிர்-சாய்தல் ஆக்கம்; அதனை
மிகல்-ஊக்கின், ஊக்குமாம் கேடு.

மனத்தில் தோன்றும் மாறுபாட்டை எதிர்கொண்டு நீக்கிக் கொண்டால் நன்மையும், அதற்கு மாறாக அதனை மிகுதியாக ஊக்கப்படுத்தி வளர்த்துக் கொண்டால் தீமையும் விளையும்.

859 இகல்-காணான், ஆக்கம் வருங்கால்; அதனை
மிகல்-காணும், கேடு தரற்கு.

ஒருவன் தனக்கு நன்மை வரும்போது மாறுபாட்டை நினைக்காமலே இருப்பான். ஆனால் தனக்குத் தானே கேடு தேடிக் கொள்வதென்றால் அந்த மாறுபாட்டைப் பெரிதுபடுத்திக் கொள்வான்.

860 இகலான்-ஆம், இன்னாத எல்லாம்; நகலான்-ஆம்,
நல்-நயம் என்னும் செருக்கு.

மனமாறுபாடு கொண்டு பகையுணர்வைக் காட்டுவோரைத் துன்பங்கள் தொடரும். நட்புணர்வோடு செயல்படுவோர்க்குப் பெரு மகிழ்ச்சி எனும் நற்பயன் விளையும்.

# 87. பகைமாட்சி

861 வலியார்க்கு மாறு-ஏற்றல் ஓம்புக! ஓம்பா,
மெலியார்-மேல் மேக, பகை!

மெலியோரை விடுத்து, வலியோரை எதிர்த்துப் போரிட விரும்புவதே பகைமாட்சி எனப் போற்றப்படும்.

862 அன்பு-இலன்; ஆன்ற-துணை-இலன்; தான்-துவ்வான்;
என்-பரியும், ஏதிலான் துப்பு?

உடனிருப்போரிடம் அன்பு இல்லாமல், வலிமையான துணையுமில்லாமல், தானும் வலிமையற்றிருக்கும்போது பகையை எப்படி வெல்ல முடியும்?

863 அஞ்சும்; அறியான்; அமைவு-இலன்; ஈகலான்;
தஞ்சம் எளியன், பகைக்கு.

அச்சமும், மடமையும் உடையவனாகவும், இணைந்து வாழும் இயல்பும், இரக்க சிந்தையும் இல்லாதவனாகவும் ஒருவன் இருந்தால், அவன் பகைவரால் எளிதில் வெல்லப்படுவான்.

864 நீங்கான் வெகுளி; நிறை-இலன்; எஞ்ஞான்றும்,
யாங்கணும், யார்க்கும், எளிது.

சினத்தையும் மனத்தையும் கட்டுப்படுத்த முடியாதவர்களை, எவர் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் எளிதில் தோற்கடித்து விடலாம்.

865 வழி-நோக்கான்; வாய்ப்பன செய்யான்; பழி-நோக்கான்;
பண்பு-இலன்; பற்றார்க்கு இனிது.

நல்வழி நாடாமல், பொருத்தமானதைச் செய்யாமல், பழிக்கு அஞ்சாமல், பண்பும் இல்லாமல் ஒருவன் இருந்தால் அவன் பகைவரால் எளிதில் வெல்லப்படுவான்.

866 காணாச் சினத்தான், கழி-பெருங் காமத்தான்;
பேணாமை பேணப்படும்.

சிந்திக்காமலே சினம் கொள்பவனாகவும், பேராசைக்காரனாகவும் இருப்பவனின் பகையை ஏற்று எதிர் கொள்ளலாம்.

867 கொடுத்தும் கொளல்-வேண்டும் மன்ற; அடுத்து-இருந்து,
மாணாத செய்வான் பகை.

தன்னோடு இருந்துகொண்டே தனக்குப் பொருந்தாத காரியங்களைச் செய்து கொண்டிருப்பவனைப் பொருள் கொடுத்தாவது பகைவனாக்கிக் கொள்ள வேண்டும்.

868 குணன் இலனாய், குற்றம் பல-ஆயின், மாற்றார்க்கு,
இனன்-இலன்-ஆம்; ஏமாப்பு உடைத்து.

குணக்கேடராகவும், குற்றங்கள் மலிந்தவராகவும் ஒருவர் இருந்தால், அவர் பக்கத் துணைகளை இழந்து பகைவரால் எளிதாக வீழ்த்தப்படுவார்.

869 செறுவார்க்குச் சேண், இகவா, இன்பம்; அறிவு-இலா
அஞ்சும் பகைவர்ப் பெறின்.

அஞ்சிடும் கோழைகளாகவும், அறிவில்லாக் கோழைகளாகவும் பகைவர்கள் இருப்பின் அவர்களை எதிர்ப்போரை விடுத்து வெற்றியெனும் இன்பம் விலகாமலே நிலைத்து நிற்கும்.

870 கல்லான் வெகுளும் சிறு-பொருள்; எஞ்ஞான்றும்,
ஒல்லானை ஒல்லாது, ஒளி.

போர்முறை கற்றிடாத பகைவர்களைக்கூட எதிர்ப்பதற்குத் தயக்கம் காட்டுகிறவர்கள், உண்மையான வீரர்களை எப்படி எதிர்கொள்வார்கள் எனக் கேலிபுரிந்து, புகழ் அவர்களை அணுகாமலே விலகிப் போய்விடும்.

# 88. பகைத் திறம் தெரிதல்

871 பகை-என்னும் பண்பு-இலதனை, ஒருவன்
நகையேயும், வேண்டற்பாற்று அன்று.

பகை உணர்வு என்பது பண்புக்கு மாறுபாடானது என்பதால் அதனை வேடிக்கை விளையாட்டாகக்கூட ஒருவன் கொள்ளக் கூடாது.

872 வில்-ஏர் உழவர் பகை-கொளினும்; கொள்ளற்க
சொல்-ஏர் உழவர் பகை!

படைக்கலன்களை உடைய வீரர்களிடம்கூடப் பகை கொள்ளலாம். ஆனால் சொல்லாற்றல் மிக்க அறிஞர் பெருமக்களுடன் பகை கொள்ளக் கூடாது.

873 ஏமுற்ற-வரினும் ஏழை; தமியனாய்ப்
பல்லார், பகை கொள்பவன்.

தனியாக நின்று பலரின் பகையைத் தேடிக் கொள்பவனை ஆணவம் பிடித்தவன் என்பதைவிட அறிவிலி என்பதே பொருத்தமாகும்.

874 பகை-நட்பாக் கொண்டு-ஒழுகும் பண்பு-உடையாளன்
தகைமைக்கண் தங்கிற்று, உலகு.

பகைவர்களையும் நண்பர்களாகக் கருதிப் பழகுகின்ற பெருந்தன்மையான பண்பை இந்த உலகமே போற்றிப் புகழும்.

875 தன்-துணை இன்றால்; பகை-இரண்டால்; தான்-ஒருவன்
இன்-துணையாக்-கொள்க, அவற்றின் ஒன்று!

தனது பகைவர்கள் இரு பிரிவினராக இயங்கும் நிலையில் தனக்குத் துணையாக யாருமின்றித் தனியாக இருப்பவர், அந்தப் பகைவர்களில் ஒருவரைத் துணையாகக் கொள்ள வேண்டும்.

876 தேறினும், தேறா-விடினும், அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல்!

பகைவரைப்பற்றி ஆராய்ந்து தெளிவடைந்திருந்தாலும், இல்லா விட்டாலும் அதற்கிடையே ஒரு கேடு வரும்போது அந்தப் பகைவருடன் அதிகம் நெருங்காமல் நட்புக் காட்டியும் அவர்களைப் பிரிந்து விடாமலேயே பகைகொண்டும் இருப்பதே நலமாகும்.

877 நோவற்க, நொந்தது அறியார்க்கு! மேவற்க,
மென்மை, பகைவர்-அகத்து!

தனது துன்பத்தைப் பற்றி அதனை அறியாமல் இருக்கும் நண்பர்களிடம் சொல்லக்கூடாது. தனது பலவீனத்தைப் பகைவரிடம் வெளிப்படுத்திவிடக் கூடாது.

878 வகை-அறிந்து, தற்-செய்து, தற்-காப்ப மாயும்;
பகைவர்கண் பட்ட செருக்கு.

வழிவகை உணர்ந்து, தன்னையும் வலிமைப்படுத்திக் கொண்டு, தற்காப்பும் தேடிக் கொண்டவரின் முன்னால் பகையின் ஆணவம் தானாகவே ஒடுங்கி விடும்.

879 இளைதாக முள்-மரம் கொல்க; களையுநர்
கை-கொல்லும் காழ்த்த இடத்து!

முள்மரத்தை, அது சிறிய கன்றாக இருக்கும்போதே கிள்ளி எறிவது போல், பகையையும், அது முற்றுவதற்குமுன்பே வீழ்த்திவிட வேண்டும்.

880 உயிர்ப்ப உளர்-அல்லர் மன்ற; செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலாதார்.

பகைவரின் ஆணவத்தைக் குலைக்க முடியாதவர்கள், சுவாசிக்கிற காரணத்தினாலேயே, உயிரோடிருப்பதாக நிச்சயமாகச் சொல்ல முடியாது.

## 89. உட்பகை

881 நிழல்-நீரும் இன்னாத இன்னா; தமர்-நீரும்,
இன்னா-ஆம், இன்னா செயின்.

இனிமையாகத் தெரியும் நிழலும் நீரும்கூடக் கேடு விளைவிக்கக் கூடியவையாக இருந்தால் அவை தீயவைகளாகவே கருதப்படும். அதுபோலவேதான் உற்றார் உறவினராக உள்ளவர்களின் உட்பகையும் ஆகும்.

882 வாள்-போல் பகைவரை அஞ்சற்க! அஞ்சுக,
கேள்-போல் பகைவர் தொடர்பு.

வெளிப்படையாக எதிரே வரும் பகைவர்களைவிட உறவாடிக் கெடுக்க நினைப்பவர்களிடம்தான் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

883 உட்-பகை அஞ்சித் தற்-காக்க! உலைவு-இடத்து,
மட்பகையின் மாணத் தெறும்.

உட்பகைக்கு அஞ்சி ஒருவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஒரு சோதனையான நேரத்தில் பச்சை மண்பாண்டத்தை அறுக்கும் கருவிபோல அந்த உட்பகை அழிவு செய்துவிடும்.

884 மனம்-மாணா உட்-பகை தோன்றின்; இனம்-மாணா
ஏதம் பலவும் தரும்.

மனம் திருந்தாத அளவுக்கு உட்பகை விளைவிக்கும் உணர்வு ஒருவனுக்கு ஏற்பட்டுவிடுமானால், அது அவனைச் சேர்ந்தவர்களையே பகைவராக்கும் கேட்டினை உண்டாக்கி விடும்.

885 உறல்-முறையான் உட்-பகை தோன்றின்; இறல்-முறையான்
ஏதம் பலவும் தரும்.

நெருங்கிய உறவினருக்கிடையே தோன்றும் உட்பகையானது அவர்களுக்குக் கேடு விளைவிக்கக் கூடிய பல துன்பங்களை உண்டாக்கும்.

886 ஒன்றாமை ஒன்றியார்கண் படின்; எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது.

ஒன்றி இருந்தவர்களிடையே உட்பகை தோன்றி விடுமானால், அதனால் ஏற்படும் அழிவைத் தடுப்பது என்பது எந்தக் காலத்திலும் அரிதான செயலாகும்.

887 செப்பின் புணர்ச்சி-போல் கூடினும்; கூடாதே
உட்-பகை உற்ற குடி.

செப்பு எனப்படும் சிமிழில் அதன் மூடி பொருந்தியிருப்பது போல வெளித்தோற்றத்துக்கு மட்டுமே தெரியும். அவ்வாறே உட்பகையுள்ளவர்கள் உளமாரப் பொருந்தியிருக்க மாட்டார்கள்.

888 அரம்-பொருத பொன்-போல, தேயும் உரம்; பொருது
உட்-பகை உற்ற குடி.

அரத்தினால் தேய்க்கப்படும் இரும்பின் வடிவமும் வலிமையும் குறைவதைப் போல, உட்பகை உண்டான குலத்தின் வலிமையும் தேய்ந்து குறைந்து விடும்.

889 எட்-பகவு அன்ன சிறுமைத்தே-ஆயினும்,
உட்-பகை, உள்ளது ஆம், கேடு.

எள்ளின் பிளவுபோன்று சிறிதாக இருந்தாலும் உட்பகையால் பெருங்கேடு விளையும்.

890 உடம்பாடு இலாதவர் வாழ்க்கை; குடங்கருள்
பாம்போடு உடன்-உறைந்தற்று.

உள்ளத்தால் ஒன்றுபடாதவர்கள் கூடிவாழ்வது என்பது ஒரு சிறிய குடிலுக்குள் பாம்புடன் இருப்பது போன்று ஒவ்வொரு நொடியும் அச்சம் தருவதாகும்.

# 90. பெரியாரைப் பிழையாமை

891 ஆற்றுவார் ஆற்றல் இகழாமை; போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை.

ஒரு செயலைச் செய்து முடிக்க வல்லவரின் ஆற்றலை இகழாது இருந்தால், அதுவே தம்மைக் காத்திடும் காவல்கள் அனைத்தையும் விடச் சிறந்த காவலாக அமையும்.

892 பெரியாரைப் பேணாது ஒழுகின்; பெரியாரால்
பேரா இடும்பை தரும்.

பெரியோர்களை மதிக்காமல் நடந்து கொண்டால் நீங்காத பெருந்துன்பத்தை அடைய நேரிடும்.

893 கெடல்-வேண்டின், கேளாது செய்க; அடல்-வேண்டின்,
ஆற்றுபவர்கண் இழுக்கு!

ஒருவன், தன்னைத்தானே கெடுத்துக் கொள்ள விரும்பினால் பகையை நினைத்த மாத்திரத்தில் அழிக்கக் கூடிய ஆற்றலுடையவர்களை யார் பேச்சையும் கேட்காமலே இழித்துப் பேசலாம்.

894 கூற்றத்தைக் கையால் விளித்தற்றால்; ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல்.

எந்தத் துன்பத்தையும் தாங்கக் கூடிய ஆற்றல் படைத்தவர்களுடன், சிறு துன்பத்தையும் தாங்க முடியாதவர்கள் மோதினால் அவர்களே தங்களின் முடிவுகாலத்தைக் கையசைத்துக் கூப்பிடுகிறார்கள் என்று தான் பொருள்.

895 யாண்டுச்-சென்று யாண்டும் உளர்-ஆகார்; வெந்-துப்பின்
வேந்து செறப்பட்டவர்.

மிக்க வலிமை பொருந்திய அரசின் கோபத்திற்கு ஆளானவர்கள் தப்பித்து எங்கே சென்றாலும் அங்கு அவர்களால் உயிர் வாழ முடியாது.

896 எரியான் சுடப்படினும், உய்வு-உண்டாம்; உய்யார்,
பெரியார்ப் பிழைத்து-ஒழுகுவார்.

நெருப்புச் சூழ்ந்து சுட்டாலும்கூட ஒருவர் பிழைத்துக் கொள்ள முடியும்; ஆனால் ஆற்றல் மிகுந்த பெரியோரிடம் தவறிழைப்போர் தப்பிப் பிழைப்பது முடியாது.

897 வகை-மாண்ட வாழ்க்கையும், வான்-பொருளும் என்-ஆம்?
தகை-மாண்ட தக்கார் செறின்?

பெருஞ்செல்வம் குவித்துக்கொண்டு என்னதான் வகைவகையான வாழ்க்கைச் சுகங்களை அனுபவித்தாலும், தகுதி வாய்ந்த பெரியோரின் கோபத்துக்கு முன்னால் அவையனைத்தும் பயனற்றுப் போகும்.

898 குன்று-அன்னார் குன்ற மதிப்பின்; குடியொடு,
நின்று-அன்னார் மாய்வர், நிலத்து.

மலை போன்றவர்களின் பெருமையைக் குலைப்பதற்கு நினைப்பவர்கள், நிலைத்த பெரும் செல்வமுடையவர்களாக இருப்பினும் அடியோடு அழிந்து போய் விடுவார்கள்.

899 ஏந்திய கொள்கையார் சீறின்; இடை-முரிந்து
வேந்தனும், வேந்து கெடும்.

உயர்ந்த கொள்கை உறுதி கொண்டவர்கள் சீறி எழுந்தால், அடக்குமுறை ஆட்சி நிலை குலைந்து அழிந்துவிடும்.

900 இறந்து-அமைந்த சார்பு-உடையர் ஆயினும் உய்யார்;
சிறந்து-அமைந்த சீரார் செறின்.

என்னதான் எல்லையற்ற வசதிவாய்ப்புகள், வலிமையான துணைகள் உடையவராக இருப்பினும், தகுதியிற் சிறந்த சான்றோரின் சினத்தை எதிர்த்துத் தப்பிப் பிழைக்க முடியாது.

# 91. பெண்வழிச் சேறல்

901 மனை-விழைவார் மாண்-பயன் எய்தார்; வினை-விழைவார்
வேண்டாப் பொருளும் அது.

கடமையுடன் கூடிய செயல்புரியக் கிளம்பியவர்கள் இல்லற சுகத்தைப் பெரிதெனக் கருதினால் சிறப்பான புகழைப் பெற மாட்டார்கள்.

902 பேணாது பெண்-விழைவான் ஆக்கம்; பெரியதோர்
நாணாக, நாணுத் தரும்.

ஏற்றுக்கொண்ட கொள்கையினைப் பேணிக் காத்திடாமல் பெண்ணை நாடி அவள் பின்னால் திரிபவனுடைய நிலை வெட்கித் தலைகுனிய வேண்டியதாக ஆகிவிடும்.

903 இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு-இன்மை; எஞ்ஞான்றும்,
நல்லாருள் நாணுத் தரும்.

நற்குணமில்லாத மனைவியைத் திருத்த முனையாமல் பணிந்து போகிற கணவன், நல்லோர் முன்னிலையில் நாணமுற்று நிற்கும் நிலைக்கு ஆளாக நேரிடும்.

904 மனையாளை அஞ்சும் மறுமை-இலாளன்
வினை-ஆண்மை வீறு-எய்தல் இன்று.

மணம் புரிந்து புதுவாழ்வின் பயனை அடையாமல் குடும்பம் நடத்த அஞ்சுகின்றவனின் செயலாற்றல் சிறப்பாக அமைவதில்லை.

905 இல்லாளை அஞ்சுவான், அஞ்சும் மற்று-எஞ்ஞான்றும்,
நல்லார்க்கு நல்ல செயல்.

எப்போதுமே நல்லோர்க்கு நன்மை செய்வதில் தவறு ஏற்பட்டுவிடக்கூடாதே என்று அஞ்சுகிறவன் தவறு நேராமல் கண்காணிக்கும் மனைவிக்கு அஞ்சி நடப்பான்.

906 இமையாரின் வாழினும், பாடு-இலரே; இல்லாள்
அமை-ஆர் தோள் அஞ்சுபவர்.

அறிவும் பண்பும் இல்லாத மனைவி, அழகாக இருக்கிறாள் என்பதற்காக மட்டும் அவளுக்கு அடங்கி நடப்பவர்கள், தங்களைத் தேவாம்சம் படைத்தவர்கள் என்று கற்பனையாகக் காட்டிக் கொண்டாலும், அவர்களுக்கு உண்மையில் எந்தப் பெருமையும் கிடையாது.

907 பெண்-ஏவல் செய்து-ஒழுகும் ஆண்மையின், நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து.

ஒரு பெண்ணின் காலைச் சுற்றிக் கொண்டு கிடக்கும் ஒருவனின் ஆண்மையைக் காட்டிலும், மான உணர்வுள்ள ஒருத்தியின் பெண்மையே பெருமைக்குரிய தாகும்.

908 நட்டார் குறை-முடியார்; நன்று-ஆற்றார்; நன்னுதலாள்
பெட்டாங்கு ஒழுகுபவர்.

ஒரு பெண்ணின் அழகுக்காகவே அவளிடம் மயங்கி அறிவிழந்து நடப்பவர்கள், நண்பர்களைப்பற்றியும் கவலைப்படமாட்டார்கள்; நற்பணிகளையும் ஆற்றிடமாட்டார்கள்.

909 அற-வினையும், ஆன்ற-பொருளும், பிற-வினையும்;
பெண்-ஏவல் செய்வார்கண் இல்.

ஆணவங்கொண்ட பெண்கள் இடுகின்ற ஆணைகளுக்கு அடங்கி இயங்குகின்ற பெண்பித்தர்களிடம் அறநெறிச் செயல்களையோ சிறந்த அறிவாற்றலையோ எதிர்பார்க்க முடியாது.

910 எண்-சேர்ந்த நெஞ்சத்து, இடன்-உடையார்க்கு;
எஞ்ஞான்றும்,
பெண்-சேர்ந்து-ஆம் பேதைமை இல்.

சிந்திக்கும் ஆற்றலும் நெஞ்சுறுதியும் கொண்டவர்கள் காமாந்தகாரர்களாகப் பெண்களையே சுற்றிக்கொண்டு கிடக்க மாட்டார்கள்.

# 92. வரைவு இல் மகளிர்

911 அன்பின் விழையார், பொருள்-விழையும் ஆய்தொடியார்
இன்-சொல் இழுக்குத் தரும்.

அன்பே இல்லாமல் பொருள் திரட்டுவதையே குறிக்கோளாகக் கொண்ட பொதுமகளிர் இனிமையாகப் பேசுவதை நம்பி ஏமாறுகிறவர்களுக்கு இறுதியில் துன்பமே வந்து சேரும்.

912 பயன்-தூக்கிப் பண்பு-உரைக்கும் பண்பு-இல்-மகளிர்
நயன்-தூக்கி, நள்ளா விடல்!

ஆதாயத்தைக் கணக்கிட்டு அதற்கேற்றவாறு பாகு மொழிபேசும் பொதுமகளிர் உறவை ஒருபோதும் நம்பி ஏமாறக்கூடாது.

913 பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்; இருட்டு-அறையில்
ஏதில் பிணம்-தழீ-இயற்று.

விலைமாதர்கள் பணத்துக்காக மட்டுமே ஒருவரைத் தழுவிப் பொய்யன்பு காட்டி நடிப்பது, இருட்டறையில் ஓர் அந்நியப் பிணத்தை அணைத்துக் கிடப்பது போன்றதாகும்.

914 பொருட்பொருளார் புன்-நலம் தோயார்; அருட்பொருள்
ஆயும் அறிவினவர்.

அருளை விரும்பி ஆராய்ந்திடும் அறிவுடையவர்கள் பொருளை மட்டுமே விரும்பும் விலைமகளிரின் இன்பத்தை இழிவானதாகக் கருதுவார்கள்.

915 பொது-நலத்தார் புன்-நலம் தோயார்; மதி-நலத்தின்
மாண்ட அறிவினவர்.

இயற்கையறிவும் மேலும் கற்றுணர்ந்த அறிவும் கொண்டவர்கள் பொதுமகளிர் தரும் இன்பத்தில் மூழ்கமாட்டார்கள்.

916 தம்-நலம் பாரிப்பார் தோயார்; தகை-செருக்கி,
புன்-நலம் பாரிப்பார் தோள்.

புகழ்ச்சிக்குரிய சான்றோர் எவரும், இகழ்ச்சிக்குரிய இன்பவல்லிகளின் தோளில் சாய்ந்து கிடக்க மாட்டார்.

917 நிறை-நெஞ்சம் இல்லவர் தோய்வர்; பிற-நெஞ்சில்
பேணி, புணர்பவர் தோள்.

உள்ளத்தில் அன்பு இல்லாமல் தன்னலத்துக்காக உடலுறவு கொள்ளும் பொதுமகளிர் தோளை, உறுதியற்ற மனம் படைத்தோர் மட்டும் நம்பிக் கிடப்பர்.

918 ‘ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கு’ என்ப;
‘மாய மகளிர் முயக்கு’.

வஞ்சக எண்ணங்கொண்ட “பொதுமகள்” ஒருத்தி யிடம் மயங்குவதை அறிவில்லாதவனுக்கு ஏற்பட்ட “மோகினி மயக்கம்” என்று கூறுவார்கள்.

919 வரைவு-இலா மாண்-இழையார் மென்-தோள்; புரை-இலாப்
பூரியர்கள் ஆழும் அளறு.

விலைமகளை விரும்பி அவள் பின்னால் போவதற்கும் “நரகம்” எனச் சொல்லப்படும் சகதியில் விழுவதற்கும் வேறுபாடே இல்லை.

920 இரு-மனப்-பெண்டிரும், கள்ளும், கவறும்;
திரு-நீக்கப்பட்டார் தொடர்பு.

இருமனம் கொண்ட பொதுமகளிருடனும், மதுவுடனும், சூதாட்டத்தினிடமும் தொடர்பு கொண்டு உழல்வோரைவிட்டு வாழ்வில் அமைய வேண்டிய சிறப்பு அகன்றுவிடும்.

# 93. கள் உண்ணாமை

921 உட்கப் படாஅர், ஒளி-இழப்பர் எஞ்ஞான்றும்;
கள்-காதல் கொண்டு-ஒழுகுவார்.

மதுப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் தமது சிறப்பை இழப்பது மட்டுமல்ல, மாற்றாரும் அவர்களைக் கண்டு அஞ்ச மாட்டார்கள்.

922 உண்ணற்க, கள்ளை! உணில், உண்க, சான்றோரான்
எண்ணப்பட வேண்டாதார்!

மது அருந்தக் கூடாது; சான்றோர்களின் நன் மதிப்பைப் பெற விரும்பாதவர் வேண்டுமானால் அருந்தலாம்.

923 ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; என், மற்றுச்
சான்றோர் முகத்துக் களி!

கள்ளருந்தி மயங்கிடும் தன் மகனை, அவன் குற்றங்களை மன்னிக்கக் கூடிய தாயே காணச் சகிக்கமாட்டாள் என்கிறபோது ஏனைய சான்றோர்கள் அவனை எப்படிச் சகித்துக் கொள்வார்கள்.

924 நாண் என்னும் நல்லாள் புறம்-கொடுக்கும்; கள் என்னும்
பேணாப் பெரும்-குற்றத்தார்க்கு.

மது மயக்கம் எனும் வெறுக்கத்தக்க பெருங்குற்றத்திற்கு ஆளாகியிருப்போரின் முன்னால் நாணம் என்று சொல்லப்படும் நற்பண்பு நிற்காமல் ஓடிவிடும்.

925 கை அறியாமை-உடைத்தே; பொருள்-கொடுத்து,
மெய்-அறியாமை கொளல்.

ஒருவன் தன்னிலை மறந்து மயங்கியிருப்பதற்காகப், போதைப் பொருளை விலை கொடுத்து வாங்குதல் விவரிக்கவே முடியாத மூடத்தனமாகும்.

926 துஞ்சினார் செத்தாரின் வேறு-அல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சு-உண்பார் கள்-உண்பவர்.

மது அருந்துவோர்க்கும் நஞ்சு அருந்துவோர்க்கும் வேறுபாடு கிடையாது என்பதால் அவர்கள் தூங்குவதற்கும் இறந்து கிடப்பதற்கும்கூட வேறுபாடு கிடையாது என்று கூறலாம்.

927 உள்-ஒற்றி உள்ளூர் நகப்படுவர்; எஞ்ஞான்றும்
கள்-ஒற்றிக் கண் சாய்பவர்.

மறைந்திருந்து மதுவருந்தினாலும் மறைக்க முடியாமல் அவர்களது கண்கள் சுழன்று மயங்குவதைக் கண்டு ஊரார் எள்ளி நகையாடத்தான் செய்வார்கள்.

928 களித்து-அறியேன் என்பது கைவிடுக; நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்!

மது அருந்துவதே இல்லை என்று ஒருவன் பொய் சொல்ல முடியாது; காரணம், அவன் மது மயக்கத்தில் இருக்கும் போது அந்த உண்மையைச் சொல்லி விடுவான்.

929 களித்தானைக் காரணம் காட்டுதல்; கீழ்-நீர்க்-
குளித்தானைத் தீத்-துரீ-இயற்று.

குடிபோதைக்கு அடிமையாகி விட்டவனைத் திருத்த அறிவுரை கூறுவதும், தண்ணீருக்குள் மூழ்கிவிட்டவனைத் தேடிக்கண்டுபிடிக்கத் தீப்பந்தம் கொளுத்திக் கொண்டு செல்வதும் ஒன்றுதான்.

930 கள் உண்ணாப்-போழ்தில், களித்தானைக் காணுங்கால்,
உள்ளான்கொல், உண்டதன் சோர்வு!

ஒரு குடிகாரன், தான் குடிக்காமல் இருக்கும்போது மற்றொரு குடிகாரன் மது மயக்கத்தில் தள்ளாடுவதைப் பார்த்த பிறகாவது அதன் கேட்டினை எண்ணிப் பார்க்க மாட்டானா?

# 94. சூது

931 வேண்டற்க, வென்றிடினும்-சூதினை! வென்றதூஉம்,
தூண்டில்-பொன்-மீன் விழுங்கியற்று.

வெற்றியே பெறுவதாயினும் சூதாடும் இடத்தை நாடக்கூடாது. அந்த வெற்றி, தூண்டிலின் இரும்பு முள்ளில் கோத்த இரையை மட்டும் விழுங்குவதாக நினைத்து மீன்கள் இரும்பு முள்ளையே கௌவிக் கொண்டது போலாகிவிடும்.

932 ஒன்று-எய்தி, நூறு-இழக்கும் சூதர்க்கும் உண்டாம்கொல்;
நன்று-எய்தி வாழ்வதோர் ஆறு?

ஒரு வெற்றியைப் பெற்ற மகிழ்ச்சியில் தொடர்ந்து ஆடி நூறு தோல்விகளைத் தழுவிக்கொள்ளும் சூதாடிகளின் வாழ்க்கையில் நலம் ஏற்பட வழி ஏது?

933 உருள்-ஆயம் ஓவாது கூறின்; பொருள்-ஆயம்
போஒய்ப் புறமே படும்.

பணையம் வைத்து இடைவிடாமல் சூதாடுவதை ஒருவன் பழக்கமாகவே கொள்வானேயானால் அவன் செல்வமும் அந்தச் செல்வத்தை ஈட்டும் வழிமுறையும்அவனைவிட்டு நீங்கிவிடும்.

934 சிறுமை பல-செய்து, சீர்-அழிக்கும் சூதின்,
வறுமை-தருவது ஒன்று இல்.

பல துன்பங்களுக்கு ஆளாக்கி, புகழைக் கெடுத்து, வறுமையிலும் ஆழ்த்துவதற்குச் சூதாட்டத்தைப் போன்ற தீமையான செயல் வேறொன்றும் இல்லை.

935 கவறும், கழகமும், கையும் தருக்கி
இவறியார்; இல்லாகியார்.

சூதாடும் இடம், அதற்கான கருவி, அதற்குரிய முயற்சி ஆகியவற்றைக் கைவிட மனமில்லாதவர்கள் எதுவும் இல்லாதவர்களாகவே ஆகிவிடுவார்கள்.

936 அகடு-ஆரார்; அல்லல் உழப்பர்; சூது-என்னும்
முகடியான் மூடப்பட்டார்.

சூது எனப்படும் தீமையின் வலையில் விழுந்தவர்கள் வயிறார உண்ணவும் விரும்பாமல் துன்பத்திலும் உழன்று வருந்துவார்கள்.

937 பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்;
கழகத்துக் காலை புகின்.

சூதாடும் இடத்திலேயே ஒருவர் தமது காலத்தைக் கழிப்பாரேயானால், அது அவருடைய மூதாதையர் தேடிவைத்த சொத்துக்களையும் நற்பண்பையும் நாசமாக்கிவிடும்.

938 பொருள்-கெடுத்து, பொய்-மேற்கொளீஇ, அருள்-கெடுத்து,
அல்லல் உழப்பிக்கும்; சூது.

பொருளைப் பறித்துப் பொய்யனாக ஆக்கி, அருள் நெஞ்சத்தையும் மாற்றித், துன்ப இருளில் ஒருவனை உழலச் செய்வது சூது.

939 உடை, செல்வம், ஊண், ஒளி, கல்வி என்று ஐந்தும்
அடையாவாம்; ஆயம் கொளின்.

சூதாட்டத்திற்கு அடிமை யாக்கிவிட்டவர்களை விட்டுப் புகழும், கல்வியும், செல்வமும், உணவும், உடையும் அகன்று ஒதுங்கி விடும்.

940 இழத்தொறூஉம் காதலிக்கும் சூதே-போல், துன்பம்
உழத்தொறூஉம் காதற்று, உயிர்.

பொருளை இழக்க இழக்கச் சூதாட்டத்தின்மீது ஏற்படுகிற ஆசையும், உடலுக்குத் துன்பம் தொடர்ந்து வரவர உயிர்மீது கொள்ளுகிற ஆசையும் ஒன்றேதான்.

# 95. மருந்து

941 மிகினும் குறையினும், நோய்-செய்யும்; நூலோர்
வளி-முதலா எண்ணிய மூன்று.

வாதம், பித்தம், சிலேத்துமம் என்று மருத்துவ நூலோர் கணித்துள்ள மூன்றில் ஒன்று அளவுக்கு அதிகமானாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும்.

942 மருந்து-என வேண்டாவாம், யாக்கைக்கு; அருந்தியது
அற்றது போற்றி உணின்.

உண்ட உணவு செரிப்பதற்கான கால இடைவெளி தந்து, உணவு அருந்துகிறவர்களின் உடலுக்கு வேறு மருந்தே தேவையில்லை.

943 அற்றால், அளவு-அறிந்து உண்க! அஃது-உடம்பு
பெற்றான் நெடிது-உய்க்கும் ஆறு.

உண்ட உணவு செரித்ததையும், உண்ணும் உணவின் அளவையும் அறிந்து உண்பது நீண்டநாள் வாழ்வதற்கு வழியாகும்.

944 அற்றது-அறிந்து, கடைப்பிடித்து, மாறு-அல்ல
துய்க்க, துவரப்-பசித்து!

உண்டது செரித்ததா என்பதை உணர்ந்து, நன்கு பசியெடுத்த பிறகு உடலுக்கு ஒத்து வரக்கூடிய உணவை அருந்த வேண்டும்.

945 மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து-உண்ணின்
ஊறுபாடு இல்லை; உயிர்க்கு.

உடலுக்கு ஒத்துவரக்கூடிய உணவைக்கூட அதிகமாகும்போது மறுத்து அளவுடன் உண்டால், உயிர் வாழ்வதற்குத் தொல்லை எதுவுமில்லை.

946 இழிவு-அறிந்து உண்பான்கண் இன்பம்-போல்; நிற்கும்
கழி-பேர் இரையான்கண், நோய்.

அளவோடு உண்பவர் உடல் நலமுடன் வாழ்வதும் அதிகம் உண்பவர் நோய்க்கு ஆளாவதும் இயற்கை.

947 தீ-அளவு-அன்றித் தெரியான் பெரிது-உண்ணின்;
நோய்-அளவு இன்றிப்-படும்.

பசியின் அளவு அறியாமலும், ஆராயாமலும் அதிகம் உண்டால் நோய்களும் அளவின்றி வரும்.

948 நோய்-நாடி நோய்-முதல்-நாடி, அது-தணிக்கும்
வாய்-நாடி, வாய்ப்பச் செயல்!

நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்யவேண்டும். (உடல் நோய்க்கு மட்டுமின்றிச் சமுதாய நோய்க்கும் இது பொருந்தும்).

949 உற்றான்-அளவும், பிணி-அளவும், காலமும்
கற்றான், கருதிச் செயல்!

நோயாளியின் வயது, நோயின் தன்மை, மருத்துவம் செய்வதற்குரிய நேரம் என்பனவற்றை எல்லாம் மருத்துவம் கற்றவர் எண்ணிப் பார்த்தே செயல்பட வேண்டும்.

950 உற்றவன், தீர்ப்பான், மருந்து, உழைச்செல்வான் என்று
அப்-பால் நாற்-கூற்றே; மருந்து.

நோயாளி, மருத்துவர், மருந்து, அருகிருந்து துணைபுரிபவர் என மருத்துவமுறை நான்கு வகையாக அமைந்துள்ளது.

# 96. குடிமை

951 இற் பிறந்தார்கண் அல்லது இல்லை; இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

நடுநிலை தவறாத பண்பும், ஆரவாரமற்ற அடக்க உணர்வும் கொண்டவர்களையல்லாமல் மற்றவர்களை உயர்ந்த குடியில் பிறந்தவர்களாகக் கருத முடியாது.

952 ஒழுக்கமும், வாய்மையும், நாணும் இம்மூன்றும்
இழுக்கார்; குடிப்-பிறந்தார்.

ஒழுக்கமும், வாய்மை, மானம் ஆகிய இந்த மூன்றிலும் நிலைதவறி நடக்காதவர்களே உயர்ந்த குடியில் பிறந்தவர்களாகக் கருதப்படுவார்கள்.

953 நகை, ஈகை, இன்-சொல், இகழாமை நான்கும்
வகை-என்ப; வாய்மைக்-குடிக்கு.

முகமலர்ச்சி, ஈகைக்குணம், இனியசொல், பிறரை இகழாத பண்பாடு ஆகிய நான்கு சிறப்புகளும் உள்ளவர்களையே வாய்மையுள்ள குடிமக்கள் என்று வகைப்படுத்த முடியும்.

954 அடுக்கிய கோடி பெறினும், குடிப்-பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

பலகோடிப் பொருள்களை அடுக்கிக் கொடுத்தாலும் சிறந்த குடியில் பிறந்தவர்கள் அந்தச் சிறப்புக் கெடுவதற்கான செயல்களுக்கு இடம் தரமாட்டார்கள்.

955 வழங்குவது உள்-வீழ்ந்தக்-கண்ணும், பழங்குடி
பண்பின் தலைப்-பிரிதல் இன்று.

பழம் பெருமை வாய்ந்த குடியில் பிறந்தவர்கள் வறுமையால் தாக்குண்ட போதிலும், பிறருக்கு வழங்கும் பண்பை இழக்க மாட்டார்கள்.

956 சலம்-பற்றிச் சால்பு-இல-செய்யார்; ‘மாசு-அற்ற
குலம்-பற்றி வாழ்தும்’ என்பார்.

மாசற்ற பண்புடன் வாழ்வதாகக் கருதிக்கொண்டிருப்பவர்கள், வஞ்சக நினைவுடன் தகாத காரியங்களில் ஈடுபடமாட்டார்கள்.

957 குடிப்-பிறந்தார்-கண் விளங்கும் குற்றம், விசும்பின்
மதிக்கண் மறுப்போல், உயர்ந்து.

பிறந்த குடிக்குப் பெருமை சேர்ப்பவரிடமுள்ள சிறிய குறைகள், ஒளிவு மறைவு ஏதுமின்றி, வானத்து நிலவில் உள்ள குறைபோல வெளிப்படையாகத் தெரியக் கூடியதாகும்.

958 நலத்தின்-கண் நார்-இன்மை தோன்றின்; அவனைக்
குலத்தின்-கண் ஐயப்-படும்.

என்னதான் அழகும் புகழும் உடையவனாக இருந்தாலும் அன்பு எனும் ஒரு பண்பு இல்லாதவனாக இருந்தால் அவன் பிறந்த குலத்தையே சந்தேகிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

959 நிலத்தில் கிடந்தமை கால்-காட்டும்; காட்டும்,
குலத்தில் பிறந்தார் வாய்ச்-சொல்.

விளைந்த பயிரைப் பார்த்தாலே இது எந்த நிலத்தில் விளைந்தது என்று அறிந்து கொள்ளலாம். அதேபோல ஒருவரின் வாய்ச் சொல்லைக் கேட்டே அவர் எத்தகைய குடியில் பிறந்தவர் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

960 நலம்-வேண்டின், நாண்-உடைமை வேண்டும்; குலம்-வே
வேண்டின்,
வேண்டுக, யார்க்கும் பணிவு!

தகாத செயல் புரிந்திட அஞ்சி நாணுவதும், எல்லோரிடமும் ஆணவமின்றிப் பணிவுடன் நடந்து கொள்வதும் ஒருவரின் நலத்தையும் அவர் பிறந்த குலத்தையும் உயர்த்தக் கூடியவைகளாகும்.

# 97. மானம்

961 இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்,
குன்ற வருப விடல்.

கட்டாயமாகச் செய்து தீர வேண்டிய செயல்கள் என்றாலும்கூட அவற்றால் தனது பெருமை குறையுமானால் அந்தச் செயல்களைத் தவிர்த்திடல் வேண்டும்.

962 சீரினும், சீர்-அல்ல-செய்யாரே; சீரொடு
பேராண்மை வேண்டுபவர்.

புகழ்மிக்க வீர வாழ்க்கையை விரும்புகிறவர், தனக்கு எப்படியும் புகழ் வரவேண்டு மென்பதற்காக மான உணர்வுக்குப் புறம்பான காரியத்தில் ஈடுபடமாட்டார்.

963 பெருக்கத்து வேண்டும், பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும், உயர்வு.

உயர்ந்த நிலை வரும்போது அடக்க உணர்வும், அந்த நிலை மாறிவிட்ட சூழலில் யாருக்கும் அடிமையாக அடங்கி நடக்காத மான உணர்வும் வேண்டும்.

964 தலையின் இழிந்த மயிர்-அனையர்; மாந்தர்
நிலையின் இழிந்தக்கடை.

மக்களின் நெஞ்சத்தில் உயர்ந்த இடம் பெற்றிருந்த ஒருவர் மானமிழந்து தாழ்ந்திடும்போது, தலையிலிருந்து உதிர்ந்த மயிருக்குச் சமமாகக் கருதப்படுவார்.

965 குன்றின் அனையாரும் குன்றுவர்; குன்றுவ
குன்றி அனைய செயின்.

குன்றினைப் போல் உயர்ந்து கம்பீரமாக நிற்பவர்களும் ஒரு குன்றிமணி அளவு இழிவான செயலில் ஈடுபட்டால் தாழ்ந்து குன்றிப் போய் விடுவார்கள்.

966 புகழ்-இன்றால்; புத்தேள்-நாட்டு-உய்யாதால்; என்-மற்று,
இகழ்வார்பின் சென்று நிலை?

இகழ்வதையும் பொறுத்துக்கொண்டு, மானத்தை விட்டுவிட்டு ஒருவர் பின்னே பணிந்து செல்வதால் என்ன புகழ் கிடைக்கும்? இல்லாத சொர்க்கமா கிடைக்கும்?

967 ஒட்டார்-பின் சென்று ஒருவன் வாழ்தலின், அந்-நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று.

தன்னை மதிக்காதவரின் பின்னால் சென்று உயிர் வாழ்வதைவிடச் செத்தொழிவது எவ்வளவோ மேல்.

968 மருந்தோ, மற்று ஊன்-ஓம்பும்-வாழ்க்கை; பெருந்தகைமை
பீடு-அழிய-வந்த-இடத்து?

சாகாமலே இருக்க மருந்து கிடையாது. அப்படி இருக்கும்போது உயிரைவிட நிலையான மானத்தைப் போற்றாமல், வாழ்க்கை மேம்பாட்டுக்காக ஒருவர், தமது பெருமையைக் குறைத்துக் கொள்வது இழிவான செயலாகும்.

969 மயிர்-நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்-நீப்பர், மானம் வரின்.

உடலில் உள்ள உரோமம் நீக்கப்பட்டால் உயிர் வாழாது கவரிமான் என்பார்கள். அதுபோல் மானம் அழிய நேர்ந்தால் உயர்ந்த மனிதர்கள் உயிரையே விட்டு விடுவார்கள்.

970 இளி-வரின், வாழாத மானம் உடையார்;
ஒளி-தொழுது-ஏத்தும், உலகு.

மானம் அழியத்தக்க இழிவு வந்ததே என்று உயிரை மாய்த்துக் கொள்ளக் கூடியவர்களின் புகழை உலகம் எக்காலமும் போற்றி நிற்கும்.

# 98. பெருமை

971 ஒளி, ஒருவற்கு உள்ள வெறுக்கை; இளி-ஒருவற்கு,
‘அஃது-இறந்து-வாழ்தும்’ எனல்.

ஒருவரின் வாழ்க்கைக்கு ஒளிதருவது ஊக்கமே யாகும். ஊக்கமின்றி உயிர்வாழ்வது இழிவு தருவதாகும்.

972 பிறப்பு-ஒக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பு-ஒவ்வா,
செய்-தொழில் வேற்றுமையான்.

பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும்.

973 மேல்-இருந்தும், மேல்-அல்லார் மேல்-அல்லர்; கீழ்-இருந்தும்,
கீழ்-அல்லார், கீழ்-அல்லவர்.

பண்பு இல்லாதவர்கள் உயர்ந்த பதவியில் இருந்தாலும் உயர்ந்தோர் அல்லர்; இழிவான காரியங்களில் ஈடுபடாதவர்கள் தாழ்ந்த நிலையில் இருந்தாலும் உயர்ந்தோரேயாவார்கள்.

974 ஒருமை மகளிரே போல, பெருமையும்,
தன்னைத்தான் கொண்டு-ஒழுகின், உண்டு.

தன்னிலை தவறாமல் ஒருவன் தன்னைத் தானே காத்துக்கொண்டு வாழ்வானேயானால், கற்புக்கரசிகளுக்குக் கிடைக்கும் புகழும் பெருமையும் அவனுக்குக் கிடைக்கும்.

975 பெருமை-உடையவர் ஆற்றுவார்; ஆற்றின்
அருமை-உடைய செயல்.

அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமையுடையவர்கள் பெருமைக்குரியவராவார்கள்.

976 சிறியார், உணர்ச்சியுள் இல்லை; ‘பெரியாரைப்
பேணிக் கொள்வேம்’ என்னும் நோக்கு.

பெரியோரைப் போற்றி ஏற்றுக்கொள்ளும் நோக்கம், அறிவிற் சிறியோரின் உணர்ச்சியில் ஒன்றியிருப்பதில்லை.

977 இறப்பே புரிந்த தொழிற்று ஆம் சிறப்பும்-தான்
சீர்-அல்லவர் கண்-படின்.

சிறப்பான நிலையுங்கூட அதற்குப் பொருந்தாத கீழ் மக்களுக்குக் கிட்டுமானால், அவர்கள் வரம்புமீறிச் செயல்படுவது இயற்கை.

978 பணியுமாம், என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம், தன்னை வியந்து.

பண்புடைய பெரியோர் எல்லோரிடமும் எப்பொழுதும் பணிவுடன் பழகுவார்கள்; பண்பு இல்லாத சிறியோர், தம்மைத் தாமே புகழ்ந்து கொண்டு இறுமாந்து கிடப்பார்கள்.

979 பெருமை, பெருமிதம் இன்மை; சிறுமை,
பெருமிதம் ஊர்ந்து-விடல்.

ஆணவமின்றி அடக்கமாக இருப்பது பெருமை எனப்படும். ஆணவத்தின் எல்லைக்கே சென்றுவிடுவது சிறுமை எனப்படும்.

980 அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமை-தான்
குற்றமே கூறி-விடும்.

பிறருடைய குறைகளை மறைப்பது பெருமைப் பண்பாகும். பிறருடைய குற்றங்களையே கூறிக் கொண்டிருப்பது சிறுமைக் குணமாகும்.

# 99. சான்றாண்மை

981 கடன்-என்ப, நல்லவை எல்லாம்; கடன்-அறிந்து,
சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு.

ஆற்ற வேண்டிய கடமைகளை உணர்ந்து, அவற்றைப் பண்பார்ந்த முறையில் நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் நல்ல கடமைகள் என்றே கொள்ளப்படும்.

982 குண-நலம், சான்றோர் நலனே; பிற-நலம்
எந்-நலத்து உள்ளதூஉம் அன்று.

நற்பண்பு ஒன்றே சான்றோர்க்கான அழகாகும். வேறு எந்த அழகும் அழகல்ல.

983 அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையொடு
ஐந்து; சால்பு ஊன்றிய தூண்.

அன்பு கொள்ளுதல், பழிபுரிந்திட நாணுதல், உலக ஒழுக்கம் போற்றுதல், இரக்கச் செயலாற்றுதல், வாய்மை கடைப்பிடித்தல் ஆகிய ஐந்தும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்களாகும்.

984 கொல்லா நலத்தது, நோன்மை; பிறர்-தீமை
சொல்லா நலத்தது, சால்பு.

உயிரைக் கொல்லாத அறத்தை அடிப்படையாகக் கொண்டது நோன்பு. பிறர் செய்யும் தீமையைச் சுட்டிச் சொல்லாத பண்பைக் குறிப்பது சால்பு.

985 ஆற்றுவார் ஆற்றல் பணிதல்; அது-சான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

ஆணவமின்றிப் பணிவுடன் நடத்தலே, ஆற்றலாளரின் ஆற்றல் என்பதால் அதுவே பகைமையை மாற்றுகின்ற படையாகச் சான்றோர்க்கு அமைவதாகும்.

986 ‘சால்பிற்குக் கட்டளை யாது?’ எனின்; தோல்வி
துலை அல்லார்-கண்ணும் கொளல்.

சமநிலையில் இல்லாதவர்களால் தனக்கு ஏற்படும் தோல்வியைக்கூட ஒப்புக் கொள்ளும் மனப்பக்குவம்தான் ஒருவரின் மேன்மைக்கு உரைகல்லாகும்.

987 இன்னா-செய்தார்க்கும் இனியவே-செய்யாக்கால்,
என்ன பயத்ததோ, சால்பு?

தமக்குத் தீமை செய்தவருக்கும் திரும்ப நன்மை செய்யாமல் விட்டுவிட்டால் சான்றாண்மை எனும் நல்ல பண்பு இருந்தும் அதனால் என்ன பயன்?

988 இன்மை ஒருவற்கு இளிவு-அன்று; சால்பு-என்னும்
திண்மை உண்டாகப்பெறின்.

சால்பு என்கிற உறுதியைச் செல்வமெனக் கொண்டவருக்கு வறுமை என்பது இழிவு தரக் கூடியதல்ல.

989 ஊழி பெயரினும், தாம்-பெயரார்; சான்றாண்மைக்கு
ஆழி எனப்படுவார்.

தமக்குரிய கடமைகளைக் கண்ணியத்துடன் ஆற்றுகின்ற சான்றோர் எல்லாக் கடல்களும் தடம்புரண்டு மாறுகின்ற ஊழிக்காலம் ஏற்பட்டாலும்கூடத், தம்நிலை மாறாத கடலாகத் திகழ்வார்கள்.

990 சான்றவர் சான்றாண்மை குன்றின்; இரு-நிலம்-தான்
தாங்காது மன்னோ, பொறை!

சான்றோரின் நற்பண்பே குறையத்தொடங்கினால் அதனை இந்த உலகம் பொறுமையுடன் தாங்கிக் கொள்ளாது.

# 100. பண்பு உடைமை

991 எண்-பதத்தால், எய்தல் எளிது-என்ப; யார்மாட்டும்,
பண்பு-உடைமை என்னும் வழக்கு.

யாராயிருந்தாலும் அவர்களிடத்தில் எளிமையாகப் பழகினால், அதுவே பண்புடைமை என்கிற சிறந்த ஒழுக்கத்தைப் பெறுவதற்கு எளிதான வழியாக அமையும்.

992 அன்பு-உடைமை, ஆன்ற குடிப்-பிறத்தல்; இவ்-இரண்டும்
பண்பு-உடைமை என்னும் வழக்கு.

அன்புடையவராக இருப்பதும், உயர்ந்த குடியில் பிறந்த இலக்கணத்துக்கு உரியவராக இருப்பதும்தான் பண்புடைமை எனக் கூறப்படுகிற சிறந்த நெறியாகும்.

993 உறுப்பு-ஒத்தல் மக்கள்-ஒப்பு அன்றால்; வெறுத்தக்க
பண்பு-ஒத்தல், ஒப்பது-ஆம் ஒப்பு.

நற்பண்பு இல்லாதவர்களை அவர்களின் உடல் உறுப்புகளை மட்டுமே ஒப்பிட்டுப் பார்த்து மக்கள் இனத்தில் சேர்த்துப் பேசுவது சரியல்ல: நற்பண்புகளால் ஒத்திருப்பவர்களே மக்கள் எனப்படுவர்.

994 நயனொடு நன்றி-புரிந்த பயன்-உடையார்
பண்பு பாராட்டும், உலகு.

நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து பிறருக்குப் பயன்படப் பணியாற்றுகிறவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்.

995 நகையுள்ளும் இன்னாது, இகழ்ச்சி; பகையுள்ளும்
பண்பு-உள, பாடு-அறிவார் மாட்டு.

விளையாட்டாகக்கூட ஒருவரை இகழ்ந்து பேசுவதால் கேடு உண்டாகும். அறிவு முதிர்ந்தவர்கள், பகைவரிடமும் பண்புகெடாமல் நடந்து கொள்வார்கள்.

996 பண்பு-உடையார்ப் பட்டு, உண்டு-உலகம்; அது-இன்றேல்,
மண்-புக்கு மாய்வது-மன்.

உலக நடைமுறைகள், பண்பாளர்களைச் சார்ந்து இயங்க வேண்டும். இல்லையேல் அந்த நடைமுறைகள் நாசமாகிவிடும்.

997 அரம்-போலும் கூர்மையரேனும், மரம்-போல்வர்;
மக்கள்-பண்பு-இல்லாதவர்.

அரம்போன்ற கூர்மையான அறிவுடைய மேதையாக இருந்தாலும், மக்களுக்குரிய பண்பு இல்லாதவர் மரத்துக்கு ஒப்பானவரேயாவார்.

998 நண்பு-ஆற்றார்-ஆகி, நயம்-இல செய்வார்க்கும்,
பண்பு-ஆற்றார்-ஆதல் கடை.

நட்புக்கு ஏற்றவராக இல்லாமல் தீமைகளையே செய்து கொண்டிருப்பவரிடம், நாம் பொறுமை காட்டிப் பண்புடையவராக நடந்து கொள்ளாவிட்டால் அது இழிவான செயலாகக் கருதப்படும்.

999 நகல்-வல்லர் அல்லார்க்கு மா-இரு-ஞாலம்,
பகலும், பாற்-பட்டன்று, இருள்.

நண்பர்களுடன் பழகி மகிழத் தெரியாதவர்களுக்கு உலகம் என்பது பகலில் கூட இருட்டாகத்தான் இருக்கும்.

1000 பண்பு-இலான் பெற்ற பெருஞ்-செல்வம்; நன்-பால்
கலம்-தீமையால் திரிந்தற்று.

பாத்திரம் களிம்பு பிடித்திருந்தால், அதில் ஊற்றி வைக்கப்படும் பால் எப்படிக் கெட்டுவிடுமோ அதுபோலப் பண்பு இல்லாதவர்கள் பெற்ற செல்வமும் பயனற்றதாகி விடும்.

# 101. நன்றி இல் செல்வம்

1001 வைத்தான், வாய்-சான்ற-பெரும்-பொருள்; அஃது-உண்ணான்
செத்தான், செயக்கிடந்தது இல்.

அடங்காத ஆசையினால் வீடு கொள்ளாத அளவுக்குச் செல்வத்தைச் சேர்த்து வைத்து அதனை அனுபவிக்காமல் செத்துப்போகிறவனுக்கு. அப்படிச் சேர்க்கப்பட்ட செல்வத்தினால் என்ன பயன்?

1002 ‘பொருளான் ஆம், எல்லாம்’ என்று, ஈயாது இவறும்
மருளான், ஆம், மாணாப்-பிறப்பு.

யாருக்கும் எதுவும் கொடுக்காமல், தன்னிடமுள்ள பொருளால் எல்லாம் ஆகுமென்று, அதனைவிடாமல் பற்றிக் கொண்டிருப்பவன் எந்தச் சிறப்புமில்லாத இழி பிறவியாவான்.

1003 ஈட்டம் இவறி, இசை-வேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை.

புகழை விரும்பாமல் பொருள் சேர்ப்பது ஒன்றிலேயே குறியாக இருப்பவர்கள் பிறந்து வாழ்வதே இந்தப் பூமிக்குப் பெரும் சுமையாகும்.

1004 எச்சம்-என்று என்-எண்ணும்-கொல்லோ; ஒருவரால்
நச்சப் படாஅதவன்!

யாராலும் விரும்பப்படாத ஒருவன், தன் மரணத்திற்குப் பிறகு எஞ்சி நிற்கப் போவது என்று எதனை நினைத்திட முடியும்?

1005 கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு, அடுக்கிய-
கோடி-உண்டாயினும், இல்.

கொடுத்து உதவும் பண்பினால் இன்பமுறும் இயல்பு இல்லாதவரிடம், கோடி கோடியாகச் செல்வம் குவிந்தாலும் அதனால் பயன் எதுவுமில்லை.

1006 ஏதம், பெருஞ்-செல்வம்; தான்-துவ்வான், தக்கார்க்கு-ஒன்று
ஈதல் இயல்பு-இலாதான்.

தானும் அனுபவிக்காமல் தக்கவர்களுக்கு உதவிடும் இயல்பும் இல்லாமல் வாழ்கிறவன், தன்னிடமுள்ள பெருஞ்செல்வத்தைத் தொற்றிக்கொண்ட நோயாவான்.

1007 அற்றார்க்கு-ஒன்று ஆற்றாதான்-செல்வம்; மிகு-நலம்
பெற்றாள் தமியள் மூத்தற்று.

வறியவர்க்கு எதுவும் வழங்கி உதவாதவனுடைய செல்வம், மிகுந்த அழகியொருத்தி , தன்னந்தனியாகவே இருந்து முதுமையடைவதைப் போன்றது.

1008 நச்சப்படாதவன் செல்வம்; நடுவூருள்
நச்சு-மரம் பழுத்தற்று.

வெறுக்கப்படுகிறவரிடம் குவிந்துள்ள செல்வமும், ஊர் நடுவே நச்சு மரத்தில் காய்த்துக் குலுங்குகின்ற பழமும் வெவ்வேறானவையல்ல!

1009 அன்பு-ஒரீஇ, தற்-செற்று, அறம்-நோக்காது, ஈட்டிய
ஒண்-பொருள் கொள்வார், பிறர்.

அன்பெனும் பண்பை அறவே நீக்கி, தன்னையும் வருத்திக் கொண்டு, அறவழிக்குப் புறம்பாகச் சேர்த்துக் குவித்திடும் செல்வத்தைப் பிறர் கொள்ளை கொண்டு போய்விடுவர்.

1010 சீருடைச்-செல்வர் சிறு-துனி; மாரி
வறம் கூர்ந்தனையது உடைத்து.

சிறந்த உள்ளம் கொண்ட செல்வர்களுக்கேற்படும் சிறிதளவு வறுமையின் நிழல்கூட, மழை பொய்த்து விட்டதற்கு ஒப்பானதாகும்.

# 102. நாண் உடைமை

1011 கருமத்தான் நாணுதல், நாணு; திருநுதல்
நல்லவர் நாணு, பிற.

ஒருவர் தமது தகாத நடத்தையின் காரணமாக நாணுவதற்கும், நல்ல பெண்களுக்கு இயல்பாக ஏற்படும் நாணத்துக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு.

1012 ஊண், உடை, எச்சம், உயிர்க்கு-எல்லாம் வேறு-அல்ல;
நாண்-உடைமை மாந்தர் சிறப்பு.

உணவு, உடை போன்ற அனைத்தும் எல்லோருக்கும் பொதுவான தேவைகளாக அமைகின்றன; ஆனால் சிறப்புக்குரிய தேவையாக இருப்பது, பிறரால் பழிக்கப்படும் செயல்களைத் தவிர்த்து வாழும் நாணுடைமைதான்.

1013 ஊனைக்-குறித்த, உயிர்-எல்லாம்; நாண்-என்னும்
நன்மை குறித்தது, சால்பு.

உடலுடன் இணைந்தே உயிர் இருப்பதுபோல், மாண்பு என்பது நாண உணர்வுடன் இணைந்து இருப்பதேயாகும்.

1014 அணி-அன்றோ, நாண்-உடைமை சான்றோர்க்கு! அஃது-இன்றேல்
பிணி-அன்றோ, பீடு-நடை!

நடந்த தவறு காரணமாகத் தமக்குள் வருந்துகிற நாணம் எனும் உணர்வு, பெரியவர்களுக்கு அணிகலன் ஆக விளங்கும். அந்த அணிகலன் இல்லாமல் என்னதான் பெருமிதமாக நடைபோட்டாலும், அந்த நடையை ஒரு நோய்க்கு ஒப்பானதாகவே கருத முடியும்.

1015 ‘பிறர்-பழியும் தம்-பழியும் நாணுவார்; நாணுக்கு
உறைபதி’ என்னும், உலகு.

தமக்கு வரும் பழிக்காக மட்டுமின்றிப் பிறர்க்கு வரும் பழிக்காகவும் வருந்தி நாணுகின்றவர், நாணம் எனும் பண்பிற்கான உறைவிடமாவார்.

1016 நாண் வேலி-கொள்ளாது-மன்னோ, வியல்-ஞாலம்
பேணலர்; மேலாயவர்.

பரந்த இந்த உலகில் எந்தப் பாதுகாப்பையும்விட, நாணம் எனும் வேலியைத்தான் உயர்ந்த மனிதர்கள், தங்களின் பாதுகாப்பாகக் கொள்வார்கள்.

1017 நாணால் உயிரைத்-துறப்பர்; உயிர்ப்-பொருட்டால்
நாண்-துறவார்; நாண்-ஆள்பவர்.

நாண உணர்வுடையவர்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள உயிரையும் விடுவார்கள். உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மானத்தை விடமாட்டார்கள்.

1018 பிறர் நாணத்-தக்கது தான்-நாணான் ஆயின்,
அறம் நாணத்-தக்கது உடைத்து.

வெட்கப்படவேண்டிய அளவுக்குப் பழிக்கு ஆளானவர்கள் அதற்காக வெட்கப்படாமல் இருந்தால் அவர்களை விட்டு அறநெறி வெட்கப்பட்டு அகன்று விட்டதாகக் கருத வேண்டும்.

1019 குலம்-சுடும், கொள்கை பிழைப்பின்; நலம்-சுடும்,
நாண்-இன்மை நின்றக்-கடை.

கொண்ட கொள்கையில் தவறினால் குலத்துக்கு இழுக்கு நேரும். அதற்கு நாணாமல் பிறர் பழிக்கும் செயல் புரிந்தால் நலமனைத்தும் கெடும்.

1020 நாண் அகத்து-இல்லார் இயக்கம்; மரப்பாவை
நாணால் உயிர்-மருட்டியற்று.

உயிர் இருப்பது போலக் கயிறுகொண்டு ஆட்டி வைக்கப்படும் மரப்பொம்மைக்கும், மனத்தில் நாணமெனும் ஓர் உணர்வு இல்லாமல் உலகில் நடமாடுபவருக்கும் வேறுபாடு இல்லை.

# 103. குடி செயல் வகை

1021 ‘கருமம் செய’, ஒருவன், ‘கைதூவேன்’ என்னும்
பெருமையின், பீடு-உடையது இல்.

உரிய கடமையைச் செய்வதில் சோர்வு காணாமல் எவனொருவன் முயற்சிகளை விடாமல் மேற்கொள்கிறானோ அந்தப் பெருமைக்கு மேலாக வேறொரு பெருமை கிடையாது.

1022 ஆள்வினையும், ஆன்ற-அறிவும்; என-இரண்டின்
நீள்-வினையான், நீளும் குடி.

ஆழ்ந்த அறிவும் விடாமுயற்சியும் கொண்டு ஒருவன் அயராது பாடுபட்டால் அவனைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்.

1023 ‘குடி செய்வல்’ என்னும் ஒருவற்கு, தெய்வம்
மடி-தற்று, தான் முந்துறும்.

தன்னைச் சேர்ந்த குடிமக்களை உயர்வடையச் செய்திட ஓயாது உழைப்பவனுக்குத் தெய்வச் செயல் எனக்கூறப்படும் இயற்கையின் ஆற்றல்கூட வரிந்து கட்டிக்கொண்டு வந்து துணைபுரியும்.

1024 சூழாமல் தானே முடிவு-எய்தும்; தம்-குடியைத்
தாழாது உஞற்றுபவர்க்கு.

தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயலுகிறவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும்.

1025 குற்றம் இலனாய், குடி-செய்து வாழ்வானைச்
சுற்றமாச்-சுற்றும், உலகு.

குற்றமற்றவனாகவும், குடிமக்களின் நலத்திற்குப் பாடுபடுபவனாகவும் இருப்பவனைத் தமது உறவினனாகக் கருதி, மக்கள் சூழ்ந்து கொள்வார்கள்.

1026 நல்-ஆண்மை என்பது ஒருவற்குத் தான்-பிறந்த
இல்-ஆண்மை ஆக்கிக்-கொளல்.

நல்ல முறையில் ஆளும் திறமை பெற்றவர், தான் பிறந்த குடிக்கே பெருமை சேர்ப்பவராவார்.

1027 அமரகத்து வன்கண்ணர் போல, தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே, பொறை.

போர்க்களத்தில் எதிர்ப்புகளைத் தாங்கிப் படை நடத்தும் பொறுப்பு அதற்கான ஆற்றல் படைத்தவர்களிடம் இருப்பது போலத்தான் குடிமக்களைக் காப்பாற்றி உயர்வடையச் செய்யும் பொறுப்பும் அவர்களைச் சேர்ந்த ஆற்றலாளர்களுக்கே உண்டு.

1028 குடி-செய்வார்க்கு இல்லை, பருவம்; மடி-செய்து,
மானம் கருத, கெடும்.

தன்மீது நடத்தப்படும் இழிவான தாக்குதலைக் கண்டு கலங்கினாலோ, பணியாற்றக் காலம் வரட்டும் என்று சோர்வுடன் தயக்கம் காட்டினாலோ குடிமக்களின் நலன் சீர்குலைந்துவிடும்.

1029 இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ; குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு!

தன்னைச் சார்ந்துள்ள குடிகளுக்குத் துன்பம் வராமல் தடுத்துத் தொடர்ந்து அக்குடிகளைக் காப்பாற்ற முயலுகிற ஒருவன், துன்பத்தைத் தாங்கிக் கொள்ளவே பிறந்தவனாகப் போற்றப்படுவான்.

1030 இடுக்கண் கால்-கொன்றிட, வீழும்; அடுத்து-ஊன்றும்
நல்-ஆள் இலாத குடி.

வரும் துன்பத்தை எதிர் நின்று தாங்கக் கூடிய ஆற்றலுடையவர் இல்லாத குடியை அத்துன்பம், வென்று வீழ்த்திவிடும்.

# 104. உழவு

1031 சுழன்றும் ஏர்ப்-பின்னது, உலகம்; அதனால்,
உழந்தும் உழவே தலை.

பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம், ஏர்த்தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது. எனவே எவ்வளவுதான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே சிறந்தது.

1032 உழுவார் உலகத்தார்க்கு ஆணி; அஃது-ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

பல்வேறு தொழில் புரிகின்ற மக்களின் பசி போக்கிடும் தொழிலாக உழவுத்தொழில் இருப்பதால் அதுவே உலகத்தாரைத் தாங்கி நிற்கும் அச்சாணி எனப்படும்.

1033 உழுது, உண்டு, வாழ்வாரே வாழ்வார்; மற்று-எல்லாம்
தொழுது, உண்டு, பின்-செல்பவர்.

உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர்; ஏனென்றால், மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழ வேண்டியிருக்கிறது.

1034 பல-குடை நீழலும், தம்-குடைக்-கீழ்க் காண்பர்;
அலகு-உடை நீழலவர்.

பல அரசுகளின் நிழல்களைத் தமது குடைநிழலின் கீழ் கொண்டு வரும் வலிமை பெற்றவர்கள் உழவர்கள்.

1035 இரவார்; இரப்பார்க்கு-ஒன்று ஈவர்; கரவாது
கை-செய்து ஊண் மாலையவர்.

தாமே தொழில் செய்து ஊதியம் பெற்று உண்ணும் இயல்புடையவர், பிறரிடம் சென்று கையேந்த மாட்டார், தம்மிடம் வேண்டி நின்றவர்க்கும் ஒளிக்காமல் வழங்குவார்.

1036 உழவினார் கைம்மடங்கின், இல்லை; 'விழைவதூஉம்
விட்டேம்' என்பார்க்கு நிலை.

எல்லாப் பற்றையும் விட்டுவிட்டதாகக் கூறும் துறவிகள்கூட உழவரின் கையை எதிர்பார்த்துதான் வாழ வேண்டும்.

1037 தொடிப்-புழுதி கஃசா உணக்கின், பிடித்து-எருவும்
வேண்டாது, சாலப் படும்.

ஒருபலம் புழுதி, காற்பலம் ஆகிற அளவுக்குப் பலமுறை உழுதாலே ஒரு பிடி எருவும் தேவையின்றிப் பயிர் செழித்து வளரும்.

1038 ஏரினும் நன்றால், எரு-இடுதல்; கட்டபின்,
நீரினும் நன்று, அதன் காப்பு.

உழுவதைக் காட்டிலும் உரம் இடுதல் நல்லது; களை எடுப்பதும், நீர் பாய்ச்சுவதும் மிகவும் நல்லது; அதைவிட நல்லது அந்தப் பயிரைப் பாதுகாப்பது.

1039 செல்லான் கிழவன் இருப்பின், நிலம்-புலந்து
இல்லாளின் ஊடி-விடும்.

உழவன், தனது நிலத்தை நாள்தோறும் சென்று கவனிக்காமல் இருந்தால், அவனால் வெறுப்புற்று விலகியிருக்கும் மனைவிபோல அது விளைச்சலின்றிப் போய்விடும்.

1040 'இலம்!' என்று அசைஇ இருப்பாரைக் காணின்,
நிலம்-என்னும் நல்லாள் நகும்.

வாழ வழியில்லை என்று கூறிக்கொண்டு சோம்பலாய் இருப்பவரைப் பார்த்துப் பூமித்தாய் கேலி புரிவாள்.

# 105. நல்குரவு

1041 ‘இன்மையின் இன்னாதது யாது?’ எனின், இன்மையின்
இன்மையே இன்னாதது.

வறுமைத் துன்பத்துக்கு உவமையாகக் காட்டுவதற்கு வறுமைத் துன்பத்தைத் தவிர வேறு துன்பம் எதுவுமில்லை.

1042 இன்மை என ஒரு-பாவி, மறுமையும்
இம்மையும் இன்றி, வரும்.

பாவி என இகழப்படுகின்ற வறுமைக் கொடுமை ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டால் அவருக்கு நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் நிம்மதி என்பது கிடையாது.

1043 தொல்-வரவும் தோலும் கெடுக்கும், தொகையாக;
நல்குரவு என்னும் நசை.

ஒருவனுக்கு வறுமையின் காரணமாகப் பேராசை ஏற்படுமேயானால், அது அவனுடைய பரம்பரைப் பெருமையையும், புகழையும் ஒரு சேரக் கெடுத்துவிடும்.

1044 இற்பிறந்தார்-கண்ணேயும், இன்மை; இளி-வந்த
சொல்-பிறக்கும் சோர்வு தரும்.

இல்லாமை எனும் கொடுமை, நல்ல குடியில் பிறந்தவர்களிடம் இழிந்த சொல் பிறப்பதற்கான சோர்வை உருவாக்கி விடும்.

1045 நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்-
துன்பங்கள் சென்று படும்.

வறுமையெனும் துன்பத்திற்குள்ளிருந்து பல்வேறு வகையான துன்பங்கள் கிளர்ந்தெழும்.

1046 நற்-பொருள் நன்கு-உணர்ந்து சொல்லினும், நல்கூர்ந்தார்
சொல்-பொருட் சோர்வு படும்.

அரிய பல் நூல்களின் கருத்துகளையும் ஆய்ந்துணர்ந்து சொன்னாலும், அதனைச் சொல்பவர் வறியவராக இருப்பின் அக்கருத்து எடுபடாமற் போகும்.

1047 அறம் சாரா நல்குரவு, ஈன்ற-தாயானும்,
பிறன்-போல நோக்கப்படும்.

வறுமை வந்தது என்பதற்காக, அறநெறியிலிருந்து விலகி நிற்பவனை, அவன் தாய்கூட அயலானைப் போலதான் கருதுவாள்.

1048 இன்றும் வருவது கொல்லோ; நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு!

கொலை செய்வதுபோல நேற்றுக் கொடுமைப் படுத்திய வறுமை, தொடர்ந்து இன்றைக்கும் வராமல் இருக்க வேண்டுமே என்று வறியவன் ஏங்குவான்.

1049 நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்; நிரப்பினுள்
யாது-ஒன்றும் கண்பாடு அரிது.

நெருப்புக்குள் படுத்துத் தூங்குவதுகூட ஒரு மனிதனால் முடியும்; ஆனால் வறுமை படுத்தும் பாட்டில் தூங்குவது என்பது இயலாத ஒன்றாகும்.

1050 துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று.

ஒழுங்குமுறையற்றதால் வறுமையுற்றோர், முழுமையாகத் தம்மைத் துறக்காமல் உயிர்வாழ்வது, உப்புக்கும் கஞ்சிக்கும்தான் கேடு.

# 106. இரவு

1051 இரக்க, இரத்தக்கார்க் காணின்! கரப்பின்,
அவர்-பழி தம்-பழி அன்று.

கொடுக்கக்கூடிய தகுதி படைத்தவரிடத்திலே ஒன்றைக் கேட்டு, அதை அவர் இருந்தும் இல்லையென்று சொன்னால், அப்படிச் சொன்னவருக்குத்தான் பழியே தவிர கேட்டவருக்கு அல்ல.

1052 இன்பம் ஒருவற்கு இரத்தல்; இரந்தவை
துன்பம் உறாஅ வரின்.

வழங்குபவர், வாங்குபவர் ஆகிய இருவர் மனத்திற்கும் துன்பம் எதுவுமின்றி ஒருபொருள் கிடைக்குமானால், அப்பொருள் இரந்து பெற்றதாக இருப்பினும் அதனால் இன்பமே உண்டாகும்.

1053 கரப்பு-இலா நெஞ்சின் கடன்-அறிவார், முன்-நின்று
இரப்பும் ஓர் ஏஎர் உடைத்து.

உள்ளதை ஒளிக்காத உள்ளமும், கடமையுணர்வும் கொண்டவரிடத்தில் தனது வறுமை காரணமாக இரந்து கேட்பதும் பெருமை யுடையதே யாகும்.

1054 இரத்தலும், ஈதலே போலும்; கரத்தல்
கனவினும் தேற்றாதார்-மாட்டு.

இருக்கும்போது இல்லையென்று கைவிரிப்பதைக் கனவிலும் நினைக்காதவரிடத்தில், இல்லாதார் இரந்து கேட்பது பிறருக்கு ஈவது போன்ற பெருமையுடைய தாகும்.

1055 கரப்பு-இலார் வையகத்து உண்மையான், கண்-நின்று,
இரப்பவர் மேற்கொள்வது.

உள்ளதை இல்லையென்று மறைக்காமல் வழங்கிடும் பண்புடையோர் உலகில் இருப்பதால்தான் இல்லாதவர்கள், அவர்களிடம் சென்று இரத்தலை மேற்கொண்டுள்ளனர்.

1056 கரப்பு-இடும்பை இல்லாரைக் காணின், நிரப்பு-இடும்பை
எல்லாம் ஒருங்கு-கெடும்.

இருப்பதைக் கொடுக்க மனமின்றி மறைத்திடும் இழிநிலை இல்லாதவர்களைக் கண்டாலே, இரப்போரின் வறுமைத் துன்பம் அகன்று விடும்.

1057 இகழ்ந்து, எள்ளாது ஈவாரைக்-காணின்; மகிழ்ந்து-உள்ளம்
உள்ளுள் உவப்பது-உடைத்து.

இழித்துப் பேசாமலும், ஏளனம் புரியாமலும் வழங்கிடும் வள்ளல் தன்மை உடையவர்களைக் காணும்போது, இரப்போர் உள்ளம் மகிழ்ச்சியால் இன்பமுறும்.

1058 இரப்பாரை இல்லாயின், ஈர்ங்கண் மா-ஞாலம்
மரப்பாவை சென்று-வந்தற்று.

வறுமையின் காரணமாக யாசிப்பவர்கள், தம்மை நெருங்கக் கூடாது என்கிற மனிதர்களுக்கும், மரத்தால் செய்யப்பட்டு இயக்கப்படும் பதுமைகளுக்கும் வேறுபாடே இல்லை.

1059 ஈவார்-கண் என்-உண்டாம், தோற்றம்; இரந்து-கோள்
மேவார் இலாஅக்கடை?

இரந்து பொருள் பெறுபவர் இல்லாத நிலையில், பொருள் கொடுத்துப் புகழ் பெறுவதற்கான வாய்ப்பு இல்லாமற் போய்விடும்.

1060 இரப்பான், வெகுளாமை-வேண்டும்; நிரப்பு-இடும்பை
தானேயும் சாலும் கரி.

இல்லை என்பவரிடம், இரப்பவன் கோபம் கொள்ளக் கூடாது. தன்னைப் போலவே பிறர் நிலைமையும் இருக்கலாம் என்பதற்குத் தன் வறுமையே சான்றாக இருக்கிறதே.

# 107. இரவு அச்சம்

1061 கரவாது, உவந்து-ஈயும் கண்-அன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும்.

இருப்பதை ஒளிக்காமல் வழங்கிடும் இரக்கச் சிந்தையுடையவரிடம் கூட, இரவாமல் இருப்பது கோடி மடங்கு உயர்வுடையதாகும்.

1062 இரந்தும் உயிர்-வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக, உலகு-இயற்றியான்!

பிச்சையெடுத்துதான் சிலர் உயிர்வாழ வேண்டும் என்ற நிலையிருந்தால் இந்த உலகத்தைப் படைத்தவனாகச் சொல்லப்படுபவனும் கெட்டொழிந்து திரியட்டும்.

1063 'இன்மை இடும்பை இரந்து தீர்வாம்' என்னும்
வன்மையின் வன்பாட்டது இல்.

வறுமைக்கொடுமையைப் பிறரிடம் இரந்து போக்கிக் கொள்ளலாம் என்று கருதும் கொடுமையைப்போல் வேறொரு கொடுமை இல்லை.

1064 இடம்-எல்லாம் கொள்ளாத்-தகைத்தே; இடம்-இல்லாக்-
காலும், இரவு-ஒல்லாச் சால்பு.

வாழ்வதற்கு ஒரு வழியும் கிடைக்காத நிலையிலும் பிறரிடம் கையேந்திட நினைக்காத பண்புக்கு, இந்த வையகமே ஈடாகாது.

1065 தெள்-நீர் அடு-புற்கை-ஆயினும், தாள்-தந்தது
உண்ணலின் ஊங்கு-இனியது இல்.

கூழ்தான் குடிக்கவேண்டிய நிலை என்றாலும், அதையும் தானே உழைத்துச் சம்பாதித்துக் குடித்தால் அதைவிட இனிமையானது வேறொன்றும் இல்லை.

1066 ‘ஆவிற்கு நீர்’ என்று இரப்பினும், நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்.

தாகம் கொண்டு தவிக்கும் ஒரு பசுவுக்காகத் தண்ணீர் வேண்டுமென இரந்து கேட்டாலும்கூட, அப்படிக்கேட்கும் நாவுக்கு, அதைவிட இழிவானது வேறொன்றுமில்லை.

1067 இரப்பன், இரப்பாரை எல்லாம்; ’இரப்பின்,
கரப்பார் இரவன்மின்’ என்று.

கையில் உள்ளதை மறைத்து ‘இல்லை’ என்போரிடம் கையேந்த வேண்டாமென்று கையேந்துபவர்களை யெல்லாம் கையேந்திக் கேட்டுக் கொள்கிறேன்.

1068 இரவு-என்னும் ஏமாப்பு-இல் தோணி, கரவு-என்னும்
பார்-தாக்க, பக்கு விடும்.

இருப்பதை மறைத்து இல்லையென்று கூறும் கல் நெஞ்சின் மீது, இரத்தல் எனப்படும் பாதுகாப்பற்ற தோணி மோதினால் பிளந்து நொறுங்கிவிடும்.

1069 இரவு-உள்ள, உள்ளம் உருகும்; கரவு-உள்ள,
உள்ளதூஉம் இன்றிக் கெடும்.

இரந்து வாழ்வோர் நிலையை நினைக்கும் போது உள்ளம் உருகுகிறது, இருப்பதைக் கொடுக்க மனமின்றி மறைத்து வாழ்பவரை நினைத்தால் உருகிடவும் வழியின்றி உள்ளமே ஒழிந்து விடுகிறது.

1070 கரப்பவர்க்கு யாங்கு-ஒளிக்கும் கொல்லோ? இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்!

இருப்பதை ஒளித்துக்கொண்டு ‘இல்லை’ என்பவர்களின் சொல்லைக் கேட்டவுடன், இரப்போரின் உயிரே போய் விடுகிறதே; அப்படிச் சொல்பவர்களின் உயிர் மட்டும் எங்கே ஒளிந்துகொண்டு இருக்குமோ?

# 108. கயமை

1071 மக்களே போல்வர், கயவர்; அவர்-அன்ன
ஒப்பாரி யாம்-கண்டது இல்.

குணத்தில் ஒருவர் கயவராக இருப்பார். ஆனால், நல்லவரைப் போலக் காட்டிக் கொள்வார். மனிதர்களிடம் மட்டும்தான் இப்படி இருவகையான நிலைகளை ஒரே உருவத்தில் காண முடியும்.

1072 நன்று-அறிவாரின் கயவர் திரு-உடையர்;
நெஞ்சத்து அவலம் இலர்!

எப்போதும் நல்லவை பற்றியே சிந்தித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர்களைவிட எதைப் பற்றியும் கவலைப்படாமலிருக்கும் கயவர்கள் ஒரு வகையில் பாக்கியசாலிகள்தான்!

1073 தேவர் அனையர், கயவர்; அவரும்-தாம்
மேவன செய்து, ஒழுகலான்!

புராணங்களில் வரும் தேவர்களைப் போல் மனம் விரும்பியதையெல்லாம் செய்யக்கூடியவர்கள் கயவர்கள் என்பதால், இருவரையும் சமமாகக் கருதலாம்.

1074 அகப்-பட்டி ஆவாரைக்-காணின், அவரின்
மிகப்-பட்டுச் செம்மாக்கும், கீழ்.

பண்பாடு இல்லாத கயவர்கள், தம்மைக் காட்டிலும் இழிவான குணமுடையோரைக் கண்டால், அவர்களை விடத் தாம் சிறந்தவர்கள் என்று கர்வம் கொள்வார்கள்.

1075 அச்சமே கீழ்களது ஆசாரம்; எச்சம்
அவா-உண்டேல், உண்டாம் சிறிது.

தாங்கள் விரும்புவது கிடைக்கும் என்ற நிலையேற்படும்போது கீழ்மக்கள், தங்களை ஒழுக்கமுடையவர்கள் போலக் காட்டிக் கொள்வார்கள். மற்ற சமயங்களில் அவர்கள் பயத்தின் காரணமாக மட்டுமே ஓரளவு ஒழுக்கமுள்ளவர்களாக நடந்து கொள்வார்கள்.

1076 அறை-பறை அன்னர் கயவர்; தாம்-கேட்ட
மறை-பிறர்க்கு உய்த்து-உரைக்கலான்.

மறைக்கப்பட வேண்டிய இரகசியம் ஒன்றைக் கேட்ட மாத்திரத்தில், ஓடிச் சென்று பிறருக்குச் சொல்லுகிற கயவர்களைத், தமுக்கு என்னும் கருவிக்கு ஒப்பிடலாம்.

1077 ஈர்ங்-கை-விதிரார் கயவர்; கொடிறு-உடைக்கும்
கூன்-கையர் அல்லாதவர்க்கு.

கையை மடக்கிக் கன்னத்தில் ஒரு குத்துவிடுகின்ற முரடர்களுக்குக் கொடுப்பார்களேயல்லாமல், ஈகைக் குணமில்லாத கயவர்கள் ஏழை எளியோருக்காகத் தமது எச்சில் கையைக்கூட உதற மாட்டார்கள்.

1078 சொல்ல, பயன்படுவர் சான்றோர்; கரும்பு-போல்
கொல்ல, பயன்படும் கீழ்.

குறைகளைச் சொன்னவுடனே சான்றோரிடம் கோரிய பயனைப் பெற முடியும்; ஆனால் கயவரிடமோ கரும்பை நசுக்கிப் பிழிவதுபோல், போராடித்தான் கோரிய பயனைப் பெற முடியும்.

1079 உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின், பிறர்-மேல்
வடுக்-காண வற்று-ஆகும், கீழ்.

ஒருவர் உடுப்பதையும் உண்பதையும் கண்டுகூட பொறாமைப் படுகிற கயவன், அவர்மீது வேண்டு மென்றே குற்றம் கூறுவதில் வல்லவனாக இருப்பான்.

1080 எற்றிற்கு உரியர் கயவர்; ஒன்று உற்றக்கால்,
விற்றற்கு உரியர் விரைந்து.

ஒரு துன்பம் வரும்போது அதிலிருந்து தப்பித்துக் கொள்ள, தம்மையே பிறரிடம் விற்றுவிடுகிற தகுதிதான் கயவர்களுக்குரிய தகுதியாகும்.